


# கருக்கொண்ட மேகங்கள்

ப.ஆப்டீன்

# கருக்கொண்ட மேகங்கள்

ப. ஆப்டீன்

இந்நூலானது இலங்கை தேசிய நூலக சேவைகள் ஆவணவாக்கல் சேவைகள் சபையின் உதவியுடன் வெளியிடப்பட்டுள்ள போதும், இந்நூலின் உள்ளடக்கமானது தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் கருத்துக்களைப் பிரதிபலிக்கவில்லை


**கருக்கொண்ட மேகங்கள் (நாவல்)**

உரிமம் - ப.ஆப்டீன்
வெளியீட்டெண் - 11
முதற்பதிப்பு - 05 நவம்பர் 1999
அட்டைப்படம் - எம்.றீ.எம். ஹுஸைன் (ஹுனா)
அச்சுப் பதிவு - மாஸ் கிரபிக்ஸ் மீடியா
63, பள்ளிவீதி, பேருவளை.
தொா.பே : 034-76929

**KARUKKONDA MEKANGAL** (NOVEL)

COPY RIGHT : B.ABDEEN
FIRST EDITION : 05 NOVEMBER 1999
ISBN NO : 955-96861-0-0
COVER DISIGNED BY : M.T.M.HUSSAIN (HUNA)
PRINTED BY : MASS GRAPHICS MEDIA,
63, MOSQUE ROAD, BERUWELA.
TEL : 034-76929

PRICE : **150/=**

## சமர்ப்பணம்

தோழமையுடன்
இனிது பழகிய
அனுராதபுர பிரதேச
முஸ்லிம், சிங்கள
விவசாய
பெருங்குடி மக்களுக்கு

# சிறப்புரை

நாம் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் என்று முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலர் அரசியல் மேடைகளில் பலமுறை மார் தட்டிப் பேசுவதை நான் செவியுற்றிருக்கிறேன். அப்பொழுதெல் லாம் உண்மையிலேயே அவர்களுடைய வார்த்தைகளில் சத்தியம் உண்டா என்று நான் என்னையே கேட்டுக் கொள்வதுண்டு.

அவர்கள் அவ்வாறு பிரயோகித்த சொற்கள் எல்லாம் பாமரமக்களின் வாக்குகளைப் பறிப்பதற்காக அன்றி வேறில்லை என்பதை பிற்காலத்தில் உணர்ந்து கொண்டேன் என்றாலும், அவ் வார்த்தைகளில் பொதிந்துள்ள சத்தியத்தை தோண்டிப் பார்க்க வேண்டும் என்ற உறுத்தல் என்னுள் கனன்று கொண்டி ருந்தது.

அதற்குரிய சந்தர்ப்பம் அனுராதபுர மாவட்டத்திலேயே ஓர் ஐந்து வருட காலம் பல முஸ்லிம் கிராமங்களில் ஆசிரியனாகப் பணிபுரிய வாய்ப்பு கிடைத்ததன் மூலம் நிறைவேறியதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

பலநூறு வருடங்களாக, பல தலைமுறைகளாக அனுராத புர மாவட்டத்தில் நூற்றுக்கணக்கான கிராமங்களில் முஸ்லிம் கிராமவாசிகள் தமது உடல் பொருள் ஆவி அனைத்தையும் இந்த நாட்டின் வயல் வரப்புகளுக்கே தியாகம் செய்தவர்களாக, நவீன வாழ்க்கை வசதிகளின் வாடை கூட அறியாதவர்களாக, இந் நாட்டின் பொருளாதாரத்திற்கும், இனங்களிடையே இணக்கப்

பாட்டிற்கும் தம்மை அறியாமலேயே அரியபணியாற்றி வரு கிறார்கள் என்பதை இனம் காணக்கூட யாரும் இல்லையே என்ற ஏக்கம் என்னுள்ளே எழுந்தது.

தமது பூர்வீகம் என்ன, தமது மூதாதையினர் இந்த நாட்டுக்கு இந் நாட்டின் நிர்வாகத்திற்கு ஆற்றிய தொண்டென்ன, என்றறி யாத அம்மக்கள் பல நூறு வருடங்களுக்கு முன் தமது பரம்பரை யைச் சேர்ந்தவர்கள் சிங்கள மன்னர் பலரிடம் பெற்ற மரியாதை கள் விருதுகள் பற்றி அடிக்கடி உரையாடுவதை செவியுற்றேன். எனவேதான் அனுராதபுர மாவட்டத்தில் வாழ்கின்ற முஸ்லிம் களின் வரலாற்றுப் பின்னணியையும், விவசாய உணர்வையும், சமூகப் பிரச்சினைகளையும் அவர்கள் உணர்ந்து, தாமும் இந்நாட் டின் வரலாற்றுப் பரிணாமத்தின் கிளை ஊற்றுக்களாக பெரும் பணியாற்றிய ஒரு சமூகம்தான் என்பதை அவர்கள் உணரவேண் டும். இதுபோன்று இந்நாட்டின் ஏனைய மாவட்டங்களில் கிரா மங்களுக்குள்ளே தம்மை ஒன்றிணைத்துக் கொண்ட மற்ற முஸ் லிம் மக்களுக்கும் இப்படியான ஒரு உந்துதல் ஒரு விழிப்புணர்ச் சியை ஏற்படுத்த வேண்டும். அதன் மூலம் இந்நாட்டின் ஏனைய இனங்களோடு இணங்கி வாழ்ந்து இந்நாட்டின் அபிவிருத்திக்கு சமூக விழிப்புணர்ச்சிக்கு எமது பங்களிப்பும் தவிர்க்க முடியாதது என்பதை பெரும்பான்மை சமூகம் உணர்ந்து பணியாற்ற வேண் டிய பக்குவம் அடைய வேணடும் என்ற ஆழமான நோக்கு என்னை இந்த நாவலை எழுதத்தூண்டியது.

அத்தோடு, அம்மக்கள் தாம் உண்டு தம்தொழில் உண்டு என்ற உணர்வோடு தொழிற்பட்டு வருவதால் தமது விவசாயத் தேவைகளையும் அன்றாட சமூக வாழ்க்கைப் பிரச்சினைகளை யும் தனித்தனியாக அல்லது ஒரு சிறு குழுவாக நின்று வென் றெடுக்கப் போராடி இறுதியில் விரக்தியுற்றவர்களாக காலங்

கழிப்பதையும் கண்ணுற்றேன். கல்வி அதன் மூலம் பெற்ற விரிவான சிந்தனை இரண்டும் இணைந்தால் ஆங்காங்கே விசிறிக் கிடக்கும் சக்திகளை ஒன்று திரட்டி பலம் வாய்ந்த இயக்கமாக எவ்வாறு செயல்படுவது, அது எவ்வளவு இன்றியமையாதது என்பதை அக்கிராமங்கள் துல்லியமாக உணர்ந்துகொள்ள வேண்டும் என்ற நோக்கமும் என்னை இப்படியான ஒரு படைப்பை படைக்கத் தூண்டியது. பெரும்பாலும் நாவல்களில் கதாபாத்திரங்கள் கற்பனையானவையே. எனது இந்த நாவலில் வரும் கதாபாத்திரங்களில் சில கற்பனையானவை அல்ல என்பதை சொல்லியே ஆகவேண்டும். அனுராதபுர மாவட்டத்தில் நான் ஆசிரியனாகப் பணியாற்றிய காலத்தில் தனது சமூகம் பற்றி தன் பரம்பரை விவசாயம் பற்றி அக்கறையுடன், விழிப்புடன் காத்திரமான வகையில் என்னோடு பழகிய சில நல்ல நண்பர்களை நான் எனது கதாபாத்திரங்களாகக் கொண்டுள்ளேன். இந்நாவல் அந்த நண்பர்களின் கரங்களில் எட்டி அது அவர்களுக்கு தமது செயல்பாடுகளுக்கு உறுதுணையாக அமையுமென்றால் அவர்களைப் போலவே பெருமிதம் அடைவதில் எனக்கும் பங்குண்டு. இப்படி ஒன்றை படைப்பதற்கு அந்த நண்பர்களும் ஒரு தூண்டுகோலாக இருந்துள்ளனர் என்று கூறியே ஆகவேண்டும். அந்தத் தூண்டுதல் காரணமாக நான் முதலில் செய்தது இதைத்தான்.

அனுராதபுர மாவட்ட முஸ்லிம் கிராமங்களின் வரலாற்றை ஆய்வு செய்யும் நோக்கில் ஒரு 'கேள்விக்கொத்தை' தயாரித்து கிராமிய நண்பர்களுக்கு அனுப்பியதில் பல தகவல்கள் கிடைக்கப் பெற்றேன்.

இந்நாவலில் துணை பாத்திரமாக வரும் முக்கிரவெவ கிராமத்தைச் சேர்ந்த நண்பர் எம்.சி.ஏ.கரீம் மாஸ்டர் அவ்வப்போது பல வரலாற்றுத் தகவல்களைத் தந்துள்ளார். இவர் மூலம் நான் பல கிராமங்களுக்கு நேரடியாகவும் விஜயம் செய்துள்ளேன்.

மிக பிற்பட்ட காலத்தில் -1992ல் இந்நாவலில் வரும் கதாநாயகன் ஹலீம்தீன், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் வெளியிட்ட தேசிய மீலாத்விழா, அனுராதபுர மலரை அனுப்பிவைத்தார். அதைப்பார்த்ததும் நான் அடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையே இருக்கவில்லை. ஏனெனில் எனது ஆய்வையும், நான் சேகரித்த தகவல்களையும் உறுதிப்படுத்துவது போல் இம்மலரில் ஜனாப் ஏ.பி.எம்.ஹுசைன், அவர்களின் ஆய்வுக் கட்டுரை பல வரலாற்றுத் தகவல்களைக் கொண்டதாக அமைந்திருந்தது. அவை எனக்கு இந்த நாவலை வளர்த்துச்செல்ல மிக துணை நின்றன.

எனவே இவ்வாய்வுக் கட்டுரையின் ஆசிரியரான ஜனாப் ஏ.பி.எம்.ஹுசைன் அவர்களுக்கு எனது விசேடமான நன்றி களைச் சமர்ப்பிக்கின்றேன்.

அடுத்து இதுவரைக்கும் நாவல் துறையில் கைவைத்திராத என்னை எவ்வாறு ஒரு நாவல் எழுத வேண்டும். அது எப்படி அமைந்தால் இரசனையாகவும் யதார்த்தமாகவும் இருக்கும் என்றெல்லாம் ஆக்கபூர்வமான ஆலோசனைகளைத் தந்து என்னை நெறிப்படுத்திய மானசீக ஆசானான டாக்டர் நந்தி அவர்களை பெரும் நன்றியுணர்வோடு அடிக்கடி நினைவு கூறு கின்றேன். இதன் பின்னரும் எனது இலக்கிய முயற்சிகளில் நல்லுபதேசங்கள் தருவாரா என்று காத்திருக்கின்றேன்.

மற்றும், இந்நாவலுக்கு சிறப்பான முன்னுரை வழங்கிய பிரபல நாவலாசிரியர் செங்கை ஆழியான் அவர்களுக்கு எனது உளம் கனிந்த நன்றியை சமர்ப்பிக்கின்றேன்.

நீண்ட காலமாக எனது இலக்கிய முயற்சிகளுக்கு ஊக்கு விப்பு அளித்துவரும் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்களுக்கும், இந்நாவல் வெளியாக பல வழிகளிலும் உதவிய

நண்பர்கள் அல்ஹாஜ் எம்.எம்.பரீத், திக்குவல்லை கமால், ஏ.ஏ.எம்.ஜெர்ராஹ், ஆகியோருக்கும் இந்நாவலை நான் எழுதி முடித்ததும் கையெழுத்துப் பிரதியில் முதன் முதலில் ஆழமாகப் படித்து மிக முக்கியமான திருத்தங்களைச் செய்த நண்பர் எம். எஸ்.எம்.மஹ்தூம் ஆசிரியர் அவர்களுக்கும் என் இதயம் நிறைந்த நன்றிகள்.

இந்நூல் ஸ்ரீலங்கா தேசிய நூலக சேவைகள் சபையின் புத்தக வெளியீட்டு உதவித் திட்டத்தின் கீழ் வெளிவருகிறது.

தேசிய நூலக சேவைகள் சபையினருக்கும் சிறந்த முறையில் பதிப்பித்த அச்சகத்தினருக்கும் ஆழ்ந்த நன்றி.

மானிலம் நலமுற மகத்தான
இலக்கியம் படைப்போம்.

*131/9, தெமட்டகொட வீதி*
*கொழும்பு -9*
*இலங்கை.*

***ப.ஆப்டீன்***

# பதிப்புரை

நாடறிந்த சிறுகதை எழுத்தாளர் ஆப்டீனின் முதல் நாவல் 'கருக்கொண்ட மேகங்கள்'' ஈழத்து நாவலிலக்கியத் திற்குப் புதியதொரு வரவாகும். புதியதொரு வரவென்று கூறுவ தற்குக் காரணமுள்ளது. ஏனெனில் கருக்கொண்ட மேகங்கள் ஈழத்தில் இதுவரை வெளிவந்த நாவல்கள் போன்று கதாம்சம் கொண்டதன்று. கதையினூடாகத் தான் எடுத்துக் கொண்ட சமூகச் செய்தியைக் கூறுவது ஆப்டீனின் குறிக்கோளாகவில்லை. சமூகச் செய்தியைக் கூறுவதற்கு நிகழ்வுகளைத் துணைக் கொண்டிருப்ப தாகப்படுகின்றது. அதனால் இது ஒரு புதியதொரு வடிவமாக வும், வரவேற்கக்கூடிய முயற்சியாகவும் இருக்கின்றது. இன ஒருமைப்பாட்டினை வலியுறுத்துகின்ற நாவல் என்ற வகையில் காலத்தின் தேவை கருதிய பணியாகவும் கருக்கொண்ட மேகங் கள் விளங்குகின்றது.

அனுராதபுரத்தில் பண்டைய மன்னர் காலத்திலிருந்து வாழ்ந்து வருகின்ற முஸ்லிம் மக்கள் மேலைத்தேயத்தவரின் வருகையுடன் தம் பூர்வீகக் கிராமங்களை விட்டு விலகி காடு களின் மத்தியில் ஒதுக்காகத் தம் குடியிருப்புகளை அமைத்துக் கொண்டு வாழ்கின்றனர். அனுராதபுர அரசர் காலத்தில் அரச சபையில் முஸ்லிம்களுக்கிருந்த முக்கியத்துவம் காலகதியில் இழக்கப்படுகின்றது. தாம் குடியேறிய காட்டுக்கிராமத்தைக் கழனிகளாக்கிக் கொள்கின்றனர். இனவாத அரசியல் சிங்கள

மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையில் நிலவிய நல்லுற வைச் சீரழிக்கின்றது.ஒருவரையொருவர் பகைமையுடன் பார்த் துக் கொள்கின்ற நிலை உருவாகின்றது. 1975 இற்குப் பின் பிறந்த இரு சமூகத்துப்பிள்ளைகள், கல்வியறிவில், முன்னேறிவருவ தால், இந்த இரு இனங்களுக்குமிடையில் நிலவி வரும் பகை மையை இல்லாதொழிக்க முயல்கின்றன. காட்டுக்குளம் ஒன் றின் உரிமையிலிருந்த பிரச்சினையைச் சுமூகமாகத் தீர்த்து வைக்கின்றனர். இரு இனங்களையும் ஒற்றுமைப்படுத்துவதில் வெற்றியும் காண்கின்றனர்.

கருக்கொண்ட மேகங்களின் உள்ளடக்கம் இதுதான். இதனை விபரிப்பதற்கு ஆசிரியர் பழைய தலைமுறையையும் புதிய தலைமுறையையும் சேர்ந்த முரண் பாத்திரங்களை நாவ லில் உலவ விட்டிருக்கின்றார். அவர்களூடாகப் பண்டைய பெருமையும் உரிமையும் பேசப்படுகின்றது. கிரிபண்டா சிங் களக் கிராமியத் தலைவருக்கும் அப்துல் மஜீத் என்ற முஸ்லிம் கிராமியத் தலைவருக்கும் அவர் தம் முன்னோருக்கும் இடையில் நிலவிய குரோதம், அமரதாஸ என்ற சிங்கள இளைஞனாலும் ஹலீம்தீன் என்ற முஸ்லிம் இளைஞனிலும் அவர்களுடன் அணிசேர்கின்ற புதிய தலைமுறையினராலும் தீர்த்து வைக்கப் படுவதை நாவலாசிரியர் திறம்பட விபரித்திருக்கிறார். கல்வி யறிவு தரும் புரிந்துணர்வினைத் தத்ரூபமாக இந்த நாவல் விள க்குகின்றது.

இந்த நாவல் ஊடாக ஆப்டீன் சொல்ல வரும் செய்தி மிக மிக வலுவானதாக எனக்குப்படுகின்றது. ஒருவகையில் அனுராத புரத்தின் பகைப்புலத்தில் இலங்கை முழுவதற்குமான செய் தியைக் குறியீடாகக் கூறியிருக்கிறார் என நினைக்கின்றேன். சிங்கள மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையிலான

குரோதத்திற்குக் காட்டுக்குளம் காரணமாக அமைகின்றது. வேட்டைக்காட்டின் நடுவில் அமைந்திருந்தும் பாழடைந்த காட்டுக்குளமும் அதன் முன் விரிந்து கிடக்கும் வளமான மண் வயல் பிரதேசங்களும் அவற்றினை முதலிற் கண்ட முஸ்லிம் களுக்குச் சொந்தமானதென பழைய தலைமுறை முஸ்லிம் களும், தம் கிராமங்களுக்கு அருகில் இருப்பதால் அப்பிரதேசம் தமக்கே உரிமையானதெனச் சிங்களப் பழைய தலைமுறை யினரும் குரல் எழுப்பி எவரும் அப்பிரதேசத்தில் குடியேறி பயன் பெற முடியாத நிலை உருவாகின்றது. பல்லாண்டுகள் கழிந்த நிலையில் இரு சமூகத்தினையும் சேர்ந்த புதிய தலைமுறையினர் ஒன்று சேர்ந்து காட்டுக்குளமும் அது சார்ந்த பிரதேசங்களும் இரு சமூகத்தினருக்குச் சொந்தமானவை என அறிவிக்கின்றன. சமா தானம் ஏற்படுகின்றது. ''அவ்வாறாயின்'' நிலவளவீடு செய்து சரிவரப் பங்கீடு செய்து தெளிவான எல்லைக் கற்களை நிறுவிக் கொள்வோம்'' எனக்கிராம சேவகர் கூறுகிறார். அதுவும் நடை முறைப்படுத்தப்படுகின்றது. ஆப்டீன் இதனூடாக என்ன சொல்ல விரும்புகிறார்? அற்புதம், ஆப்டீன். இன்று இலங்கைத் தீவில் கொளுந்துவிட்டெரியும் நெருப்பினை அணைப்பதற்கு முற்போக்கு எண்ணங்கொண்ட, புரிந்துணர்வு கொண்ட புதிய இளந்தலைமுறை ஒன்றிணைய வேண்டும். அண்ணன் தம்பியாக விருந்தாலும் வளவுக்கான எல்லைக்கல் சரிவர இடப்படல் வேண்டும். இச் சமூகச் செய்தி சரிவர இந்த நாவலில் பொதிந் துள்ளது.

1948 இல் இலங்கை பிரித்தானியரிடமிருந்து அரசியல் சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டது. பேரினவாதக்கருத்துக்கள் அரசியலில் 1956 களில் வெளிப்படையாகத் தலை தூக்கத் தொட ங்கின. இடது சாரிகளும் பாராளுமன்றக் கதிரைகளில் நாட்டங் கொள்ளத் தொடங்கியமை பேரினவாதக் கருத்துக்களுக்கு

என்றுமில்லாத முக்கியத்துவம் கொடுத்தன. அரசியல் கதிரையைக் கைப்பற்ற உதவும் ஆயுதமாக இனவாதம் மாறியது. இந்த அரசியற் பிரச்சினைகளை நாவலாக்கியவர்களில் செ.கணேசலிங்கன் (செவ்வானம்) செ.யோகநாதன் (நேற்றிருந்தோம் அந்த வீட்டினிலே), செங்கை ஆழியான் (தீம்தரி கிட தித்தோம், மரணங்கள் மலிந்த பூமி) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். அவ்வரிசையில் கருக்கொண்ட மேகங்கள் மூலம் ஆப்டீன் நுழைகின்றார். சிங்கள தமிழர் உறவு நிலைகளைச் சித்திரிக்கும் நாவல்களாக அருள் சுப்பிரமணியத்தின் அவர்களுக்கு வயது வந்துவிட்டது, சாந்தனின் ஒட்டுமா, செங்கைஆழியானின் ஒரு மையவட்டங்கள் என்பன விளங்குகின்றன. அவ்வகையில் ஆப்டீனின் கருக்கொண்ட மேகங்கள் இரு இனங்களுக்கான ஐக்கியத்தினை வலியுறுத்தும் நாவலாக வெளிவந்துள்ளது.

சிங்கள, தமிழர் உறவுநிலையில் இதுவரை வெளிவந்த நாவல்கள் திருமண பந்தத்தின் மூலம் உறவு நிலைப் பிணைப்பினை வலியுறுத்தி, அத்துடன் ஒவ்வொரு சமூகத்தினதும் புரிந்துணர்வும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் கருக்கொண்ட மேகங்கள் நாவலில் கதாபாத்திரங்கள் ஒவ்வொன்றும் வரும்போதும் அறிமுகமாகும் போதும் சிங்கள இளைஞனான அமரதாஸவுக்கும் முஸ்லிம் பெண்ணான ஜெஸ்மினுக்கும் இதேபோல முஸ்லிம் இளைஞனான ஹலீம்தீனுக்கும் சிங்களப் பெண்ணான பியசீலிக்குமிடையில் காதல் விவகாரம் தோன்றப் போகின்றதென்ற எண்ணம் எழுகின்றது. இந்த நாவலில் இச் சிக்கல் ஏற்பட்டிருக்கில் இதனை விடுவிப்பதில் நாவலின் பெரும்பகுதி சென்றிருக்கும். உறவு நிலைப் பிணைப்பின் மூலந்தான் இரு இனங்களுக்குமிடையிலான பிணைப்பினையும் ஐக்கியத்தையும் ஏற்படுத்திவிடலாமென்பது தவறு. அவரவர்கள் தத்தமது பண்பாட்டினையும் இனத்தூய்மையையும் ஒழுக்க

நெறிகளையும் பேணிக்கொண்டு ஐக்கியமாக வாழமுடியும் என்பதை ஆப்டீனின் இந்த நாவல் நிரூபிக்கின்றது.

கருக்கொண்ட மேகங்கள் எடுத்துக்கொண்ட தளமும் உள்ளடக்கமும் கலைப்பண்பினைக் கொண்டதாக இந்த நாவலை வடித்தெடுக்க உதவவில்லை எனக்கருதுகின்றேன். யதார்த்தப்பண்பின் அடியாக இந்த நாவல் தனது வளர்ச்சியை முன்னெடுத்ததால் ஆவணப்பாங்கான விபரணங்கள் மேலோங்கி நிற்கின்றன. இவ்வகையில் து.வைத்திலிங்கம் எழுதிய 'ஒரு திட்டம் மூடப்படுகின்றது' என்ற நாவலைக் குறிப்பிட வேண்டும். பூநகரிப்பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு அபிவிருத்தித்திட்டம் எவ்வாறு உத்தியோகத்தர்கள், பிரமுகர்கள் ஆகியோரின் சுயநலநோக்கால் மூடப்படுகின்றது என்பதை அற்புதமாக இந்த நாவல் சித்திரிக்கின்றது. அதில் ஆவணப்படுத்தும் பாங்கு மிக்கு நின்றதால் திறனாய்வாளரின் கவனத்தினை அது கவரத்தவறிவிட்டது. இலக்கியம் என்று வரும் போது அதிலொரு தேடலும் கலையழகும் இருக்க வேண்டுமென்பது திறனாய்வாளரது கருத்து. உண்மையும் அதுதான். து.வைத்திலிங்கத்தின் 'ஒரு திட்டம் மூடப்படுகின்றது' என்ற நாவலிலும் ஆப்டீனின் 'கருக்கொண்ட மேகங்கள்' என்ற நாவலிலும் தேடல் இருக்கின்றது. சமூகத்திற்குக் கதாசிரியன் எதைச் சொல்ல விரும்புகின்றான் என்ற செய்தியும் இருக்கின்றன. இப்படி இருக்கின்ற சமூகம் எப்படியிருக்க வேண்டுமென்று ஆதங்கம் இருக்கின்றது. ஒரு நாவலின் வெற்றி கருத்து வளத்தில் மட்டும் தங்கியிருக்கவில்லை. கலை வளத்திலும் தங்கியிருக்கின்றது.

ஆப்டீனின் இந்த நாவலில் அனுராதபுரத்து முஸ்லிம் மக்கள் கைக்கொள்ளும் பேச்சு மொழி கையாளப்பட்டிருக்கின்றது. அது நாவலிற்குச் சிறப்பினைக் கொடுக்கின்றது. மக்க

ளின் பண்பாட்டுக் கூறுகளும், நடத்தைகளும், நடவடிக்கைகளும் துல்லியமாக விபரிக்கப்படுகின்றன. ஆப்டீனின் நுண்ணிய அவதானிப்புத்திறனை நாவலெங்கும் காணலாம்.

கருக்கொண்ட மேகங்கள் ஈழத்து நாவலிலக்கியத்திற்குப் புதியதொரு வரவு என மீண்டும் வலியுறுத்துகின்றேன்.

**செங்கை ஆழியான் க.குணராசா**

*பதிவாளர்,*
*யாழ்.பல்கலைக்கழகம்*
*யாழ்ப்பாணம்*
*25.7.1999*

# கருக்கொண்ட மேகங்கள்

# ஒன்று

மூத்த தலைமுறையைச் சேர்ந்தவர்கள் சிரித்தார்கள்.

கிரிபண்டனுக்கும் முழுக்க முழுக்க நம்பிக்கையில்லை. பரீட்சார்த்தமான ஒரு முயற்சிக்குத்தான் அவன் ஆதரவு.

பிங்காமி சொல்வதிலும் உண்மை இருக்கத்தானே செய் கிறது.

அமரதாசவுடன் அந்த மூவரும் கிரிபண்டனின் வீட்டு முன்ற லில் இருந்துதான் அளவளாவினார்கள்.

''இங்க பாருங்க.... கடந்த முப்பது வருஷமா நாங்க முயற் சித்து கைவிட்ட விஷயத்தை நீங்க இப்ப கிளறுநீங்கள். இந்த வயசில நீங்க படிப்பை கவனிங்க.... இல்லாட்டிப் போனா ஒங்க ஒங்கட வேலகள பார்த்துக்கிட்டு சும்மா கிடங்க.... முப்பது வருஷங்களா எங்களால ஏலாம போனத நீங்க சாதிச்சி முடிக்கப் போறீங்களா....?''

பிங்காமி தன் புரையோடிப் போன கருத்தைச் சொன்னான்.

''இருக்கலாம், நாங்க இல்ல எண்டு சொல்லலியே, நீங்க முப்பது வருஷங்கள் எடுத்தீங்க.... நாங்க இளம் ஆக்கள் தாம்.... எங்களுக்கும் ஒரு சந்தர்ப்பத்த தாங்க,.... ஒரு வருஷம் போதும்... முடியாம போனா வீசிப்போட்டு சும்மா கிடக்கிறது தானே... எங்கட திட்டங்கள, அணுகுமுறைகள நடைமுறைப் படுத்திப் பார்க்க உங்கட 'சகயோகய' ஒத்துழைப்பு மட்டும் இருந்தாகரியம்..... போதும்'' என்றான் ஹலீம்தீன்.

கிரிபண்டனின் மகன் அமரதாசவும் அதைத்தான் எடுத்துரைத் தான் வேறு விதமாக,

கிரிபண்டனின் உள்ளத்தில் ஒரு நம்பிக்கை துளிர்விட்டது.

''பிங்காமி.... எதுக்கும் இளம் ஆக்கள், 'ஜயவேவா' எண்டு அனுப்பிப் பாப்பம்.

வெற்றியோ தோல்வியோ.... செய்துபாக்கட்டுமே...'' என்றான் கிரிபண்டா.

''...... நீங்க கிராமத்து தலைவர் 'கமரால' விரும்பினா ஒத்துழைப்போம்.'' என்று பிங்காமி கூறியது முழு சிங்கள கிராமமே அங்கீகரித்தது போலத்தான். கிரிபண்டனின் மகிழ்ச்சி எல்லையை மீறியது.

''எதுக்கும் நாங்க 'சாகச்சாவ' கலந்துரையாடி சொல்லியனுப் புவம். நீங்களும் உங்கட தலைவர்களுடன் ஆலோசனை செய்து சரியெண்டு பட்டாக்கா.... நாங்கள் உங்களுடன் உங்கட நிர் வாகக் குழு ஆக்களுடன் ஒரு உரையாடலுக்கு அழைப்போம். எல்லாத்துக்கும் முந்தி, நாங்க அந்த 'குளக்காட்டுப்' பிரதேசத் துக்கு வேட்டைக்குப் போகவேணும். அந்த மண்ணைத் தோண்டி பரிசோதிச்சிப் பாக்கனும்... அப்படி வேட்டைக்கு போனாகரியம் பிரச்சினை வருமா? என்றதையும் தெரிஞ்சிகிட்டு வாங்க...''

அதற்கு அவர்கள் இணக்கம் தெரிவித்து வழிநெடுக நடந் தார்கள். அப்போது ஆங்காங்கே குடிசை வீடுகளிலிருந்து, கல்வீட்டு ஜன்னல்கள், கதவு நிலைகளிலிருந்து, கிடுகுவேலி களிலிருந்து தென்னை மர நிழல்களிலிருந்தெல்லாம் ஒருவகை ஏளனப் பார்வையுடன்தான் புதினம் பார்த்தார்கள்.

''மரக்கலயா என்னும் முஸ்லிம் கிராமத்து எளந்தாரிமார் களுக்கு இங்க என்ன வேல.....?

''எல்லாத்துக்கும் இந்த கிரிபண்டனும் அவன் மகன் அமர தாசவும் கொடுக்கிற இடம்தான்....''

அந்த ஏளனப் பார்வை மிக அருவருப்பாகவும், அநாகரிக மாகவும் இருந்தது.

''வரவேற்பு பயங்கரமாக இருக்கிறதே....'' என்றான் யாசீன்.

''உனக்குப் பயமா.....? அதோ தெரிகிறது மெயின் ரோட்.... பத்து நிமிடங்களில் நடந்து விடலாம்'' என்றான் ஹலீம்தீன்.

''சிங்கள கிராமத்து எல்லையைக் கடந்து ரோட்டுக்கு வந் துட்டா பஸ்தரிப்பில் நிக்கலாம்....'' என்றான் சேகு.

அவர்களுக்கு அந்த அசாத்தியத்துணிச்சல் எப்படி வந்தது....?

அன்று அந்த ஏளனப்பார்வைகளுக்கும், நையாண்டிகளுக் கும் மத்தியில் தம்மை விடுவித்துக் கொண்ட நண்பர்கள், தமது ஊரவர் தமக்கு அளித்த சாதகமான கருத்துக்களுக்கு மானசிகமாக நன்றியை சுமந்த வண்ணம், மீண்டும் சிங்கள கிராமத்திற்கு தமது சைக்கிள்களில் போய்க் கொண்டிருந்தார்கள்.

அறுவடைக்காலம் தொடங்கியிருந்தது. எங்கும் வெள் ளாமை வெட்டும் சூடுமிதிப்புகளும்....

கிராம மக்களின் வாழ்க்கையில் மகிழ்ச்சி தரும் நாட்கள். சிறுவர் சிறுமியர் ஆண்கள் பெண்கள் எல்லாருக்குமே இராப் பகலாய் ஒரே குஷி. ஆரவாரம்.

இந்தமுறை பருவ மழை வெறும் காற்றோடு காற்றாக , கார்மேகம் காட்டி ஏமாற்றிச் சென்று விடாமல்.... நின்று நீடித்து கமக்காரர்களுக்கு முகம் பார்த்து விட்டது.

பக்குவமாக வயல் உழுது, விதை நெல் தூவி ஓரிலை ஈரிலை விரிந்த நாள் தொடக்கம் நாற்றுநட்டு நீர்ப்பாய்ச்சி மாதங்களாய் கண்ணின் மணிபோல் காத்து, பறவைகள் மிருகங்களின் ஆக்கிர மிப்புக்கு தப்பி, காவல் காத்து நின்றதன் பயன்.

இந்த அறுவடைக்காலம்.

காலை, மதியம், இரவு மூவேளையும் உழவர் வீட்டில் சோறு பொங்கும் காலம்.

ஒவ்வொரு முறையும் இப்படித்தான். தனித்து அல்லது கூட்டுசேர்ந்து அடர்ந்த காடுகளின் பகுதிகளை வெட்டிக் குவித்துத் தீமூட்டி, அழித்து நெல்மணிக் கதிர்களை உற்பத்தி செய்யும் பசுமையான வயல் காட்சிகளாய் மாற்றிவிடுவர் விவசாயிகள்.

வயல்களோடு ஒட்டிய நிலங்களையும் காடுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளையும் 'சேனை கொத்தி'' இறுங்கு, குரக்கன், மரவள்ளி, கௌபி, மிளகாய் என்று காலத்திற்கேற்ற பயிர்களைப் பரப்பி மண்ணை பொன்கொழிக்கச் செய்து விடுவர்.

வெள்ளாமைக்குப் பிறகு வயற் பரப்புகள் எல்லாம் வெறிச்சோடிப் போய், அடுத்த பருவ மழை பொழியும் வரைக்கும் காத்திருக்க வேண்டும். இடையிடையே புல் பூண்டுகள் பற்றைகளாய் வளர்ந்தாலும், உழைத்து உரமேறிய கரங்களின் வெட்டுக் கத்தி வீச்சுகளுக்குப் பலியாகி; வெளிசாக்கப்பட்டு' மீண்டும் காடுகளாய் மண்டிவிடாமல் தடுத்து நிறுத்தப்பட்டு விடும்.

காலத்திற்குக் காலம் இவ்வெழிற் காட்சிகளை உருவாக்கத்தானோ, வயலைச் சார்ந்த விவசாயப் போராளிகள், யானைகள், கரடிகள், பன்றிகள் போன்ற வனவிலங்குகளையும் விஷ ஜந்துக்களையும் எதிர்கொண்டு தத்தமது உயிர்களையே பணயம் வைக்கின்றனர்.

இனிமையான அவ்வெழிற் காட்சிகளுக்குப் பின்னால் தான் எவ்வளவு பெரிய ஆபத்துக்கள் நிரம்பிய போராட்டம் காடுகளால் புதைக்கப்பட்டுக் கிடக்கின்றன.

''..... ம் மீனவனுக்கு கடலில் ஆபத்து.... விவசாயிகளுக்கு காட்டில் ஆபத்து'' காடுகளைப் பற்றியே சிந்தித்துக்கொண்டு வந்த யாசீன் முணுமுணுத்தான்.

''என்ன யாசீன் புதுமொழியோ....?''

''இல்ல மச்சான்..... விந்தைகளைப் புரியும் விவசாய விஞ்ஞானிகள் தாமும் வாழ்ந்து மற்றோரையும், வாழவைக்கும் கைங்கரியம் அலாதிதான். ஆனா எவ்வளவு ஆபத்து, வறுமைப்

பட்ட வாழ்க்கை, அதுசரி.... நான் கேட்கத்தான் ஈந்த...... இந்த விவசாயம் எப்ப மச்சான் நம்மட தலையெழுத்து ஆனது?''

திடீரென்று யாசின் ஹலீம்தீனிடம் இப்படி ஒரு தூண்டிலைப் போட்டு இழுத்து விடுவான் என்று சற்றும் எதிர்பார்த்திருக் கவில்லை.

காடுகளில் தனது கண்ணோட்டத்தைச் செலுத்தி வந்த அவன் வெறுமனே வெறுப்பில் விரக்தி மேலீட்டால் அப்படிக் கேட் டானோ அல்லது உண்மையை அறிய வேண்டிய ஆவலின் உந்துதலால் கேட்டானோ?''

ஹலீம்தீனின் சரித்திர மூளை சுற்றிச் சுழன்றது. ''யாசின் நீ சும்மா முஸ்பாத்திக்கு கேக்கிறியா...? இல்லாட்டி.....?''

''மறுஹா... இவர் பெரிய நடப்பு. சும்மா கேக்கிறதும் முஸ்பாத்திக்குக் கேக்கிறதும். நம்மட பரம்பரைத் தொழில் விவசாயந்தானா எண்டுதான் அறிய வேணும்...''

''சரி... சரி... யாசீன் உன்ட கேள்விக்கு ஒரு பெரிய சரித்திரமே கிடக்கு மச்சான். அதப்பற்றி போய்க் கொண்டே சொல்றனே...''

''ஏன்... இப்ப சிந்தன 'அங்க' சுத்திக்கொண்டு இருக்கோ...?''

எல்லோரும் உரக்கச் சிரித்தனர்.

ஹலீம்தீனும், யாசீனும் ஏனைய நண்பர்களும் தத்தமது சைக் கிள்களை உழக்கிக் கொண்டு, போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கஹட்டகஸ்திகிலியா மகாவித்தியாலயத்தில் ஏ.எல் - ஓ.எல். கற்கும் மாணவர்கள். இளம் வாரிசுகள். ஒரு கிராமத்தின் புதுக்கதிர்கள்.

சைக்கிள்களை பற்றைகளிலும், மரங்களிலும் சாய்த்துவிட்டு, ஒரு பெரிய முதிரை மர நிழலில் அமர்ந்தனர்.... பொறுப்புணர் வோடு அக்கிராமத்தை வழி நடத்திச் செல்லும் அவர்களிடம், தமது முன் சந்ததியினரிடம் இல்லாத ஒரு சக்தி கொடையாக வந்துவிட்டது. அதுதான் 'கல்வி'.

ஹலீம்தீன் வரலாற்று மாணவன், யாசீன் தமிழ்மொழி, நவீன இலக்கியங்களில் ஆழ்ந்த ஈடுபாடுள்ளவன். இப்படி, விஞ்ஞானம், வர்த்தகம், விவசாயம் என்று பல் துறைகளிலும் அவர்கள் இலட்சியத்துடன் ஈடுபட்டிருக்கிறார்கள்.

யாசீனின் அந்த முக்கியமான வினா அனைவரையுமே உலுப்பி விட்டிருந்தது.

''விவசாயம் எப்படி எங்கட தலையெழுத்தானது....?

சற்று நேரம் மௌனியாகவிருந்து தமது மறுமொழியை ஆயத்தப்படுத்திய ஹலீம்தீன் மிக்க பொறுப்புணர்வோடு ஆரம்பித்தான்.

''யாசீன்.... இப்ப நாங்க 1980 களில் வாழ்றோம்... இப்பதான் நான் நினைக்கிறன் கிட்டத்தட்ட நூற்றுப்பத்து வருஷங்களுக்குப் பிறகு... ஒரு விவசாயி மகன் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறான்... இப்படி ஒரு கேள்வியைக் கேட்கிறான்.

'விவசாயப் பரம்பரைய விவசாயிகளாகத்தான் இருக்க விடனும், 'கல்வி' என்னும் ஆயுதத்தைக் கொடுத்துவிட்டால் இவங்க நமக்கே குறிவைப்பாங்க...? என்று யோசித்து திட்டம் போட்டவர்களின் 'வாயில மண்...' போட்ட பிறகு தான் இப்படியான கேள்விகள் உருவாகின்றன....''

''சரி சரி சுத்திவளைச்சது போதும்''

''யாசீன் உன்ட கேள்விய சுத்தி வளைச்சித்தான் பாக்க வேணும்...யாசீன் எங்கட அனுராதபுர பிரதேசத்த சிங்கள மன்னர்கள் ஆட்சி செய்ததற்குப் பிறகு, எமது தேசத்த ஆங்கிலேயர் ஆண்ட காலம் உனக்குத் தெரியுந்தானே.....''

''ஞாபகமில்ல.... கி.பி. ஆயிரத்து எண்ணூறுகள்.... என்று நினைக்கிறன்...''

''ஓமோம்... சரியாக சொல்லப்போனால் கி.பி. 1870ம் ஆண்டில சில குளங்கள் திருத்தி அமைக்க முற்பட்டார்கள் அல்லவா..''

''எந்தக் குளங்கள்.....?''

''திஸ்ஸவெல குளம், கலாவெவ, நாச்சியாதுவ குளம்.... இப்படியான குளங்கள குறிப்பிடலாம். இதனால என்ன நடந்த தெண்டா, திஸ்ஸவெவகம, பொன்னாரங்குளம், ஆமனவெவ, நாச்சியாதுவ, கலாவெவ முதலான இடங்களில நிலையாக வாழ்ந்து கொண்டிருந்த முஸ்லிம்கள் தாம் குடியிருந்த நிரந்தர மான இடங்களிலிருந்து நீக்கப்பட்டனர்... என்பது உங்களுக்கு தெரீமா?''

''யாசின்ட கேள்விக்கும் இதுகளுக்கும் என்னடாப்பா தொட ர்பு...?'' - இப்படிக் குறுக்கிட்டான் சேகு.

''அவசரப்படாத... சேகு, அவன் சுத்தி வளைச்சி சொல்லட் டுக்குமே. ஹலீம் குணம் ஒனக்கு தெரீந்தானே'' என்றான் அன் சார் குத்தலாக.

ஹலீம் தீன் புன்முறுவலுடன் தொடர்ந்தான்:

''கி.பி.1882ம் 1884ம், 1886ம் ஆண்டுகால கட்டங்களில, திஸ்ஸவெவகம கிராமத்திலிருந்து வெளியேறிய எங்கட அப் துல் மஜீத், இஸ்மாயில் லெப்பை, அபுசாலி லெப்பை மதா ரப்பா போன்றவங்க, ''மறுஹ.... இது எங்களுக்கு சரிப்பட்டு வராது'' என்ற ஒரு முடிவுக்கு வந்தவர்களாய் உடமளுவ, இசுறுமுனி, திசாவெவ, கீழக்கரை முதலான இடங்களில் குடி கள் அமைத்து எல்லாத்துக்கும் பொதுவான ஓரிடத்தில் பள்ளி வாசலையும் கட்டிக் கொண்டாக....''

''இப்ப அந்தப் பள்ளி வாசல் இருக்கா....?

பள்ளி வாசல்களின் வரலாறுகளை ஆய்வதில் விருப்பமுள்ள சவால் கேட்டான்.

''சவால் நீங்க விரும்பினா, ஒரு நாளக்கி, இண்டைக்கும் அழிந்து போன நிலையில இருக்கிற அந்தப் பள்ளியின் அத்தி வாரங்களை பாத்துவிட்டு வரலாம்....''

''கட்டாயம் பாக்கத்தான் வேணும், இப்ப வாழ்ற நாங்க, நூறு வருடங்களுக்கு முந்தி வாழ்ந்த மூத்த பரம்பரை ஆக்கள் கட்டிய பள்ளிவாசலை கட்டாயம் பாக்க ஒணும்... போலிருக்கு...''

சவாலின் உணர்ச்சி வசப்பட்ட கருத்தை அனைவரும் ஏற்றா லும், ஹலீம்தீன் யாசீனின் முகத்தைப் பார்த்தான்.

''ஒவ்வொரு சிங்கள மன்னர்கள் காலத்திலும் முஸ்லிம்களின் தொடர்பு உறுதி பெற்று வந்துள்ளது, என்பதற்கு முஸ்லிம்கள் அமைத்த குடியிருப்புகளே சான்று. பழைய திசாவெவகம இன் றும் திசாவெவ குளம் என்று வழங்கப்படுகிறது. இங்கேயும் அழி ந்த நிலையில் ஒருபள்ளிவாசலைக் காணலாம். இரண்டு பழைய கற்தூண்களில் மு.அ.என்ற தமிழ் எழுத்துக்கள் காணப்படு கின்றன.

முஸ்லிம் குடியிருப்பில் பிரபலமான 'முத்துவிதான அசனார்' என்பவரையே இவ்வெழுத்துக்கள் குறிக்கும். மன்னராட்சியில் இவர் விதானை பதவி வகித்தவர்...'' என்று கூறிய ஹலீம்தீன், இடைநிறுத்தி யாசீனின் முகத்தை உற்று நோக்கினான்.

'ஹலீம்தீன்..... நான் ஒன்டு சொல்றன், இந்த வருஷம் சோதின எழுதப் போற நீ... இப்படி சுத்திவளைச்சிக் கொண்டு... நீட்டிக் கொண்டிருந்தா... நிச்சயமா புள்ளிகள் கிடைக்காது, சொல்லிப் போட்டன்.... ஆன்சர் டு த பொயின்ட்....''

''தேங் யூ மை டியர்.... ஆனா இது சோதின இல்ல... எங்கட வாழ்க்கை வரலாறு... மூத்த பரம்பரை எப்படி விவசாயத்த பரம்பரைத் தொழிலாக மேற் கொண்டாங்க என்பதற்கு ஒரு பின்னணி கிடக்குதே... அதை சுருக்கமாகவாவது சொல்லாம என்னால அரை குறையா பதில் சொல்ல ஏலாது மச்சான்... இனி கிராமங்களை அமைத்து பள்ளி வாசலையும் கட்டினவங்க பதினைஞ்சு பதினாறு வருடங்கள் மட்டுந்தான் அவ்விடங்களில் வாழ முடிஞ்சிது, மீண்டும் பாதுகாப்பான இடங்களைத்தேடி வேட்டையாட வேண்டியிருந்தது.

''ஏன் அப்படி? என்ன நடந்தது?'' - எல்லாருமே அங்கலாய்த் தார்கள்.

''1902ம் ஆண்டில இங்கிலிஷ்காரன்க வடக்கிற்குப் புகை வண்டிப் பாதை சமைக்க திட்டம் போட்டாங்க. அதுக்கு எங்கட முன்னோர் ஒத்துழைச்சாங்க.... ஒரு ஒப்பந்த அடிப்படையில் மரச்சட்டங்கள் சப்ளை, கேள்வி வழங்கல்கள், எல்லாத்தையும் முஸ்லிம்களே பொறுப்பெடுத்திருந்தாங்க.....

ஆனா... திட்டம் போட்டபடிக்கு ரயில் பாதைகளை போடத் தொடங்கின நேரத்தில இங்கிலிஷ்காரரினதும், மற்றவர்களி னதும் ஊடுருவல் அனுராதபுரத்தில தொடங்கியது. இதை விரும்பாத முஸ்லிம் மக்கள் 'இவகட கலாச்சாரம், பழக்க வழக்கங்களிலிருந்து நாம விடுபட்டு, எங்கட கலாச்சாரத்த காப்பாத்தனும்...'' என்று முடிவெடுத்து விட்டனர்.

''அப்ப அவங்கட வேட்டை மீண்டும் புதிய திசைக்குத் திரும்பியது...'' என்று சொல்ல வாரீங்க.... சரியா....?'' என்றான் இதுவரைக்கும் மௌனமாக ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்த கமர், ''ஓமோம்.... ஆனா மறைவான புதிய இடங்களைத்தான் தேடினாங்க''

''எப்ப எந்த ஆண்டு மட்டில?''

''1906ம் ஆண்டு... இப்பிரதேசத்த விட்டுட்டு அளுத்கம, கம்பிரிகஸ்வெவ, கோவில்பந்டாவ, கொட்டியாவ, கிவுளுகட போன்ற கிராமங்களை பென்னாம் பெரிய காடுகளின் மத்தியில மறைவாக உண்டாக்கி, வாழ்க்கையைத் தொடர்ந்தார்கள்....''

''அப்ப ஆங்கிலேயரின் கலாச்சாரம் எங்கட தனித்துவமான கலாச்சாரத்துக்கு ஒத்து வரல்ல என்டா ஒதுங்கிக் கொண்டாங்க?'' என்று வினவினான் சவால், மேலும் தெளிவு பெறும் நோக்கில்,

''ஓ... ஒதுங்கினா மட்டும் காணா.... மறைந்து பாதுகாப்பாக வாழ முடியும் என்று நம்பி இடம் பெயர்ந்திருக்கலாம்.... ஆனால் இந்தக் காலகட்டத்திலதான் உணவுப்பிரச்சினை தலை

தூக்கியது. யாசீனின் கேள்விக்கு சுருக்கமாக பதில் சொல்வதா யிருந்தா.... இந்த உணவுப் பிரச்சினையத் தீர்க்கத்தான் எமது முன்னோர் சேனைப் பயிர் செய்கைய மேற்கொண்டாங்க. அது படிப்படியாக, யாசீன் சொன்னது போல, விவசாயம் எங்கட தலையெழுத்தானது.... அத்தோட நான் மேலே குறிப்பிட்ட கிராமங்களை உள்ளடக்கிய ஊர்ப் பிரதேசங்களைத்தான் 'எட்டூர்ப் பிரதேசம்' 'அட்டகம்பளாத்த' என்று கூறுவார்கள்'' என்று முத்தாய்ப்பு வைத்தான் ஹலீம்தீன்.

ஹலீம்தீனின் இந்த நீண்ட விளக்கத்தால் யாசீனின் முகத்தில் பூரண திருப்தி நிலவியது. ஏனைய நண்பர்களும் புளகாங்கித மடைந்து போனார்கள்.

''அப்ப மொதல்ல சேனைப் பயிர்செய்கை, பொறகு நிலப்பரப்புகள் குளங்கள் பெரிதாக இல்லாவிட்டாலும் பருவ மழையை நம்பி விவசாயம் செய்திருக்க வேண்டும்.

ஹலீம்தீனும் அன்சாரும் அதனை வழிமொழிவது போல தலையசைத்தனர்.

முதிரைமர நிழலிருந்து எழுந்து மீண்டும் அவர்கள் சைக்கிள் சவாரியைத் தொடங்கினர். ஐந்து கிலோ மீற்றர் தொலைவிலுள்ள ஒரு சிங்கள கிராமத்தை நோக்கியே அந்தப் பயணம், ஓர் இலட்சிய நோக்கை நடைமுறையில் நிலைநாட்டுவதற்கென போய்க் கொண்டிருக்கிறார்கள்.

''அப்பாடா இனி எங்கலால ஏலாது...' என்று மூத்தவர்கள் ஒதுங்கிக் கொண்ட பின், கிராமத்தை நிர்வகிக்கும் பாரிய பொறுப்பு இந்த இளைய பரம்பரையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

சமது விதான, அபூதாலிப் ஆகியோர் திருமணமானவர்கள், ஹலீம்தீன் தொடக்கம் ஏனையவர்கள் எல்லாரும் கல்விப் பொதுத்தராதர ஒ.எல், ஏ.எல். மாணவர்கள். இருபதுக்கு உட்பட்டவர்கள். ஆயினும் கிராம முன்னேற்றம் கருதி மிக்க சுறுசுறுப்புடனும் நிதானத்துடனும் இயங்க வல்லவர்கள். ஹலீம்

தீன் நிர்வாகக் குழுவின் தலைமைப் பொறுப்பை ஏற்றபின் கிராமத்து விவகாரங்கள் எல்லாம் நிர்வாக அலுவலகம் அமைத்து சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றன.

எனினும் ஹலீம்தீன், யாசீன், அன்சார் ஆகிய மூவரும் ஏ.எல். இறுதியாண்டில் ஊன்றி உழுது கொண்டிருக்கிறார்கள்.

ஏறிக் கொண்டிருந்த வெய்யிலை அவர்கள் பொருட்படுத்தவில்லை. போகிற வழியில் தெம்பிலி கிடைக்குமா என்று கண்களை மேயவிட்டார்கள்.

''சிங்கள கிராமத்திற்குள் புகுந்து விட்டோம்'' என்று சமது விதானை உறுதிப்படுத்தி விட்டான். எதிர்பார்த்தது போல் நந்தசேனவின் 'ஒற்றை' கடையில் தொங்கிய தெம்பிலி குலை தீர்ந்தது. கிராமங்களின் எல்லைகளையும், காடுகளின் எல்லைக் கோடுகளையும், மண்ணை உள்ளங்கையில் குவித்து, இது விவசாயத்திற்கு ஏற்ற பூமியா என்று தேர்ந்தெடுப்பதில், அனுபவ வாயிலாக மட்டுமன்றி, இயற்கையாகவே அசாத்தியத் திறமையுடையவன் சமது விதானை, விதானை பதவி இப்பொழுது இல்லாவிட்டாலும் பெயரில் நிலைத்து விட்டிருந்தது.

'இந்த மண்ணுக்கு எந்த வகை விதைநெல்லைப் போட்டால் விளைச்சல் நன்றாக இருக்கும்?' என்று ஆலோசனை பெற்றுக் கொள்வதில் சிங்கள கிராமத்து நண்பர்கள் சமது விதானையை நட்புடன் தரிசிப்பதில் தவறமாட்டார்கள்.

அதுபோல எந்தப் பெரிய அடர்த்தியான காடுகளில் போய் வேட்டையாடி சிக்கிக் கொண்டாலும் திசையறி கருவி எதுவுமின்றி திசையறிந்து மீண்டும் கிராமங்களுக்குத் திரும்பி வர சமர்த்து அபூதாலிப் தான்.

தந்தை அப்துல்காதர் லெப்பையின் பாம்புக்கடி வைத்தியத்தை ஆர்வமுடன் கற்று ஆய்வது முபாரக்கின் பொழுதுபோக்கு, ஆயினும் யாருக்கும் வைத்தியம் செய்ய இன்னும் அப்துல்காதர் லெப்பை முறைப்படி 'வாக்கு' கொடுக்கவில்லை. முதலில்

அவன் 'கல்வியை' முடிக்க வேண்டும். அதுதான் அவரது அபி லாசை.

ஹலீம்தீன் தனக்கு பக்கபலமாக இருந்து கருமமாற்றுவதற்கு பல்வேறு கோணங்களிலிருந்தும் திறமையானவர்களை வடித்தெடுத்திருக்கிறான்.

''நந்தசேன முதலாளி, கிரிபண்டா உன்னஹெ கெதர இன்ன வாத...?'' சமது விதானை பேச்சுக் கொடுத்தான்.

''ஒவ்வொவ்.... லேஸ்திவெலா பலாகென இன்னவா.....''

தெம்பிலி அருந்தி சற்றுநேரம் இளைப்பாறிய அவர்கள் மீண்டும் உழக்கினார்கள்.

கிரிபண்டா ஆயத்தமாகி எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று நந்தசேன வாயிலாக அறிய முடிந்ததால், அவர்களது வருகை சிங்கள கிராமம் முழுவதும் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது என்பதை ஊகிக்க முடிந்தது ஹலீம்தீன் குழுவினருக்கு.

''1960ம் ஆண்டுக்குப் பிறகு பிறந்தவங்கட ரத்தத்தில் தான் மெல்லிதாக ஒரு துவேஷத்தன்மை கலந்திருக்கு...'' யாசீன் சைக்கிளை உழக்கிக் கொண்டே ஒரு புதிய கருத்தை முன்வைத்தான்.

''அதெப்படி நீ அவ்வளவு உறுதியாக சொல்ற?'' என்று தொடங்கி பெரிய விவாதத்துக்கு உள்ளாகி பிரச்சினைகளைக் கிளப்பப் பார்த்தது.

''இப்ப போய்க் கொண்டிருக்கிற நாங்கள் எல்லாரும் 1975ல் பிறந்தவர்களாய்த்தான் இருக்க வேணும் எங்களிடம் துவேஷம் இருக்கா?'' என்று ஆக்ரோஷமாகக் கேட்டான் சேகு.

''நாங்கள் படித்தவர்கள் தெளிந்தவர்கள் எல்லாத்துக்கும் மேலாக நாங்கள் சமாதானத்தை விரும்புறவர்கள்....'' என்றான் அன்சார்.

''ஆ..... அப்படியெண்டா சரி'' என்று சேகு அடங்கிப் போனான். பிரச்சினையைக் கிளப்பிய யாசீன் மௌனமாகக்

கருத்துக்களை உள்வாங்கிக் கொண்டிருந்தான்.

ஹலீம்தீனைப் பொறுத்தவரையில் உள்ளூர மகிழ்ச்சி.

கிரிபண்டாவை சந்திக்க முன்பே முஸ்லிம் இளைஞர்களாகிய எங்களிடம் துவேஷம், இனக்குரோதம்.... போன்றவை இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டாயிற்று. 'பலாய் ஒண்டும் வராது'

அவனைப் பொறுத்தவரையில் நிதானமான சிந்தனையும், போக்கும் முன்மாதிரியாக விளங்கின. இல்லாவிட்டால் எதற்கெடுத்தாலும் கம்பும் கத்தியும் வாளும்.... அந்த யுகம் அருகிக் கொண்டு வருகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக அவன் ஒரு வரலாற்று மாணவனாக இருந்தான். கிராமங்களின் இதிகாசங்களை ஆய்பவனாகவும் இருந்தான். ஒரு தலைமைத்துவத்திற்கு போதுமான அம்சங்கள் அனைத்தும் ஹலீம்தீனிடம் அமைந்திருந்தன.

அவன் சாதாரணமாக உரையாடும் போதும் கூட ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம் அவனது பேச்சில் பொதிந்து கிடக்கும். அவனுக்கு ஒன்று துப்புரவாகப் பிடிக்காது. அதுதான் வரலாற்றுப் புரட்டல்கள்.

எல்லாரும் கிரிபண்டாவின் வளவை அடைந்தபோது கிரிபண்டாவின் மூத்த மகன் அமரதாசவும், மகள் பியசீலியும் 'கடப்பலை'த் திறந்து விட்டு அவர்களை இன்முகத்துடன் வரவேற்றனர்.

# இரண்டு

சிங்கள கிராமத்தின் மூத்த தலைமுறையின் தலைவர் கிரி பண்டாவின் புதிய கல்வீடு சகல வசதிகளையும் உள்வாங்கிக் கொண்டு விசாலமாகக் காட்சியளித்தது. வீட்டிற்கு முன்னால் அரைத்திண்ணை வைத்து கட்டப்பட்ட திறந்த வெளி முன் விறாந்தையில் புதிய பன் பாய்கள் விரிக்கப்பட்டுள்ளன. மத்தியில் பளிச்சென்று மின்னிக் கொண்டிருக்கும் அலங்கரிக்கப்பட்ட பித்தளைத் தட்டில், சம்பிரதாய முறைப்படி வெற்றிலை பாக்கும், பிறிதோர் தட்டில் தேவையேற்பட்டால் பரிமாற சிகரட் பக்கட்டுகளும் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. நடுவில் பெரிய கோப்பைகள் நிரம்ப தண்ணீரும் அள்ளி அருந்துவதற்காக 'சுண்டுக்' கோப்பைகளும் அழகாக வைக்கப்பட்டிருக்கின்றன.

முன் கூட்டியே, செய்திகள் பரிமாறிக் கொண்டதனால் இருதரப்பினரதும் இச்சந்திப்பு இடம் பெறுகிறது. கிட்டத்தட்ட பத்து வருடங்களுக்குப் பிறகு இப்படியொரு சிநேகபூர்வமான பேச்சு வார்த்தைகள் இடம் பெறுகின்றன.

கிரிபண்டா வெளுத்த வெள்ளைச் சாரம் அணிந்து மேலால் வெள்ளை அரைக்கை 'நெஷனலுடன்' புதியதுவாய்த் துண்டையும் போட்டிருந்தான்.

முஸ்லிம் கிராமத்திலிருந்து வந்த இளைய விருந்தாளிகள் நீட்டு களிசானும் சேட்டும் உடுத்தியிருந்தனர். சமது விதானையையும் அபூதாலிபையும் தவிர, அவர்கள் அந்த வருட நோன்புப் பெருநாளைக்கு எடுத்திருந்த சாரம் சேட்டுடன் காணப்பட்டார்கள்.

மைதானம் போல் அமைக்கப்பட்டிருந்த பரந்த முற்றத்தில் நின்று கொண்டே அந்த அழகிய சூழலை ரசித்துக் கொண்டிருந் தவர்களை கிரிபண்டாவும் அமரதாசவும் இரு கரங்கள் கூப்பி இன்முகத்துடன் வரவேற்று விறாந்தையில் விரிக்கப்பட்டிருந்த பாய்களில் அமரச் செய்தனர்.

அமரதாசவும் பியசீலியும் அவளது தோழிகளும் பம்பரம் போல் சுற்றிச்சுழன்று கொண்டிருந்தார்கள். வந்தவர்கள் ஓர் அரைவட்டமாக இருக்கை கொள்ள, அவ்வரை வட்டத்தை முழுமைப்படுத்துவதற்கு சிங்கள கிராமத்து பிரதிநிதிகள், கிரிபண்டாவின் தலைமையில் மிகவும் பண்புடன் அமர்ந் தார்கள். ஆனால் அமரதாச ஹலீம்தீனின் பக்கத்திலேயே அமர் ந்து கிராமத்து விவகாரங்கள் பற்றி உரையாடிக் கொண்டி ருந்தான்.

''அமர புதத் மெஹாட்டீ ஆவொத்....'' என்று கிரிபண்டா சம்பிரதாயத்திற்கு அழைத்தாலும்....

''நே... நே... ஒஹே இந்தி... காரியக்நே...'' என்று கிரி பண்டாவின் பக்கத்தில் அமர்ந்திருந்த மூத்தவர்களான பிங்கா மில புஞ்சிரால, முதியான்ச முதலியோர் ஆதரவாகப் பேச இளைஞர்களான பியசேன, சந்திரபால, சோமரத்ன, விக்டர் ஆகியோர் மகிழ்ச்சி ஆரவாரம் தெரிவித்தனர். பெண் பிரதி நிதிகளாக, சபையில் உட்காராவிட்டாலும், பியசீலி, யசவத்தி, லதா, நந்தா, மாலினி போன்ற இளம் யுவதிகள் மகிழ்ந்து வாழ்த்துவதில் இணைந்து கொண்டனர்.

ஊர் இரண்டுபட்டு இருந்தாலும் ஹலீம்தீனும், அமரதாசவும் நீண்ட நாளைய நண்பர்கள். அவன் சிங்கள மகாவித்தியால யத்தில் ஏ.எல். இறுதியாண்டு விஞ்ஞான மாணவன். கிரிபண்டா வின் மகள் பியசீலி கலைப்பிரிவு, ஒரு பட்டதாரி ஆசிரியையாக வந்தால் போதும் என்று நினைப்பவள்.

இப்படியாக இளைய பரம்பரை ஒருமைப்பாட்டுக்கு ஒன்று பட்டு உழைக்க அடியெடுத்து வைக்கும்போது, பெரியவர்கள் தடைக்கற்களாக இருக்க விரும்புவார்களா?

பேச்சு சுமுகமாகத் தொடங்குகிறது. கடந்த ஒரு தஸாப்த காலமாக அவர்கள் மத்தியில் ஒரு மௌனச் சுவர் எழும்பி யிருந்தது. அவர்கள் பகைவர்கள் அல்லர். அதேநேரத்தில் அவர்களிடையே நட்புறவும் இருக்கவில்லை. அவ்வப்போது எழும் சிறு சிறு பிரச்சினைகளால் மனம் குமைந்து வேறுபட்டி ருந்தனர். நல்லவற்றிற்கும் பொல்லாதவற்றிற்கும் ஒன்றுகூடா மல் மௌனிகளாகவே காலங்கழித்து விட்டிருந்தனர்.

மனங்கள் பக்குவப்பட்டு விட்டனவோ, என்னவோ, பள்ளி வாசல் முறைப்பாடுகளும் பொலிஸ் முறைப்பாடுகளும் வெகு வாகக் குறைந்து விட்டதும் நல்ல சகுனம்தான்.

பழைய நிலைமை இப்பொழுது இல்லை. கல்வி கமக் காரர்களின், குறிப்பாக இன்றைய தலைமுறையினரின் அகக் கண்ணை திறந்து விட்டிருந்தது. அதனால் ஒரு வகைப் புரிந் துணர்வு, ஏற்பட்டு கம்பு, தடி வெட்டுக்கத்தி முதலியவற்றைத் தூர எறிந்துவிட்டு, அத்துடன் அந்த மௌன விலங்கும் அறுந்து நட்புறவு உதயமாகத் தொடங்கியிருந்தது.

இனி அவை நேசக்கிராமங்களே, சில காலமாக அமரதாசவும் ஹலீம்தீனும் எடுத்த முயற்சிகள் இன்று சாத்தியப்பட்டு விட்டன.

அக்கம் பக்கத்து சிங்கள முஸ்லிம் கிராமங்களின் ஒருமைப் பாட்டை பலப்படுத்துவது முக்கியம் என்பதை இரு சாராருமே, குறிப்பாக முதியவர்களே உணர்ந்து விட்டனர்.

பியசீலி அம்மாவுடனும் தோழிகளுடனும் ஏலவே தயாரித்து வைத்திருந்த பலகாரம் பழங்களுடன் வந்து சேரமசூதானம் எல்லாம் ஆயத்தம்' என்பதை உணர்த்த கதவுத்திரைச் சீலையை ஒதுக்கி தகப்பனை எட்டிப்பார்த்தாள்.

கிரிபண்டா மெள்ளமாக சைகை காட்டவே அமரதாசவும் பியசீலியும் விருந்தினருக்கு பலகாரமும்(கெவுங்) கோழிகுட்டு பழமும் பரிமாறினார்கள்.

தேநீர் விருந்துபசாரத்திற்குப் பிறகு விவசாயம் முஸ்லிம் களுக்கு எப்படித் தலையெழுத்தானது? என்று யாசீன் கேட்ட வினாவுக்குக் கொடுத்த விளக்கத்தை அடிப்படையாக வைத்து மீண்டும் ஒருமுறை முஸ்லிம்கள் அநுராதபுரத்திற்கு - அநுராத புர- காட்டிற்கு வந்த வரலாற்றுச் சுருக்கத்தை மிக உருக்கமாக சிங்கள மொழியில் எடுத்துரைத்து, சிங்கள மன்னராட்சியில், சிங்கள முஸ்லிம் நெருக்கத்தை மிக அழுத்தம் திருத்தமாக எடுத்து விளக்கினான் ஹலீம்தீன்.

இதற்குமுன் இவ்விதிகாச உண்மை அறியாத அக்கிராமவாசி கள் அசந்து அதிசயித்துப் போனார்கள். அவர்களிடையே ஒரு புத்தம் புதிய பாச உணர்வு துளிர் விட்டது.

சில தினங்களுக்கு முன் இரு கிராமத்தவர்களும் இணைந்து காட்டின் ஒரு பயங்கரமான பகுதிக்கு வேட்டைக்குப் போகவும் அங்கே இரு சாராரின் எல்லைகளுக்கு மத்தியில் விவசாயத்திற்கு இதுவரைக்கும் கிடைக்காத, மிக அற்புதமான நிலப்பரப்பைப் பார்வையிடவும் திட்டமிட்டிருந்தார்கள். நீர்த்தன்மை மிகுந்த அவ்வெல்லையில் ஒரு சிறு குளம் தோண்டினாலே இரு கிராமங் களுக்கும் விவசாயத்தில் எதிர்பாராத பயனைப் பெறமுடியும் என் பதை விவசாய மாணவர்கள் தெட்டத்தெளிவாக ஆய்ந்துள்ளனர்.

ஆனால், கிராமத்தில் வேறு சில பிரச்சினைகள் தலைதூக்கி யிருப்பதால், வேட்டைக்குப் போகவோ, அந்தப் பகுதியை பார்வையிடவோ சாத்தியப்படாது என்பதை ஹலீம்தீன் தெளி வாக்கினான்.

''கிரிபண்டா, நீங்க திட்டமிட்டபடி வேட்டைக்குப் போங்க... நாங்க கொமிட்டி கூடி பேசினம்... உங்கட திட்டத்துக்கும் நல்ல ஆதரவு கிடைச்சிருக்கு, எதிர்ப்பு இல்ல, ஊர்க்கட்டுப்பாட்ட மீறி

இப்ப வந்தா காரியம் கரச்சல்... நாங்க எடுத்திருக்கிற முயற்சிகள், திட்டங்கள் எல்லாம் பாழ்பட்டு போயிடும்... கொஞ்சம் பொறுமையா இருந்தா பின்னால எல்லாம் வெற்றியாகத்தான் முடியும். எடுத்த எடுப்பில அவசரப்பட்டு... நிலமைகளை மோசமாக்கிக் கொள்ளக்கூடாது தானே''

ஹலீம்தீன் எவ்வளவு ஆழமாகச் சிந்தித்து தீர்க்கதரிசனப் பார்வையுடன் கரும மாற்றுகிறான்' என்று கிரிபண்டாவும் ஏனையோரும் வியந்து பாராட்டினர்.

''நாங்க இந்த மொறக்கி வராட்டாலும் நீங்க எங்கட கிராமத்து வழியால போங்க... அதுக்கு அனுமதி வழங்கிட்டம்... இனியும் சுத்தி வளச்சி காட்டு வழியாப் போகத் தேவைப் படாது...''

இதைக் கேட்டதும் கிரிபண்டாவுக்கு இருப்புக் கொள்ள வில்லை. அப்பொழுதே வெளியேறி யார்யாருக்கோ, வேட்டைக் காரர்களுக்கு அழைப்பாணை விடுக்க வேண்டும் போலிருந்தது.

கொஞ்சநாள் சென்றதும்... மீண்டும் வேட்டையில் இணையவும், விதை நெல், மிளகாய்க் கன்றுகள் பரிமாற்றம் செய்யவும், வயல் வேலைகளுக்கு கூலி அடிப்படையில் ஆட்கள் போகவும் வரவும்...

கிரிபண்டாவின் எதிர்பார்ப்புகள் நீண்டு கொண்டே சென்றன.

இறுதியாக... சுற்றுப்புற சிங்கள முஸ்லிம் கிராமங்கள் அன்று இருந்த நிலையையும் இன்று இருக்கின்ற நிலையையும், விட்ட தவறுகளும், அதனால் இன்று ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பற்றியும் இனியும் காலந்தாழ்த்தாமல் செய்ய வேண்டிய கருமங்கள் பற்றியும் தொட்டுக்காட்டி, இவை பற்றி விரிவாக ஆராய்வதற்கு கிராம மட்டத்தில் கருத்தரங்குகள் நடத்த நாட்கள் குறிக்கப் பட்டு, ஒரு செயற்குழுவும் அமைக்கப்பட்டது.

இனிய விருந்துபசார வைபவம் வெற்றிகரமாக முடிந்ததும் ஒருவகைப் புதுப் பொலிவுடன் ஆட்கள் கலைந்தனர். ஹலீம்

தீனும் நண்பர்களும் எழுந்து கிராமத்து பெரியவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியேறிய போது வாசலில் பியசீலியும் தோழிகளும் காத்திருந்தனர்.

''ஹலீம் அய்யே'' என்று தொடங்கி சிங்கள மொழியில் கணீரென்று மனதில்பட்டதைக் கேட்டுவிட்டாள்.

''...ஓகஸ்ட் மாதத்தில் ஏ.எல் சோதின எடுக்கப் போறீங்களா... அல்லது... நீங்கள் எல்லாம் கிராம முன்னேற்றத்துக்கு பாடுபட போறீர்களா...?

''தெகம கரனவா'' என்று பதிலிறுத்ததோடு, பாடங்கள் பரீட்சை சம்பந்தமாக உரையாடினர்.

''நீங்க எல்லோரும் படிக்கிற மாதிரி தெரியல்ல... அமர அய்யாவுக்கு படிப்பில் கவனக் குறைவு.''

''இராச் சாப்பாடு முடிந்ததும் ஊர்ப் பாடசாலையில் இரவிரவா படிக்கிறம்... படிப்பு முடிஞ்ச பருவத்திலதான்''

''உண்மையா உங்களுக்கு அந்த வசதி இருக்கு... இடைக்கிடை கலந்துரையாடல் மூலம் நிறைய விசயங்கள் மனதில் பதியும்... ஆனால் எங்கட இந்தப் புதிய வீட்டுக்கு இன்னும் 'இலக்றிசிட்டி' கிடைக்கல்ல... என்னோடு படிக்க யசவத்தியும் மாலினியும் வந்து தங்குவார்கள். நாங்க இந்த புதிய மண்டபத்தில் 'அரிக்கன்' லாம்பை ஏற்றி வைத்து தூங்கி விழுவம்...'' அவர்கள் சிரித்தார்கள்.

''கொழும்பில எண்டா டியுசனும் டியூட்டரிகளும் நிறைய இருக்கு. யாசீன் யூ.டி.ஐ நண்பர்கள் மூலம் நோட்ஸ் எடுத்துப் படிப்பதால் பலருக்கும் உதவியாயிருக்கு... ஆனால் தமிழ் மூலம் நோட்ஸ் உங்களுக்கு பிரயோசனப்படாது...''

''பரவாயில்லை ஹலீம், பிரஸ்னயக் நே. எங்களுக்கு சனி ஞாயிறு நாட்களில் கொழும்பிலிருந்து விசேட பாட ஆசிரியர்கள் வந்து கருத்தரங்குகள் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

''அது நல்லது.''

''அப்ப ஹலீம் நாங்க முந்துறோம். நீ கதைச்சிட்டு, ஆறுதலா... வாவென்.''

''இல்ல... இல்ல... நானும் வரத்தான்... அநுராதபுரம் போகனும்.''

மேலும் சில நிமிடங்கள் அமரதாச நண்பர்களுடன் தனிப்பட்ட முறையில் பேசி விட்டு அவர்கள் பிரிந்தனர். சற்று நேரத்தில் அவர்கள் பஸ்ஸில் அநுராதபுரம் சென்றனர். சில முக்கிய விடயங்களுக்காக சுற்றியலைந்துவிட்டு ஊர் திரும்பிய போது...

பள்ளிவாசலில் இருந்து, மஃறிப் தொழுகைக்கான அழைப்பு தென்றலில் மிதந்து கொண்டிருந்தது.

# மூன்று

ஓர் இனிய திருப்பத்தையே ஏற்படுத்திய அந்த விருந்து பசாரத்திற்குப் பிறகு வந்த அந்த சனிக்கிழமை அமரதாசவுக்கும் ஹலீம்தீனுக்கும் ஓய்வுநாளாய் இருந்தது. இருவருக்கும் பிரத்தியேக வகுப்புகள் எதுவும் இருக்கவில்லை. அமரதாச ஹலீம்தீனுக்கு அழைப்பு அனுப்பியிருந்தான்.

அன்று காலை ஹலீம்தீன் தனது புதிய ஹொன்டா மோட்டார் சைக்கிளில் யாசீனையும் ஏற்றிக் கொண்டு முக்கிய அலுவலாய் சிங்களக் கிராமத்திற்குப் போய்க் கொண்டிருந்தான்.

கிரிபண்டா அந்த விருந்துபசாரத்திற்கு அழைப்பு விடுத்திருந்தும், சமரசிங்கவும் குணத்திலகவும் சமூகமளித்திருக்கவில்லை. அந்தக் கணமே கிரிபண்டாவும், அமரதாசவும் அவர்களை மட்டிட்டுக் கொண்டனர். 'விருந்து சுவைக்க நியாயம் இல்லா விட்டால் உள்ளத்தில் கசப்பு இருக்கிறது...'

அதையெல்லாம் அமரதாச பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. 'இவர்களெல்லாம் பெரிய எதிரிகள் அல்ல...' என்பது தான் அவனுடைய கணிப்பு.

இன்று அவர்கள் வயலுக்குப் போகவில்லை. நந்தசேனவின் கடையில் கஹட்ட உறிஞ்சிவிட்டு, கிண்டலாக உரையாடிக் கொண்டிருந்தனர்.

''குணே... மெச்சர கல்...'' என்று தொடங்கி, சமரசிங்க ஒரு கேள்வி கேட்டான்.

''இவ்வளவு நாள் இல்லாம, கிரிபண்டாவுக்கு திடீரென்று சோன கனோட உறவாட அப்படி என்ன அவசியம் வந்து விட்டது?''

'' ஹா... ஹா... ஹா... உண்மையில ஒனக்கு தெரியாதா...?''

''தெரியாதே...'' என்றான் குனே.

''ஒருவேள மகளுக்கு அங்க சம்பந்தம் செஞ்சி வைக்கப் போறானோ?''

''சே... சே... அப்படி இருக்காது''

''குணே... ஒனக்கு உலகமே தெரியாது.... கிரிபண்டன் மகள் அந்த சோனகப் பொடியனோட அவ்வளவு நெருக்கமா ஏன் பழகனும்? ஒரே வகுப்புதான்... ஆனா அவ வேற பாடசாலை... அவன் வேற பாடசாலை... அங்க தான் விசயமிருக்கு... இப்ப ஒனக்கு புரீதா?''

''... இருந்தாலும் இந்தக் காலத்து புள்ளங்க... பழகுறது அப்படித்தான்.. அதவச்சி நாங்க அப்படி முடிவுக்கு வரக் கூடாது.''

'சரி... சரி... நீ படிச்ச மனிசன்... ஒனக்கு இப்ப புரியாது. படிச்சவங்க எப்பவும் விட்டுக் குடுப்பீங்க... தலைக்கு மேல வெள்ளம் போன பிறகுதான் .... ''

இவ்வளவு நேரமும் மௌனமாயிருந்த உக்குரால உரக்கச் சிரித்து, அந்தக் கிண்டலுக்கு மெருகூட்டினான். அவனுடைய அந்தப் பேச்சில் அப்படி என்ன நகைச்சுவையைக் கண்டு விட்டானோ!

''புதிய தொல்லைகள் எங்களுக்குத் தேவையில்ல... நாங்க எப்பவும் போல ஒண்டுக்கும் சேராம எங்கட வேலவெட்டிகள கவனிச்சிக்கிட்டு ஒதுங்கியிருப்பம், என்ன நந்தசேன நான் சொல்றது...?''

''அப்போவ்... உக்குரால... நான் கடைக்காரன்; பொது மனிதன். என்னை ஒண்டுக்கும் இழுக்காதீங்க. நான் கடைக்கு

'யுனைடட் ஸ்டோர்ஸ்' என்றுதான் பெயர் வைக்க யோசித் திருக்கிறன். ஏனென்டா என் கடைக்கு எந்தவித வித்தியாசமு மில்லாம எல்லோரும் வந்து போகனும்; கிராமத்துக்கு நன்மை தரும் எந்த விசயத்துக்கும் நான் ஆதரவுதான்...''

பின்னர் சமரசிங்கவும், குணதிலகவும், உக்குராலவும் கிரி பண்டாவின் வீட்டுப் பக்கமாக நடந்தனர்.

ஹலீம்தீனும் யாசீனும் தூரத்தில் சைக்கிளில் வந்து கொண்டி ருந்ததைக் கண்டதும் சமரசிங்கவின் பகிடி எல்லை மீறியது.

''அன்ன உம்பலாகே மரக்கலயா எனவா...'' என்ற வார்த்தை கள், கடப்பல் அருகே நண்பர்களுடன் உரையாடிக் கொண்டி ருந்த அமரதாசவின் காதுகளில் ரீங்கரித்ததும், அவனது இரத்தம் ஒருகணம் உறைந்து விட்டது. பாய்ந்து சென்று அவனுடைய சேட்டைப் பிடித்து இழுத்துக் கொண்டான். அப்படியும் அவன் நிதானம் இழக்கவில்லை. நண்பர்களான பியசேன. லால், விமல், காமினி போன்றவர்கள் முன்எச்சரிக்கையாக பிடித்துக் கொண்டனர்.

''சமரசிங்க... எமது கிராமங்களைப் பொறுத்தவரையில் பாரிய அளவில் இனக் குரோதங்கள் தோன்றி, பிரச்சினைகள் எழும்பவில்லை. அதனால் இன்றைக்கி நூற்றுக்கு தொன்னூற் றைந்து வீதத்தினர் இந்தக் கிராம ஒருமைப்பாட்டை விரும்புகிற கட்டத்தில் நீ இப்படி எல்லாம் மனிதத்தன்மை இல்லாம தகாத முறையில பேசக்கூடாது...'' என்று அனைவருமே அறிவுறுத் தினார்கள்.

ஹலீம்தீனும், யாசீனும் அவ்விடத்திற்கு வரும் முன்பே அமரதாச ஓட்டமும் நடையுமாகச் சென்று வரவேற்றான்.

அமரதாசவின் நெருங்கிய நண்பர்களைத் தவிர மற்றவர்கள் கலைந்து சென்று விட்டனர்.

ஹலீம்தீனும் அமரவும் இதர நண்பர்களுடன் உரையாடிக் கொண்டே கிரிபண்டாவின் திறந்த வெளி மண்டபத்திற்கு வந்து

விட்டார்கள்.

கிரிபண்டா வயல் மேற்பார்வைக்குப் போயிருந்தான். பியசிலிக்கு இன்று ஹொரவப்பொத்தானையில் டியூசன் வகுப்பு. அம்மா பின்கட்டில் வேலையாக இருந்தாள். மண்டபத்தின் மூலையில் ஓர் இளம் பெண் அவித்த நெல்லை பன்பாயில் பரத்திவெயிலில் காயப்போட்டுக் கொண்டிருந்தாள்.

''நந்தா...'' என்று அமரதாச அவளை அழைத்தான். ஓட்டமும் நடையுமாக வந்து ஓரமாக நின்றாள் அந்த அழகிய யுவதி.

''... அபிட்ட தெம்பிளி கேன்ன...'' அவள் ஒரே பார்வையில் ஆட்களின் தலைகளை எண்ணிக் கொண்டுபோய் சில நிமிடங்களில் பெரிய தம்ளர்கள் நிரம்ப இளநீர் பரிமாறினாள்.

அமரதாச விளக்கம் கூறினான்.

''எங்கட அப்பச்சி காலம்தொட்டே ஒவ்வொரு கிராமத்திலும், அது சிங்கள கிராமமாயிருந்தாலும் சரி, முஸ்லிம் கிராமமாயிருந்தாலும் சரி, கிராமத்திற்கு ஒரு நிர்வாக சபைதான் இயங்கி வந்திருக்கு. சென்ற வாரம் நாங்கள் ஒரு புதுமை செய்திருக்கிறோம்... ஒங்கட கிராமத்திலிருந்தும் எங்கட கிராமத்திலிருந்தும் ஒரு செயற்குழு அமைத்தோம் இல்லையா...?''

''ஓம்...''

''அதை நாங்க விஸ்தரிக்க வேண்டும்.''

''எப்படி...?''

''சிங்கள முஸ்லிம் கிராமங்களை நிர்வகிக்கும் சபைகளிலிருந்து இரு பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட அல்லது பிரதேச விவசாயிகள் முன்னேற்றச் சங்கம் ஒன்று உருவாக்க வேண்டும்... எமது திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல இது உறுதுணையாக இருக்குமல்லவா...?''

''இது அருமையான யோசனை...'' என்று எல்லோரும் பாராட்டினர்.

''எமது தேர்தல் தொகுதியிலேயே முக்கிரவெவ தொடக்கம்... கிரிபேவ வரைக்கும் முப்பது கிராமங்கள் இருக்கு... சிங்கள கிராமங்கள்...? அதையும் கணக்கெடுத்து, எமது திட்டங்களையும் அங்கத்துவ படிவமும் அச்சடித்து, ஒவ்வொரு கிராமத்திற்கும் அனுப்பினால்....'' என்று நிறுத்தினான் ஹலீம்தீன்.

''அனுப்பினால் என்ன... ஒரு கேந்திர இடத்தில் சங்க அங்குரார்ப்பண கூட்டத்தை வைக்கலாம்... அப்புறம் எல்லாமே சங்க மூலம்... குரல்கொடுத்து அபிவிருத்திக்குப் பாடுபடலாந் தானே...?'' என்று முடித்து வைத்தான் அமரதாச.

இந்த யோசனைகளைப் பற்றி ஏனைய நண்பர்கள் வெகுவாகப் பாராட்டினார்கள்.

''ஒங்கட நிர்வாக சபையைக் கூட்டி ஆலோசித்தீர்களா...?'' என்று யாசீன் கேட்டான்.

''கலந்துரையாடினோம்... வயலையும் வயலைச் சார்ந்த ஒவ்வொரு உழவனினதும் நியாயமான பொதுப் பிரச்சினைகளையும் முன்வைத்து சங்கம் போராடும் என்று ஏகமனதாக முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது... இனி நீங்களும் நாங்களும் ஒன்றுகூடி உத்தியோகபூர்வமாக இன்னும் அலசி ஆராய்ந்து முடிவுகள் எடுக்க வேணும்.''

''சங்கத்தின் தலைமை அலுவலகம் அமைப்பதற்கு உன்ற இந்தப் புதிய வீடும், திறந்த வெளியும் மிகப் பொருத்தமாயிருக்கு...'' இதுவும் யாசீனின் கூற்று.

ஆனால் அதை மறுத்தான் அமரதாச.

''இதைவிட ஒரு சங்கத்தின் தலைமைக் காரியாலயம், அநுராதபுர நகரத்தில அமைவதுதான் மிகப் பொருத்தம், என்று நான் நினைக்கிறன்...'' என்றான். கூடி நின்ற நண்பர்கள் எல்லோரும் அதனை முற்று முழுதாக ஆதரித்தனர்.

''ஆனா மூன்றுமாத கால அவகாசம் தேவை....'' என்றான் ஹலீம்தீன்.

''எதுக்கு...?''

''ஏ.எல். சோதின முடிஞ்சாப் போலத்தான்... களத்தில இறங்கி வேலை செய்ய... நேரமிருக்கும்... இப்பதான் விளங்குது, நீங்கள் எல்லாம் கிராம முன்னேற்றத்திற்கு பாடுபட போறீங்களா என்று பியசீலி கேட்ட கேள்விக்கு முழுமையான அர்த்தம்....''

''எல்லாமே பரீட்சைக்குப் பிறகு. அதில் எந்தவித சந்தேகமும் இல்ல... கல்வி அபிவிருத்திக்கு, நாங்க முதலில் சோதினையில் பாஸ்பண்ணி முன்மாதிரி காட்ட வேண்டியது அவசியம். சோதின முடிஞ்ச கையோடு, மகஜர் தயாரிக்கும் வேலையைத் தொடங்க வேண்டும்...''

''பரீட்சை முடிவுகள் வரும் வரைக்கும்.... இல்லாவிட்டா பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகும் வரைக்கும் நீண்டகால அவகாசம் கிடக்கு'' என்று கூறிய ஹலீம், சற்று சிந்தனை செய்து விட்டு ''நாம திட்டமிட்டு இக்கால அவகாசத்தில் பிரதிநிதிகள் கிராமந்தோறும் விஜயம் செய்து, பிரதேச விவசாயிகள் முன் னேற்றச் சங்க அமைப்பு பற்றியும் அதன் புனிதமான நோக்கங் கள் பற்றியும் பிரச்சாரம் செய்தால் அனைத்து கிராமவாசி களினதும் ஒத்துழைப்பைப் பெறமுடியும்.... என்று ஹலீம்தீன் மற்றுமொரு யோசனையை முன்வைத்தான்.

அதனை மிக்க மகிழ்ச்சியுடன் ஆதரித்த அமரவும் நண்பர் களும், நீங்க சொல்வது சரி... எமது நூற்றுக்கணக்கான கிராமங் கள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் தனித்தனியே ஒதுங்கி பிரிந்து கிடப்பதால் தான் எல்லாத் துறைகளிலும் நாம் முன்னேற் றம் காணாமல் பின்தங்கிக் கிடக்கிறோம். இதனை கமக்காரர் களுக்கு உணர்த்தி, ஒரு பலமான பிரதேச ஒன்றியம் மூலம் இதுவரை காலமும் குறைபாடுகள் நீக்கப்படாமல் இருளிலே வாழ்ந்துவிட்ட எமது விவசாய சமூகத்திற்கும் ஒளிமயமான எதிர்காலத்தைப் பெறமுடியும் என்பதைத் தெளிவாக, ஆணித்தர மாக எடுத்துரைக்க பிரச்சாரம் தேவைதான்.'' என்று சற்று

உணர்ச்சிவசப்பட்டு கூறிமுடித்தான் அமரதாச.

''வெள்ளாம வெட்டின கையோடு நீயும் மோட்டார் சைக்கிளுக்கு அப்பாவிடம் அப்பிளிகேசன் போட்டுவை. பிரச்சார வேலைகளுக்கு, பஸ்ஸுக்காக மணிக்கணக்காக காத்துக் கொண்டிருக்கும் நேரத்தை மிச்சம் பிடிக்கலாம்தானே.''

''உண்மைதான். போக்குவரத்தும் எங்களுக்கு ஒரு பிரச்சினை. பஸ் வண்டிகளுக்காக காத்திருந்தே கால விரயம் செய்திருக்கிறோம். முந்தியெண்டா ஒரு ஹையேஸ் வான் வாங்க வேண்டுமென்று அப்பா சொல்லிக் கொண்டிருந்தார். ஆனா.... இப்ப இந்த விசாலமான வீட்ட கட்டினதால... பணப்பிரச்சினைகள் கிடக்கு... எதுக்கும் யோசிப்பம்.''

''மனித வாழ்க்கையை ஒருமைப்படுத்தும் போக்குவரத்து மற்றும் வெகுசனத் தொடர்பு சாதனங்கள் எத்தனை கிராமங்களுக்கு வந்திருக்கின்றன, என்று ஒரு கணக்கெடுக்க வேண்டும். வெறும் கிணற்றுத் தவளைகளாய் வயல்களிலும் வயலைச் சார்ந்த நிலங்களிலும் பருவ மழையை மட்டும் நம்பியே உழுது உழுது உண்டு வறுமைப்பட்டே வாழ வைத்து விட்டார்கள்.

ஒரு முழுமையான விழிப்புணர்வு ஒவ்வொரு விவசாய உள்ளங்களிலும் முகிழ்த்தெழ வேண்டும்.... என்று அவ்விளைஞர்கள் விரும்பினார்கள்.

அதற்கு முன்னோடியாக முன்னர் முஸ்லிம் கிராமவாசிகளால் தடைபோடப்பட்டிருந்த, குளக்காட்டுக்குப் போகும் பாதையை ஹலீம்தீன் மூலம் திறந்து... அதுவும் நாட்கணக்கில் சுற்றி வளைத்து, பயங்கர காடுகள் வழியே போகாமல் முஸ்லிம் கிராமத்தின் ஊடாகப் போக அனுமதி கிடைத்திருப்பதே கிரிபண்டன் குழுவினருக்கு மட்டற்ற மகிழ்ச்சியும் உற்சாகமும் தந்திருப்பதை மீண்டும் அமரதாச நினைவு கூர்ந்தான்.

இனி அதற்கென ஒரு நாளை நிச்சயித்து வேட்டைப் பயணத்தை ஆரம்பிக்க வேண்டியதுதான். ஒரு ஞாயிற்றுக்கிழமை

அதிகாலையில் வெளிக்கிட்டால் அடுத்த ஞாயிற்றுக்கிழமை நண்பகலுக்கு ஊர்திரும்பி விடலாம். இந்த வேட்டையில் இந்த முறைக்கு முஸ்லிம் கிராமவாசிகள் பங்குபற்றாததால் சிங்கள கிராமத்து வேட்டைக்காரர்கள், முஸ்லிம் கிராமத்திற்கு அதி காலையில் வந்து அங்கு காலையுணவை முடித்துக் கொண்டு அவ்வழியே புறப்பட வேண்டும் என்று ஹலீம்தீன் அன்புக் கட்டளையிட்டான்.

அன்று மதியம் ஹலீம்தீனும் யாசீனும் ஊர்திரும்பிக் கொண் டிருந்த போது ''ஹலீம்... இப்ப எல்லாம் என்ற மனசிலே ஒரு புதிய பிரச்சினை தலைதூக்கி வேதனை தந்து கொண்டிருக்கு....''

காட்டுவழியே சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு, ''அதென்ன பிரச்சினை?'' என்று ஆவலுடன் கேட்டான் ஹலீம்.

''காட்டுக்குள் ஒதுங்கி வாழ்ந்து, எங்கட முன்னோர் கட்டிக் காத்த மதக் கலாச்சாரத்தில எத்தகைய சிதைவுகளும் ஏற்படப் போவதில்லை.... அதாவது அந்நியர்களிடமிருந்து எமக்கு எந்தவிதமான ஆபத்துகளும் இல்ல. குழிவெட்டிக் கொள்வது எமக்கு நாமேதான்.''

''எனக்கொன்றும் விளங்கல்ல''.

''கொழும்பு போன்ற நகர்ப்புரத்து நாகரீகம் மெள்ள மெள்ள எங்கட ஊர்களிலும் ஊடுருவுவதால் எங்கட கிராமங்களுக்குரிய தனித்துவமான விழுமியங்கள் மாறுகின்றன. எங்கட வாழ்க்கை முறை படிப்படியாக எங்களாலேயே அழிவுப்பாதைக்குப் போய்க் கொண்டிருக்கு.... ஒண்டு கேட்கிறன் இப்ப எங்கட பெண்டுகள் சவுதிக்கும் துபாய்க்கும் போறது என்ன கலாச்சாரம்? ஹஜ்ஜுக்குப் போறதாயிருந்தாலும் பெண்கள் தங்கட கணவர் மாருடன் அல்லது நெருங்கிய சொந்தங்களுடன் போக வேண்டு மென்பது சட்டம். அந்த மாதிரியான எங்கட தனித்துவத்த இழக்க வேணுமா.....? என்று உணர்ச்சிவசப்பட்டான் யாசீன்.

''நீ சொல்றதில முழுக்க முழுக்க உண்மை இருக்கு. நானும் பலமுறை அதப்பத்தி யோசிச்சது தான்.... ஆனா நாம படிப் படியா வகுத்துக் கொண்டு போற திட்டங்கள் நடைமுறைக்கு வரும்போது, அவற்றிற்கு பரிகாரம் கிடைக்கும் என்று நம்பு றேன்... எமது கிராமங்கள் இன்னும் தன்னிறைவு அடையல்ல... அதான் நான் அண்டக்கும் எங்கட கருத்தரங்கில சொன்ன. அந்தக் காலத்தில மன்னர்கள் குளங்கள கட்டிப் போட்டனர். விளைச் சல்கள் தவறவில்லை. யானைகளை வெளிநாடுகளுக்கு அனுப் பினது போல அரிசியையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்த னர் எங்கட சிங்கள மன்னர்கள். சனப்பெருக்கம் கூடிக்கொண்டு வார இந்தக் காலகட்டங்களில ஒழுங்கான நிரந்தரமான போதிய அளவு குளங்கள் இல்ல. வருஷா வருஷம் பருவ மழைய மட்டும்தான் நம்பிக் கொண்டிருக்கிறோம். அதுவும் காலை வாரிவிட்டா எல்லாம் போச்சி. ஏன் தொடர்ந்து 1970களில மூன்று நாலு வருஷம் விவசாயம் செய்ய முடியாம, கொடிய வறுமைக்குத் தள்ளப்படவில்லையா? இப்படியான கட்டங் களில் பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டாமெ ன்று சட்டம்போட்டு தடுக்க ஏலுமா?

ஆனா பெண்கள் போறது மார்க்க சட்டத்திற்கு விரோத மானது, அது ஒரு பக்கத்தில கிடக்க... எங்கட கிராமத்திலிருந்து பலர் போயிருக்கிறாங்க... அதில ஒரு குடும்பத்தில ஒரு தாய் போனதிலிருந்து பிள்ளைகளின் செலவுக்காகவும், கல்விக் காகவும் வீட்டைப் பெருப்பிப்பதற்காகவும் பணம் அனுப்பிக் கொண்டிருந்தா.... ஆனா என்ன நடந்தது? இங்க கணவன் ஒன்னையும் கவனிக்காம.... அனுப்பின பணத்த எல்லாம் கண்டமாதிரி நாசமாக்கி.... சே... அதே நேரத்திலே இன்னொரு ஏழைக் குடும்பத்துப் பெண் அனுப்பின பணத்தால குடும்பத் தரம் உயர்ந்திருக்கு....

ஒரேயொரு பெண் 'ஹவுஸ் மேட்டாக' சில வருஷங்கள்

இருந்து வந்து... பணத்திமிரால் புருஷன விவாகரத்து செய்திருக்கா...

''சரி... சரி... யாசீன்... அதெல்லாம் தனிப்பட்ட முறையில குடும்பப் பொறுப்பில்லாத தன்மையைத்தான் எடுத்துக் காட்டுது. இருப்பினும் முதல்ல எல்லா கிராமங்களும் தன்னிறைவு உள்ள கிராமங்களாக மாறனும், இப்பதான் சிங்கள முஸ்லிம் கிராமங்களில் புரிந்துணர்வு ஏற்பட வேண்டிய காலத்தின் தவிர்க்க முடியாத தேவை உணரப்படுகிறது. இன்று வரைக்கும் நம்மட ஆக்கள் அறியாமையில இருந்தது ஒரு புறமிருக்க வாழ்க்கைக்கு அல்லது நடைமுறைக்கு ஒத்துவராத தத்துவங்கள பேசியே காலத்த வீணாக்கியிருக்கிறாங்க, இப்ப அதல்ல என் கவலை... நீ சொன்னியே நமக்கு நாமே குழி வெட்டிக் கொள்கிறோம் எண்டு.... அது வேறொரு பக்கத்திலயும் சரி'' என்று நீண்ட விளக்கம் கொடுத்தான் ஹலீம்.

''அதென்னது....?''

''அது எங்கட கிராமத்துக்கு இன்னும் வரல்ல... இப்ப எமது மத அனுஷ்டானங்களில, நாடளாவியரீதியில பல்வேறுபட்ட பிரிவினைகள் முளைத்து, மதப்பூசல்களாய்க் கிளம்பி அடிபிடி படுவது போல்.... எமது கிராமங்களிலும் புகுந்து விளையாடி எமது கிராமவாசிகளை சின்னாபின்னப் படுத்தாம.... நாம் கவனமா பாத்துக் கொள்ள வேணும். அதில தான் என் கவனம். அது தவிர நம்மட பெண்டுகள் வெளிநாடுகளுக்குப் போகிறார்கள் என்று நாம ஆதங்கப்பட்டு தடுத்து நிறுத்த முயல்வது முடியாத காரியம். எமது கிராமத்தில் வாழும் சகல விவசாயிகளுக்கும் நியாயமாகக் கிடைக்க வேண்டிய நிலப்பரப்புக் கிடைத்து விடுமானால், நிரந்தரக் குளங்களைக் கட்ட நடவடிக்கை எடுத்து விட்டா வருவாய் பெருகும்... பெண்கள் 'ஹவுஸ் மேட்' வேலைதேடி வெளிநாடுகளுக்கு அலைய வேண்டிய தேவை ஏற்படாதுதானே.

''அதுவும் நியாயம்தான். நீ சொன்ன மத அனுஷ்டான விஷயங்கள நானும் கேள்விப்பட்டன்... எதற்கும் நாம பள்ளிவாசல் சம்பந்தப்பட்ட நிர்வாக விவகாரங்களில் கண்ணும் கருத்துமாய் இருக்க வேண்டும். குர்ஆன், ஹதீஸ், இஜ்மா, கியாஸ்.... இவற்றைத் தான் நாங்கள் பின்பற்ற வேண்டும். புதிய புதிய கொள்கைகளால் நாங்கள் வழி தவறிவிடக்கூடாது. அடிக்கடி பள்ளி மௌலவியும் 'குதுபாப்' பிரசங்கங்களில இவற்றை வலியுறுத்திக் கொண்டே இருக்க வேணும்.....''

அன்று ஊர் திரும்பிய ஹலீம்தீனும் யாசீனும் இதர அங்கத்தவ நண்பர்களை பாடசாலை மண்டபத்திற்கு அழைத்து விடயங்களைப் பகிர்ந்து கலந்துரையாடினர்.

'சகல கிராமங்களையும் ஒன்றிணைக்க முன், பாதைகளை சீரமைத்து பஸ் போக்குவரத்துகளை ஒழுங்குபடுத்த வேண்டும். இதுவே எங்கள் வெற்றிப்பாதைக்கு வழிவகுக்கும் என்றே சகலரும் வலியுறுத்தினர். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மார்க்கம் சம்பந்தப்பட்ட பேச்சு இடம்பெற வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேறியது.

# நான்கு

கிராமங்களில் உள்ள துப்பாக்கிகள் அனைத்தும் பொலிசில் ஒப்படைக்கப்பட்டிருந்தன. மிகப் பயங்கரமான காட்டுப் பகுதிக்கு துவக்குகள் இல்லாமல் செல்ல முடியாத நிலை உருவாகியிருந்தது. வனவிலங்குகள் வேறு ஆங்காங்கே வெள்ளாமையை நாசமாக்கிக் கொண்டிருந்தன.

ஒரு மாதத்திற்கு முன் பயிர்களின் பாதுகாப்பு கருதி, விபரமாக விஸ்தரித்து, வெள்ளாமை வெட்டி முடியும் வரைக்குமாவது, துவக்குகள் தம்வசமிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி விண்ணப்பித்திருந்தார்கள் விவசாயிகள்.

அதிஷ்டவசமாக நான்கு துப்பாக்கிகளை மட்டும் வைத்திருக்க அனுமதி கிடைத்தது.

கிரி பண்டாவும் நண்பர்களும் மகிழ்ந்து போனார்கள்.

அவர்கள் ஹலீம்தீன் குறிப்பிட்டுள்ள அந்தப் பயங்கர காட்டுப் பகுதியின் நடுவே தேடுவாரற்று மனித சஞ்சாரத்திற்காகத் தேங்கிக் கிடக்கும் அந்த விவசாய நிலப் பரப்பைப் பார்வையிட ஆயத்தமானார்கள்.

'இனவாதத்தை ஒழித்து, மானுட நேயத்துடன் வருபவர்கள் மட்டுந் தான் என்னைத் தீண்ட முடியும்' என்று அந்த மண் சவால் விட்டது.

'குறுகிய நோக்கங்களோடு வந்தால், என் மீது வாழும் மிருகங்களே உங்கள் மணங்களை மோப்பம் பிடித்து, உங்களுக்கு தண்டனை வழங்கும்.' என்று சொல்வது போல் இருந்தது.

ஒரு புனிதமான திங்கட்கிழமை காலை மலர்ந்ததும் ஒருவர் பின் ஒருவராக வந்து கிரிபண்டாவின் திறந்தவெளி மண்ட பத்தில் சேரத் தொடங்கினார்கள்.

நேரம் போய்க் கொண்டிருந்தது.

'பத்துப்பேரில் இன்னும் குணத்திலக்காவைக் காணவில் லையே... எல்லோரது பார்வையும் சாலையில் லயித்துக் கொண்டி ருந்தது.

ஒருவேளை சமரசிங்க அவனையும் குழப்பியிருப்பானோ தெரியவில்லை. எல்லோரது சந்தேகமும் வலுவடைந்து கொண் டிருந்தபோது, பொடி மாத்தயாவின் டிராக்டர் வண்டியின் கரகரத்த குரல் கேட்டது. குணத்திலக்காவும் பதினோராவது ஆளாக அவனது சோடி சமரசிங்காவும் வந்து கொண்டிருந் தார்கள். கிரிபண்டாவின் டிராக்டர் வேலை செய்து களைத்துப் போயிருந்ததால் 'சேர்விஸுக்கு' போடப்பட்டிருந்தது. அத னால் தான் இந்த ஏற்பாடு.

டிராக்டர் எதுவானாலும் அடர்ந்த காடுகளின் மேடு பள்ளங் களில் பக்குவமாகச் செலுத்தும் லாவகமும் திறமையும் குணத் திலக்காவுடையது. குணத்திலக்கா வராமல் சமாளிக்க முடியாது. அவன் வந்தால் நிச்சயம் சமரசிங்காவும் தொத்திக் கொள்வான். அது தவிர்க்க முடியாதது.

''...... எனவா வெலாவட்ட.....''

வேட்டைக்காரர்களின் முகங்களில் பரம திருப்தி.

அனைவரும் சுறுசுறுப்பாக ஆயத்தமானார்கள்.

கிரிபண்டா ஓர் அனுபவமுள்ள வேட்டைக்காரன். அறுபதி லும், வேட்டை என்றாலே போதும். எங்கிருந்துதான் அந்த உற்சாகம் வந்து விடுகிறதோ. 'மணியன்' வேட்டை என்றாலே உஜார்தான், என்று முஸ்லிம் கிராமவாசிகளின் பாராட்டைப் பெற்றவர்.

கிரிபண்டா அடிக்கடி ஒரு கதை சொல்வது வழக்கம். நாற்பது வருடங்களுக்கு முன் தனது இளமைப் பருவத்தில், அநுராதபுர பொலிஸில், ஒரு மலாய் பொலிஸ்காரருடன் தனக்கு சினேகம் இருந்ததாம். அவருடைய பெயர் உஸ்மான். அவர் வேட்டையில் ஒரு வேங்கை. வேட்டையில் பல நுணுக்கங்களை அந்தப் பொலிஸ் காரரிடமிருந்துதான் கற்றிருக்கிறான்.

இன்றைக்கும் வேட்டைக்கென்று நீட்டு நீட்டாக நான்கைந்து 'பனை கருக்கை' வெட்டியபோது உஸ்மான் பொலிஸ்காரரின் ஞாபகம் வந்தது. எத்தனையோ வருடங்களுக்கு முன் கிரி பண்டா அந்தப் பொலிஸ்காரரிடம், 'என்னத்துக்கு ஐயா இந்தப் பனைக் கருக்கு?' என்று நையாண்டியாகக் கேட்டபோது 'கால மும் சந்தர்ப்பமும் வரும்போது நீங்கள் அறிவீர்கள்' என்று சொன்ன ஆறாம் மாதத்தில் அந்த உண்மையை அனுபவமூல மாக அறிந்து வியப்புற்றான் கிரிபண்டா.

அன்று கிரிபண்டாவும் மலாய்ப் பொலிஸ்காரரும் வேறு இருவரும், காட்டுவழியே துவக்குகளை ஏந்தியவண்ணம் சென்று கொண்டிருந்த போது பின்னால் ஒரு கரடி அவர்களைப் பின்தொடர்ந்திருக்கிறது. வேட்டைக்குச் செல்லும்போது முன்னால் மட்டும் பார்த்துக் கொண்டு போகக்கூடாது. ஆளுக் காள் மாறிமாறி எல்லாப் பக்கங்களிலும் அவர்களின் பார்வை யும், கவனமும் லயித்திருக்க வேண்டும் என்பது விதி.

பொலிஸ்காரர் பின்னால் சாடையாகத் திரும்பிப் பார்த்து, நிலைமையைப் புரிந்து கொண்டார். பயமும் பதட்டமும் அடை யாமல், கழுத்தின் பின்புறத்தில் தொங்கும் பையில் பனைக்கருக்கு பத்திரமாக இருக்கின்றனவா என்று உறுதிப்படுத்திக் கொண்டார்.

''நண்பர்களே, பின்னால வந்து கொண்டிருக்கிறார். பதட்டப் படாமல் மெள்ளமாக எட்டி நடந்து பற்றைக்குள் பதுங்கிக் கொள்ளுங்க. முடிந்தால் மரத்தில் ஏறிக் கொள்ளுங்க. நான் பின்னடைந்து சமாளித்துக் கொள்வேன்....'' என்றவர் பின்னால்

கையைப் போட்டு, பனைக்கருக்கொன்றை இழுத்தெடுத்து, பின்புறம் திரும்பாமலே அதை ஒரு விசிறியைப் போல் ஆட்டிக் கொண்டே நடந்தார். ஆனால் அவருடைய அந்தப் பலப்பரீட்சைக்கு நேரம் இருக்கவில்லை. பின்னால் பற்றைக்குள் மறைந்திருந்த கிரிபண்டா, துவக்கு விசையை அழுத்தி விட்டான். வயிற்றில் ஒரு சூடு, தலையில் ஒரு சூடு. மறுகணம் கரடி தரையில் சாய்ந்தது.

உஸ்மானுக்கு பொல்லாத கோபம் வந்து விட்டது.

''ஏன் சுட்டீங்க.....? நான் திரும்பாம பின்புறத்தில் இந்தப் பனைக்கருக்கை ஆட்டிக் கொண்டு வந்தேன். கத்திபோல் கூர்மையாக இருக்கும் இந்தக் கருக்கை கரடி வந்து பற்றிக் கொண்டதும் அதன் கைகள் வெட்டுப்பட்டு, இரத்தம் கசியும். இரத்தத்தைக் கண்டதும், பயந்து ஓடிவிடும் சுபாவமுடையது கரடி. இதுதான் அந்த ரகசியம். அதை நான் நிரூபித்துக் காட்ட ஒரு அருமையான சந்தர்ப்பம்... சே. நாசமாக்கி விட்டீங்களே.''

''அந்தக் கரடியை சுட்டு வீழ்த்துவதற்கு நல்ல வாய்ப்பு இருந்தும்..... அதனை உங்களுடன் மல்லுக் கட்டவிடுவது ஆபத்தானதல்லவா?''

''அதெல்லாம் எனக்கு சிம்பள்... கிரிபண்டா, உங்களுக்கு மனசிலே பயம் இருக்கு. வேட்டைக்காரர்களுக்கு புயம் இருக்கக் கூடாது. சரி... சரி... இன்னொரு சந்தர்ப்பம் வரட்டும்....'' என்று கோபம் தணிந்து உரத்துச் சிரித்தார். இச்சம்பவத்தை நினைவு கூர்ந்தாலே கிரிபண்டாவுக்கு வீரம் பிறந்துவிடும்.

வேட்டைக்குரிய சீருடையை தூசுதட்டி அணிந்து கொண்டான்.

காவிநிற கட்டைக் கழிசானும், அதே நிறத்தில் கனத்த சேட்டும், ஒரு நாள் முழுக்க துடைத்து எடுத்து வைத்திருந்த இரட்டைக் குழாய்த் துப்பாக்கியும் கொண்டு வந்தான். வேட்டைக்குப் போதுமான தோட்டாக்களையும் இரு கழிசான் பொக்கட்டுகளில் புகுத்தியாயிற்று.

ஒரு பழைய சாக்குப் பையில் பாத்திரங்கள், அரிசி, காய்கறிகள், என்று சில நாட்களுக்குத் தேவையான சமையல் சாமான்கள், சீனி, தேயிலை என்று என்னென்னவோ..... போடப்பட்டிருந்தன. அவற்றையெல்லாம் கவனமாக சரிபார்த்து பொறுப்பேற்றான் சமரா கிழவன்.

அடர்ந்த காடுகளில் வேட்டையாடித் திரியும் போது, சமரா மிகவும் அற்புதமாகச் சமைத்து, தாமரை இலைகளில் பரிமாறும் போது, இல்லங்களில் சமைக்கும் வளையல் கைகள் நிச்சயமாகத் தோற்றுப் போகும். ஒரு சந்தர்ப்பத்தில் கிரிபண்டா இல்லத்தில் தனித்திருந்தபோது வந்து சேர்ந்த சமரா.... காலையுணவுக்காக, குறுணல் அரிசிச் சோறும் காரமான தேங்காய்ச் சம்பலும் தயாரித்தான். கிரிபண்டாவை திக்குமுக்காடச் செய்தது அதன் உறைப்பல்ல. அலாதியான சுவைதான்.

அன்றிலிருந்து வேட்டைக்குப்போகும் போதெல்லாம் சமராதான் சமையல் பொறுப்பு.

டிராக்டர் வந்து நின்றதும், துப்பாக்கிகள் , சாமான் பொதிகள், ஆறு பட்டரி டோர்ச் லைட்டுகள் இத்தியாதி சாமான் தட்டு முட்டுகள் அடங்கிய சாக்குப் பைகளை ஏற்றினர்.

வந்தவர்கள் அனைவரும் தேநீர் அருந்தியவுடன் விடை பெற்றுக் கொண்டு டிராக்டரில் ஏறிக் கொண்டனர்.

அமரதாசவின் தாய் பிசோ, பியசீலி, யசவத்தி முதலியோர் வாசலில் குழுமி நின்று வழியனுப்பினர். வண்டி தனது இயற்கை ஒலியுடன் விடியற்காலையின் அமைதியைக் கெடுத்துக் கொண்டு, காட்டையும் மேட்டையும் பிளந்த வண்ணம், ஊர்ந்து கொண்டிருந்தது. நல்லதுக்கும் கெட்டதுக்கும் ஊருக்கு இருப்பது ஒன்றிரண்டு டிராக்டர் வண்டிகள் தாம்.

நாற்பத்தைந்து நிமிடங்களாக ஊர்ந்து கொண்டிருந்த வண்டி, முஸ்லிம் கிராமத்தினுட் சென்று பள்ளிவாசலுக்கு முன் நின்றது.

சின்னஞ்சிறுசுகள் 'ஓ'வென்று மகிழ்ச்சி ஆரவாரத்துடன் ஓடி

வந்து முற்றுகையிட்டனர். கிரிபண்டா குழுமி நின்ற சிறுவர்களில் யாரையோ மிகக் கூர்மையாக அவதானித்துவிட்டு-

''சமது விதான ஒகட வாப்பாவ?''

''ஓம்'

''எங்கே போனது?''

''வயலுக்கு...''

சிறிசுகளின் முகங்களிலும் கண்களிலும் எதுவிதமான அந்நியமும் இருக்கவில்லை. அதற்கிடையில், டிராக்டர் சத்தத்தைக் கேட்டு, ஹலீம்தீனும், யாசீனும் ஓட்டமும் நடையுமாக வந்தனர்.

''எல்லோருமா வீட்ட வாங்க. டிராக்டரை கடைக்கு முன்னால் மாமரத்தடியில் நிறுத்தினால் நல்லது.''

அரசினர் தார் ரோட்டின் நடுவே நிறுத்தப்பட்டிருந்த வண்டியை முன்னால் எடுத்துச் சென்று குறிப்பிட்ட கடை முன்றிலில் பாதுகாப்பாக நிறுத்தியதும் எல்லோரும் இறங்கி ஹலீம்தீனுடன் நடந்தனர். ஹலீம்தீனின் இல்லத்திற்கு, பள்ளிவாசலை அடுத்து உள்ள சிறுபாதையில் சிறிது நடக்க வேண்டியிருந்தது. பாதையைப் பெருப்பிக்கும் திட்டம் இன்னும் நடைமுறைப் படுத்தப்படவில்லையாம். கல் பதித்து தார் போட வேண்டும் என்பதற்காக பிற்போடப்பட்டிருக்கிறது.

சிங்களக் கிராமத்திலிருந்து வந்த அனைவரையும் ஹலீம்தீனின் தகப்பன், அப்துல் மஜீத் இன்முகத்துடன் வரவேற்று அறிமுகப்படுத்தி, விறாந்தையில் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் அமரச் செய்தார். நீண்ட இடைவெளிக்குப் பின் அப்துல் மஜீதும் கிரிபண்டாவும் மனம்விட்டுப் பேசி மகிழ்ந்தனர். அவர்களுக்குப் பேச வேண்டிய விடயங்கள் எவ்வளவோ இருந்தன.

வேட்டைப் பிரியர்கள் காலையுணவுக்கு குரக்கன் பிட்டையும் இறைச்சிக் கறியையும் சுவைத்து, பிறகு வாழைப்பழம் தேநீர்... சிகரட்.... என்று எல்லாவற்றையும் முடித்து விட்டு,

''இன்று இரவு வரைக்கும், எனக்கு ஒன்றும் தின்ன வேண்டிய அவசியம் இல்லை....'' என்று கிரிபண்டா பாராட்டினான். ஒரு மணித்தியாலத்திற்குப் பிறகு மீண்டும் டிராக்டர் வண்டி, வேட்டைக்குப் புறப்பட்டது. பலரும் சிகரட் புகையை இழுத்து அனுபவித்த வண்ணம் சென்று கொண்டிருந்தனர்.

''கேம ஹரி ரசய்....'' என்று அவர்கள் மிகவும் திருப்தியடைந்திருந்தனர்.

தூரத்தே சமது வயலிலிருந்து வியர்க்க வியர்க்க வந்து கொண்டிருந்தான். கிரிபண்டா மிக்க ஆவலுடன்,

''என்ன சமது, நாங்க வந்து கன நேரம்''

''எனக்கு ஒரு சின்ன வேல. சாப்பிட்டீங்களா?''

''ஓ. நல்ல சாப்பாடு.''

''அப்ப... கிரிபண்டா நீங்க... போய் வெற்றியோட வாங்க... ஜயவேவா...''

கிரிபண்டாவின் முகத்தில் மகிழ்ச்சி நிலவியது. தன் தகப்பன் லொக்கு பண்டார தலைவராய் இருந்தபோது சில்லறைக் காரணங்களுக்காக, வேரூன்றிய பகை தப்பபிப்பிராயங்களை கலைத்து கிராம ஒற்றுமையை நிலைநாட்ட முடியாமல் போய் விட்டது. ஆனால் கிரிபண்டா பொறுமையுடன் எடுத்துக் கொண்ட முயற்சியில் தன்மகன் அமரதாச பெரும்பங்காற்றி, எடுத்துக்கொண்ட கரிசனையில் இணக்கம் சுடர்விட்டிருந்தது.

முன்பு முஸ்லிம் கிராமவாசிகளால் தடைபோடப்பட்டிருந்த குளக்காட்டுப் பிரதேசத்திற்குப் போகலாம்... என்ற அனுமதி ஒன்றே பல தடைக் கற்களையும் தளர்த்தி விட்டு புரிந்துணர்வையும் இணக்கத்தையும் மலரச் செய்திருந்தது.

''அந்தக் குளக்காட்டுப் பிரதேசத்தில இப்பொழுது இராக் காலங்களில் பன்றிகள் கூட்டமாக வருகுதாம்.... அதுதான் முஸ்லிம்கள் பின்வாங்கி விட்டார்கள்.'' என்று சமரசிங்க கிளப்பிவிட்ட பிரச்சாரம் எடுபடவில்லை.

''தேவையில்லாத பிரச்சாரங்களை பரப்பாம, மௌனம் சாதித்து விட்டா அவை காற்று வாக்கில் மிதந்து மடிந்து மறைந்துவிடும். ஆனால் நாம அவற்றைப் பெரிதாக தூக்கிப் பிடித்து எதிர்ப் பிரச்சாரம் செய்து கொண்டிருப்போமானா, அதற்கு நாம உயிர் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்... என்பது தான் உண்மை'' என்று கிரிபண்டா தன் நீண்ட கால அனுபவம் மூலம் கூறிய மணிவாக்கை எல்லோரும் அங்கீகரித்தனர். எனவே சிங்கள கிராமவாசிகள் அச்சமின்றி, வேட்டைக்குப் போகவும் பொன்விளையும் பூமியான குளக்காட்டுப் பிரதேசத்தைப் பரிசீலனை செய்யவும் தீர்மானித்துப் புறப்பட்டு விட்டனர்.

ஏ.எல் பரீட்சை காரணமாக ஹலீம்தீனும், அமரதாசவும் நின்று விட்டார்கள். உண்மையில் அவர்களது 'வேட்டை' கிராமங்களின் ஒருமைப்பாடே. அதற்கான வழி வகைகளே.....

சமரசிங்கவின் குத்தல் பேச்சுகளுக்கும் வானவெடிச் சிரிப்புகளுக்கும் பக்கவாத்தியங்கள் மெருகு ஊட்டவில்லை, என்பதை உணர்ந்து இப்பொழுது மிகவும் நிதானமாக ஒழுங்கில்லாத காட்டு வழிகளில் டிராக்டர் வண்டியைச் செலுத்திக் கொண்டிருக்கும் குணத்திலக்க இவ்வாறு ஒரு கருத்தை வெளியிட்டான்;

''சமரசிங்கா... குடிச்சிருந்தா தான், அப்படி தேவையில்லாம பேசுவான். குடிக்காம இருந்தா அவனைப் போல ஒரு நல்லவனை தேடிப் பிடிக்க மாட்டீங்க...''

# ஐந்து

ஒரு பழைய நிகழ்ச்சியை நினைத்துப் பார்த்தான் கிரி பண்டா.

முஸ்லிம் கிராமத்தில் அப்துல் கரீம் ஒரு வேட்டைப் பிரியன். ஒருமுறை அவன் தன் நண்பர்களோடு குளக்காட்டுப் பிரதேசத்திற்கு வேட்டைக்குப் போயிருக்கிறான். ஆனால் அவன் மீண்டும் கிராமத்திற்குத் திரும்பவில்லை. உடன் சென்ற நண்பர்கள் கரீமைத் தேடிப்பார்த்து, மனம் சோர்ந்து கிராமத்திற்கு வந்து, அறிவித்துவிட்டு மீட்பு வேலைக்காக மீண்டும் ஆட்கள் திரட்டி குளக்காடு முழுதும் தேடிப் பார்த்தார்கள்.

'மெஸ்ஸை'யிலிருந்து இறங்கி துவக்குடன் தனியே போனதாக மட்டும் நண்பர்கள் கூறினார்கள்.

அடுத்த நாள் குளக்கரையை அலசிப் பார்த்தபோது, சடலம் கரையில் மிதந்து கொண்டிருந்ததாம்.

''சிங்களவன் கொன்று போட்டிருப்பான்'

'கரடியோடு போராடியிருப்பான்'

'தண்ணீர் குடிக்க வந்த யானை மிதித்திருக்கும்'

'துவக்கும் பக்கத்தில் போட்ட தோட்டாவுடன்தான் இருந்ததாம்'

மனிதனால் கொல்லப்படவில்லை என்று பிரேத பரிசோதனை தெளிவாக எடுத்துக்காட்டியது.

'அப்ப பேய் பிசாசு அடித்திருக்க வேண்டும்' என்றும் ஒரு அபிப்பிராயம் நிலவியது.

''எனக்கு 'லெனார்ட் வுல்ப்' எழுதியது ஞாபகத்திற்கு வருகிறது....'' என்றான் குணத்திலக்கா.

''என்னது.....?''

''வழக்கமாக ஒரு வேட்டைக்காரன் மான் கொம்புகளை வேட்டையாடி நகரத்திலுள்ள வியாபாரிகளுக்கு விற்பான். இருந்தும் வேட்டைக்குச் செல்வதை மிகத் துச்சமாக எண்ணியிருந்தான். அந்த முறை வேட்டைக்குச் சென்றவன் திரும்பவே இல்லை. பல மாதங்களுக்குப் பிறகு, காட்டில் யானை மிதித்து அவனுடைய எலும்புக்கூடு நொறுங்கிச் சிதறிக் கிடந்ததாம்.

செய்கிற தொழில் எதுவானாலும் அதற்கு நாம் விசுவாசமாக இருக்க வேண்டும் என்பதை குணத்திலக்கா விவசாயிகள் உள்ளங்களில் நாசூக்காக புகுத்திவிட்டான்.

எப்படியோ அப்துல் கரீமின் மறைவுக்குப் பிறகு இன்று வரைக்கும் குளக்காட்டுப் பிரதேசத்துக்கு யாரும் வேட்டைக்குச் சென்றதில்லை. ஆனால் ஒரேயொரு முறை விவசாயத்தையும் ஒரு பாடமாகக் கற்கும் அஹ்மதுவுக்கு, மண் ஆராய்ச்சி செய்வதற்கு, சில இடங்களிலிருந்து சிறிதளவு மண் தோண்டியெடுக்க வேண்டும். அஹ்மதுவும், சமது விதானையும், ஹலீம்தீனும் ஆபத்துகளையும் மீறிப் போயிருக்கிறார்கள்.

இப்பொழுது கிரிபண்டாவும் நண்பர்களும் முஸ்லிம் கிராமவாசிகளின் ஆசியுடனும் அநுமதியுடனும் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

உச்சி வெய்யில் உச்சந்தலையை 'சுள்' என்று சுட்டபோது, அவர்கள் குறிப்பிட்ட இடத்தை வந்தடைந்து விட்டார்கள்.

களைத்துப் போயிருந்த 'டிராக்டர்' வண்டியின் முரட்டுத்தனமான ஓசை நின்றதும், மயான அமைதி நிலவியது. டிராக்டரின் அவ்வோசை மிருகங்களுக்கு பெரிதும் அச்சமூட்டியிருக்குமோ, அவை பாதுகாப்பைத் தேடி ஓடி ஒளிந்திருக்க வேண்டும். மூத்த அனுபவசாலிகளான கிரிபண்டாவும், பிங்காமியும்

நிதானமாக சிந்தித்து கருத்துத் தெரிவித்தார்கள்.

''இங்கு பேயுமில்லை பிசாசுமில்லை. மிருக ராச்சியம்தான் நடந்து கொண்டிருக்கு, மனிதர்கள் ஒன்றுபட்டு, கூட்டமாக வந்து காடுவெட்டத் தொடங்கி, தீ மூட்டிவிட்டால், மிருக சாம்ராச்சியம் தளர்ந்து போய் விடும்.....''

டிராக்டர் ஓரிடத்தில் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டு, சாமான் சட்டி முட்டிகளுடன் இறங்கி நடந்தார்கள்.

இப்பொழுதுதான் எங்கோ தூரத்தில் ஒரு நரியின் ஊளை வரவேற்பு கூறிக்கொண்டிருந்தது.

காலம் தாழ்த்தாது நண்பர்கள் தத்தம் பொறுப்புக்களில் ஈடுபட்டார்கள்.

முதியான்சவும், புஞ்சிராலவும் பொருத்தமான மரங்களைப் பார்த்து 'மெஸ்ஸை' கள் போட ஆயத்தமானார்கள்.

சமராவும், கீர்த்தியும் மதிய உணவு சமைக்க முனைவதற்கு முன் 'கிரிகஹட்ட' தயாரித்தார்கள். காலையில் 'குரக்கன் பிட்டை' சாப்பிட்டவர்களுக்கு பசி இருக்கவில்லை. இருந் தாலும் விரும்பியவர்கள் சாப்பிடட்டும். இராப் போசனத் திற்கும் சேர்த்துத்தானே சமைக்கிறார்கள். இல்லாவிட்டால் எவ்வளவுதான் லாந்தரை பற்றவைத்துக் கொண்டாலும் இரவில் சமைப்பது எல்லா வகையிலும், முடியாத விடயமாகும். எவ் வளவும் 'கஹட்ட' தயாரிக்கலாம். கருப்பட்டியுடன் சுவைத்தால் சுறுசுறுப்பாக இருக்கும்.

கிரிபண்டாவும், பிங்காமியும் தமது கூர்மையான பார்வையை நாலா வட்டத்திலும் சுழலவிட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு கடமை. இயந்திரமானா ர்கள். டிராக்டரைச் செலுத்திக் கொண்டு வந்த குணத்திலக்க மட்டும் 'மெஸ்ஸை' வேலை முடிந்தவுடன் ஏறிப்படுத்துக் கொள்வதற்கு தருணம் பார்த்து, தூங்கி வழிந்து கொண்டிருந்தான்.

இராச் சாப்பாட்டிற்குப் பிறகு ஆளுக்காள் துப்பாக்கிகளுடன் உசாராகி, குளக்கரையில் நடந்து, பற்றைக்குள் மறைந்து, தண்ணீர் அருந்தவரும் குழுமாடுகளை எதிர்பார்த்து, கண் துஞ்சாது காத்திருப்பார்கள்.

மான் மரை என்று ஏதாவது அகப்பட்டுக் கொண்டால், ஆறுபட்டரி டோர்ச் லைட்டின் சக்திமிக்க ஒளிக்கதிர்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் ஒருகணம் ஸ்தம்பித்து தடுமாறும் போது துவக்கில் உள்ள தோட்டாக்கள் தொழிற்பட்டு விடும்.

பதினொரு பேரும் பாதுகாப்பாக இருந்து கொள்ள, இரண்டாள் உயரத்திற்கு மரங்களுக்குமேல் பரண்கள் அமைத்து விட்டனர். எல்லாரும் அவற்றிற்குள் புகுந்து இளைப்பாறத் தொடங்கினர்.

கிரிபண்டாவும், பிங்காமியும், புஞ்சிராலவும் ஆங்காங்கே, மரத்தடிகளிலிருந்து, மண் ஆராய்ச்சியில் ஈடுபட்டனர்.

புஞ்சிராலவுக்கு வனத்தைப் பற்றி அக்குவேறு ஆணிவேறாகத் தெரியும். கிரிபண்டாவின் அனுபவ அறிவுக்கு எட்டாத எத்தனையோ புதுமைகளை அவன் பிரமிப்புடன் எடுத்துரைத்தான்.

'கவனிப்பாரற்றுக் கிடக்கும் இந்தக் குளத்தை திருத்திவிட்டால் எந்தப் பெரிய கோடையிலும், வற்றாத ஜீவ குளமாக இருக்கும்...''

பூமியும் 'இருவாட்டி' மண்; மணலும் களிமண்ணும் கலந்த பசளை மண்... விவசாயத்திற்கு எங்கட பிராந்தியத்திலே இப்படியான ஒரு மண் வளம் கிடைக்காது. ஹலீம்தீன் ஆக்கள் ஆராய்ச்சி செய்து எடுத்த முடிவுக்கு நூத்துக்கு நூறு புள்ளி போடலாம்.

அவர்கள் மூவரும் ஐம்பது வயது பிந்தியவர்கள். ஒரு பயங்கரமான காட்டுப் பகுதிக்கு, வேட்டைக்கு வந்திருக்கிறோம் என்பதையும் மறந்து நிராயுதபாணிகளாய் அந்தப் பகுதியை ஒரு சுற்று சுற்றிவரக் கிளம்பினார்கள். அந்தப் புதுமையான மண்

வளம் அவர்களை அப்படி உணர்ச்சி வசப்படச் செய்திருந்தது. அந்த மண்ணுக்குத் தான் எவ்வளவு பெரிய சக்தி.

மனித ஒற்றுமை இல்லாததால் அந்தக் குளத்தையும், பரந்த விஸ்தீரணமுள்ள காட்டையும் விலங்குகள் அல்லவா ஆட்சி செய்கின்றன.

இந்த இயற்கையான குளமும் காடும் முஸ்லிம் கிராமவாசிகளின் 'மாய்மைக்கு' உரியதா அல்லது சிங்கள கிராமவாசிகளுக்கு சொந்தமா என்பதை கிராமசேவகர் முடிவு செய்யட்டும். ஆனால் இந்தக் குளத்தை மையமாக வைத்து இருசாராரும் தங்கம் விளையும் பூமியாக மாற்றமுடியும்.

அந்த மூன்று பெருந்தகைகளின் இரத்தோட்டங்களிலும் இம்மியளவாவது சுயநலம் கலந்திருக்கவில்லை.

கிரிபண்டா ஒரு யோசனையை முன் வைத்தான்.

''... இங்கு மேட்டு நிலம், பள்ளத்து நிலம் என்று வித்தியாசம் இல்லாமல், ஒரே சீராக இருப்பதால் குளத்தை மையமாக வைத்து அளந்து இரு கூறாகப் பிரித்து, நாம் ஒரு பகுதியையும் அவர்கள் ஒரு பகுதியையும் எடுத்துக் கொண்டால்.... ? எப்படி யோசனை...?''

''அருமையானது'' என்றான் புஞ்சிரால.

''நியாயமானதும் தான், ஏனென்டா இந்தப் புதையலைக் கண்டுபிடித்தவர்களே அவகதான்..... நாம் இரு சாராரும் கலந்துரையாடினால் இந்த விடயம்..... மிக இலகுவாக முடியும்....'' என்றான் பிங்காமி.

''நம்பக்கத்திலும் சரி அவங்க பக்கத்திலும் சரி, காடு வெட்ட செலவழித்து பங்குதாரர்களாக வரும் எவருக்கும், கிராமசேவகர் மூலம் ஒரு நிரந்தர தீர்வு வரும் வரைக்கும், நிலம் எவருக்கும் சொந்தம் இல்லை என்பதை தெளிவுபடுத்தி, சில சட்ட திட்டங்கள உருவாக்கி, ஓர் ஒப்பந்தம் சைச்சாத்திட்டுக் கொள்வது எல்லா வகையிலும் நல்லதல்லவா?'' என்று முடித்தான் புஞ்சிரால.

மிகவும் மகிழ்ந்து போன கிரிபண்டா கூறினான்.

''ஓவ்.... ஓவ்.... ஏக்க ஹொந்த அதஹஸக்''

''... பின்னால் மீண்டும் சண்டை சச்சரவுகள் தலைதூக்காது நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்..... எல்லாம் ஒரு சம்பிர தாயத்துக்குத் தானே.....''

சிங்கள கிராமத்தின் மூன்று சிரேஷ்ட கிராமவாசிகளுக்கும் இது நியாயமாகப்பட்டது.

''முதலில் கிராமமட்டத்தில் சபை கூடி ஆலோசித்து, பின்னர் இருசாராரும் இணைந்து பிரதிநிதிகள் குழு அமைத்து முடிவு எடுக்கலாந்தானே,'' என்றான் கிரிபண்டா.

பற்றைக்குள் ஒரு சலசலப்பு.

அப்பொழுதுதான் அம்மூவரும் உணர்ந்தனர்.

''நாம் எவ்வளவு கவலையீனமாக, ஒரு துவக்குக் கூட எடுக் காம இப்படி இவ்வளவு தூரம் வந்து விட்டோமே... மற்ற வர்களுக்குக் கூட ஒரு வார்த்தை சொல்லவும் இல்ல... பரணுக்கு புறப்படுவதற்கு முன், கிளைகள் பரப்பிய ஒரு காட்டு மரத்தில் ஏறி பார்வையை சுழல விட்டார்கள்.

'குரங்குக்கௌை' யொன்று அவர்களைப் பார்த்து இளித்து மரத்துக்கு மரம் தாவியது.

அவர்கள் அச்சம் நீங்கி, இறங்கி விரைவாக நடந்தனர்.

யார் எவர் எதைச் சொன்னாலும் இந்த சிங்கள முஸ்லிம் கிராமங்களை ஒன்றிணைத்து ஒரு விவசாயத்திட்டத்தை நடை முறைப்படுத்தத் தானே கிரிபண்டா முயன்று கொண்டிருக் கிறான். அதற்கு அமரதாசவும் ஹலீம்தீனும் எவ்வளவு பொருத்த மானவர்கள்.

புஞ்சிரால தெளிவாகக் கூறினான்.

''இரு கிராமங்களும் இணைந்தால் புதிய சாலை அமைக்க லாம். சாலை அமைத்து மனித நடமாட்டம் பெருகினால் மிரு

கங்கள் எல்லாம் புதிய காட்டைத் தேடி ஓடிவிடும். குளத்தைக் கட்டித் திருத்தினால் வருடத்திற்கு இருமுறை மழையை எதிர் பார்க்காமல் விவசாயம் செய்ய முடியும்.

மூவரும் கருத்துக்கள் பரிமாறிக் கொண்டே மிக்க விழிப்புடன் அரைவாசித் தூரம் நடந்து கொண்டிருந்த போது, குணத்திலகா துவக்குடன் எதிரே வந்து கொண்டிருந்தான். அவனைத் துவக்கு டன் கண்டதும் அவர்களது அச்சம் முழுமையாக நீங்கிவிட்டது.

''வேட்டைக்கென்று வந்த பயங்கர காட்டிலே, துவக்கும் இல்லாமல் எங்க சுற்றித்திரிகிறீங்க?... நாங்கள் பயந்து போனோம்....''

''துவக்கு இல்லாமல் கொடிய மிருகங்கள் வந்தாலும் எங்க ளால் தப்பித்துக் கொள்ள முடியும்....'' என்று பிங்காமி வீரம் பேசினான். விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை. ஒரு துவக்கையாவது எடுத்துக் கொள்ள மறந்து விட்ட பலவீனத்தை அப்படியே புதைத்துவிட்டு,

''குணே, வந்த விசயத்தில் அரைவாசி வெற்றி'' என்றான் கிரிபண்டா குதூகலத்துடன்.

''உங்களுக்கு மண்ணாசையால் பைத்தியம் பிடித்து விட் டது...'' என்றான் குணத்திலக்கா.

''சரி குணே, எல்லா ஆசைகளையும் கிராமத்துக்குப் போய், விரிவாக கதைச்சி, முடிவு எடுப்பமே.... என்ன....?''

அன்று மாலை ஆறு முப்பதுக்கே இராச் சாப்பாட்டை எல்லா ரும் சேர்ந்து சுவைத்த போது கிரிபண்டாவும் புஞ்சிராலவும் ஒரு பிரசங்கமே செய்துவிட்டார்கள். கூடி நின்ற அனைவரும் அவர்க ளுடைய முற்போக்கான கருத்துக்களில் ஊறி, அவற்றை ஆழ்ந்து ஆராய்ந்தார்கள். பெரும் வெற்றிதான்.

தொடர்ந்து மூன்று நாட்கள் அந்தக் குளக்காட்டுப் பிரதே சத்தை சுற்றி வளைத்து, மான் மரை குழுமாடுகள் படுகின்றனவா என்ற வீண் போகவில்லை. நான்காம் நாள் இரவு-

இரண்டு மாடுகளும், ஒரு மானும் பட்டிருந்தன. கிரிபண்டன் ஒரு நோக்கத்தோடு மானின் காலுக்கு வைத்த குறிதப்ப வில்லை. அதை அப்படியே உயிரோடு பிடித்து விட்டான். பன்றிகள் புத்திசாலித்தனமாக காலை வாரி விட்டிருந்தன. கிரிபண்டன் உயிரோடு பிடித்த மானை பிங்காமியிடம் ஒப்படைத்தான்'' இதை பத்திரமாக கொண்டு வரணும்'' பிங்காமிக்கு அதைப் புரிந்து கொள்ள வெகு நேரம் பிடிக்கவில்லை . கிரிபண்டனைப் பார்த்து இலேசான புன்னகை புரிந்தான்.

இரண்டு பெரிய குழுமாடுகள் கிடைத்ததும் எல்லாரது முகங் களிலும் அலாதியான திருப்தியும் மகிழ்ச்சியும் உதயமாகி யிருந்தன.

''நாங்க எப்ப திரும்பப் போற......?''

''இது சமராவின் முக்கியமான கேள்வி, திரும்பிப் போவ தற்கும் தோட்டாக்கள் தேவை'

''சமரா உன் கேள்வியின் பொருள் புரிகிறது. சாப்பாட்டுச் சாமான்கள் தீர்ந்து விட்டன என்று சொல்லப் போறாய்..... சரியா.....?

''நாளை காலைச் சாப்பாட்டுக்கு சமாளிக்கலாம்......'' என்றான் கீர்த்தி.

''நாளை காலை வரைக்கும் வேட்டையாடிய மிருகங்கள வைத்து, பார்த்துக் கொண்டிருக்க ஏலாது. இன்னும் ஒரு மணித்தி யாலத்திற்குள் பரண்களைப் பிரித்து ஏற்ற வேண்டிய எல்லா சாமான்களையும் மறந்து விடாமல் ஏற்றி விடுங்கள்....''

பிங்காமி அந்த மானின் உடைந்த காலுக்கு மருந்திலைகளை இடித்துக் கட்டிக் கொண்டிருந்தான். சமரசிங்காவுக்குப் பிடிக்க வில்லை.

''கிரிபண்டா காலுடைஞ்ச மானைக் கொண்டு போய் என்ன செய்யப் போற. பேசாமல் கொன்று அதையும் இறைச்சியாக்கி விடுவமா...?''

பிங்காமிக்குக் கடுமையான கோபம் வந்துவிட்டது.

'நீ இதில தலையிடாம, உன்ட வேலையப் பார்...'' என்று கத்தினான் பிங்காமி சிம்மக்குரலில்

பாதி சாமான்களை டிராக்டரில் ஏற்றியாயிற்று, குணேயும் கீர்த்தியும் காவல் நிற்கிறார்கள். மிகுதி வேலைகளையும் முடித்து வண்டிக்கு நடந்தார்கள். கடைசியாக கிரிபண்டனும் பிங்காமியும், புஞ்சிராலவும் ஒரு சுற்று சுற்றிவிட்டு சரிபார்த்துக் கொண்டனர். மிகுதியான தோட்டாக்களை எண்ணி பத்திரப் படுத்திக் கொண்டனர். 'ஒரு தோட்டா குறைகிறதே....'' என்று கணக்குப் பார்த்த போது 'டுமீல்' என்று ஒரு சத்தம். ஒரு பெரிய காட்டு முயலை சுட்டுக்கொண்டு வந்தான் குணத்திலக்கா. எல்லாரும் சிரித்துவிட்டு அதையும் வண்டியில் போட்டனர். குணத்திலக்கா தனது கைவரிசையை டிராக்டரில் செலுத்துவதற்கு முன் தாழ்மையுடன் வேண்டினான்.

''... நாங்க இப்ப ஊர் திரும்பும் போது, வேட்டையாடப் போவதில்லை. ஆகவே நான் கொண்டு வந்திருக்கிற ஆனை வெடிகளை ஆங்காங்கே காடுகளில் போட்டுக் கொண்டு போனாக்கரியம் மிருகங்கள் பயந்து இடம் பெயர வழி வகுக்குமல்லவா...?''

''நல்லது தான், ஆனால் மிருகங்கள் எங்கள நோக்கி வந்து பயணத்தைக் குழப்பாம இருக்க வேணும்...'' என்றான் கிரிபண்டா.

''யானை வெடிக்கு யானையை விரட்டும் சக்தியுண்டா....?'' இது கீர்த்தியின் கேள்வி.

''வெடி வச்சித்தான் பாக்க வேணும்''

''வெள்ளாமை வெட்டுவதற்கு முன் நெல்மணிகளை பறவைகளிலிருந்தும் பன்றிகளிலிருந்தும் காப்பாற்றிக் கொள்ள வயல் காவலுக்கு போகிற போது பட்டாஸ் வெடி போடுறதுதான். ஆனால் காட்டு மிருகங்களுக்கு எவ்வளவு தூரம் சரிவருமோ தெரியாது....'' என்றான் முதியான்சு அடக்கமாக.

''சரி போட்டுப் பார்க்கட்டுமே, மிருகங்களுக்கு அச்சத்தை ஊட்டுவதும் நல்லதுதானே. குணேவின் ஆசையைக் கெடுப்பானேன்....?'' இது நீண்ட அனுபவசாலியான கீர்த்தி.

கிரிபண்டன் மலாய் பொலிஸ் உஸ்மானிடம் கற்றுக் கொண்டது போல... எதிர்காலத்தில் வேட்டைக்குப் போகும் இளையவர்கள் கட்டாயம் ஆனைவெடியும், கொண்டு போகட்டுக்கும். உஸ்மானின் கண்டு பிடிப்பு பனைக்கருக்கு.... குணத்திலக்காவின் கண்டு பிடிப்பு ஆனைவெடி; நாளைய வாரிசுகள் பேசுவார்கள் தானே...'' என்றான் முதியான்ச. முதலாவது யானைவெடியின் ஓசை காடெங்கும் பயங்கரமாக எதிரொலித்து ஓய்ந்தது.

''கிரிபண்டாட்ட....'' என்றான் புஞ்சிரால, 'ஜயவேவா' என்றனர் எல்லாரும். மிக்க ஆர்வத்துடன் பற்றைகளையும் புட்பூண்டுகளையும் அழித்துக் கொண்டு கிளம்பியது டிராக்டர் வண்டி.

பாதை சமைத்துக் கொண்டு வந்த போது, பற்றைகளையும் மற்றையவைகளையும் வெட்டி ஊடறுத்துக் கொண்டு வர எவ்வளவோ சிரமம். ஆனால் வகுத்துக் கொண்டு வந்த அதே பாதையில் திரும்பிச் செல்லும் போது பயணம் மிகவும் இலகுவாகவும் இதமாகவும் இருந்தது.

எல்லாரது மனங்களும் அப்படித்தான். ஆயினும் அவ்வெற்றிப்பாதையில் சிறு சிறு தடைக்கற்கள் அவர்களுக்கு ஒரு பொருட்டா?'' எங்களுக்குரிய காட்டுப்பகுதியை சோனகனுக்கு தாரை வார்க்கப் போறீங்களா....'' என்று சமரசிங்க முணுமுணுப்பது எவருக்கும் கேட்கவில்லை. அவன் வலது குதிகாலில் ஒரு காட்டு முள் ஏறி விண் விண்ணென்று வேதனையைத் தந்து கொண்டிருந்தது. டிராக்டரின் ஒரு மூலையில் சுருண்டு கிடந்தான்.

''நாங்கள் மிருகங்களோட போராடி காடுவெட்ட சோனகன் 'சோக்கா' கஷ்டமில்லாம விவசாயம் செய்யவா....? நான் ஒரு நாளும் சம்மதிக்க மாட்டன்....'' என்ற சமரசிங்காவின் குளி

சையை விழுங்கி, கூறிய குணத்திலக்கா தான், இன்று படித்தவன் என்றபடியால் சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்து ஆராய்ந்து மனம் மாறி, முற்போக்கான திட்டத்திற்கு, யானை வெடி வைத்து வெற்றிக் கோஷம் போடுகிறான்.

சமரசிங்கா என்ன? அவனுடைய போதையும் இறங்க அதிக நாட்கள் செல்லாது . செல்லாவிட்டால்தான் என்ன. அவன் இனி கிராமத்தில் செல்லாக் காசுதானே.

எப்படியோ வேட்டைக்குச் சென்ற டிராக்டர் வண்டி வெற்றி யுடன் ஐந்தாம் நாள் முஸ்லிம் கிராமத்தின் ஊடாகத் திரும்பிக் கொண்டிருந்த போது நள்ளிரவு பிந்தி வெகு நேரமாகி விட்டிருந் தது. அந்த அகால நேரத்தில் முஸ்லிம் கிராமத்தில் யாரையும் தொந்தரவு செய்யக்கூடாது என்ற நல்லெண்ணத்தில் அவர்களது வண்டி பெரும் இரைச்சலுடன் இல்லாமல், மிக்க அமைதியாகச் சென்று கொண்டிருந்தது.

# ஆறு

... கிரிபண்டன் கோஷ்டியினர் கிராமத்திற்குத் திரும்பியதும் சூட்டோடு சூடாக வேட்டையாடிய மிருகங்களின் இறைச்சியைக் கூறுபோட்டு பங்கு பிரிக்க வேண்டிய பொறுப்பு இருந்தது. அந்தக் கருக்கலில் அவ்வேலையில் அவர்கள் ஈடுபட்டனர். வழக்கம் போல் தோட்டாக்களிலிருந்து உணவு பொருட்கள் வரைக்கும் செலவுகளைப் பகிர்ந்து கொண்டனர். டிராக்டர், டீசல் செலவு வேறு.

இதுவரைக்கும் பார்வையைக் கூர்மையாக்கிக் கொண்டு, வட்டமாக இருந்தவர்கள், தத்தமது பங்குகளைப் பெற்றுக் கொண்டதும்-

உதயமாகி விட்டிருந்தது.

''எல்லாரும் வூட்ட போய் நித்திரை கொள்ளாம ஆற்றில் குளித்து, உடை மாத்திக் கொண்டு ஒன்பது மணிக்கு காலைச் சாப்பாட்டுக்கு வாங்க....'' என்று கிரிபண்டன் அழைத்தான்.

பிங்காமியைத் தவிர எல்லாரும் கலைந்து விட்டிருந்தனர்.

''பிங்காமி ......மிருகங்கள அவர்களது மார்க்க சட்டப்படி (குறுபான்) வெட்டப்படாததால், முஸ்லிம் நண்பர்களுக்கு அன்பளிப்பு செய்ய முடியாது. அந்த மானையும், தேன் போத்தல்களையும் இன்றைக்கு அந்திபட ஹலீம்தீனுக்கு கொண்டு போகணும், மறக்காம அந்திக்கு வாங்க.... நம்மட டிராக்டர் வண்டியில போய் வருவோம்....

வேட்டைத் தலைவர் என்ற முறையில், சரியாக ஒன்பது மணிக்கு காலை உணவு தயாராக இருந்தது. வழக்கம் போல சோறும், ஒரு கறியும் அத்துடன் சுவையான சொதியும், அவ்வளவுதான். சாப்பிட்டு முடிந்ததும் கண்ணின் இமைகள் சுருங்க... உடம்பு தளர, வேட்டைக்குப் போய் வந்த அசதியில் ஒவ்வொருவராகக் கிளம்பினர்.

பொதுவாக வெள்ளாமை வெட்டி சூடு மிதிக்கிற வேலைகள் எல்லாம் பூர்த்தியடைந்து விட்டிருந்ததால் மிருகங்கள் வந்து வெள்ளாமையை நாசம் செய்யும் நிலை கடந்து விட்டிருந்தது. அதனால் கிரிபண்டனுக்கு ஒரு முக்கியமான வேலை காத்திருந்தது. அவர்கள் வாக்குறுதியளித்திருந்தபடி துவக்குகளை வந்து கேட்கும் முன்பே, மீண்டும் கொண்டு போய் ஒப்படைக்க வேண்டிய பொறுப்பு அது;

வேட்டைப்பிரியர்கள் அவ்விடத்தைவிட்டுக் கலையுமுன்னே கிராமத்திற்கு அந்த அறிவித்தல் முன் வைக்கப்பட்டிருந்தது.

''...இந்தாங்க எல்லாருக்கும் ஞாபகப்படுத்துங்க... பொலிஸ் காரங்க கிராமத்திற்கு ஜீப்பில் வந்து அல்லோல கல்லோலப் படுத்த முந்தி வெள்ளாமையை பாதுகாக்க எடுத்த துவக்குகளை நாம் திருப்பிக் கொடுக்க வேணும்.... நாளை எல்லாரும் இங்க.... ஒன்பது மணிக்கு வந்தா வேன்ல போகலாம்....''

வேட்டைக்குப் போய் வந்த பயண அனுபவங்கள், முக்கியமாக குளக்காட்டுப் பிரதேச நிலம், மண்பரிசோதனை, எல்லைகள், இரு கிராமத்தவர்களும் எப்படிப் பகிர்ந்து கொள்ள வேண்டும்? இது தொடர்பாக விவசாயிகளினதும் கிராம சேவகரினதும் பங்களிப்புகள்... போன்ற முக்கிய விடயங்களைப் பற்றியெல்லாம் விரிவாக தந்தையிடமிருந்து துருவித்துருவி ஆராய்ந்து தரவுகளை பெற்றுக் கொண்டான் அமரதாச.

''நாளைக்குப் பொலிசுக்குப் போய் வந்த பிறகு, மாலையில நீங்களும் பிங்காமியம் புஞ்சிராலவும் முஸ்லிம் கிராமத்திற்குப்

போய், அப்துல்மஜீக், ஹலீம்தீன், சமது, யாசீன் போன்றவங்கள சந்தித்துப் பேசுங்க.... நீங்க போய் வந்த பொறகு, நான் எங்கட நிர்வாகக் குழு கூட்டத்தைக் கூட்ட ஏற்பாடுகளைச் செய்வேன். நாம எமது தீர்மானங்களை ஸ்திரப்படுத்திக் கொண்டு, அவங்கட உத்தியோகபூர்வமான கலந்துரையாடலுக்குச் செல்ல வேணும். இதற்கிடையில் நான் கிராம சேவகரையும் முடிந்தால் ஹலீம் தீனையும் சந்தித்து ஆக்க பூர்வமான சில முடிவுகளைப் பற்றி பேச வேண்டியிருக்கு. சில புள்ளி விபரங்களை நாம் திரட்ட வேண்டியிருக்கு....

எமது ஏ.எல். சோதனை ஓகஸ்டில் நடைபெறும். எல்லா விடயங்களையும் நடைமுறைப்படுத்துவது ஓகஸ்டுக்குப் பிறகு தான். இப்பொழுது இது தொடர்பான ஆரம்ப பேச்சுவார்த்தை களையும்... சுதந்திரமான கருத்துப் பரிமாறல்களையும் வைத்துக் கொள்ளலாம். ஒவ்வொரு விடயங்களைப் பற்றியும் ஆராய்ந்து கருத்துக்கள் தெரிவிப்பதற்குப் போதிய அவகாசம் கிடக்கு. பின்னால் குளக்காட்டுப் பிரதேசம் எமது எல்லைக்கு உட்பட் டது. காடு வெட்டி விவசாயம் செய்ய 'எமக்குத்தான்' பூரண உரிமை இருக்கு என்று இரு கிராமத்தவர்களும் சட்டம் பேசவோ பிரச்சாரம் செய்து மீண்டும் கிராமங்களில் மலர்ந்துள்ள ஒரு மைப்பாட்டை சீர்குலைத்து சண்டை சச்சரவுகளை ஏற்படுத்திக் கொள்ளவோ கூடாது.

இளைஞர்களின் வேகமும், உணர்ச்சியும் தான் எல்லாவற்றிற் கும் காரணம் என்ற பழி வரக்கூடாது. எல்லாவற்றையும் நாம் கட்டம் கட்டமாகவும் சரியாகவும் செய்து கொண்டு போனால் பிரச்சினைகளுக்கு இன்றும் நாளைய தலைமுறையினருக்கும் இடம் இருக்காது......

அமரதாசவின் உருக்கமான, நிதானமான விளக்கத்தைக் கேட்டு மகிழ்ந்து போன கிரிபண்டன் மகனின் கருத்துக்களை வலியுறுத்துவது போல்-

''நாம் எமது விஷமிகளின் மீது ஒரு கண்ணாய் இருந்து கொள்ள வேண்டியதுதான்... அதற்காக அவர்களுடன் பிரச்சினைப்பட்டுக் கொள்ளக்கூடாது.....''

''நீங்கள் பயப்படுகிற மாதிரி ஒண்டும் நடக்காது. ஆங்கில அறிவு உள்ள குணத்திலக்காவைப் போல், வெகுவிரைவில் சமரசிங்கவையும், உக்குராலவையும் 'ஜயவேவா' கோசம் போட வைத்துவிடலாம். பொறுத்திருந்து பாருங்கள். இப்பொழுது எமது ஊர் பாடசாலையில் ஆங்கில ஆசிரியர் பதவிக்கு இடம் இருக்கு. முதலில் தகைமையுள்ள அவனுக்கு அவ்வேலையை எடுத்துத் தந்துவிட்டால்... சில முக்கிய தடைக்கற்கள் இல்லாமல் போய் விடும்.....''

''... எப்படியும் எதுவும் நடக்காது என்று இருந்துவிடக்கூடாது. எதுவும் எப்பவும் நடக்கலாம் என்றிருந்தால் நாமும் எதுவும் அசம்பாவிதங்கள் நடக்காமல் இருக்க பரிகாரம் கண்டு கொண்டிருப்போம். சிந்தித்து திட்டமிட்டு, மிகுந்த பொறுமையுடனும் நிதானத்துடனும் கருமமாற்றியதால் தான், சிங்கள முஸ்லிம் கிராமங்களில் ஒரு புரிந்துணர்வும் பலமடைந்து வருகிறது.

''.... அது உண்மைதான். சிங்கள முஸ்லிம் ஒருமைப்பாடு இன்று நேற்று அரும்பிவிட்ட தொன்றல்ல. அனுராதபுரத்தை சிங்கள மன்னர்கள் ஆட்சி புரிந்த காலத்திலிருந்தே சிங்கள முஸ்லிம் நட்புறவு மேலோங்கியுள்ளது. சிங்கள மன்னர்களின் அரச சபையில் முஸ்லிம்கள் உயர் பதவிகள் வகித்துள்ளனர்.

''.... ஹலீம்தீன் இவற்றையெல்லாம் ஆதாரபூர்வமாக அவ்வப்போது எடுத்துப் பேசும்போது கேட்பவர்களுக்குப் புதிய செய்திகளாக இருக்கின்றன. கேட்கக்கேட்க உடலும் உள்ளமும் புல்லரித்துப் போகின்றன.....''

தந்தையினதும் மகனினதும் உரையாடலில் மூழ்கி, மெய்மறந்திருந்த பியசீலியும் பிசோவும், கடப்பல் திறக்கும் அரவம் கேட்டு எட்டிப் பார்த்தனர்.

பியசீலியின் தோழி யசவத்தி வந்து கொண்டிருந்தாள்.

அவளை வரவேற்பதற்காக பியசீலி கடப்பலை நோக்கி நடந்தாள்.

அமரதாச ஒரு கருத்தை மிகவும் வலியுறுத்துவதற்காக சற்று நேரம் மௌனமாகச் சிந்தித்தான். அதற்கிடையில் பியசீலி முதலியோர் மீண்டும் வந்து நாற்காலிகளில் அமர்ந்து கொண்டனர். மிக்க ஆர்வத்துடன்..... சிங்கள மொழியில் உரையாடல் தொடர்ந்தது.

'யசவத்தி, புரிந்துணர்வு என்றால் என்ன. கியன்ட புலு வன்த...?'' என்று கேட்டான் அமரதாச.

அப்போது தான் வந்தமர்ந்த யசவத்தி பியசீலி மூலம் விடயங்களைக் கிரகித்துக் கொண்டு சொன்னாள்:-

''... அரசியல் ரீதியாக இப்பொழுது இந்தச் சொல் கூடுதலாக அடிபடுகிறது. சிறுபான்மையினரின் நியாயமான உரிமைகளை பெரும்பான்மையினர் உண்மையில் உணர்ந்துகொள்வது.... என்று நினைக்கிறேன்.''

பிசோமெனிக்கா குறுக்கிட்டாள்.

''அப்ப பெரும்பான்மையினரின் உரிமைகளை சிறுபான்மையினர் புரிந்து கொள்ளக் கூடாதா?''

''அம்மா கேட்பதிலும் நியாயம் இருக்கு. இருசாராரும் புரிந்து கொள்ள வேண்டும் என்பது சரியா.... அமர?'' என்று வினவி நின்றாள் பியசீலி.

''நீங்கள் எல்லோரும் சொல்வதிலும் ஏதோ ஒரு நியாயம் இல்லாமல் இல்லை... நான் என்ன சொல்ல நினைக்கிறேன் என்றால்... எங்களுக்கென்று ஒரு வரலாறு இருக்கு. முதலில் நாங்கள் அதனை சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். முஸ்லிம்களுக்கும் ஒரு வரலாறு உண்டு. எங்கள் பிரதேசத்தில் தமிழ்க் கிராமங்கள் இல்லாவிட்டாலும் தமிழர்களுக்கு ஒரு வரலாறு...

இப்படியே பறங்கியர், மலாயர் என்று ஒவ்வொரு இனத்தவருக்கும் வரலாறு இல்லாமல் இல்லை. இந்த நாட்டைப் பொறுத்த வரையில் அவற்றை நாம் படித்து உணர்ந்து கொள்ள வேண்டும். அதைத்தான் நான் புரிந்துணர்வு என்று நினைக்கிறேன். வெறுமனே சிங்கள மொழியை தமிழ் பேசும் இனத்தவரும் தமிழ் மொழியை சிங்கள மக்களும் ஓரளவு கற்றுக் கொள்வதால் மட்டும் புரிந்துணர்வு வந்து விடாது. படிப்பதோடு வரலாறு, கலை இலக்கிய கலாசார விடயங்களில் பரிச்சயமும் ஏற்பட வேண்டும். இல்லாவிட்டால் இந்தப் புரிந்துணர்வுக்கு அர்த்தம் தான் என்ன?

இதுவரைக்கும் அமைதியாக இருந்து சகலவற்றையும் உள்வாங்கிக் கொண்டிருந்த கிரிபண்டா கேட்டான்.

''... அதிகம் படிப்பறிவு இல்லாத மூத்த தலைமுறையினரான நாங்கள் என்ன செய்வது...?''

''... நீங்கள் எல்லாம் இயற்கையாகவே... ஒற்றுமையாக வாழ்ந்து காட்டிவிட்டீர்கள்.... உண்மையில் அப்படியான ஒரு பசுமையான காலம் மீண்டும் மலராதா என்பது தான் எங்கள் ஆதங்கம்.... எதிர்பார்ப்பு எல்லாம். நான் ஆராய்ந்து அறிந்த மட்டில் ஐம்பதுகளின் பிற்பகுதி வரைக்கும் மிக அற்புதம் என்று தான் சொல்ல வேண்டும்....

''... அதெல்லாம் சரி... நீங்களும் ஹலீம்தீனும் இந்த மண்டபத்தில் அல்லது பாடசாலையிலாவது வாராந்தம் வகுப்புகள், சந்திப்புகள் கலந்துரையாடல்கள் வைக்க வேண்டும்....'' என்றாள் பியசீலி.

''அது ஆக்கபூர்வமான அருமையான யோசனை...'' என்று பாராட்டினாள் யசவத்தி.

''... அமர, நான் பி.ஏ. பாஸ் பண்ணின பிறகு முஸ்லிம் கிராமத்து பாடசாலையில் ஆசிரிய நியமனம் பெற்றுத் தந்தால் நிச்சயமாக நீங்கள் சொல்ற யோசனையை நான் நல்ல முறையில்

செய்து காட்டுவேன்...''

''அட அது பாராட்டப்பட வேண்டிய லட்சியம்.... ஹலீமுக்கும் அது விருப்பமாயிருக்கும். இவ்வளவு நேரம் பேசியது வீண்போகவில்லை. உனது உண்மையான எண்ணம் சாதகமாக வெளிப்பட்டு விட்டதே, வெற்றிதான்... உன் விருப்பம் நிறைவேறும்....''

''ம்.... அதுக்கு என்னுடைய அட்வான்ஸ் வாழ்த்துக்கள்....'' இது யசவத்தி.

''... இங்க பாருங்க பிள்ளைகள். நாங்கள் சிங்களவர்களாயிருக்கலாம், அவர்கள் முஸ்லிம்களாய் இருக்கலாம். உண்மையில்... நாங்கள் குக்கிராமங்களில் விவசாயிகள்.... என் தலைமுறையினருக்கு கல்வி இல்லை. எங்களச் சுற்றி யானைக் காடுதான். மிக அநாகரிகமானவர்கள்தான்: கலர் அல்லது வெள்ளை சாரத்தை உடுத்தி... மேலால ஒரு முழுக்கை பெனியன் அல்லது குறைந்த ரக சேர்ட்... அதுவும் 'இஸ்திரிக்' பண்ணப்பட்டிருக்காது. பாதங்களில் செருப்பு கூடக் கிடையாது... தோளில் துவாய்த்துண்டு, அழுக்காகவும் இருக்கும். கிரமமாக சவரம் செய்யப்படாத முகம். ஒழுங்காக வாரப்படாத தலை... இத்தியாதி கோலங்களுடன் தான் காட்சி தருவோம்.... ஆனால் பரம்பரையாக எங்களிடம் ஒன்று துல்லியமாக பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. அதுதான் மனிதாபிமானமும் விருந்தோம்பலும். வயலிலுள்ள சேற்றையெல்லாம் வாரிப் பூசினாலும், அந்த மகத்தான மானுட நேயத்தை மங்கச் செய்யவோ மறைத்து விடவோ முடியாது....'' என்று உணர்ச்சிவசப்பட்டான் கிரிபண்டா.

அமரதாசவும் பியசீலியும், யசவத்தியும் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். பிசோ ஏதோ ஒரு வேலையாக எழுந்து உள்ளே சென்றாள். கிரிபண்டா தொடர்ந்து கூறினான்.

''... நாங்கள் எல்லோரும் ஒரு குடும்பத்து அங்கத்தவர்கள்.

எங்களுக்குள் சில்லறைக் காரணங்களுக்காக சண்டைகள் சச்சரவுகள் தப்பபிப்பிராயங்கள் வரும். அது இயற்கை. பகைமையும் தோன்றலாம். மறையலாம். ஆனால் அவை இனரீதியில் அல்ல என்பதை புதியதலைமுறையினருக்கு உணர்த்த வேண்டும்.

மறுநாள் காலை பொலிசுக்குப் போய் வந்த பிறகு மாலையில் தான் கிரிபண்டா, பிங்காமி, புஞ்சிரால ஆகிய மூவரும் அந்தக் கொழுத்த மானுடனும் கட்டித்தேன் போத்தல்களுடனும் முஸ்லிம் கிராமத்திற்குச் சென்றனர். அப்துல் மஜீத், ஹலீம்தீன், யாசீன், சமது, சேகு ... என்று பலரையும் ஹலீம்தீனின் இல்லத்தில் சந்தித்தனர்.

வேட்டைப் பயண அனுபவங்களையும் எதிர்காலத் திட்டங்களையும் மிக்க ஆர்வத்துடன் கேட்டறிந்தனர். அவர்களின் கலந்துரையாடல் தேனினும் இனிமையாக இருந்தது.

# ஏழு

களை பிடுங்கியதும் பயிர் ஆரோக்கியமாக வளர்ந்தது. கிராமங்களுக்கு இடையே நெருக்கம் ஏற்பட்டது. இவர்களது இல்லங்களுக்கு வயல் வரப்புகளுக்கு அவர்களும் அவர்களது கிராமாந்திரங்களுக்கு இவர்களும் போய் வரத் தொடங்கினர்.

இரு வாரங்களுக்குப் பிறகு ஒரு ஞாயிறு மாலையில் சிங்கள முஸ்லிம் கிராமங்களின் நிர்வாகிகள் முஸ்லிம் கிராமத்து பாட சாலை மண்டபத்தில் கூடினர்.

மூத்த தலைவர்கள் அப்துல் மஜீதினதும், கிரி பண்டாவின தும் தலைமை சபைக்கு மெருகூட்டியது.

கிரிபண்டாவின் பக்கத்தில் பிங்காமி, புஞ்சிரால ஆகிய மூத்தவர்களும் அமரதாசவும் அவனது நண்பர்கள் பியசேன, காமினி, லால் ஆகியோரும்.

அப்துல் மஜீதின் பக்கத்துக்கு அஹ்மதுலெப்பை, சவால் சமது, ஹலீம்தீன், யாசீன், சேகு, அன்சார்தீன் ஆகியோரும் பிரதிநிதித் துவம் வகித்தனர். பொது மத்தியஸ்தர்களாக பாடசாலை அதிபர் க்ரீமும் இஸ்மாயில் மௌலவியும் பிரசன்னமாயிருந்தனர். எல்லாமே ஒரு சம்பிரதாயத்திற்குத்தான்.

தாம் ஏலவே கலந்தாலோசித்த பிரகாரம் சேர்ப்பவனற்றைச் சேர்த்தும் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருப்ப வற்றை நீக்கியும், இருதரப்பினரதும் பாதுகாப்பு உறுதிப்படுத் தப்பட்ட ஒரு சட்டக் கோவையை சிங்களத்திலும் தமிழிலும் எழுத்தெண்ணி ஊன்றிப் படித்து முக்கிய நிர்வாகிகள் கைச்சாத்

திட்டு, ஏகமனதாக நிறைவேற்றிக் கொண்டனர்.

அல்லாஹு அக்பர்,

ஜயவேவா...

இதனால் இனி குளக்காட்டுப் பிரதேசத்தை, இரு கிராமங்களைப் பிறப்பிடமாகக் கொண்ட சிங்களவர்களும் முஸ்லிம்களும் காடு வெட்டி விவசாயம் செய்யும் உரிமையைப் பகிர்ந்து கொண்டு விட்டனர். சட்டங்களை மீறுபவர்கள் தண்டிக்கப் படுவர்.

பாடசாலை வளவிற்குப் பக்கத்திலுள்ள அஹ்மதுலெப்பை அவர்களின் இல்லத்திலிருந்து பெட்டீஸும் தேநீரும் கொண்டு வரப்பட்டது.

முக்கியத்துவம் வாய்ந்த அந்த வைபவம் வெற்றியுடன் நிறைவேறியதும் கிரிபண்டன் குழுவினர் மிக்க மகிழ்ச்சியுடன் டிராக்டரில் புறப்பட்டனர். இதர வேலைகளில் அமரவும் ஹலீமும் சகலரது ஒத்துழைப்புடனும் மும்முரமாக ஈடுபடுவர்.

மஃறிப் தொழுகைக்குப் பின் மீண்டும் ஊர் ஜமாஅத்தாரை பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் கலந்துரையாடல் பாடசாலையிலேயே இடம்பெற்றது.

ஒரு முக்கியமான வினாவுக்கு விடை காண எல்லாரது உள்ளங்களும் துடித்துக் கொண்டிருந்தன.

குளக்காட்டுப் பிரதேசத்தில் விவசாயம் செய்யப் போகும் முஸ்லிம் கிராமவாசிகள் யார்.....?

கொமிட்டி தீவிரமாக ஆராய்ந்தது.

''முதலில் காடு வெட்டி வெளிசாக்க வேணும், பொறகு குளத்தை திருத்தி நீர்ப்பாசனத்தை பெருக்க வேணும். குளத்த திருத்தும் பணியில இரண்டு பகுதியாரும் சேர வேணும்.....''

''இவ்வாரம்ப வேலைகளுக்குப்,பெருந்தொகையான பணத்த முதலீடு செய்ய வேணும்.....''

''இப்போதைக்கு குளத்தைத் திருத்த வேண்டிய அவசியம் இல்ல... அப்படியே செய்ய வேணும் என்டா அரசுதான் செய்து தரவேணும்.....''

''குளக்காட்டுப் பிரதேசத்தில எல்லாராலும் பணம் முதலீடு செய்றது முடியாத காரியம்....''

''இது வசதியுள்ளவர்களால் மட்டும் தான் முடியும்....''

''குளக்காட்டுப் பிரதேசத்தின் உரிமைய எடுத்துக் கொண்டது பணக்காரங்க மேலும் மேலும் தமது செல்வத்தைப் பெருக்கு வதற்காகவே....'' என்ற ஊரவன் பழிப்புக்கு நிச்சயமாக ஆளாக நேரிடும்.

''காடு வெட்டவும், குளத்தைத் திருத்தவும் யாருக்கு வசதியிருக்கோ அவங்க முன் வரட்டுக்கும்.... மறுஹா மறுபேச்சு இல்ல....''

''இந்த ஊர்ல, விவசாயம் செய்ய இரண்டு ஏக்கர் நிலம் இல்லாதவங்க இன்னும் இருக்கிறாக.....''

''...... ஆக்கள் கூடக்கூட நிலம் பெருகுவதில்லையே.....''

இப்படியாக ஆளுக்காள் முன் வைத்த கருத்துக்கள் ஆழமாக பரிசீலிக்கப்பட்டன.

சமது விதானை எல்லாருக்கும் பொதுவாக தனது கருத்தை முன்வைத்தான்.

''காடு வெட்ட, குளம் திருத்துவதாயிருந்தா அதற்கும், மற்ற விதைநெல் உரம், மருந்து, உழவு சம்பந்தப்பட்ட எல்லா செலவுகளுக்கும் ஒரு 'எஸ்டிமேட்' பண்ணி வீட்டின் பிரதான விவசாயி (குடியிருப்பாளர்) ஒவ்வொருவரிடமிருந்தும் அறவிட வேணும். அத அறவாக்கிப் போடலாம். அது பெரிய தொகையாக வராது என்று நினைக்கிறன்.

''அறவிடும் போது கொடுக்கத் தவறினால்.....?''

''...... அதற்கும் குடியிருப்பாளர்களுக்கு ஒதவியாக ஒரு

சட்டதிட்டம் போடலாம்.... கால அவகாசம்.... அதற்கு.... அவருடைய பங்கை இன்னொருவர் பொறுப்பேக்க அல்து பள்ளி நிர்வாகம் பொறுப்பேக்க முடியாத கட்டத்திலதான் அறு வடையில அவருக்குப் பங்கு இல்லாம செய்ய வேணும். இந்த யோசனையை எல்லாரும் ஆதரித்துப் பேசி, சிற்சில திருத்தங்கள் செய்தனர். இது தொடர்பாக ஹலீம்தீன் மற்றுமொரு திருத்த யோசனையை முன் வைத்தான்.

''.... எங்கட நடைமுறையால அனைத்து கிராமவாசிகளும் பயன்பெற வேணும்.... நான் என்ன சொல்ல விரும்புறன் என்டா எப்படியும் குளக்காட்டுப் பிரதேசத்தில காடு வெட்ட கூலிக்கு ஆள் சேக்கத்தான் வேணும். பங்குப் பணம் கட்டி பங்குதாரர்களாக சேரமுடியாத சுமக்காரர் எவரும் காடு வெட்ட விரும்பினாக்கா அதில கிடைக்கும் கூலியில தமது பங்குப் பணத்தைக் கட்ட லாந்தானே...

எமது நோக்கம் பிரதான குடியிருப்பாளர்களான கிராம வாசிகள் பங்குதாரராய் இணைந்து அறுவடை காலத்தில லாபம் பெற வேணும் என்பதே.

''ஹலீம்தீனின் திருத்த யோசனை திறமானது, முடிந்த வரை யில் எல்லாரும் இணைய வேண்டும். என்பதற்காகத்தான்...''

எப்படியோ, சமது விதானை கொண்டுவந்த பிரேரணை திருத்தங்களுடன் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

''... நாங்க இப்ப கிழடுகள். எங்களால ஓடித்திரிய ஏலாது. இளம் ஆக்கள தெரிவு செஞ்சி ஒரு குழு அமைச்சா.... இது விஷயமா நம்பிக்கையா.... பொறுப்பா வேலை செய்வாங்க...''

இப்படி அஹ்மதுலெப்பை அபிப்பிராயம் தெரிவித்தார்.

அப்துல் மஜீத் அவர்களுக்கும் அந்த யோசனை சரியாகப் பட்டது.

சமது விதானையின் தலைமையில், முஸ்லிம் கிராமத்திற் குரிய ஒரு 'விவசாயிகள் கழகம்...' அமைக்கப்பட்டது.

'ஒரு குறிப்பிட்ட தொகையை நிரந்தர பங்குப் பணமாக ஏற்படுத்தி ஒருவர் எத்தனை பங்கு வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் என்னும் முறை எல்லாருக்கும் வசதியாக இருக் கும் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டது.

எனினும் 'விவசாயிகள் கழகம்' எல்லாவற்றையும் முடிவு செய்யும். பங்குப் பணம் யாவற்றையும் கழகத்தின் பொருளாளர் அபூதாலிப் இடம் ஒப்படைத்து முழு விபரங்களுடன் ஒரு 'ரசீது' பெற்றுக் கொள்ள வேண்டும். செயலாளராகத் தெரிவு செய்யப் பட்ட அதிபர் அப்துல் கரீம் வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிப்பார்.

ஆழமான கருத்துப் பரிமாறல்களுக்குப்பின், குளக்காட்டுப் பிரதேசத்தில், முஸ்லிம் கிராமத்துக்குரிய காட்டை வெளிசாக்கி, விவசாயம் செய்ய ஏற்படும் முழுச் செலவையும் விவசாயிகள் கழகமே பொறுப்பேற்றது. பங்குகளுக்கு ஏற்ப வருடாந்த அறுவடையைப் பிரித்துக் கொள்ளவும் முடிவாகியது.

''இது குறித்து சகல விதமான உத்தியோக பூர்வமான நட வடிக்கைகளும் செப்டம்பர் மாதம் அமுலுக்குக் கொண்டு வரப்படும்'' என்று ஹலீம்தீன் உறுதியளித்ததும் நிர்வாகக்குழுக் கூட்டம் மகிழ்ச்சியுடன் கலைந்தது.

பாடசாலை மண்டபத்தில் தங்கியிருந்து இன்றைக்கு மூன்று மணித்தியாலமாவது பாட ஆயத்தங்கள் செய்ய வேண்டுமென்று ஹலீம்தீன் நண்பர்கள் தீர்மானித்திருந்தனர்.

இல்லங்களுக்குச் சென்று, வழக்கம்போல் இராப் போசனத் திற்குப் பின்னர் ஹலீம்தீன், யாசீன் அன்சார் போன்ற ஏ.எல்.குழு வினர் தேவையான புத்தகங்கள் குறிப்புகளுடன், பாய் தலை யணைகளையும் சுருட்டிக் கொண்டு அமைதியே உருவான அந்தப் பாடசாலையின் மண்டபத்திற்கு வந்து சேர்ந்தனர்.

''பியசீலி பெட்டை சரியாகத் தான் மட்டிட்டிருக்கிறா....'' என்றான் யாசீன்.

''எதப்பத்தி......?''

''... இல்ல அண்டக்கி கேட்டாளே ஒரு கேள்வி. நீங்க படிக்கிறீங்களா அல்லது கிராம முன்னேற்ற வேலைகளச் செய் றீங்களா எண்டு, சரியாகத்தான் அவதானித்து கேட்டிருக்கிறா...''

''என்னப் பொறுத்தவரையில..... நான் ஒரு நேரசூசிப்படி திட்டமிட்டுத் தான் வேல செய்றன்... அவ அப்படி ஒரு 'இன் ஜெக்சன்...' கொடுத்ததும் நல்லதுக்கு தான்... படிக்கணும்... படிக்கணும் என்ற உசார் வந்துட்டுதுதானே.....''

அந்தக் கிராமத்து பாடசாலை கட்டின நாள் தொடக்கம், தஸாப்தங்களாக, ஐந்து வகுப்புகளைக் கொண்ட ஓர் ஆரம்பப் பாடசாலையாகத்தான் இருந்து வந்துள்ளது. முன்னாள் அதிபர் கரீம் ஆரம்பித்த முன்னேற்றச் சங்கத்தினாலும், தற்போதைய அதிபர் ரஹீம் அவர்களின் முயற்சியினாலும் இரு மேலதிக கட்டிடங்கள் கிடைத்ததோடு, பாடசாலையின் தரமும் உயர்த் தப்பட்டுள்ளது. இன்று ஓ.எல்.வரைக்கும் வகுப்புக்கள் நடை பெறுகின்றன.

இல்லாவிட்டால் ஹலீம்தீன் நண்பர்கள் போல் ஐந்தாம் வகுப்புக்கு மேல் வெளியேற வேண்டும். பெரும்பாலும் வயல் வேலைகளுக்காகத்தான் உந்தப்பட்டிருக்கிறார்கள். சொற்ப விகிதத்தினர் சீனம் சென்று கல்வி கற்றார்கள். அந்த வரிசையில் ஹலீம்தீன் கோஷ்டியினர் அதிர்ஷ்டசாலிகள். கஹட்டகஸ் திகிலியா முஸ்லிம் பாடசாலையில் சேர்க்கப்பட்டார்கள். இன்று வரைக்கும் கிராமத்திலிருந்து எத்தனையோ கிலோ மீற்றர்கள் அரசாங்க பஸ்ஸில் பிரயாணம் செய்து, பின்னேர மேலதிக வகுப்புகள் எல்லாவற்றையும் முடித்து, மாலையில் தான் வீடு திரும்புவார்கள். இப்பொழுது ஏ.எல். சோதனை முடிந்த கையோடு அதற்கும் முற்றுப்புள்ளி கிடைத்துவிடும். சீனப் பிரயாணம் தொடருமா தொடராதா என்பது இவர்கள் இந்தச் சோதனையில் காட்டும் திறமையைப் பொறுத்துள்ளது.

•

இரவு ஒன்பது மணிதொடக்கம் பன்னிரண்டு வரைக்கும் படித்துவிட்டு, பாலர் வகுப்பு நீட்டு மேசைகளை ஒன்று சேர்த்து, அதன் மீது பாய்களை விரித்து, அப்படியே சுருண்டு படுத்து விட்டார்கள். ஞாயிற்றுக்கிழமை விடிந்தது. ஓய்வுநாள், காலை ஆறு முப்பது வரைக்கும் தூங்கிவிட்டார்கள். 'சுபஹு கலா வாயிற்று'. பின்னர் அவசர அவசரமாக எழுந்து, பாய்களைச் சுருட்டிக் கொண்டு வீடுகளுக்குச் சென்றார்கள்.

''யாசீன், கிணறுகளெல்லாம் வற்றி, நீர் இறங்கியிருக்கு. ஆற்றுக்குப் போய் வருவமா....?''

''ஆற்றிலும் நீரோட்டம் மிகக்குறைவு, வாளிகளை எடுத்துக் கொண்டு போவம்....'' என்றான் யாசீன்.

''ஹலீம் நான் வரல்ல. எனக்கு மாச்சலாய் கிடக்கு. நான் வூட்டில நித்திரை கொள்ளப் போகிறன்'' என்றான் அன்சார்தீன்.

ஹலீம்தீனும் யாசீனும் ஆற்றை நோக்கி, வயல் வரப்புகளில் நடந்தார்கள்.

அறுவடைக்காலம் முற்றிலும் முடிந்து வயல்களெல்லாம் வரண்டு, வெறிச்சோடிக் கிடந்தன.

ஒரு பள்ளத்தாக்கில் இறங்கினர்.

அதை ஒரு பெரிய ஆறு என்று சொல்வதற்கில்லை. மழைக் காலங்களிலும் அதனை சலசலத்தோடும் நீரோடை என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் இப்பொழுது சலசலப்பில்லாமல் நீர் ஆகக் குறைந்த மட்டத்தில் காட்டிக் கொள்ளாமல் அசைந்து கொண்டிருந்தது. மிகவும் சுத்தமான நீர்.

ரஷீத் குளித்துக் கொண்டிருந்தார்.

அவரைக் கண்டதும் யாசீன் மெல்லிய குரலில் ''நாசமாகப் போச்சி, எம்டன் குளிக்கிறார்'' என்று முணுமுணுத்துக் கொண் டான். கிராமத்தில் எந்த ஒரு காரியம் நடந்தாலும் அதற்கு எதிர்ப்புக்குரல் காட்டுவதில் அவருக்கு முதலிடம் உண்டு. எதிர்ப்பது அவருடைய சுபாவம்.

ரஷீத் குளித்துவிட்டு கரையேறி விட்டார். ஆற்றங்கரையில் வேறு எவரும் இல்லை.

ஆனால் இவர்களைக் கண்டதும் அவருக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

ஆற்றிலே நீரின் சலசலப்பு இல்லாவிட்டாலும் இவரது பேச்சில் இருந்தது. குளக்காட்டுப் பிரதேச உரிமையிலிருந்து பங்குப்பணம் வரைக்கும் சலாபிக் கொண்டிருந்தார். அவர்களும் முகம் சுழிக்காமல் அவரைத் திருப்திப்படுத்திக் கொண்டு குளிக்க ஆரம்பித்தனர்.

''தம்பிமார், எல்லாருக்கும் லாபந்தரக்கூடிய விதத்தில குளக்காட்டுப் பிரதேச விவகாரத்த முடிச்சிருக்கிறீங்க....'' என்று பாராட்டினார்.

ஆற்றில் நீர் முழங்காலுக்குக் கீழ் ஓரடிக்கும் குறையத்தான் ஓடிக் கொண்டிருந்தது. வாளியை விட்டு அள்ளும் போது குறு மணலும் நீரில் கலந்து வந்தது. மிகவும் நிதானமாக அள்ளி தலையில் ஊற்றிக் கொண்டனர். ஓடும் நீரானாலும் வெது வெதுப்பாக வெம்பியிருந்தது.

''ரஷீத்தை இப்படி ஆற்றில் சந்திச்சது நல்லதாப் போச்சி'' என்றான் யாசீன்.

''ஏன்?'' என்று கேட்டான் ஹலீம். அவனுக்குக் காரணம் விளங்கியது. இருந்தாலும் சும்மா கேட்டு வைத்தான்.

''குளக்காட்டுப் பிரதேச விஷயமா முழுக்கிராமத்தையே நாடி பிடித்துப் பார்த்து விட்டாய் தானே.....'' என்றான் யாசீன் திருப்தியான முகபாவத்தோடு.

''ஓ நிச்சயமா... ரஷீத் 'ஒகே' என்றால் கிராமத்தின் எந்த மூலை முடுக்கிலும் எதிர்ப்பில்லை என்பதில் சந்தேகமில்லை. இனி நாம மேற்கொண்டு காரியங்களில இறங்கி வேலை செய்ய 'கடப்பல்' திறந்து விடப்பட்டிருக்கு.''

குளித்துவிட்டு அவர்களும் கரையேறிய போது சேகு வந்து கொண்டிருந்தான்.

''யாசீன் வாளியைக் குடு....''

''சேகு நீ வூட்ட போய் பின்னேரம் சமது விதானயக் கண்டு, விவசாயிகள் கழகம் சம்பந்தப்பட்ட 'பைல்கள்' எல்லாத்தயும் எடுத்துக் கொண்டு கரீம் மாஸ்டரைக் காணச் சொல்லு....''

யாசீனும் ஹலீமும் பேசிக்கொண்டே நடந்தனர்.

''யாசீன், நீ ரஷீத்தை 'எம்டன்' என்று சொன்னியே.... இந்தச் சொல் நாட்டில் பல பாகங்களிலும் புழக்கத்தில் கிடக்கு.... தெரியாமத்தான் கேட்கிறன். இந்த 'எம்டன்' என்ற சொல், தமிழ் சொல்லா.... ? இதன் கருத்தென்ன?'' என்று வினவினான் ஹலீம்தீன்.

''இதபற்றி பஹார்தீன் மாஸ்டர் வந்தா தான் கேக்கனும்.... ஆனா நான் ஒண்டு கேள்விப்பட்டன்.... எம்டன் என்பது முன்னொரு காலத்தில், ஒரு கப்பலின் பெயராம். அது கடலில் வந்து காரணமில்லாம தங்கியிருந்த போது அதனைப் பிடிக்கவோ அழிக்கவோ முடியாதிருந்தது. மிகத் தந்திரமாகத் தப்பிக் கொண்டது. 'எம்டன்' என்றால் தந்திரசாலி என்று பொருள்படுகிறது.''

யாசீனைப் பிரிந்து வீட்டிற்குச் சென்ற ஹலீம்தீனுக்கு காலையுணவு சுடச்சுட புட்டும் புளி ஆனமும், அறுசுவையாக இருந்தது.

ஒரு வாரத்திற்குப் பின், விவசாயிகள் கழக வேலைகளை எல்லாம் கச்சிதமாக முடித்திருந்தனர் கரீம் மாஸ்டரும் சமது விதானையும்.

# எட்டு

வருடத்தின் அறுவடைக் காலம் முற்றாக அஸ்தமித்தபோது எங்கும் மகிழ்ச்சிப் பிரவாகம் பிரவகித்தது.

ஆண்கள் சாரன் சட்டை என்றும், குமருப் பிள்ளைகள் தொடக்கம் நடுத்தர வயதுப் பெண்கள், பாடசாலைச் சிறார்கள் வரை பல தரத்தினரும் .உடுபுடைவை வகையறாக்கள், மற்றும் வீட்டுச் சாமான்கள், சட்டி முட்டிகள் வாங்கவென்று ஹொரவப் பொத்தானை தொடங்கி கஹட்டகஸ்திகிலியா ஊடாக அனுராத புர நகரம் வரைக்கும் விவசாயக் குடும்பங்கள் குழுக்கள் குழுக்க ளாக படையெடுத்துக் கொண்டிருந்தனர். அறுவடைக்குப் பின் 'வாங்குவோம்' 'செய்வோம்' என்று இறுமாந்திருந்தவர்கள், வயல்கள் காலைவாரி விட்டிருந்தால் எல்லாமே மனக்கோட் டைகளாகப் போவதுமுண்டு. ஒரு புறம் தங்க சாமான்களை ஈடுவைத்தவர்கள், மறுபுறம் வயல், காணி உறுதிகளை அடகு வைத்தவர்கள்....

பெறுமதியான உடைமைகளை மட்டுமே அவர்களால் மீட் டெடுக்க முடியும்.

வியாபாரிகளும் அறுவடைக்காலம் தொடங்கும் போதே, கமக்காரர்கள் கேட்கும் வகைகளைக் கொண்டு வந்து குவித் திருப்பார்கள். ஒன்றுக்கு இரண்டு லாப நோக்கில்.

வருடத்திற்கு ஒருமுறை அறுவடைக்குப் பின் பொருட்கள் வாங்க வேண்டும் என்று தாமே ஏற்படுத்திக் கொண்ட ஒரு பழக்கம். வசதியில்லாதவர்கள் அதைப் பற்றிக் கவலைப்படுவதில்லை.

ஆனால் இந்த முறை ஒரு புதிய ஆசை முளைவிட்டு அதி தீவிரமாக வளர்ந்து கொண்டிருந்தது.

''தேவையில்லாமல் உடுபுடவை மற்றும் சாமான்கள் வாங்கு வதை நிறுத்த வேண்டும்'.

உணவுக் கஷ்டம் ஏற்பட்ட போது எடுத்த கடன்களை மட்டும் அடைத்து விட்டு... எப்படியும் குளக்காட்டுப் பிரதேசத்துக்குப் பங்குப் பணம் கட்ட வேண்டும் என்ற உந்துதல் எல்லாரது மனங்களிலும் ஆழமாகப் பதிந்து செயற்பட்டுக் கொண்டிருந்தது.

சிங்கள முஸ்லிம் கிராமவாசிகளிடையே தோன்றிய நெருக்க மான நட்பு நிதானமாக வேரூன்றி வளரத் தொடங்கியது. இனி பிளவுக்கே இடம் இல்லை என்று அப்படி ஒரு புரிந்துணர்வு. எதிர்கால வசந்தத்தின் வருகைக்காகவா அது!

ஒவ்வொருவருக்கும் தனது அயல் கிராமத்தை நேசிக்க வேண் டும் என்ற மனோபாவம் வந்து விட்டது.

எங்கோ வாழ்கிற, தூரத்து உறவுக்காரர்களை விட பக்கத்து கிராமவாசிகளே ஆபத்துக்கு உதவுபவர் என்று இரு சாராருமே உணரத் தலைப்பட்டு விட்டனர்.

குளக்காட்டுப் பிரதேச விவசாயத்தில் பங்குதாரராய் சேர்ந்து சகல முஸ்லிம் கிராமவாசிகளும் பயனடையும் திட்டமும் அதற்குப் பொறுப்பேற்றிருக்கும் 'விவசாயக் கழகமும்' சிங்கள கிராமவாசிகளை மிகவும் கவர்ந்தது. இது போன்றதொரு திட் டம் சிங்களக் கிராமத்தில் இன்னும் தோன்றவில்லை.

குளக்காட்டுப் பிரதேசத்தில் சிங்களவருக்கு ஒதுக்கப்பட்ட காட்டை யார் வெட்டப் போகிறார்கள்? யார் விவசாயம் செய்யப் போகிறார்கள் என்று இன்னும் ஒரு நிரந்தரமான முடிவு எடுக்கப்படவில்லை.

ஹலீம்தீன் குழுவினரும் அமரதாச குழுவினரும் இது விடய மாக விரைவில் ஆராயவிருக்கின்றனர்.

சிங்கள கிராமத்தைப் பொறுத்த வரையில் முஸ்லிம் விவசாயிகள் எடுத்திருக்கும் முன்னோடியான திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாமைக்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றனவாம்.

தற்காலிகமாக விரும்பியவர்களின் பெயர்ப்பட்டியல் ஒன்றைத் தயாரித்து, காட்டைப்பிரித்து ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பகுதியை ஒருவருடத்திற்கு என்ற முறையில் கொடுக்க ஆலோசிக்கப்பட்டு வருகிறது. சிங்கள கிராமத்தைப் பொறுத்த வரையில் இது பொருத்தமாக இருப்பதாக பலர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்கள். வேறு தொழிற்றுறை இல்லாமல் உழவுத் தொழிலை மட்டுமே நம்பியிருப்பவர்களும், வயல் காணி இல்லாதவர்களும் தான் இத்திட்டத்திற்கு உரித்துடையவர்களாக்கப்பட்டு, விவசாயக் காணி பகிர்ந்தளிக்கப்படும்.

''அப்படியும் எல்லாருக்கும் பிரித்துக் கொடுக்க முடியாது போனால்.....?'' என்ற கேள்வி எழுந்தது.

''அவர்களுக்கு நிச்சயமாக இரண்டாம் வருடத்தில் கிடைக்கும்'' என்று உறுதியளிக்கப்பட்டது.

இது தற்காலிகமானது தான். ஆழ்ந்து ஆராய்ந்து ஒரு நிரந்தரமான நடைமுறை காலப்போக்கில் வகுக்கப்படும்.

இரண்டு கிராமங்களிலும் கிட்டத்தட்ட எல்லா ஆயத்தங்களும் பூர்த்தியாகியிருந்தன.

ஒரு நல்ல நாளில் மதவைபவங்களுடன் காடு வெட்டும் படலம் ஆரம்பமாகியது.

இரு டிராக்டர் வண்டிகளில் தேவையான பொருட்களுடன் சென்று இளைப்பாற்றுக் குடில்களை அமைத்துக் கொண்டனர்.

எட்டாம் மாதம் தொடங்கிவிட்டிருந்ததால் ஹலீம்தீன், அமர குழுவினர் பரீட்சைக்கு ஆயத்தப்படுத்துவதிலேயே மும்முரமக இருந்தனர். அதனால் சமது விதானையின் தலைமையில் உள்ள குழு, காடுவெட்டும் வேலைக்குப் பொறுப்பாக இருந்து அடிக்கடி

போய் கண்காணித்து வந்தது.

குளக்காட்டுப் பிரதேசத்தில் காடு வெட்டவும், குளம் திருத்த வும் ஆட்கள் தெரிவாகினர். திறமான அறுபது பேருக்கு தொழில் வாய்ப்பு கிடைத்தது. பதினைந்து பேர்களைக் கொண்ட குழுக் கள் அமைக்கப்பட்டன.

குளக்காட்டுப் பிரதேசத்தில் காடு வெட்டச் சென்ற முதலா வது குழு ஒரு வாரம் கடுமையாக உழைத்துவிட்டு வந்ததும் மற்றக்குழு சென்றது. இப்படி மாறி மாறிச் செல்வதற்காகவே அக்குழுக்கள் அமைக்கப்பட்டன.

ஆகஸ்ட் நடுப்பகுதியில் ஏ.எல்.பரீட்சை ஆரம்பமாகியிருந்தது.

முஸ்லிம் கிராமத்திலிருந்து, ஹலீம்தீன், யாசீன், அன்சார், சேகு ஆகிய நால்வரும் மிக்க சுறுசுறுப்புடன் பரீட்சை எழுதிக் கொண்டிருந்தனர். அமரதாச, பியசீலி நண்பர்களுக்கு ஹொரவப் பொத்தானையிலேயே பரீட்சை நிலையம் அமைந்திருந்தது.

இரண்டு வாரங்களில் அனைவருக்கும், எல்லாப் பாடங்களும் முடிந்திருந்தன.

அமரதாசவின் இல்லத்தில் ஒன்று கூடி தத்தமது பாடங்க ளைப் பற்றியும், விடைகள் எழுதியதில் ஒவ்வொருவரும் தத்தமது நிறை குறைகளை ஆராய்ந்தும் பரிசீலித்துப் பார்த்தனர்.

ஒவ்வொருவரும் எழுதி முடித்து வந்த பின்னர் அது பற்றி அலசி என்ன பிரயோசனம்? எழுதியவற்றிற்குத்தான் புள்ளி கிடைக்கும். கலந்துரையாடல் என்பது வெறும் மன ஆறுதலுக் குத்தான்.

எப்படியும் பரீட்சை எல்லாருக்கும் முழுநம்பிக்கையையும், திருப்தியையும் அளித்திருந்தது. அத்துடன் தம்மைவிட்டு ஒரு பெரும் சுமை இறங்கியது போலவும் இருந்தது.

பத்து நாட்கள் உல்லாசமாகப் பொழுது போக்கவும், ஓய் வெடுக்கவும் கிராம முன்னேற்ற விவகாரங்கள் பற்றி பேசாது விடுபட்டிருக்கவும் விரும்பினர்.

அவர்களது திட்டம் இனிது நிறைவேறியது. அவற்றுள் மலையக விஜயம் மிகுந்த மகிழ்ச்சியும் திருப்தியும் அளித்தது.

பேராதனைப் பூந்தோட்டத்தில், தலதா மாளிகையில் மீரா மக்காம் பள்ளியில்.... மிக அற்புதமாக.... பத்து நாட்கள் எப்படிப் போயின என்று வியந்தனர். அந்த ரம்மியமான பொழுது போக்குகளுக்குப் பின் மீண்டும் கிராம அபிவிருத்தி வேலைகளில் தீவிரமாக ஈடுபட திட்டமிட்டார்கள்.

''காலாண்டு குறுகிய கால வேலைத் திட்டம்' ஒன்றை அமர, ஹலீம் குழுவினர் தயாரித்தனர். அதற்கிடையில் காடுவெட்டி தீ மூட்டும் வேலை மிக மும்முரமாக நடந்து கொண்டிருந்தது.

# ஒன்பது

"இண்டக்கி நாங்கள் காலாண்டுத் திட்டம் போட்டு வேலை செய்யிற நிலையில இருக்கிறம்... ஆனா எங்கட முன்னோர்...?'' என்று கேட்டான் கமர்.

''எங்கட முன்னவங்க கதை வேற. இப்ப காலம் மாறிக் கிடக்கு... சனத்தொகையும் கூட, எங்கட அப்பாமார் குடியிருப்புகளை ஆரம்பிச்சதே மறைவாக இருக்கத்தான். கிராமங்களுக்கு பெயர் வைச்சாங்களோ என்னவோ; பிந்திய சந்ததியினர்தான் பெயர் வைச்சிருப்பாங்க.

இன்று ஒவ்வொரு கிராமத்துக்கும் பெயர் கிடக்கு. தங்கட வாழ்நாளிலே இந்தப் பக்கமே எட்டிப் பார்க்காதவங்களுக்கும் எங்கட குக்கிராமங்களின்ட பெயர்கள் தெரியும். தெரியாவிட்டாலும் தேவை ஏற்பட்டா தெரிஞ்சு கொள்ளக்கூடிய பதிவுகள் வசதிகள் கிடக்கு. இந்த நாட்டின் பிரஜைகளான முஸ்லிம் விவசாயிகள் கிராமங்களில குடும்பங்களாய் வாழ்கிறார்கள் என்று மட்டும் தான் தெரியும். குளங்களையும் மழைத்தண்ணியையும் நம்பி வாழ்ற வாழ்க்கை முறை ஒண்டும் தெரியா....'' என்று நீண்டதொரு விளக்கம் கொடுத்தான் ஹலீம்தீன்.

''இப்ப கிராமங்களில கல்விக் கண் திறந்து விடப்பட்டிருக்கு. அதோட கொஞ்சம் கொஞ்சமாக நகர்ப்புற நாகரிகம் புகுந்து விட்டது. நாட்டின் ஒவ்வொரு பிரிவுகளிலும் பிரதேசங்களிலும் பல்லின மக்கள் எப்படி வாழ்கின்றார்கள் என்று மேலோட்டமாக அறியக்கிடக்கு. நெடுஞ்சாலைகள், பொதுசன தொடர்புச்

சாதனங்கள் மூலம் ஒவ்வொரு நிமிடமும் நடக்கும் விசயங்களை கிராமவாசிகளும் அறிந்து விழிப்படைகிறாங்க. நமது உரிமைகளுக்காக நாம் அவர்களுடன் போட்டி போட்டுக் கொண்டு வாழப் போராடுகிறோம். கஷ்டப் பிரதேசங்களில் மிகவும் பின்தங்கிப் போய் வெறும் வயலையும் வரப்பையும், மரங்களையும் காடுகளையும் மிருகங்களையும் மட்டும் பார்த்துக் கொண்டிருக்கிறம். எங்களுக்கு வழிகாட்டிகள் இல்ல. எங்களுக்கு மத்தியில் ஓர் ஒருமைப்பாடு தோன்றவும் சந்தர்ப்பம் இல்ல. எங்கட கிராமங்களை விட்டு வெளியே சென்று புதினங்கள் பாத்திராத தாய்மாரும் தந்தையரும் சகோதர சகோதரிகளும் இன்றும் இருக்கிறாங்க.''

இது யாசீனின் மற்றுமொரு விளக்கம். இவ்விளக்கங்களில் எவ்வளவு ஆழமான உண்மைகள் பொதிந்துள்ளன என்பதனை அனைவருமே ஏற்றுக் கொள்கின்றனர்.

அமரதாச ஒரு வரலாற்று உண்மையை எடுத்துரைத்தான்.

''முஸ்லிம்கள் கல்வியில் பின்தங்கியது இடைக்காலத்தில.... என்றுதான் நினைக்கிற, ஏனென்டா இலங்கையை சிங்கள மன்னர்கள் ஆண்ட காலத்தில் முஸ்லிம்கள் மன்னனுக்கு ஆலோசகர்களாகவும் இருந்திருக்கிறாங்க. அந்தக் காலத்திற்கேற்ப அவக கல்வியில் சிறந்து விளங்கியதாலதான் உயர்ந்த பதவிகளை வகிக்க முடிஞ்சிருக்கும்....''

''அமர சொல்வதில் உண்மை இருக்கு. ஆனா அவர்களது வழித்தோன்றல்கள், அடர்ந்த காடுகளில் குடியிருப்புகளை அமைக்க வந்ததால தான் கல்வியறிவற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்கியுள்ளனர்..... என்பதுதான் உண்மை...'' என்று கூறிய ஹலீம்தீன் தொடர்ந்தும் சில கருத்துக்களை முன் வைத்தான்.

அநுராதபுரத்தை பண்டுகாபய மன்னன் அரசாண்ட காலம் தொடக்கம், ஒவ்வொரு சிங்கள மன்னர்கள் அரசோச்சிய கால கட்டங்களிலும் முஸ்லிம்களின் தொடர்பு வலுப்பெற்று வந்துள்

ளது. முத்துவிதானை அசனார், விதானைப் பதவி வகித்துள்ளார். அரண்மனை வைத்தியர்களாகவும், ஆலோசகர்களாகவும் பலர் இருந்துள்ளனர். 'முகாந்திரம்' என்று சொல்லப்படும் உயர் பதவியை வகித்துள்ளார் அ.கா.பிச்சைத்தம்பி என்பவர். அரச னால் வழங்கப்பட்ட இடைவாள், சீருடை போன்றவற்றை இன்னும் சந்ததியினர் ஞாபகச் சின்னங்களாக, மிகவும் பாது காப்பாக வைத்திருக்கின்றனர்.

ஹலீம்தீனின் விளக்கவுரை பல புதிய தகவல்களைக் கொண் டதாக இருந்தது. பின்னர் திடீரென்று சேகுவைப் பார்த்து கேள்விக் கணைகளைத் தொடுத்தான்.

''சேகு.... எனக்கு நீண்ட நாளாய் உண்ட பெயரில ஒரு சந்தே கம், ஒங்க வாப்பா ஒனக்கு 'சேகு' என்று பெயர் வைத்துள்ளார். அவருடைய பெயரிலும் 'சேகு' வருகுது. ஆக நான் சந்தேகிக்கிற மாதிரி நீ சேகு சிக்கந்தர் வொலியுல்லா பரம்பரையாக இருக்க லாமல்லவா...?''

''சேகு சிக்கந்தர் வொலியுல்லாவா...?'' கூடியிருந்தவர்களின் அங்கலாய்ப்பு நீண்ட நேரம் நீடித்தது.

''என்ன எல்லோரும் ஸ்தம்பிச்சிப் போய்ட்டீங்க... சேகு உனக்கு இயற்கையிலேயே தமிழ்ப்புலமை கிடக்கு.... பழங்காலத்தில் அநுராதபுர பிரதேசத்தில் குடியேறியவர்களில், தென்இந்திய காயல்பட்டின முஸ்லிம் வியாபாரிகளும் குறிப்பிடத்தக்கவர்கள். தவிர ஆன்மீகப் பணிபுரிய வந்த சேகு சிக்கந்தர் வொலியுல்லாவின் சேவை பரந்தது. அவரை பல மதத்தவர்களும் சந்திப்பார்கள். அன்னாரை கௌரவிக்கவும், ஏழைகளுக்கு உணவளிப்பதற்கும், வருடாந்தம் கந்தூரி வைபவங்களும் இடம்பெறுகின்றன. சிங்கள மன்னர்கள் அன்னாரை அரச அவையில் மரியாதை அளித்து தனக்கு ஆலோசகராகவும் நியமித்துக் கொண்டார்கள். அரச அவையில் அங்கம் வகித்தாலும் அவரது ஆன்மீகப் பணி பின்நிற்கவில்லை. மக்களின் அபிமானத்தைப் பெற்றுக் கொண்டார்.

''ஹலீம், சேகுவை, சேகு சிக்கந்தர் வொலியின் பரம்பரையாக இருக்கலாம் என்றால்..... மற்றவர்கள்....?''

''யாசீன் நீ இப்படிக் கேட்பாய் என்று எனக்குத் தெரியும்... அநுராதபுரத்தில் குடும்பங்களாக குடியேறியவர்களில் அ.கா. குடும்பம், சே.கா.குடும்பம், சே.ம.மு.குடும்பம்,காட்டு பாவா குடும்பம், கேரள மக்கள் பிரதானமானவர்கள்.... இப்படித்தான் எங்கள் மூத்த தலைமுறையினரை இனங் காண முடியும்.

இன்று சனத்தொகை கூடக்கூட எங்களது விவசாயத்துக்கு, எல்லோருக்கும் போதுமான நிலம் கிடக்கு என்று சொல்வதற்கில்லை. நிலம் எங்கள் முக்கிய பிரச்சினைகளுள் ஒன்று. எவ்வளவோ போராடி, குளக்காட்டுப் பிரதேசத்தை நாங்களே சுமுகமாகத் தீர்த்துக் கொண்டிருக்கிறோம்.... பழங்காலத்தில் 'நிலம்' ஒரு பிரச்சினையாக இருக்கவில்லை. முன் குறிப்பிட்ட அ.கா. குடும்பத்தவருக்கு நூற்றுக்கணக்கான நிலப்பரப்புகள் இருந்தன. சே.ம.மு குடும்பத்தவரும் திஸாவெவ தொடக்கம் ஆமன்ன ரத்மலை வரை ஆயிரக்கணக்கான நிலப்பரப்புகளுக்கு உரித்துடையவர்களாய் இருந்தார்கள்.

சே.கா. குடும்பத்தவர்கள் வியாபாரிகள். கேரளா காட்டு பாவா ஆட்கள் ஏற்றுமதி இறக்குமதியில் ஈடுபட்டிருந்தனர்.... ஒரு வரலாற்றுண்மையை சொல்லப்போனா கி.பி 1882ஆம் ஆண்டுக்கு முன்னர் அனுராதபுர இராச்சியத்துக்கு உட்பட்ட நிலப்பரப்புகள் எங்களது மூதாதையரின் ஆதிக்கத்திலதான் இருந்திருக்கு. 1957-1965 காலப் பகுதிகளில் தான் அனுராதபுரம் புதிய நகர அபிவிருத்தி, புனித பகுதி ஒதுக்கம் போன்ற திட்டங்களுக்காக முஸ்லிம்களின் பெருமளவு நிலங்கள் தேசியமயமாக்கப்பட்டன. அவர்கள் தூர இடங்களுக்கு குடியேற்றப்பட்டனர்.

சில குடும்பங்கள் ஏட்டுப் பள்ளம், உடமளுவ, இசுறுமுனிய, திசாவெவ போன்ற இடங்களிலிருந்து புதிய நகருக்குக் குடியேறின. இதனால் புராதன முஸ்லிம் கிராமங்கள் அழிந்து போயின.

புதிய நகரை அமைப்பதில் பெருமளவு இந்தியாவிலிருந்து வந்து குடியேறிய முஸ்லிம்களின் பங்களிப்பே முற்று முழுதாக இருந்தது. ஏனெனில் நூற்றுக்கணக்கான முஸ்லிம் கிராமங் களைக் கொண்டிருந்தது அனுராதபுரம்.

சந்தர்ப்பங்கள் வரும் போதெல்லாம் ஹலீம்தீன் முன்வைத்த வரலாற்றுத் தகவல்களை அனைத்து கிராமவாசிகளின் உள்ளங் களிலும் ஆழப்பதியச் செய்ய வேண்டும் என்று தீர்மானித்தனர்.

சமது விதானை தொடக்கம் சவால், ஹலீம்தீன், யாசீன், சேகு, அன்சார், கமர், அபூதாலிப், முபாறக்.... போன்ற சகல இளைஞர் களின் ஒருங்கிணைந்த செயற்பாடு மிகவும் உறுதியாகக் கிளர்ந் தெழுந்தது.

இதுவரைக்கும் அவர்கள் வரித்துக் கொண்ட திட்டங்கள் வெறும் அரைகுறையாக அமுலாக்கப்பட்டன என்றும் கூறுவதற் கில்லை. ஆகஸ்ட் பரீட்சை ஒரு காரணமாக அமைந்திருந்தாலும், கிராம அபிவிருத்தியை பகைப்புலமாகக் கொண்ட திட்டங்கள், நடைமுறைப்படுத்துவதற்கு முன்னரே அவை கிராமத்திலும் அயலிலும் எவ்வளவு தூரம் வெற்றியளிக்கின்றன அல்லது செல் வாக்குப் பெறுகின்றன. கிராமவாசிகளின் மத்தியில் எவ்வகை யான கருத்துக்கள் தொனிக்கின்றன. அல்லது தாம் எடுக்கும் முடிவுகள் சிறுபிள்ளைத்தனமானவையா? இப்படியான சாதக பாதக கருத்துக்களை ஊன்றி அவதானிக்க அந்த இடைவெளி நல்ல வாய்ப்பாக இருந்தது.

அந்த வகையில் ஹலீம்தீன் குழுவினர் கொண்டுவரும் பிரயத் தனங்கள் தொண்ணூற்றைந்து சதவீத ஆதரவையும் ஒத்துழைப் பையுமே பெற்றன. குளக்காட்டுப் பிரதேசம் ஒரு சிறப்பு உதாரணம். இதில் கிராமத்தின் ஒவ்வொரு பிரதான குடிமகனும் இலாபம் பெற வேண்டும் என்னும் உயரிய நோக்கம் ஒன்றுக்கே ஹலீம்தீன் குழுவினரின் கொள்கைகளுக்கும், செயற்திட்டங்களுக்கும் பேரா தரவு பெருகி வழிந்தது. அவர்களும் முனைப்புப் பெற்றனர்.

# பத்து

'பிரதேச விவசாயிகள் முன்னேற்றச் சங்கம்' அங்குரார்ப் பணம் செய்வதற்கு முன் அதன் புனிதமான நோக்கங்கள் பற்றி துண்டுப் பிரசுரம், அங்கத்துவப்படிவம் முதலியன 'கொம்பி யூட்டர்' மூலம் மிகக் கவர்ச்சியாக தயாரித்து அவசரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமத்து நிர்வாக சபைகளுக்கும், தனிப் பட்டவர்களுக்கும் அஞ்சலில் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

அறுவடைக்குப் பின் கிரிபண்டா ஒரு புத்தம் புதிய 'டொயோ ட்டா' வேன் வாங்கக்கூடிய அளவுக்கு, அந்த ஆண்டு 'பட்ஜெட் டில்' ஒரு சிறு சமாளிப்பு, எவரையும் பாதிக்காத முறையில் பிரதேசத்தைச் சுற்றி கிராமம் கிராமமாக பிரச்சாரம் கனல் பறந்து கொண்டிருந்தது. அமரதாசவின் நண்பர்களும், ஹலீம்தீன் நண்பர்களும் முழுமூச்சாய் செயற்பட்டனர். தேர்தல் காலங் களில், கடைசி கட்டத்தில் வாக்கு வேட்டைக்கு ஆலாய்ப் பறப் பது போல் இருந்தது அது. ஆனால் உண்மையான புரிந்துணர் வுடன் ஒவ்வொரு கிராமத்திலும் அங்கத்தவர்கள் சேர்ந்த வண்ண மிருந்தனர். கணிசமான அளவு அங்கத்தவர்கள் அணி திரண்ட னர். அது ஒரு புறமிருக்க.....

கிராமத்தில் குளக்காட்டுப் பிரதேச, விவசாயம் தொடர்பாக, விவசாயக் கழகத்திற்கு, நூற்றுக்கு எழுபத்தைந்து வீதமான பங்குப்பணம் சேர்ந்து விட்டிருந்தது.

காடு வெட்டும் படலம்மும்முரமாக இயங்கிக் கொண்டிருந் ததால்... அபூதாலிப் விவசாயிகள் கழகத்தின் பொருளாளன்

என்ற முறையில் அவ்வப்போது சேரும் தொகைகளுக்கு பற்றுச் சீட்டு கொடுத்து பணத்தை உடனே கிராமிய வங்கியில் வைப்பு செய்வதிலும், செலவுகளுக்கு தேவையான பணத்தை மீட்ப திலும் மிகக் கவனமாய் இயங்கிக் கொண்டிருந்தான். பெரும் பாலும் காடு வெட்டும் வேலை முடியுந்தறுவாயில் இருந்தது. சிங்கள முஸ்லிம் கிராமவாசிகள் இப்பொழுது குளத்தைத் தற்காலிகமாகத் திருத்தி, உழவுக்குத் தேவையான நீரை சேர்ப்ப தற்கு ஆயத்தமானார்கள்.

அரசாங்கம் செய்வதாயிருந்தால் அந்தக் குளத்தை நிரந்தர மாகக் கட்டியெழுப்ப வேண்டும். ஆனால் குளக்காட்டுப் பிரதேசத்திற்கு ஒரு மாய்மைப் பிரச்சினை தொக்கி நிற்பதால் இப்போதே ஒன்றும் நிரந்தரமாகச் செய்வதற்கில்லை.

''..... நமட முன்னவங்க இங்க சேன கொத்தி அல்லாட்டி வயல் வேல செஞ்சதற்கு தடயங்கள் கிடக்கா.....?'' என்று ஊரவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு விடை பகர்வதற்கு இனித் தான் ஆதாரங்கள் தேட வேண்டும். அப்படியே இருந்தாலும் உரிமை கோர முடியாது. அரசாங்கத்திற்குரிய காடு. அரசே காணி இல்லாதவர்களுக்கு பகிர்ந்தளிப்பதுதான் நியாயமானது.

ஹலீம்தீன், அமரதாச குழுவினர் இப்படித்தான் யோசித்தனர்.

வானம் பார்த்த பூமிக்கு ஆதரவாக கார்மேகங்கள் அவ்வப் போது வட்டமிட்டு மாரிகாலத்தின் வருகைக்கு ''இதோ நான் வரப்போகிறேன். நான் தயார். நீங்கள் தயாரா.....? விவசாயப் பெருமக்களே, உங்கள் வயல்களுக்குப் பொழியட்டுமா....? உங்கள் விவசாய முயற்சிகள் வெல்லுமா.....? வெல்க'' என்று கட்டியம் கூறின.

சில நாட்களுக்குப் பிறகு ஏதோ ஒரு பிரச்சினை என்று கேள்விப்பட்டதும் அன்று காலையிலேயே ஹலீம்தீனும் யாசீ னும் அவசரமாக அமரதாசவைச் சந்திக்கப் போயிருந்தார்கள்.

மகன் இப்படி பரபரப்புடன் சென்றது அப்துல் மஜீதுக்கும் யோசனையாய் இருந்தது.

நண்பகல் பதினொரு மணியளவில் கிரிபண்டாவின் வேன் வந்து பள்ளி வாசலுக்கு அருகில் நின்றது.

கிராமசேவகர், கிரிபண்டா, அமரதாச, ஹலீம்தீன், யாசீன் முதலியோர் இறங்கி வருவதைக் கண்டதும் அப்துல் மஜீத் பரபரப்படைந்தார். 'எங்கேயோ ஏதோ ஒரு பிழை நடந்திருக்கு...' என்று அவரது உள்மனம் குறுகுறுத்தது.

எல்லாரும் வந்து இருக்கை கொண்டனர். சற்றுநேரத்தில் சமதுவும், சவாலும் வந்து சேர்ந்தனர். கமரும், சேகுவும் வந்து கொண்டிருந்தனர்.

கிராமசேவகர் எல்லார் முன்னிலையிலும் குளக்காட்டுப் பிரதேசம் சம்பந்தமாக தமக்கு கிடைத்துள்ள 'பெட்டிசனின்' உள்ளடக்கத்தை எடுத்துரைத்தார்.

'நாம் நமது எல்லைப் பிரச்சினையை ஒதுக்கிவிட்டு, ஒருங்கிணைந்து, கிராம சேவகரின் அனுமதியைப் பெற்று, நாமே குளக்காட்டைப் பிரித்து, காடு வெட்டி முடித்திருக்கும் இவ் வேளையில் இப்படி ஒரு பெட்டிசனை எழுதியது யாராயிருக்கலாம்? என்பதே அனைவரது மூளையையும் குடைந்து கொண்டிருந்தது....

சிங்கள மொழியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ள அம்முறைப்பாட்டை ஒரு முறை கிராமசேவகர் வாசித்துக்காட்டினார்.

அவ்வுள்ளடக்கத்தின் சுருக்கம் இதுதான்-

குளக்காட்டுப் பிரதேசம் சிங்கள கிராமத்திற்குரியது.

அங்கு முஸ்லிம் கிராமவாசிகளுக்கு காடுவெட்டவோ, விவசாயம் செய்யவோ எவ்வித உரிமையும் இல்லை.

அவ்வாறு செய்ய முனைந்தால் அது தண்டனைக்குரிய பாரதூரமான குற்றம்.

கிராமசேவகர் உடனடியாக விசாரணை செய்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்புறம் பொலிசில் முறைப்பாடு பதிந்து ஆதாரங்களுடன் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும்.

முஸ்லிம் கிராமவாசிகள் சில மூத்த சிங்களவர்களை தமது கைக்குள் இணைத்து, குளக்காட்டுப் பிரதேசத்தை சரிசமமாகப் பகிர்ந்து கொண்டு, காடுவெட்டி விவசாயம் செய்ய எத்தனிப்புகள் நடக்கின்றன. இது முழு சிங்கள கிராமத்தினதும் ஏகோபித்த விருப்பத்தோடு அல்ல. இதில் ஏதோ ஒரு சூழ்ச்சி இருக்கிறது.

எல்லைகளை நிர்ணயிக்க வேண்டுமானால் நில அளவையாளர்களைக் கொண்டு, முழு குளக்காட்டுப் பிரதேசத்தையும் அளந்து ஒரு நிரந்தரமான எல்லையை நிர்ணயிக்க வேண்டியது அவசியம். அதைவிட்டு வெறுமனே காடு முழுவதையும் சமமாகப் பிரித்துக் கொள்வது என்பது சூழ்ச்சிகரமான செயல்.

தற்பொழுது தாமே சமமாகப் பிரித்துக் கொண்டதை அப்படியே விட்டு விட்டால் காலப்போக்கில், அல்லது அடுத்தடுத்த தலைமுறைகளில் அவையே நிரந்தரமான எல்லை நிர்ணயமாக நிலைத்து விடும்.

தற்போது கிராம சேவகராயிருக்கும் தாங்களும், தங்களுக்கு முன் இருந்தவரும் அவருக்கு முன் இருந்தவரும் குளக்காட்டு எல்லையை அளந்து, உத்தியோக பூர்வமாக, ஒரு நிரந்தர 'கொங்கிறீட்' கல்லை அடையாளமாக நடுவதற்கு பின்னிற்பதன் மர்மம் என்னவோ.''

அந்தப் பெட்டிசனில் அதற்கு மேல் எழுதியிருப்பவை அனைத்தும் அபாண்டங்கள். அவற்றை பகிரங்கமாக வாசிக்க கிராம சேவகர் விரும்பவில்லை.

இறுதியில் கிராம சேவகர்கள் மீதும் குற்றம் காணும் தோரணை இருப்பதால் அவர் உள்ளூர உசாராகிவிட்டிருந்தார்.

சற்றுநேரம் ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. மௌனம் கணங்களாய் நீடித்துக் கொண்டிருந்ததை அவரே உடைத்து,

ஹலீம்தீனின் முதுகுகளில் தட்டிக்கொடுத்து, தைரியமூட்டும் வார்த்தைகளை உதிர்ந்தார்.

''நீங்கள் ஒன்றுக்கும் யோசிக்காதீர்கள். நேர்மையும் சத்திய மும் எங்கள் பக்கம் இருக்கிறது...அத்துடன் என்னைப் பொறுத்த வரையில் ஓரளவு துணிச்சலும் இருக்கிறது. இந்தமாதிரி மொட் டைக் கடதாசிகளுக்கு நான் பயப்படப் போவதில்லை. அப்படி இல்லாவிட்டால் நான் இந்தத் தொழிலுக்கு வந்திருக்க மாட் டேன். 'ராஜகாரிய' சரியாக செய்ய வேண்டும். நான் இன்று தொடக்கம் இது குறித்து நடவடிக்கை எடுப்பேன். ஆனால் நீங்கள் எல்லாரும் குழம்பிவிடாமல் ஓர் உதவி செய்யவேண் டும்..... அதுதான் நீங்கள் என்னுடன் ஒத்துழைக்க வேண்டும். கொஞ்சம் பொறுமையாக.... அது உங்களால் முடியுமா...? கேள்விக்குறியோடு நின்றார் கிராம சேவகர்.

''... ஓ ... நாங்க தயார். என்ன செய்ய வேணும்...?'' அப்துல் மஜீத் குறுக்கிட்டார்.

எல்லாரும் காதுகளை கூர்மையாக்கிக் கொண்டனர்.

இதில் அடிநாதமாக ஒலிப்பது எல்லைப் பிரச்சினை. உரிய விதத்தில் தீர்த்து அடையாளம் போட்டு விட்டால் எல்லாவற் றிற்கும் விடிவு பிறந்து விடும். நீங்களும் எனது அனுமதியைப் பெற்றுத்தான் பெருந்தொகையான பணத்தைப் போட்டு காடு வெட்டியிருக்கிறீர்கள். நானும் அனுமதி அளித்தது சும்மா.... இல்ல... தகுந்த ஆதாரத்துடன்தான்.... ஆக நீங்கள் பயப்படத் தேவையில்லை. ஆனால் நீங்கள் காடு வெட்டுவதை நாளை தொடக்கம் நான் சொல்லும் வரைக்கும் நிப்பாட்டி வைத்தால்... இதன் பின்னணியை நன்கு படித்து ஆராய்ந்து, சுமுகமான முறையில் குளக்காட்டு பிரதேச எல்லையை அடையாளம் கண்டு நிரந்தரமாக கொங்கிறீட் தூண்களை போட்டு விடுவேன். எக்காலத்திலும் பிரச்சினை வராதபடிக்கு நீங்கள் செலவழித்த பணத்திற்கும் நஷ்ட ஈடுகேட்டு வழக்குத் தொடரவும், நானே

பொறுப்பு. நீங்கள் பட்ட சிரமம் இலேசானதல்ல....... ஆனால் அப்படி ஒன்றும் வராது.... நீங்கள் காட்டை பிரித்திருக்கும் முறையும் நூற்றுக்கு நூறு சரி.... உங்கள் அனுபவத்தில் ஒரு துளியேனும் நில அளவையாளர்களுக்கு இல்லை... ஆகவே தான் நான் சொல்றன் நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்க வேணாம்.... உங்கள் பொறுமையும் ஒத்துழைப்பும் தான் தேவை....

''எங்கட பெட்டிசன் வேலை செய்யுது.....'' என்று அவர்கள் ஆனந்தப் பட்டுக் கொண்டிருக்கட்டும். அதற்கு நாம் கொஞ்சம் விட்டுக் கொடுத்து உண்மையை நிலை நாட்டிவிட்டால் அந்த உண்மை பெட்டிசன்காரர்களை சுட்டெரித்துவிடும்....''

உணர்ச்சிவசப்பட்ட ஒரு நீண்ட பிரசங்கத்தையே நிகழ்த்தி விட்டு கிராமசேவகர், புறப்படுவதற்காக நாற்காலியை விட்டு எழுந்தவர், ஹலீமைப் பார்த்து ''ஹலீம்தீன் இது ஒரு அலுவலக விடயம். இதைத் தீர்க்கலாம். இதற்காக ஊரைக் கூட்டி, கிராமம் முழுக்க எல்லாருடனும் கலந்து பேச வேண்டிய அவசியம் இல்ல... அப்படிச் செய்வதால் விவசாயிகள் வீணாக உணர்ச்சி வசப்பட்டு மீண்டும் குழப்பங்களை ஏற்படுத்துவதாக அமையும். பெட்டிசன்காரர்களின் நோக்கமும் அதுவாகத்தானிருக்கும்... சில விஷயங்களை 'டிஸ்கஸ்' பண்ணக் கூடாது. சரியாக ஒரு வாரத்தில் நீங்களும் அமரதாசவும், பின்னேரத்தில் காரியாலயத்திற்கு வாருங்கள்.

கிராமசேவகருடன் கிரிபண்டா, அமரதாச, சமதுவிதானை யாசீன் முதலியோரை ஏற்றிக் கொண்டு 'டொயோட்டா' வேன் மிக அவசரமாகப் புறப்பட்டது.

# பதினொன்று

மறுநாள் மாலை சிங்கள கிராமத்து நிர்வாகிகள் கிரிபண்டா வின் தலைமையில் அப்துல் மஜீதின் இல்லத்திற்கு வந்திருந்தனர்.

''நாங்க வயலுக்கு அடிக்கிற கிருமிநாசினி போலத்தான் இந்த 'பெட்டிசன்' இரு கிராமங்களுக்கு இடையில மலர்ந்துள்ள புரிந்து ணர்வையும் மனித நேயத்தையும் முளையிலேயே கொன்று போடவே இந்தப் பெட்டிசன எழுதியிருக்கிறாக.''

கிரிபண்டா தன் கருத்தை முன் வைத்தான். அமர, பிங்காமி, விக்டர் போன்றோரும் வேறு வேறு கோணங்களிலிருந்து தமது அபிப்பிராயங்களை சமர்ப்பித்து இந்த அற்பத்தனமான செயலி னால் எவரும் மன ஆதங்கம் கொள்ளத் தேவையில்லை என்று வலியுறுத்தினர்.

''குணத்திலக்கா சரிப்பட்டு வர மாட்டான் என்று சமரசிங்கா இப்பொழுது உக்குராலவை பொக்கட்டுக்குள் போட்டு வைத்தி ருக்கிறான். அவனும் ஓரளவு படித்தவன் தான். ஆனால் அவர்கள் தான் எழுதினார்கள் என்று கூறுவதற்கும் நாம் இன்னும் ஆராய வேண்டியிருக்கு.''

''உக்குராலவிடம் துவேஷம் கிடையாது. ஆனால், அது சாய்ற பக்கம் சாய்ற மாடு. தனக்கென ஒரு சிந்தனைத்தெளிவு இல்லை. சமரசிங்காவுக்கு எப்படியும் ஒரு 'சப்போர்ட்' வேணும் அவ்வளவுதான். இந்தப் பெட்டிசனுக்கு ஒரு சட்டத்தரணியின் ஆலோசனை பெறப்பட்டிருக்கலாம். எங்கட கிராமங்களில் சட்டத்தரணிகள் இன்னும் தோன்றவில்லை. அனுராதபுர நகரத்

திற்குப் போயிருக்கலாம். காலப்போக்கில் எல்லாம் வெளிச்சத் திற்கு வரத்தான் போகின்றன. கிராம சேவகர் சொன்ன மாதிரி இவ்விடயமாக நாம கண்ட கண்ட எடங்களில கூட்டம் கூடி ஆராய்ந்து பகிரங்கப்படுத்திக் கொண்டிருக்கப்படா. வெளியில் அக்கறையில்லாதவங்க போல காட்டிக் கொண்டு உள்ளுக்கு நாம அதிக அக்கறையுடன் அணுகி இப்பிரச்சினையிலிருந்து நாம விடுவித்துக் கொள்ள வேணும்.....''

இப்படியாக அவர்களுடைய கருத்துக்கள் தொனித்தன.

''யார் எழுதின எண்டு மண்டையப் போட்டு உடைக்கத் தேவையில்லை. இதன் மூலம் நாம் எம்மைத் திருத்திக் கொள்ள வேண்டியிருக்கு.....''

''அது சரி.... அந்த நிலையிலிருந்து தான் நாம பரிசீலனை செய்ய வேணும்''

''எதற்கும் நாம உறுதியாக இருக்க வேணும்..... நாகரிக மாகப் பழிவாங்க பெட்டிசன் ஒரு நல்ல ஆயுதம்.''

''ஒரு சாதாரண பெட்டிசனுக்காக நாம பின் நிற்கவோ.... எடுத்த ஒருமைப்பாட்டு முயற்சிகளில் தளர்ந்து விடவோ கூடாது..... ''நீண்ட நேரம் அளவளாவிய சிங்கள கிராமவாசிகள் புறப்படுவதற்கு முன் கிரிபண்டா கூறினான்;

''இப்படியான பெட்டிசன்களுக்கு அடிமைப்பட வேண் டாம். இன்று எங்கு பார்த்தாலும் சின்னத்தனங்கள் கூடி, கூடிப் போய் பெருந்தன்மைகளை மூடி மறைத்து விட்டன. தோண்டித் தோண்டிப் பார்க்கும் அளவுக்கு பெருந்தன்மையான செயல்கள் வயல்களுக்கு அடியில் புதைபொருளாகிக் கொண்டிருக்கு.''

என்று கிரிபண்டா அனுபவ வாயிலாக கற்று, கூறியது 'பெருந் தன்மைக்கு' ஒரு வரைவிலக்கணம் போல் அமைந்தது.

கிரிபண்டாவின் வேன் புறப்பட்டுச் சென்று கொண்டிருந் ததைப் பலரும் விநோதமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சிறிது நேர இடைவெளிக்குப் பின் மீண்டும் உரையாடல்கள் தொடர்ந்தன;

யாசீன் கூறினான்-

''கிராம சேவகர் பண்டார மிக நல்ல மனிதர். மனித நேயமும் சேவை மனப்பான்மையும் உள்ள ஆள். முந்தி உள்ளவர்களிலும் பார்க்க எவ்வளவோ நேர்மையாக வேலை செய்றவர்.....''

''சென்ற வருட இறுதியில் தான் மாற்றலாகி வந்தவர். மலைநாடு கொத்மலையைச் சேர்ந்தவராம்...'' என்று அறிமுகப் படுத்தினான் ஹலீம்தீன்.

அவர் பதவியேற்ற ஓரிரு மாதங்களில் நாம நம்மட மாய்மை பிரச்சினையை எழுத்துமூலம் கொடுத்திருந்தா கரியம், இந்த நேரம் ஒரு சுமுகமான முடிவு கிடைத்திருக்கும். நாமதான் விட்டு விட்டோம்....''

''இப்பவும் ஒண்டும் மோசம் போக இல்ல.... ஒரு கடித த்தை... அனுராதபுரம் போய் கொம்பியூட்டர் செய்து கொண்டு வந்து கொடுத்து.... கொஞ்ச கால அவகாசம் கொடுத்தா.... எல்லாம் சரியா வரும்.

ஹலீம்தீனின் குரலில் உறுதியான நம்பிக்கை தொனித்தது.

நடைமுறையிலுள்ள அல்லது ஆளும் கட்சி அல்லது அரசு வகுக்கும் சட்டதிட்டங்களை கிராம மட்டத்தில் அமுலாக்கவும், மக்கள் மத்தியில் சமாதானத்தை நிலை நாட்டவும் அயராது பாடுபடுபவர் கிராம சேவகர் பண்டார.

''நாம கிராம சேவகரின் அனுமதிக் கடிதத்துடன்தான் ஒப்பந் தம் எழுதி கைச்சாத்திட்டிருக்கிறோம்.... இது பெட்டிசன் காரர்களுக்குத் தெரியாது....'' என்றான் யாசீன்.

ஹலீம்தீன் ஒரு யோசனை கூறினான்.

''நாம அந்த ஒப்பந்தத்தோட இணைத்துக் கொள்ள வேண்டி... நாமும் ஓர் ஆழமான கடிதத்தை எழுதி..... தேவை

ஏற்பட்டா ஒரு சட்டத்தரணியின் ஆலோசனையோட தயாரித்து இரகசியமாக ஒவ்வொரு பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட கிராமவாசிகளிடமிருந்து கையொப்பத்தையும் எடுத்து விட வேண்டும்....

''அப்படிச் செய்வதால... முஸ்லிம்கள் ஒரு சில சிங்கள கிராம வாசிகளை கைக்குள் போட்டுக் கொண்டார்கள் என்ற கருத்தை உடைத்தெறிந்து விடலாம்'' - ... என்றான் சமது விதானை.

''வேறு என்ன திருத்திக் கொள்ள வேண்டியிருக்கு.....?'' என்று கேட்டான் கமர்.

''சேவயர கொண்டு அளந்து நிரந்தரமாக எல்லைகளுக்கு கொங்கிறீட் தூண்கள் போட்டுவிட்டா வேறு பிரச்சினைகள் ஒன்றும் இல்ல....'' என்றான் சேகு.

''அதுக்குத்தான் கிராமசேவகர் உந்தப்பட்டுள்ளார்....''

''...அத்துடன் அனைத்து சிங்கள கிராமவாசிகளின் ஏகோபித்த கருத்தாக அது இருக்கும்'' என்றான் யாசீன்.

''..... ஆக நிரந்தர மாய்மையும் கையொப்ப வேட்டையும் வெற்றிகரமாக முடிந்து விட்டா எல்லாம் சரி..... ஆதாரங்கள்.... தவிர அந்தப் பெரிய பெட்டிசனில் வேறு ஒன்றும் இல்ல....'' என்றான் அன்சார்டீன்.

'''எல்லாம் நன்மைக்குத்தான் நடக்குது, குளக்காட்டு பிரதேசத்திற்கு ஒரு நிரந்தர மாய்மைய போட வேணும் என்று சொல்லிக் கொண்டிருப்பதில் பிரயோசனம் இல்லை. எந்த நேரமும் கிராமசேவகரோட இருக்கணும்.... அவருக்கு உதவி செய்யணும்..... எப்படியும் போட்டு விட்டால் அது நிரந்தர நிம்மதி.... இது விசயமா வரும் செலவுகளுக்கு நான் பொறுப் பேற்கிறன்....'' என்றார் அஹ்மதுலெப்பை.

மற்றுமொரு சந்தேகம் எழுந்தது.

'காடு வெட்டி இரு பகுதியாரும் துப்பரவாக வெளிசாக்கிப்

போட்டாங்க. இப்ப பிரிக்கிற நேரத்தில, வெளிசாக்கின பகுதி அவர்களுக்கோ.... அவகட பகுதி எங்களுக்கோ வந்தாகரியம் என்ன செய்ற.....?''

''செலவுப்பணம், செலவுப்பணம்.'' உறுதியாக சொல்லி விட்டார் பண்டார.

அன்று இரவு ஒன்பது மணி தொடக்கம் பன்னிரண்டு மணி வரைக்கும்,சகல கிராமவாசிகளும் இல்லங்களில் இருக்கும் நேரத்தில் ஒப்பந்தத்திற்கான கையொப்ப வேட்டை வெற்றி கரமாக நடந்து முடிந்தது. இச்சந்தர்ப்பத்தில் சேகு தனது அபி மான கவிஞரின் இரண்டடிகளை நினைவு கூர்ந்தான்:

''.....இரவில் கிடைத்தது இன்னும் விடியவில்லை....''

''அப்படிச் சொல்லக் கூடாது'' என்றான் அன்சார்டீன்.

''அப்ப எப்படிச் சொல்ல வேணும்.....?''

''இரவில் கிடைத்தது, விரைவில் விடியும்......'' என்றான் அன்சார்டீன்.

எல்லாரும் சிரித்து ரசித்தனர்.

''அட.....சேகுவுக்கு எதிராக மற்றுமொரு புதுக்கவிஞரா?'' என்று அவனுக்குக் கோபமூட்டினர் நண்பர்கள்.

சிங்கள கிராமத்திலும் கையொப்ப வேட்டை வேறு விதமாக எடுப்பதாக உறுதியளித்துச் சென்றிருந்தனர்.

திட்டமிட்டிருந்தபடி அன்று ஹலீம்தீனும் அமரதாசவும் கிராமசேவகர் பண்டாரவைச் சந்திக்கச் சென்றிருந்தனர். ஆனால் அவர் தனது அலுவலகத்தில் இருக்கவில்லை.

என்றாலும் அவர்களுக்காக ஒரு கடிதம் இருந்தது. ''மறு அறிவித்தல் வரும் வரைக்கும் குளக்காட்டுப் பிரதேசத்தில் எவரும் காடு வெட்டச் செல்ல வேண்டாம்......'' என்று மட்டுந் தான் அந்த நிருபத்தில் உருண்டையான சிங்கள எழுத்துக்களில் அழகாக எழுதப்பட்டிருந்தது.

இரு தஸாப்தங்களுக்கு மேலாக கிராம சேவகர் எவரும் முக்கியத்துவம் கொடுக்காத, கொடுக்க விரும்பாத, அல்லது பாராமுகமாக இருந்துவிட்ட இப்பிரச்சினையை, பண்டார மிக அக்கறையுடன் பரிசீலனை செய்கிறார் என்றால் அது அவரது மேலான கடமையுணர்வுதான். சாக்குப் போக்குகளைச் சொல்லி சும்மா தட்டிக் கழித்துவிட்டு, சிங்கள முஸ்லிம் கிராமங்களுக் கிடையில் உள்ள நட்புறவுக்கு குந்தகம் விளைவிக்க அவர் கால்கோலாக இருந்து விடக்கூடாது என்று மனமாற விரும்புகிறார். தனிப்பட்ட முறையில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதே அவரது இலட்சியம்.

''எப்படியும், கிராமசேவகர் மாய்மை விடயமாகத்தான் அனுராதபுரம் சென்றிருக்க வேணும்'' என்று ஹலீதீனும் அமரவும் ஊகித்துக் கொண்டனர்.

''அஹ்மதுலெப்பை சொல்ற மாதிரி நாங்க இருவருமே இவ்விடயத்தில் அவருடன் ஓடியாடி உதவினால் விசயம் சுருக்கா முடியலாந்தானே.... '' என்றான் ஹலீம்.

''கிராம சேவகரையே கேட்டுப் பாப்பம்.....'' அமரதாசவுக்கும் அது விருப்பம்தான்..... ஆனால் இருவருமே போக வேண்டும். இல்லாவிட்டால் மீண்டும் வீண் கட்டுக் கதைகள்.... கசிலிகள் உண்டாகி பெட்டிசன்களாக உருவெடுக்கும்.''

அன்று ஹலீம்தீன் கிராமத்திற்குத் திரும்பியதும் நண்பர்கள் சூழ்ந்து கொண்டனர்.

'கிராம சேவகரை சந்திக்கப் போன விசயம் என்னவாம்...?'' என்னும் கேள்விக் குறிதான் அவர்களது முகங்களில் வழிந்தது. அது கேள்விச் சரமாக ஒலி வடிவம் பெறுவதற்கு முன் அவன் அவர்களுக்குச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு

''இன்றைய புரோகிராம்... தெரியுந்தானே?'' என்று வினவினான்.

''என்ன...?'' ''என்ன....?'' வென்று எல்லாரும் விழித்தனர்.

''நான் நினச்சது சரி..... இந்தப் பெட்டிசன் வந்து எல்லாரையும் குழப்பிக் கிடக்கு..... சரி..... சரி.... அந்திக்கு எல்லாரும் வாங்க... வூட்ட வாங்க... புதிய அலுவலகத் திறப்பு... மறந்துட்டீங்களா.....?

''அலுவலகத்தையே மறந்துட்டீங்க.... இனி நான் என்ன. சொல்லக்கிடக்கு''

எல்லாருக்கும் அழைப்பு விடுத்துவிட்டு, ஹலீம்தீன் வீட்டுக்கு நடந்தான்.

அவன் மறைந்த பின் யாசீன் கூறினான்.

''பாத்தீங்களா... நானும் மறந்து போனன்... அசம்பாவிதமாக... அல்லது அசாதாரணமாக ஒன்டு நடந்துவிட்டா அதிலேயே நின்று விடுகிறோம்... அடுத்த விசயத்தை நாங்கள் மறந்துவிடுகிறோம். திட்டமிட்டு வேலை செய்ய நாங்கள் இன்னும் பயிற்றப்பட வில்லை என்பதையே இது காட்டுகிறது...''

பள்ளிவாசலிலிருந்து கிட்டத்தட்ட நூறடி தூரத்தில் ஹலீம்தீன் இல்லத்திற்குச் செல்லும் பாதை சிரமதானம் மூலம் அகலமாக்கப்பட்டு சிரமமின்றி வாகனப் போக்குவரத்திற்கு அமைக்கப்பட்டிருந்தது. கொங்கிறீற் கற்களும் ஆற்றுமணலும் கலந்து பதித்து, தார் ஊற்றி, 'ரோலர்' மூலம் உருட்டி செப்பனிட்டு அழகுபடுத்தப்பட்டிருந்தது. பாதை சீராக்கப்பட்டு விட்டதும், அப்துல் மஜீத் இக்கிரிகொல்லாவையிலிருந்து ஒரு டிராக்டர் வண்டி வாங்க திட்டமிட்டுள்ளார்.

வீட்டிலும் சில திருத்த வேலைகள் இடம் பெற்றிருந்தன. வீட்டோடு சேர்ந்தாற்போல் இருபத்தைந்தடி நீளமும் இருபதடி அகலமும் உள்ள ஒரு நீள்சதுர வடிவில், அலுவலக பாவிப்புக்காக புதிய அறை கட்டப்பட்டிருந்தது. அவ்வறையின் ஒரு பக்கச் சுவரோடு நீண்ட சுவர் அலுமாரி உருவாக்கப்பட்டிருந்தது. நண்பர்களின் நூலகத்திற்காக.

இருபதுபேர் தாராளமாக இருந்து கருத்தரங்கு நடாத்த வசதி யாக தளபாடங்களும் வந்து சேர்ந்தன. சுவரில் பல பெரியார் களின் படங்கள். சித்திலெப்பை, டீ.பி.ஜாயா, சி.டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர, டாக்டர் பதியுதீன் மஹ்மூத் என்று. கிராமத் தின் வரைபட மொன்றும் பெரிதாகப் போடப்பட்டிருந்தது.

வீட்டின் மறுகரையில் இரும்புக் கம்பித் தூண்கள் தட்டி, தகரத்தால் கூரை போடப்பட்டிருந்தது. கொண்டுவரப்படும் புதியடிராக்டர் வண்டியின் உறைவிடமே அது.....

இரு தினங்களுக்கு முன்புதான் அப்துல் மஜீதின் 'மௌலூத் மஜ்லிஸும்' விருந்துபசாரமும் இடம் பெற்றிருந்தன.

வழக்கம் போல் வெள்ளாமை வெட்டி கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்ததும் ஊரவர்கள் அனைவருக்கும் அப்துல் மஜீத் அன்புசால் அழைப்பு விடுப்பார்.

இன்று மாலை ஹலீம்தீன் தனது புதிய அலுவலக அறை திறப்பு என்ற ரீதியில் நண்பர்களுக்கு ஒரு விசேட தேநீர் விருந்து பசாரம் ஏற்பாடு செய்திருந்தான்.

அவனது தோழமைக்குரிய அனைத்து நண்பர்களும் வந்திருந் தனர்.

சிங்கள கிராமத்திலிருந்து அமரதாச நண்பர்களும், விஷேட மாக பியசீலியும் யசவத்தியும் சமுகமளித்திருந்தார்கள்.

''கிராமவாசிகளின் குறைபாடுகளை கவனிப்பதற்காக இவ் வலுவலகம் இயங்கும்....'' என்று ஹலீம்தீன் எளிமையாக எடுத்துரைத்தான். அனைவரும் வாழ்த்தினர். 'புதிய அலுவல கத்தினூடாக புதிய பாதை....' என்று பாராட்டினர்.

அப்துல் மஜீத் தம்பதிகளுக்கு சிங்கள கிராமத்திலிருந்து பெண்பிள்ளைகள் விஜயம் செய்தது பெரிதும் உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் அளித்தது. ஹலீம்தீனின் தங்கை ஜெஸ்மின் அவர்களை ஓடியாடி ஆர்வத்துடன் கவனித்து, அவர்களுட னேயே இருந்தாள்.

விருந்துபசாரத்திற்கு மத்தியில் ஒரு கலந்துரையாடல் இடம் பெற்றது.

சிங்கள கிராமத்தில் குளக்காட்டுப் பிரதேச எல்லைப் பிரச்சினை தொடர்பாகவும் ஒப்பந்த அடிப்படையில் காடு வெட்டி விவசாயம் செய்யும் தீர்மானத்திற்கு ஆதரவாகவும் நடாத்திய கையொப்ப வேட்டை பெரு வெற்றியளித்துள்ளது என்னும் புதிய தகவலை அமரதாச வெளியிட்டான்.

முஸ்லிம் கிராமத்தைப் பொறுத்தவரையில் இரண்டே நாட்களில் எல்லாரும் கைச்சாத்திட்டிருந்தனர்.

சந்தேக நபர்களான சமரசிங்க, உக்குரால... ஆகியோர் உட்பட சிலரிடம் கையொப்பம் வாங்க எவரும் செல்லவில்லை. பெட்டிசன்காரர்களுக்கு பக்கபலமாக இருப்பவர்கள் என்று இனங் காணப்பட்டனர். சந்தேகத்தின் பேரில்தான்.

ஆனால் எத்தகைய எதிர்ப்பு தோன்றினாலும் தொண்ணுறு வீதமானோர் கையொப்பமிட்டு தமது உடன்பாட்டை தெளிவாகத் தெரிவித்திருப்பதால் எதுவும் தலை தூக்காது என்பது உறுதியாகி விட்டது.

''இனி கிராமசேவகர் ஒரு நல்ல முடிவுடன் வரும் வரைக்கும், நாம குளக்காட்டு விடயங்களை பிற்போட்டு விட்டு, உடனடியாக 'பிரதேச விவசாயிகள் முன்னேற்றச் சங்கம் அங்குரார்ப்பண விடயமாக கருத்துக்களை தெரிவிக்க வேண்டும்...'' என்று ஹலீம்தீன் வேண்டினான்.

''பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் எல்லா கிராமங்களுக்கும் துண்டுப் பிரசுரங்களும் அங்கத்துவப் பத்திரங்களும் அனுப்பப்பட்டிருக்கின்றனவா...?''

இப்படிப் பொதுவாக ஒரு கேள்வி முன்வைக்கப்பட்டது.

நிச்சயமாக.... பிரமாணங்கள் சட்டதிட்டங்கள் உட்பட எல்லாம், எல்லாக் கிராமங்களுக்கும் தபாலிலும் நேரடியாகவும் அனுப்பப்பட்டு, மிக்க பொறுப்புடன் பத்திரங்கள் நிரப்பப்

பட்டு வந்து சேர்ந்த வண்ணம் இருக்கின்றன.....'' இதை இரு சாராரும் ஒப்புக் கொண்டனர்.

''தற்போது கிராமத்தை நிர்வகிப்பவர்கள் மட்டுந்தானே, பிரதேச விவசாய முன்னேற்றச் சங்கத்தில் அங்கத்தவர்கள் ஆகலாம்?''

''அப்படியொன்றும் இல்ல, விளக்கமாகச் சொல்லப்போனால், ஒவ்வொரு கிராமத்தையும் நிர்வகிப்பவர்களில் இருவர் தெரிவு செய்யப்பட்டு, பிரதேச விவசாயிகள் முன்னேற்றச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு பிரசன்னமாக வேண்டும். அக்கூட்டத்தில் மேற்படி சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டதும் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் வந்தவர்களில் இருந்து கிராமப் பிரதிநிதிகளாகவும் தெரிவு செய்யப்படுவர்.

ஒவ்வொரு பிரதிநிதிக்கும் தன் சார்ந்த கிராமத்தில் பாரிய கடமைகள் உண்டு. விரும்பிய, பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலாரையும் அங்கத்தவராகச் சேர்க்க வேண்டும். பத்திரம் நிரப்பப்பட்டு வருட சந்தாப் பணத்துடன் பொருளாளரிடம் சேர்க்க வேண்டும். அவர் அங்கத்துவ 'கார்ட்' கொடுப்பார்... இனி தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளுக்கென கடமைகளை விளக்கி ஒரு கருத்தரங்கம் நடாத்தப்படும்.

ஹலீம்தீனும் அமரதாசவும் போதிய விளக்கங்கள் அளித்தனர்.

''உழவர்களுக்கு இப்படியொரு சங்கம் தேவையென்று ஆலோசனை வழங்கியவர் யாரென்று உங்களுக்குத் தெரியுமா...?'' இப்படிக் கேட்டான் ஹலீம்தீன்.

''.....?''

''நாவலப்பிட்டியிலிருந்து வந்து எங்கட பள்ளிக் கூடத்தில ஆங்கிலம் படிப்பிச்ச பஹார்டீன் மாஸ்டரை எங்களால் மறக்க முடியாதல்லவா?''

இப்படி ஹலீம்தீன் கேட்டதும் பலரும் தங்கள் ஞாபகங்களை மீட்டினர்.

''ஓம்.... அவரோடதானே முதல் முதல்ல மலைநாட்டுக்கு விஜயம் செய்தோம்...'' என்றான் சேகு.

''அவர்ட வீட்ட தங்கியிருந்துதான் முதல் மனிதனின் பாத அடி பதிந்த பாவாதமலைக்குப் போனோம்....'' - இது அன்சார் தீனின் இனிய நினைவு.

''வர்ணக் கோலங்கள் காட்டி கதிரவன் தன் பொன்னொளியை உலகத்துக்குக் காட்ட வரும் அந்தக் காட்சி எவ்வளவு அற்புதமாக இருந்தது....'' என்று வர்ணித்தான் யாசீன்.

அதற்கிடையில் கமருக்கு, அன்சார்தீன் பிரயோகித்த சொற்றொடரில் ஒரு சந்தேகம் வந்துவிட்டது. அவன் கேட்டான் -

''அது சரி ஹலீம், அன்சார்தீன் முதல் மனிதனின் பாத அடி பதிந்த ... என்று குறிப்பிட்டதற்கு விளக்கம் என்ன...?''

''முஸ்லிம்களின் நம்பிக்கைப்படி உலகத்துக்கு படைக்கப் பட்ட முதல் மனிதன் யார்...?''

''சந்தேகமில்லை, பாவா ஆதம் (அலை) தான்....''

''அந்த முதல் மனிதன் விண்ணுலகிலிருந்து இந்த மலையின் சிகரத்தில் தான் இறங்கினார் என்பது முஸ்லிம்களின் பரம்பரை நம்பிக்கை...

ஆதம் (அலை) அவர்களின் காலடி அடையாளங்களை தரிசிப்பதற்காக அந்தக் காலத்திலிருந்தே அராபியர் இங்கு நெருங்கிய தொடர்பு கொண்டு விஜயம் செய்துள்ளனர். இப்ப நான் அது பற்றி ஆராய முற்படவில்லை.... அந்த மலையின் சிகரத்தில் நாம் உலாவரும் போது தோட்டத் தொழிலாளர்களை சந்தித்தோம். வறுமையோடு பின்னிப் பிணைந்தவர்கள் என்று அறிமுகப்படுத்திய ஆங்கில சேர் சொன்ன வார்த்தைகள் ஞாபகமிருக்கா?'' என்று ஹலீம்தீன் மீண்டும் கேட்டான்.

பதிவாகியிருந்த டேப் ரிகார்டரை தட்டிவிட்டது போல் இருந்தது சேகுவுக்கு, அவன் அப்படியே ஒப்புவித்தான்.

''மலைநாட்டில் தோட்டத் தொழிலாளர்களுக்கு இருப்பது போல் எங்கட பிரதேசங்களில் விவசாய பெருமக்களுக்கென, அவர்களது கிராமங்களை அபிவிருத்தி செய்ய கிராம மக்களின் குறைபாடுகளை ஆராய்ந்து, அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக, பாடுபடுவதற்கு, குரல் கொடுப்பதற்கு ஒரு கூட்டு முயற்சி, அதாவது ஒரு சங்கம் தேவை....'' என்றுதானே குறிப்பிட்டார்.

''மிகச் சரியாக, பரீட்சைக்கு ஆயத்தம் செய்து வைத்திருப்பது போல ஞாபகம் வைத்திருக்கிறாயே. அவருடைய அந்தத் திட்டத்தின்படி தான் நாம் காலம் கடந்து 'பிரதேச விவசாயிகள் முன்னேற்றச் சங்கம்' என ஆரம்பிக்கப் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறோம்....''

எமது சங்கம் தொடர்பாக, நாம் கிராமங்களுக்கு அனுப்பிய விளக்கங்களில் நாம் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம்.

'எமது முக்கிய தேவை ஒன்றை நிறைவேற்றிக் கொள்வதற்காக நாம் எவ்வளவுதான் தனித்தனி நபர்களாக இருந்து முயன்றாலும் தோல்வியையே தழுவிக் கொள்கிறோம். உதிரியாக நின்று குரல் கொடுப்பது செவிடன் காதில் சங்கு ஊதும் முயற்சி தான். ஆனால் விவசாயிகள் முன்னேற்றச் சங்கத் தலைவர், சங்க நாதம் எழுப்பினால் நிச்சயம் வெற்றிக்கு மேல் வெற்றி என்பதில் சந்தேகமில்லை....'

''இரண்டு வருடங்களுக்கு முன் ஓ.எல் ஆங்கில பாடத்திற்காக ஒரு முழுநாள் கருத்தரங்கு நடத்திய ஆங்கில ஆசிரியர்தானே...'' என்று வினவினாள் பியசீலி.

''அவரேதான்...''

''அவர் எமது கிராமத்து பாடசாலையில் ஐந்து வருடங்கள் கடமையாற்றியுள்ளார். ஜெஸ்மின் அவரிடம் கற்றவள்.

''பஹார்டீன் சேர் ஆங்கிலம் படிக்க விரும்பும் மாணவர்களுக்கு துணைநூல்களாகப் பயன் பெறட்டும் என்ற நோக்கில், அன்பளிப்பு செய்த ஐம்பது நூல்களையும் இங்கு அமைக்கவிருக்கும் நூலகத்தில் போடப் போகிறோம்....'' என்றாள் ஜெஸ்மின்.

யசவத்தி குறுக்கிட்டாள்.

''ஜெஸ்மினுக்கு ஊர்ப் பாடசாலையில் ஆங்கில ஆசிரியர் நியமனம் ஏன் கிடைக்கவில்லை....?''

''யசவத்தி.... இது கலாநிதி பதியுதீன் மஹ்மூத் காலம் இல்லை....'' என்றான் யாசீன்.

''காலப்போக்கில் கிடைக்கும். ஆனால் இக்கிரிகொல்லாவ கிராமத்தில்...''' என்றான் ஹலீம்தீன்.

''ஏன்?'' என்று எவரும் கேட்கவில்லை. கேட்டிருந்தால்.... ''அங்குதான் அவவுக்கு கல்யாணம் பேசிக் கிடக்கு....'' என்று சொல்லியிருப்பான். ஆனால் பகிரங்கப்படுத்துவதற்கு 'இன்னும் காலம் கிடக்கு' என்று எவரும் பேசவில்லை.

''சங்கம் செயற்படத் தொடங்கியதும் பலருக்கும் ஆசிரிய நியமனம் பெற்றுத் தரவேண்டும்....' என்று கூறிய ஹலீம், பியசீலியின் முகத்தைப் பார்த்தான். அவளும் அர்த்தபுஷ்டியுடன் அவனைப் பார்த்தாள்.

''...இனி நான் சொல்லவந்த விசயம் என்னண்டா, பஹார்டீன் மாஸ்டரைத்தான் நாம் சங்கத்தின் ஆலோசகராக நியமிக்க இருக்கிறோம். இதில் நீங்கள் ஏதும் அபிப்பிராயம் சொல்லக் கிடக்கா....?'' என்றான் ஹலீம்.

''மிகப் பொருத்தமானவர்...'' என்று அனைவருமே பூரண சம்மதம் தெரிவித்தனர்.

''அப்ப சரி... அங்குரார்ப்பனக் கூட்டத்தில் அவர் மகஜர் சமர்ப்பித்து உரையாற்றுவார்.

எல்லோருக்கும் வசதியாக அநுராதபுர நகரத்தில் பிரதேச விவசாயிகள் முன்னேற்றச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் ஒரு முழுநாள் நிகழ்வாக நடாத்தப் பொருத்தமான திகதியைத் தீர்மானித்ததோடு, அலுவலகத் திறப்பும் தேநீர் விருந்தும் கலந்துரையாடலும் முடிவுற்றன.

# பன்னிரண்டு

அனுராதபுர நகரத்தில் ஒரு பிரபலமான மகாவித்தியாலய மண்டபத்தில் பெருந்திரளான விவசாயிகள் குழுமியிருந்தனர். நாற்பது மைல்களுக்கு அப்பாலிருந்தும் அரசாங்க பஸ்களிலும் தனிப்பட்ட வாகனங்களிலும் விவசாயப் பெருமக்கள் நேரத்திற்கு சமுகமளித்திருந்தனர்.

மண்டபம் நிரம்பி வழிந்தது. இனி வருபவர்களுக்கு இருக்கை வசதிகள் சமாளிக்க முடியாத அளவுக்கு......

உத்தியோகபூர்வமான தலைவரைத் தெரிவு செய்வதற்கு முன், கூட்டத்தை நடாத்தத் தற்காலிகத் தலைவராக, ஓய்வு பெற்ற அதிபர் ஜனாப் கரீம் தெரிவு செய்யப்பட்டார். 'அல்லாஹு அக்பர்' என்ற கோஷம் மண்டபத்தைப் பிளந்தது. மறுபுறம் 'ஜயவேவா' என்ற குரல்.

றொட்டவெவ தௌபீக் மௌலவியின் 'கிராஅத்' ஓதலும், சிங்கள மகா வித்தியாலயத்தில் சிங்கள மொழியும் பௌத்தமும் போதிக்கும் ஒரு பிரபல தேரோவின் சமய அனுஷ்டானமும் இடம்பெற்றதும், தற்காலிகத் தலைவர், கூட்டத்தைத் தொடக்கி வைத்து உரையாற்றினார்.

'அனுராதபுரத்தின் வரலாற்றில் இது ஒரு முக்கிய நிகழ்வு, சிங்கள முஸ்லிம் சமூகத்தவர் ஒன்றிணைந்து ஒரு விவசாயிகள் முன்னேற்றச் சங்கத்தை அமைக்க முன்வந்தது, காலகட்டத்தின் கட்டாயத் தேவை என்பதை இந்த மண்டபம் நிரூபித்து விட்டது.

இதை அமைப்பதற்கு எமது இளைய தலைமுறையினர் மிகவும் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். எமது எதிர்கால தேசிய நீரோட்டத்தில் எமது பிரதேச இளைஞர்களின் பங்களிப்பை இது எடுத்துக் காட்டுகின்றது. அமரதாச, ஹலீம்தீன் போன்ற இளைஞர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்....''

அப்துல் மஜீத், கிரிபண்டா போன்ற ஒவ்வொரு கிராமத்தின் மூத்த தலைவர்களும் மேடையில், அதிதிகளுடன் உசாராக வீற்றிருந்தனர்.

சேகுவின் வரவேற்புரை தமிழிலும் பியசேனவின் சிங்கள மொழிபெயர்ப்பும் சுருக்கமாக இடம்பெற்றது. சேகு தனது உரையில் விவசாயிகளின் நிலையை சபைக்கு எடுத்துரைத்தான்.

''... ஒவ்வொரு முறையும் மாரி மழை பொழியத் தொடங்கியதும் உழவன் உள்ளத்திலும் உவகை பெருக்கெடுக்கும்..... பூமித்தாயின் இதயத்தானமாய் விளங்கும் வயற் பிரதேசங்களில் உழுவதிலும் விதைப்பதிலும் ஆர்வமும் ஆரவாரமும்.

எவ்வளவு கலகலப்பான நாட்கள்.

உழவு முடிவதற்கு அறிகுறியாய் மண்வெட்டியால் சுரியை வாரி வரப்பைப் பூசி மெழுக, பளிச்சென காட்சி தரும் எழிற் கோலம் கண்களுக்கு பெருவிருந்தாம்.

விதைப்புகள் அரும்புகளாய், ஓரிலை ஈரிலையாய் முகிழ்த்து, நெல்மணிகளைத் தாங்கும் கதிர்க் கொத்துக்களாய் வளர்ச்சியடைந்து, பக்குவமடையும் வரைக்கும் உழவனுக்குப் பொறுமை எங்கே...? காத்திருந்து, கண்துஞ்சாது காவலிருந்ததற்குப் பலன் கிடைத்துவிடும்.

எங்கும் அறுவடையும் சூடுமிதிப்பும் தான். தேவைக்குப் போக மீதமெல்லாம் பணமாக மாறும்போது, பெருக்கெடுத்த உவகையின் உச்சக்கட்டம்.

என்ன செய்வது? வறுமையை விரட்டியடிக்கும் சக்தி இந்தப் பணத்திற்கு மட்டுந்தானே உண்டு.

அலட்டிக் கொள்ளாமல் வசந்த காலம் மெள்ள மெள்ள அசைந்து போனதும்,கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி....

மீண்டும் வறுமையை வரவேற்பதைத் தவிர வேறு வழியில்லை.

வறுமை ஒரு பொல்லாத தொற்று நோய். வருடத்திற்கு ஆறு மாதங்களேனும் நின்று பிடிக்கும்.

இதுதான் உழவன் வாழ்க்கை.

இந்த வாழ்க்கை முறையை மாற்றியமைக்க வேண்டும். உழவன் வருடம் முழுவதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். உழவனுக்கு எல்லா வாழ்க்கை வசதிகளும் வேண்டும். அவற்றையெல்லாம் பெறுவதற்கு ஒரு புதிய பலம் வாய்ந்த அணுகுமுறை தேவை. அதற்காகத்தான் இந்த விவசாயிகள் முன்னேற்றச் சங்கம் இன்று அமைக்கப்படுகிறது.

இந்த அதி முக்கியமான நிகழ்வுக்கு இன்று வருகை தந்த ஒவ்வொருவரையும் மனமுவந்து வரவேற்கிறேன்.''

சேகுவின் கருத்துக்கள் சபையோரை உசுப்பி விட்டது.

''பல வருடங்களுக்கு முன் நானும் எனது தேர்தல் தொகுதியில் மட்டும் முப்பது கிராமங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி, 'இஸ்லாமிய முன்னேற்றச் சங்கம்' என்று அமைத்தேன்.... ஆனால் சில வருடங்களுக்கு மட்டுமே இயங்கியது. விவசாயிகள் என்று சொல்லும்போது முஸ்லிம் விவசாயிகள் சிங்கள விவசாயிகள் தமிழ் விவசாயிகள் என்று கூறு போடமுடியாது. வயலும் வயலைச் சார்ந்த அனைத்து விவசாயப் பெருமக்களும் எதிர்நோக்குவது ஒரே வகையான பிரச்சினைகள் தாம். ஆகவே, இக்காலகட்டத்தில் இந்த ஒருமைப்பாடு மிக முக்கியமானது. கடந்த காலங்களில் இரு சாராருக்குமே சரியான வழிகாட்டல்கள் அமையவில்லை. ஆகவேதான் இந்த சங்கம் சகலருக்கும் போராடும். நாம் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.''

தற்காலிகத் தலைவர் கரீமின் ஆழமான கருத்துரைக்குப் பின் உத்தியோகத்தர் தெரிவு பற்றிய விளக்கத்தை ஹலீம்தீன் தமிழிலும் அமரதாச சிங்களத்திலும் மிகத் தெளிவாக எடுத்துரைத்தனர்.

பொறுப்பான உத்தியோகத்தர்களை ஆற அமர யோசித்து, தேவையேற்படின் கலந்தாலோசிக்கவும் சகல வசதிகளும் அவகாசமும் கொடுத்திருப்பதால் அதனை நிகழ்ச்சி நிரலில் பிற்போட்டுவிட்டு பிரமுகர்களைப் பேசவிட்டனர். சிங்கள கிராமங்களின் சார்பில் இரு நீண்ட உரைகள் இடம்பெற்றன. கிராம சேவகர் பண்டார சிங்கள முஸ்லிம் கிராமங்களின் ஒருமைப்பாட்டை வலியுறுத்தினார். அதன் முக்கியத்துவத்தையும் சில புள்ளி விபரங்களையும் வெளியிட்டார். எமது பிரதேசத்தில் தமிழ்க் கிராமங்கள் இல்லை. ஆனால் சிதறலாக கிட்டத்தட்ட எட்டாயிரம் தமிழர்கள் வாழ்கிறார்கள். இந்தச் சங்கத்தில் அவர்களுடைய பிரதிநிதித்துவமும் இடம்பெற வேண்டும்.

அதைத் தொடர்ந்து பஹார்டீன் மிக முக்கியமான மகஜரை சமர்ப்பித்து தமிழிலும் பின்னர் ஆங்கிலத்திலும் உரை நிகழ்த்தினார்.

'அனுராதபுரத்தை சிங்கள மன்னர்கள் ஆண்ட காலத்திலிருந்து...' என்று அமரதாசவின் ஓர் ஆழமான ஆய்வுரையைக் கேட்டீர்கள். பின்னேரத்தில் 'எமது மாவட்டத்தில் முஸ்லிம்கள்' என்னும் மகுடத்தில் மற்றுமொரு ஆழமான ஆய்வை சரியான புள்ளி விபரங்களுடன் ஹலீம்தீன் நிகழ்த்தவிருப்பதால் நான் அதற்கு உதவியாக சில தகவல்களை மட்டும் முன்வைத்து மகஜரைச் சமர்ப்பிக்கின்றேன்.

அனுராதபுர மாவட்டத்திற்கு முஸ்லிம்கள் புதியவர்கள் அல்லர். பதினான்காம் நூற்றாண்டில் வியாபார நோக்கத்திற்காக இங்கு வருகை தந்திருக்கிறார்கள். அரேபியா மட்டுமல்ல, இந்தோனேஷியா, இந்தியா, பாரசீகம்... இப்படிப் பல நாடுகளிலிருந்து இங்கே வ்நதுள்ளனர். வடமேற்கு, மேற்குக் கரைகளில்

இறங்கினர். கற்பிட்டி புத்தளம் முத்துச் சிலாபத்துறை மூலமாக அனுராதபுர வாயிலாக நாட்டிற்குள் வந்துள்ளனர்.

மலபார் இந்தோனேஷியா நாடுகளிலிருந்து வந்தவர்கள் அனுராதபுர பிரதேசத்திலிருந்து யானைகளைப் பிடித்து ஏற்று மதி செய்தவர்களின் சந்ததியினர்.... திசாவெவகம, பொன் னாரங்குளம், குப்பிச்சாய்குளம், ஆமன்னரத்மல, நாச்சியா துவ,,, போன்ற இடங்களில் குடியிருப்புகளை அமைத்துள் ளனர்..... பெருந்திரளாகக் கூடியிருக்கும் உங்களில் பலருக்கு இந்தச் சரித்தி உண்மைகள் தெரியாமல் இருக்கலாம். ஆனால் உங்கள் கிராமங்களில் தொண்ணூறு வயதுடையவர்கள் இருந் தால் அவர்களிடம் கேட்டுப் பாருங்கள். அவர்கள் தரும் தகவல் கள் உண்மையானவை. அவற்றை நீங்கள் 'டேப்ரிகார்ட்' பண்ணி பாதுகாக்க வேண்டும்.... ஹலீம்தீனின் மூலம் முழுமையான ஆய்வுரையிலிருந்து வரலாற்றை அறிந்து கொள்ள நல்ல வாய் ப்பு. ஹலீம்தீனின் ஆய்வுரையும் ஒலிப்பதிவு செய்யப்படும். நாம் ஒவ்வொருவரும் எமது வரலாற்றுப் பின்னணியை அறிந்தி ருக்க வேண்டும். ஒவ்வொருவரும் முந்திய ஐந்து தலைமுறையி னரின் விபரங்கள் தெரிந்திருக்க வேண்டும் என்று சொல்வார்கள்.

சமகாலத்தவர்களின் பிரச்சினைகளை ஆய்ந்தறிந்து அவற் றைத் தீர்த்துக் கொள்வதற்கு, தனித்தனி பிரயத்தனங்கள், கிராமங்களும் கிராமவாசிகளும் செய்து, களைத்துப் போனதன் பிரதிபலிப்புத்தான் இந்த விவசாயிகள் முன்னேற்றச் சங்கம். இதன் நோக்கங்கள் துண்டுப் பிரசுரங்களில் விரிவாக ஆராயப் பட்டிருக்கின்றன. அவற்றை மீண்டும் படித்துப் பாருங்கள். எமது உடனடித் தேவைகளையே, நான் வாசிக்கப் போகும் மகஜரில் கோடிட்டுக் காட்டியிருக்கிறேன்.

இப்போது தேநீருக்கான இடைவேளை.

அது முடிந்ததும் கலந்துரையாடல், பிறகு உத்தியோகத்தர் தெரிவு. பின்னர் சிங்கள முஸ்லிம் கிராமங்களின் உடனடித்

தேவைகள் அடங்கிய மகஜர்கள் வாசிக்கப்பட்டு வேண்டிய திருத்தங்கள் செய்து நிர்வாகக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும்'' என்று பஹார்டீன் மாஸ்டர் தமது உரையை முடித்ததும், உத்தி யோகத்தர் தெரிவுக்காக அரைமணி நேரம் ஒதுக்கப்பட்டது.

அமரதாசவும் ஹலீம்தீனும் தலைவர்களாக தெரிவு செய்யப் பட்ட போது 'அல்லாஹு அக்பர்', 'ஜெயவேவா' கோஷம் மண்டபத்தை நிறைத்தது. தொடர்ந்து சோமரத்னவும் யாசீனும் இணைச் செயலாளர்களாகவும் சேகுவும் விக்டரும் பொரு ளாளர்களாகவும் ஏகமனதாகத் தெரிவாகினர்.

இது தவிர, ஒரு செயற்குழு அமைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து கிராமத்திற்கு ஒருவர் என்ற ரீதியில் பிரதிநிதிகள் தெரிவாகினர். சகல அதிகாரங்களும் பதினாறு பேர்களைக் கொண்ட நிர்வாகக் குழுவுக்கே விடப்பட்டது.

பிரதேச விவசாயிகள் முன்னேற்றச் சங்கத்தின் ஆலோசனைக் குழு பஹார்டீன் மாஸ்டரின் தலைமையில் மூத்தவர்களான அப்துல் மஜீத், கிரிபண்டா, கரீம் மாஸ்டர், பிங்காமி.... சமது விதானை என்று பல கிராமங்களிலிருந்தும் அங்கம் வகித்தனர். சிங்கள கிராமங்களின் தேவைகள் பற்றி பிங்காமி விரிவாக எடுத்துக் காட்டியதும் முஸ்லிம் கிராமங்களின் அடிப்படைத் தேவைகளை பஹார்டீன் மாஸ்டரும், கரீம் மாஸ்டரும் மிகத் தெளிவாக சுட்டிக் காட்டினர்.

நீண்டகாலமாக வசிப்பிட வசதிகள் இன்றி அல்லல்படும் முஸ்லிம் கிராமவாசிகளுக்கு, தனிக் குடியிருப்பு வசதிகள். தொழில் வாய்ப்புகள், பாடசாலைக் கட்டிடங்கள், மற்றும் குறைபாடுகள், பாடசாலை மாணவர்களுக்கு விஷேட பஸ் போக்குவரத்துகள், ஆசிரிய நியமனங்கள், கிராமிய முஸ்லிம் பெண்களுக்கு சுயதொழிற்றுறைகள்,

இப்படியாக.....

கல்வி கற்ற பெண்கள் தொழில்தேடி வெளிநாடுகளுக்குப் படையெடுக்கும் முயற்சிகளைத் தடுப்பதற்கு மாற்றுத் திட்டங்கள், பிரசவ விடுதிகளுடன் அரசினர் வைத்தியசாலைகள், கிராமங்களை ஒருங்கிணைக்க வாகனப் போக்குவரத்துக்கு ஏற்ற பாதைகள் நிர்மாணித்தல், பழைய பாதைகளை சீரமைத்தல், கிராமந்தோறும் நூலகங்கள் அமைத்தல், பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்களுக்கு வழிகாட்டத் திட்டங்கள்....

நீண்ட காலமாக உரிய காடுகளில் எல்லைப் பிர்ச்சினைகள் இரு இனங்களிடையே சச்சரவுகளையும் மனஸ்தாபங்களையும் தோற்றுவித்துள்ளன... இதற்கு ஒரு முடிவு காணல்.

பழைய குளங்கள் திருத்தப்பட்டு, புதியனவும் நிர்மாணிப்பது மிக முக்கியமானது, பல இடங்களில் இன்னும் பருவ மழையையே நம்பியிருக்க வேண்டிய நிலைதான்...

இப்படியாக கோரிக்கைகள் நிரம்பி வழியும் மகஜர் அது.

வி.மு.சவின் புதிய நிர்வாகக்குழு அவற்றைப் போராடிப் பெறுவதற்கு கோஷங்களுக்கு மத்தியில் அந்த நீண்ட மகஜரைப் பொறுப்பேற்றிருக்கிறது. ஒரு மணித்தியால மதிய போசன இடைவேளை முடிந்ததும், மீண்டும் கூட்டம் மண்டபத்தை நிறைத்தது.

ஹலீமும், அமரவும் முஸ்லிம் சிங்கள வரலாறுகளை விரிவாக எடுத்துரைத்தனர். கூடியிருந்த விவசாய பெருமக்களுக்கு புதிய தகவல்களாய் இருந்தமையால் அனைவரும் நிசப்தமாய் மிக்க ஆர்வத்துடன் செவிசாய்த்தனர். விரிவுரைகள் முடிந்ததும் சபையோரிடமிருந்து பல கேள்விகள் எழுந்தன. அவற்றிற்கு அமரதாசவும் ஹலீம்தீனும் இடையிடையே பஹார்டீன் மாஸ்டரும் கரீம் மாஸ்டரும் விடைகள் பகர்ந்தனர்.

''நாடு கடத்தப்பட்ட விஜயன் எழுநூறு சகாக்களுடன் கி.மு. ஆறாம் நூற்றாண்டில்தான் இலங்கைக்கு வந்ததாகச் சரித்திரம் கூறுகின்றது. அதற்கு முன்னர் அராபியருக்கும் இந்த நாட்டிற்கும்

தொடர்பு இருந்ததா....?''

''ஆம்... எனது பேச்சில் குறிப்பிட்டேனே'' என்றான் ஹலீம். அராபியர் தொடர்பாக மற்றுமொரு வினாவுக்கு விடையளிக் கையில்....

''.... அனுராதபுரத்திலிருந்து எமது நாட்டிற்கு வந்த முஸ்லிம் கள் அனுராதபுரத்தில் பெரும் தொடர்புகளை வைத்திருந்தார்கள். இக்கால கட்டத்தில் இலங்கையை ஆட்சி செய்த சிங்கள மன்னர் கள், இந்திய மன்னர்களின் படையெடுப்புகளுக்கு முகம் கொடு க்க வேண்டியிருந்தது. இக்கால கட்டத்தில்தான் முஸ்லிம்கள் சிங் கள மன்னர்களுக்கு பேருதவிகள் புரிந்துள்ளனர். போர்ப் பயிற் சியை குறிப்பிடலாம். இதனால் அந்தக்கால கட்டத்திலேயே சிங் கள முஸ்லிம் நட்புறவுகள் பலமாக அமைந்துள்ளன'' என்று ஹலீம்தீன் குறிப்பிடுகையில் சபையில் கூடியிருந்த விவசாயி களிடையே மகிழ்ச்சி ஆரவாரம் பொங்கிப் பிரவாகித்தது.....

'நாச்சியாதுவ' என்ற கிராமத்திலிருந்து பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்ட இளைஞன் கேட்டான்;

''எங்கள் கிராமத்தைப் பற்றி நீங்கள் விரிவாகச் சொல்ல வில்லையே''

''மன்னிக்க வேண்டும்... நாம் இன்று ஒரு முக்கிய விடயத் துக்கு கூடியிருக்கிறோம். ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒவ்வொரு கதை இருக்கத்தான் செய்கிறது... இங்கு நாம ஒரு சரித்திர ஆய்வரங்கு நடத்தவில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா? அனுராதபுர முஸ்லிம்களைப் பற்றி ஒரு விஷேட மலர் வெளி யிடப்பட்டிருக்கிறது. அதில் உள்ள ஆய்வுக் கட்டுரைகளை நீங்கள் வாசித்தால், அனுராதபுர முஸ்லிம்களின் வரலாற்றை ஓரளவு அறிய முடியும். அந்த ஆய்வுக் கட்டுரை ஆசிரியர்களைக் கொண்டு ஒரு ஆய்வுக் கருத்தரங்கு நடத்தினாலும் பல புதிய தகவல்களைப் பெறலாம். அத்துடன் எமது கிராமங்களில் மிகவும் வயது முதிர்ந்தவர்களைப் பேட்டி கண்டு எழுத்து மூலம்

அல்லது 'டேப் ரிகார்ட்' செய்தாலும் கிராமங்களின் வரலாற்றுக் குறிப்புகளை பத்திரமாக பாதுகாப்பாக வைக்கலாம். எதிர்காலத் துக்கு பிரயோசனமாக இருக்கும்.... எனினும் உங்கள் ஆர்வத்துக்கு நன்றி.... உங்கள் கேள்விக்கு மட்டும் சுருக்கமாக பதிலளித்து விட்டு நிகழ்ச்சி நிரலின் அடுத்த அம்சத்துக்குச் செல்வோம்.

''.... அந்த ஆய்வின்படிக்கு அந்த முஸ்லிம் பெண்ணுக்கு நாச்சியார் என்று பெயர். நாச்சியாதுவ பற்றி ஏராளமான சம்ப வங்கள் இருப்பினும் பழைய கால குடியிருப்புகளில் நாச்சியார் மிகவும் புகழ்பெற்றவர். அவருக்கு நிறைய வயற்காணிகள் இருந்தன. அப்பிரதேசத்தில் ஒரு குளம் வேண்டுமென்று மக்கள் மன்னனிடம் முறையிட்டனர். அவ்வேண்டுகோளைச் செவி யுற்ற மன்னன் குளம் ஒன்றை அமைப்பதற்கு நாச்சியாரின் காணி தேவைப்படுவதால் அரசனுக்கு அந்தப் பெண்ணிடம் சம்மதம் கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டது. எத்தகைய மறுப்பும் சொல்லாமல் தனது பூரண விருப்பத்தைத் தெரிவித்தார் நாச்சி யார். மன்னன் மிகவும் மகிழ்ந்து, 'நாச்சியாரும் மகளும்' அனுமதி அளித்து விட்டார் என்று கூற அது கிராமத்திற்கும் குளத்திற்கும் பெயராக அமைந்து விட்டது. நாச்சியார் மகள் என்றால் சிங்கள மொழியில் 'நாச்சியாதுவ' என்பதாகும்.

காலப்போக்கில் இக்குளம் அடைபட்டு மூடப்பட்டு போன தும் மத்தியில் தேங்கிக் கிடந்த தடாகங்களையும் மல்வத்து ஓயா வின் நீரையும் அண்டியதாக முஸ்லிம் கிராமங்கள் பல உருவாகின.

கி.பி 1904 காலப் பகுதியில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் குளத்தின் அபிவிருத்தி வேலைகள் வகுக்கப்பட்ட போது, இக்கிராமத்தில் வாழ்ந்த மக்கள் குளத்தின் கீழ்க்கரையில் குடியேறி குடியிருப்புகளை அமைத்துக் கொண்டனர். இதுவே உங்கள் கிராமமாகிய இன்றைய 'நாச்சியாதுவ'.

ஹலீம்தீனின் நீண்ட விளக்கங்களைக் கேட்ட சபையோர் தம்மை மறந்து வாய்பிளந்து செவியுற்றிருந்தனர். அவ்வேளை

கைக்கடிகாரத்தைப் பார்த்த ஹலீம்தீன்..... ''இனிமேலும் எமது சங்கத்தின் நாச்சியாதுவ பிரதிநிதிக்கு விளக்கம் தேவையானால் தயவு செய்து இந்தக் கூட்டம் முடிந்து பத்து நிமிடங்கள் நின்றால் அமரதாசவும் நானும் யாசீனும் விரிவான விளக்கங்கள் தருவோம்....'' என்றான்.

நிகழ்ச்சி நிரலின் படி அடுத்தடுத்து அங்குரார்ப்பண நிகழ்வுகள் மும்முரமாக சூடுபிடித்தன.

மக்கள் நீண்டதூரம் பஸ் வண்டிகளில் பிரயாணம் செய்ய விருப்பதால் சரியான நேரத்திற்கு சகல விடயங்களும் வெற்றிகரமாக நடந்து முடிந்தன.

விக்டரும், அன்சார்தீனும் சிங்களத்திலும் தமிழிலும் சுருக்கமாக நன்றியுரைகள் சமர்ப்பித்தனர். அப்பொழுது நேரம் சரியாக மாலை நான்கு மணி.

கூட்டம் ஆரவாரத்துடன் கலைந்து சென்றது. இறுதியாக ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கான கருத்தரங்கு இடம்பெற்றது.

பிரதிநிதிகளின் கடமைகள் விரிவாக ஆராயப்பட்டு சங்கத்தின் சட்டதிட்டங்கள் அங்கத்துவப் பத்திரங்கள் முதலியனவும் விநியோகிக்கப்பட்டன.

மாதா மாதம் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெற வேண்டும். ஒவ்வொரு பிரதிநிதியும் தத்தமது கிராமிய மட்டத்தில் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை விரிவாக அறிக்கை மூலம் கொண்டு வந்து சமர்ப்பிக்க வேண்டும். பின்னர் அவை கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, உரிய நடவடிக்கைகளுக்காக பிரதேச வி.மு.ச. முன் எடுத்துச்செல்லப்படும் மாதாந்தப் பிரதிநிதிகள் கூட்டம் மாறிமாறி அனுராதபுரம், கஹட்டகஸ்திகிலியா, ஹொரவப்பொத்தான ஆகிய கேந்திர ஸ்தானங்களில் மட்டுமே நடைபெறும் என்ற முடிவுடன் அனைத்து நிகழ்வுகளும் முற்றுப் பெற்றன. எல்லாரும் ஆங்காங்கே போகும்

வாகனங்களைப் பிடிப்பதற்காக அவசரப்பட்டனர். கிரிபண்டா வின் வேனில் இடம் இருக்கவில்லை. அப்துல் மஜீதும், பஹார் டீன் மாஸ்டரும் பஸ்ஸில் சென்றார்கள். பஹார்டீன் மாஸ்ட ருக்கு சங்கம் சம்பந்தப்பட்ட நிரந்தர சட்டக் கோவை தயாரிப்ப தற்கும், ஒரு விவசாயிகள் சங்கம் எப்படி இயங்க வேண்டும், சங்கக் கிளைகள் உத்தியோகத்தர்கள், அதிகாரங்கள், கடமை கள்.... இவை பற்றி நிரந்தரமாக ஒரு திட்டம் வரைய வேண்டிய பாரிய கடமைகள் சுமத்தப்பட்டிருந்தன.

ஹலீம்தீன், செயின் முதலாளி ஆகியோரின் விருந்தினராக சில நாட்கள் தங்கியிருந்து மீண்டும் மலையகம் சென்று ஒரு பிரபலமான தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் முக்கியஸ்தர் களைச் சந்தித்து விரிவாக ஆராயவிருக்கிறார்.

கூட்டம் முடிந்ததும் எல்லாரும் போய்விட்டார்கள். சில முக்கிய பொறுப்புகளுக்காக அமரதாச, ஹலீம்தீன், யாசீன், சேகு ஆகியோர் மட்டும் இன்னும் அனுராதபுர நகரத்தில் வேலை களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். நாச்சியாதுவ பிரதிநிதி பௌதுல் அமீர், முக்கிரவெவ இல்யாஸ், பலீல் ஆகியோர், ''எங்களுக்கு பஸ்ஸுக்கு நேரமிருக்கு, எங்களால செய்யக் கூடியது ஏதும் இருந்தா சொல்லுங்க...?'' என்று ஹலீம்தீனிடம் கேட்டனர்.

''ஜஸாக்கல்லாஹ்.... சங்கத்துக்கு உதவியாயிருந்து வேலை செய்ய முன்வந்திருப்பது சந்தோஷம்... இனி ஒரு வேலையு மில்ல... ஓட்டலுக்குப் போய் டீ குடிச்சிட்டு பஸ்ஸுக்கு போற துதான்'' என்றான் ஹலீம்...

''அப்ப நாங்க வாறம்... வேண்டிய உதவிகளுக்கு எங்களை யும் கூப்பிட்டா நாங்க வருவோம்....''

''தேவைப்படும்போது அறிவிப்போம்.''

''அடுத்த கிழமைல ஒரு நாளக்கி உங்கட அலுவலகத்துக்கு வாறன்'' என்றான் நாச்சியாதுவ பௌதுல் அமீர்.

''சங்கம் தொடங்கியாச்சி... நாங்க எல்லோரும் ஒருங்கிணைந்துதான் வேலை செய்யப் போகிறோம்.... எல்லோரும் கட்டாயம் தொடர்பு கொள்ள வேணும்....'' என்றான் ஹலீம்.

பௌதுல் அமீரும் பஸ் தரிப்பை நோக்கி நடந்து விட்டான்.

ஹலீம்தீன் நண்பர்கள் மண்டபத்தை தந்துதவிய அதிபரைச் சந்தித்து உரையாடி விட்டு அவர்களும் தேநீர் அருந்துவதற்காக வெளியே நடந்தனர்.

சகல அலுவல்களையும் முடித்து விட்டு அனுராதபுரத்திலிருந்து இரவு ஒன்பது மணிக்குப் புறப்படும் கடைசி பஸ்ஸில் கிராமத்திற்குப் புறப்பட்டனர்.

இரவு பஸ்ஸில் சனம் இல்லை.

''வரலாற்றுக் குறிப்புகளை ஆர்வத்தோட எல்லோருமே காது கொடுத்து கேட்டாங்க...'' என்றான் சேகு.

''நாம எங்கிருந்து வந்தோம்? எதற்காக வந்தோம்? என்ன சாதித்து விட்டோம்? இப்ப என்ன செய்து கொண்டிருக்கிறோம். இனியும் நாம என்ன செய்ய வேண்டும்? எமது முன்னோர் தொடக்கி வைத்த வேட்டையில் நாம எங்கே நிற்கிறோம்? நாம தொடர்ந்து எமது பாதையில் செல்ல எம்மிடம் என்ன திட்டங்கள் வைத்திருக்கிறோம்... என்று நீ உணர்ச்சி வசப்பட்டு கேட்டது எல்லாரது மனங்களிலும் ஆழமாகப் பதிந்து விட்டது.'' என்றான் இதுவரைக்கும் அமைதியாக சிந்தித்துக் கொண்டிருந்த அமரதாச.

''எதிர்பார்த்ததை விட பெருந்திரளான கூட்டம். அமர, எத்தனை சிங்கள கிராமங்கள்.... எத்தனை முஸ்லிம் கிராமங்கள்...?'' என்று கேட்டான் யாசீன்.

''நாளக்கி, கையொப்பமிட்ட புத்தகத்திலிருந்து... ஆட்களையும்... கிராமங்களையும் எண்ணிவிடலாம்... கைச்சாத்துகளை அன்சார்தீனும் பியசேனவும் மிகக் கவனமாக எடுத்து விட்டார்கள்.

''பார்க்கப் போனா இது நாம நினைக்கிற மாதிரி லேசான வேலையில்ல... தனியாக ஒரு கந்தோரும் உத்தியோகத்தர்களும் இயங்கிக் கொண்டே இருக்கணும் போலக் கிடக்கு. போகப் போக உறுப்பினர் பட்டியல் நீண்டு கொண்டே செல்லும் போலக் கிடக்கு....'' என்றான் சேகு.

''நீ சொல்வது சரி சேகு.....'' என்றான் ஹலீம்தீன்.

''ஆக்கள் கூடக்கூட எமது சங்கமும் பலமடைகிறது....'' என்றான் அமர.

''எமது அலுவலகத்திற்கு இரண்டு பெண்பிள்ளைகளை அமர்த்தினால் அலுவலக வேலைகள் தடையின்றிச் சென்று கொண்டிருக்கும்....'' என்று அவர்கள் தீர்மானித்தனர்.

''சிரமதான அடிப்படையில் இல்லாமல் சம்பள அடிப்படை யில் தான் நியமிக்க வேண்டும்.'' என்றான் யாசீன்.

''பியசீலியையும் ஜெஸ்மினையும் அமர்த்தினால் என்ன...?'' என்று ஒரு அபிப்பிராயம் எழுந்தது.

ஆனால், அமரவும், ஹலீமும் அதற்கு உடன்படவில்லை. தங்கள் சகோதரிகளுக்கு உத்தியோகம் கொடுக்க சங்கம் தொட ங்கி விட்டார்கள் என்று ஒரு கதை கிளம்பும்... எப்படியும் ஜெஸ்மினும் பியசீலியும் ஆசிரிய நியமனங்களை எதிர்பார்ப் பவர்கள். ஆகவே 'அதை பிறகு யோசிக்கலாம்' என்று தற்காலிக மாக கைவிட்டார்கள்.

அடுத்த நாள் பண்டார கிராம சேவகரின் வேண்டுகோளின் படி, குளக்காட்டுப் பிரதேச மாய்மை தொடர்பாக சமர்ப் பிக்கப்பட்ட சகல நிருபங்களுக்கும் உந்துதலாக 'பிரதேச விவ சாயிகள் முன்னேற்றச் சங்கம்' என்று அச்சிடப்பட்ட தாளில் முத்திரை குத்தப்பட்ட மற்றுமொரு கடிதத்தை ஜீ.ஏயிக்கு சமர்ப்பிக்க வேண்டிய முக்கிய பணி ஒன்றும் காத்திருந்தது. அமரதாசவும் ஹலீம்தீனும் ஜீ.எஸ்இன் அம்முயற்சிகளுக்கு உதவிகளும் ஒத்துழைப்பும் வழங்கினர்.

# பதின்மூன்று

பிரதேச விவசாயிகள் முன்னேற்றச் சங்கத்தின் முதலாவது உத்தியோகபூர்வமான செயலவைக் கூட்டம் அமரதாசவின் இல்லத்தில், திறந்த வெளி மண்டபத்தில் கூடியது. அங்கு ரார்ப்பண கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரிலிருந்துசில விடயங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

மிக முக்கியமான குளக்காட்டுப் பிரதேச மாய்மை தொடர் பாக முன்பு சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் அனைத்திற்கும் உறுதுணையாக சங்கத்தின் முத்திரை பதியப்பட்டது.

இரு கிராமங்களும் முழுமனதுடன் இணைந்துதான் குளக் காட்டுப் பிரதேசத்தைப் பகிர்ந்து காடு வெட்டி விவசாயம் செய்ய முன்வந்தது. அதை சுமுகமான முறையில் தீர்ப்பதில் எந்தவிதத் தடையும் இல்லை. வேண்டுமென்றே குழப்பியடிக்ச விசமிகள் போட்ட 'பெட்டிசன்' செல்லாக் காசாகிவிட்டது.

ஒரு தனி நபரோ சில கிராமவாசிகளோ, சில கிராமங்களோ என்றில்லாமல் ஒரு மாவட்டத்தின் அல்லது ஒரு பெரும் பிர தேசத்தின் முழு விவசாயக் கிராமங்களுமே ஒன்றிணைந்து முன்வைக்கும் கோரிக்கையே, நியாயமான கோரிக்கையே இந்தக் குளக்காட்டு எல்லைப் பிரச்சினை என்றாகி விட்டது.

மிகப் பழைய காலகட்டங்களில் ஆயிரமாயிரம் ஏக்கர் நிலங் கள் சொந்தமாக இருந்தன என்பது உண்மைதான். ஆனால் சனத்தொகை பெருகப் பெருக நிலம் பெருகவில்லையே. விவ

சாயத்திற்கேற்ற நிலத்தட்டுப்பாடும் வளர்ந்துகொண்டே வருகிறது. எதிர்காலம் எப்படி அமையப் போகுதோ...?

வயது வந்த எல்லா விவசாயிகளுக்கும் நிலம் உண்டு என்று சொல்வதற்கில்லை. பிழைப்புக்காக அவன் நிறைய வசதியுள்ளவர்கள், வயற்காணியுள்ளவர்களுக்கு கூலி வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருந்து வருகிறது. இதனால் போதிய வருமானமின்றித் தவிக்கிறான். அதே நேரத்தில் விவசாயப் பணக்காரர்கள் ஏராளமான வயல்களையும் காணிகளையும் வாங்கி... வாங்கி மென்மேலும் சொத்து சேர்த்து அனுபவிக்கிறார்கள். அவர்களது வயல் சேனைகளில் கூலியாட்களே பெரும்பாலான விவசாயப் பெருமக்கள்.

நித்தியமாக நிலத்தைக் கொத்திக் கொண்டிருப்பவர்களுக்கு சொந்தமான நிலம் இல்லை.

உழைப்பு இருந்தும், திறமை இருந்தும் மண்ணைப் பொன்னாக்கும் கலை தெரிந்தும் எல்லாம் வசதியுள்ளவனின் வயல்களுக்கே பிரயோசனமாகிறது. மிகச் சொற்ப அளவு காணி வைத்துக் கொண்டிருப்பவனும் காலத்தோடும் காலநிலையோடும் போராடினாலும் அவ்வருடத்திற்குத் தேவையான நெல்லை மூட்டை கட்டிப் பத்திரப்படுத்த அவனால் முடியாது.

அதே நேரத்தில் வசதியுள்ளவன் வீட்டில் ஒரு களஞ்சியமே கிடக்கும்.

ஒரு சாதாரண கமக்காரனின் முழுவருட வேட்டையும் கால் வருட கஞ்சிக்கேனும் கை கொடுப்பதில்லை. நாளாந்த உணவை உற்பத்தி செய்யும் உழவனின் பாடு இதுதான்.

''நாச்சியாதுவ' அம்மையார் போல் காணிகளை வாரிவழங்க இன்று எவரும் இல்லை. எங்கள் மாமேதை ஷேக் அப்துல் காதிர் ஜீலானி கூறியது ஞாபகம். ''இந்த உலகமே எனது கரங்களில் வந்துவிட வேண்டும். அனைத்தையுமே பசித்தோருக்காக உணவாய் அளித்திட வேண்டும் என நான் ஆவல் கொள்கி

றேன்...'' என்னும் பொன்னான சிந்தனை இன்று யாருக்கு வரும்?

கிராமங்களில் அளவுக்கு அதிகமாக விவசாயக் காணி வைத்திருப்பவர்கள் அறவே காணி இல்லாதவர்களுக்கு பகிர்ந்தளிக்க முன்வர வேண்டும். அவர்கள் இன்னும் இன்னும் காணிகள் வாங்குவதை தடை செய்ய வேண்டும்.

சேனை கொத்தி, மிளகாய், குரக்கன், இறுங்கு, மரவள்ளி போன்றவை பயிரிடுவது அவனுக்கு சிலவேளைகளில் கைகொடுக்கும். கிராமவாசி அல்லாதவர் கண்களுக்கும் மனத்துக்கும் இவை புலப்படுவதில்லை. அவர்களுக்கு வன்னிப் பிரதேசம் என்று மட்டுந்தான் தெரியும். அடர்ந்த காடுகளில் ஆங்காங்கே அபிவிருத்தியடையாத குக்கிராமங்கள் நிறைய உள்ளன. ஆண்டாண்டு காலமாக அவை பிரச்சினைகளுக்கு மத்தியில் அல்லலுறுகின்றன.

அவர்கள் அனுபவிக்கும் துயரங்கள் அடர்ந்த காடுகளால் மூடப்பட்டிருக்கின்றன.

இவ்வாறாக பிரதேச விவசாயிகள் முன்னேற்றச் சங்கம் ஆக்கபூர்வமாக குரல் கொடுக்க ஆரம்பித்து விட்டது.

எல்லாமே காடும் காடுசார்ந்த நிலத்தின் மைந்தர்களுக்காகத்தான்.

அறுவடைக்காரர்களின் நியாயமான கோரிக்கைகளை இனிமேலும் அறுத்து சூடு மிதித்து துண்டித்துவிட முடியாதவாறு அடித்தளம் ஆணித்தரமாக அமைக்கப்பட்டு வருகின்றது. சுருக்கமாகச் சொல்லப் போனால் பி.வி.மு.ச மிக்க நிதானமாக வெற்றிப் பாதையில் செல்லத் தொடங்கி விட்டது.

இக் கட்டத்தில் பஹார்டீன் மாஸ்டர் ஹலீம்தீனுக்கு எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள ஓர் ஆலோசனையை சொல்லிவிட்டுப் போயிருந்தார். அவன் அதை அமரதாசவுக்கும் காதுகளில் போட்டு வைத்தான்.

''சகல விவசாயிகளினதும் உள்ளங்களில் பி.வி.மு.ச பற்றிய ஆழ்ந்த நம்பிக்கை வளர்ந்து மென்மேலும் அங்கத்துவம் பெருகி, வளரும் என்பதில் ஐயமில்லை. ஆனால் எக்கட்டத்திலும் அதன் இலட்சியப் பாதையில் தடைக் கற்கள் தோன்றிவிடாது பார்த்துக் கொள்ள வேண்டும். பி.வி.மு.சவுக்கு ஒரு மானுட நேயக் கொள்கை வகுக்கப்பட்டிருக்கு. அது எப்பொழுதும் அரசியல், கட்சிகள், இனம், மதம், மொழி, அந்தஸ்து, பாராது பிரதேச விவசாயிகளுக்காகவே போராடும். ஆனால் தீவிரம் துளி கூட இருக்கக்கூடாது. அது எவ்வளவுதான் நியாயம் நம்பக்கம் இருந்தாலும், எம் போக்கு நிதானப் போக்கு, எடுத்ததற்கெல்லாம் ஆக்ரோஷமாகவும் அழுத்தமாகவும் கோரிக்கைகள் விடுத்துக் கொண்டு, வளர்ந்து வரும் நம் சங்கத்திற்கு களங்கம் ஏற்படுத்திக் கொள்ளாமல் விடயங்களை மிக நிதானமாக ஆற, அமர பரிசீலிக் கப்பட்டு, அமைதியான முறையில் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். நமக்குத் தேவையில்லாத விடயங்களுக்கு மௌனம் சாதிப்பது சங்கத்தின் பெயருக்கு நல்லது... ''ஓ... இது மிகவும் அநீதியான செயல்... எமது சங்கம் இதற்கு முன்னின்று போரா டும்'' என்று அவசரப்படுவதை விட''.... ஏதோ... பி.வி.மு.ச முயற்சி செய்து பார்க்கும்... என்று மிகவும் நிதானமாக செயற் பட வேண்டும். எப்போதும் இதையே ஒரு தாரக மந்திரமாக வைத்துக் கொண்டால்... பக்குவப்பட்ட தலைவர்களாய் ஆகி விடுவீர்கள்... ஒரு காலத்தில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் களுக்கும் 'கல்வி' மறுக்கப்பட்டது. ஓரளவு படித்து கையொப் பம் போடத் தெரிந்தால் போதும் என்ற போக்கு இன்று இல்லை. எமது கிராமங்களுக்கும் 'கல்வி' வந்துவிட்டது. கண் திறந்து, சிந்தனை வளர்ந்து வருகிறது... அதன் ஒரு வளர்ச்சிக் கட் டம்தான் பி.வி.மு.ச. வின் தோற்றம். நான் போய் பக்குவப்பட்ட மலையகத் தொழிற்சங்க வாதிகளைச் சந்தித்து, ஒரு சங்கத்தின் விரிவான நடைமுறைகளை வரைந்து கொண்டு வருவதோடு,

சில பெரியார்களின் நூல்களையும் நூலகத்திற்குக் கொண்டு வருவேன். அவையும் எமக்கு வழிகாட்டும்''

பஹார்டீன் மாஸ்டரின் நீண்ட அறிவுரை இளம் தலைவர்களான ஹலீம்தீனுக்கும் அமரதாசவுக்கும் உறுதுணையாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அவர்கள் சில வேளைகளில் ஆவேசமாக கருத்துக்கள் தெரிவித்தாலும் அவற்றை எழுத்தில் வடித்து சமர்ப்பிக்கும் போது, மிக்க பணிவுடன் எளிமையாகத்தான் சமர்ப்பிப்பார்கள்.

பண்டார கிராமசேவகரின் வேண்டுதலுக்கு ஏற்ப 'குளக்காட்டு மாய்மை' தொடர்பாக வலியுறுத்தி கடிதம் போட்ட போதும், நன்கு சிந்தித்து சொற்பிரயோகத்தில் கவனமாக இருந்தார்கள்.

செயலவைக் கூட்டம் தேநீருக்குப் பின் மீண்டும் செயற்பட்டது. சற்று நேரத்தில் நிர்வாக உத்தியோகத்தர்கள் எல்லாம் கலைந்த பின்னர், நந்தாவும், யசவத்தியும் ''பிரதேச விவசாயிகள் முன்னேற்றச் சங்கம்'' என்று சாம்பல் நிறத்தில் அழகாக அச்சிடப்பட்ட 'லெட்டர் ஹெட்' தாள்களில் சிங்கள மொழி மூலம் 'ரைப்' செய்தார்கள். அமரதாசவுக்கும் உறவு முறை இல்லாத நந்தாவும், யசவத்தியும் சம்பள அடிப்படையில் சங்கத்தின் எழுதுவினைஞர்களாக தெரிவு செய்யப்பட்டது திருப்தியாக இருந்தது.

பஹார்டீன் மாஸ்டர் ஊருக்குப் போய்ச் சேர்ந்தபின் நீண்ட கடிதம் எழுதியிருந்தார்.

ஹலீம்தீன் அக்கடிதத்தின் சாராம்சத்தை மிகச் சுருக்கமாக அமரதாசவுக்கு மொழிபெயர்த்து மகிழ்ந்தான்.

'ஒரு விவசாயியின் பிரச்சினைகள், விவசாயியின் பிள்ளைகளுக்குத்தான் நன்கு புரியும். அதுவும் விவசாயியின் பிள்ளைகள் நன்கு கல்வி கற்றிருந்தால், அதைவிட அதிர்ஷ்டம் வேறு எதுவும் இருக்காது.

கற்றபிள்ளைகள் தான் நல்ல வழிகாட்டிகளாக இருக்க முடியும். அந்த வகையில் நீங்களும் அமரவும் வழிகாட்டிகள் மட்டுமல்ல தலைமைத்துவத்துக்கும் பொருத்தமானவர்கள். கல்வித் துறையில் நாளைய பட்டதாரிகள். என்னைப் போன்று நியமனம் கிடைத்ததும் சொந்த ஊரையும் மாவட்டத்தையும் மறந்து வெளி மாவட்டங்களிலேயே சதாகாலமும் இருந்து விடாமல், ஊருக்கும் பிரதேசத்திற்கும் சேவை செய்யும் வாய்ப்பும் கிடைத்தால் அதை மகத்தான தியாகம் என்றுதான் சொல்ல வேண்டும்...'' என்று பாராட்டியிருந்தார் பஹார்டீன் மாஸ்டர்.

மணி மணியான பொன் மொழிகளை வாரி வழங்குவதில் அவர் முன் நிற்பவர். அமரதாசவும் ஹலீம்தீனும் கூட்டாக கடிதம் எழுதினார்கள். ''பார்த்த அளவில் எத்தனையோ சங்கங்களுக்கு ஆலோசகர்கள், அல்லது போசகர்கள் என்று போடுகிறார்கள். ஆனால் அவர்களிடமிருந்து எந்த ஒத்துழைப்பும், ஆலோசனையும் கிடைப்பதில்லை. எல்லாம் வெறும் பெயரளவில் தான். அவர்களைக் காண்பதே அபூர்வம்.

உங்களுக்கே தெரியும் சேர். எத்தனையோ சங்கங்கள் தோன்றியுள்ளன. செயலாளர்கள், பொருளாளர்கள் பெருந்தொகையான பணத்தை சேர்க்கிறார்கள். செயற்குழுக் கூட்டம் என்று எல்லாரையும் அழைத்து, ஏதாவது ஒரு பிரச்சினையைக் கிளப்பி விடுவார்கள். உணர்ச்சிவசப்பட்டு வாக்குவாதப்படுவார்கள். ''சங்கமும் வேண்டாம்... ஒன்றும் வேண்டாம்.....'' என்று உரக்கக்கத்திவிட்டு வெளிநடப்பு செய்துவிடுவார்கள்..... சேர்ந்த தொகைக்கு கணக்கு வழக்கு ஒன்றும் இல்லை. செயலாளர், பொருளாளரின் நோக்கம் நிறைவேறிவிடும்...... இப்படி எத்தனையோ.... எத்தனையோ.....

இந்த நிலையில் நாம் பி.வி.மு.ச. வை தொடங்கி மக்களின் பூரண நம்பிக்கையைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். மிகப் பொருத்தமாக உங்களை தெரிவு செய்துவிட்டோம். தொடர்ந்

தும் உங்கள் ஆலோசனையும், சேவையும், பங்களிப்பும் தேவை. நீண்ட காலமாக நீங்கள் எங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் உருவாக்கிய மாணவர்கள் பலர் முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கிறார்கள். சொல்லப்போனால் பி.வி.மு.ச.வின் அத்திவாரமே நீங்கள்தான். நீங்கள் மட்டும் மீண்டும் எங்கள் பிரதேசத்திற்கு வந்துவிட்டால் தலைமைப்பீடம் உங்களுக்காகவே திறந்திருக்கும்.

இதை வாசித்து, ஒரு வாரத்திற்குப் பின் மீண்டும் பஹார்டீன் மாஸ்டர் மறுமொழி எழுதியிருந்தார்.

பி.வி.மு.ச.வுக்கு பங்களிப்பு என்றும் கிடைக்கும். ஆனால் தலைமைப் பதவிக்கு நான் பொருத்தமில்லை. அதனால் பிரச்சினைகள் தோன்ற இடமுண்டு. அந்த மண்ணில் பிறந்த ஒருவருக்குத் தான் அந்த மண்ணின் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க முடியும். கொடுக்கவும் வேண்டும். நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமே இல்லை. தலைமைத்துவத்துக்கு வேண்டிய தனித்தன்மையும், சிறப்பியல்புகளும், உங்களிடமும், அமரவிடமும் உண்டு. கல்வியும், செயல்திறமையும் நேர்மையும், பெருந்தன்மைகளும் உங்கள் இருவரிடமும் உண்டு. இந்த நேரத்தில் எனக்கு ஒன்று ஞாபகம் வருகிறது. எமது மிக அயல் நாட்டின் பழம் பெரும் தலைவர்களில் ஒருவர் பிரச்சினைக்குரிய விடயங்களுக்கு, நடவடிக்கை அல்லது பங்களிப்பு செய்யாமல் பிற்போட்டு விடுவார். ஒருவிடயத்தை மீண்டும், மீண்டும் பிற்போட்டு, 'நடுநிலை'யைப் பின்பற்றி காலம் தாழ்த்தியதால், பின்னர் நாடு பெரும் பிரச்சினைகளில் முட்டிமோதிக் கொள்ளாமல் தப்பியது. ஆழ்ந்த ஞானமும், விவேகமும், சாணக்கியமும் இருந்தால்தான் இது சாத்தியமாகும்...... அதற்காக வேண்டி எல்லா விடயங்களையும் பிற்போடுங்கள் என்று நான் கூறவில்லை. காலப் போக்கில் தூரதிருஷ்டிப் பார்வையில் எல்லாம் வெளிச்சமாகும். அறிவோடு அனுபவமும் சேர வேண்டும்.

கடந்த காலங்களில் ஆவேசப்பட்டு கிளர்ந்து எழுந்ததனால் தான் பிரச்சினைகள் முற்றி வெடித்தன...... 'குளக்காட்டுப் பிரதேச மாய்மை விடயத்தில் அவசரப்படாதீர்கள். எனக்கு பண்டார கிராம சேவகரிடம் நம்பிக்கை இருக்கிறது. எல்லாம் வெற்றியாக முடியும் என்றும் துணிந்து கூறுவேன்......''

இது பஹார்டீன் மாஸ்டர் இறுதியாக எழுதிய கடிதத்தின் ஒரு முக்கிய பகுதி.

'அவசரப்படக்கூடாது''

''சிக்கலான விடயங்களைப் பிற்போட வேண்டும்'

'ஏதோ... பி.வி.மு.ச. முயற்சி செய்து பார்க்கும்......' போன்ற வாசகங்களை உள்வாங்கிக் கொண்டு, சிரமப்பட்டால் நிச்சயம் தமது முயற்சிகளில் வெற்றியடையலாம் என்று அவர்களால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

அலட்டிக் கொள்ளாமல் சாதாரணமாக எந்த ஒரு பிரேரணையையும், முன்வைத்தாலும் அதற்குப் பின்னால், சிங்கள முஸ்லிம் இணைப்புடன் ஒரு சக்தி வாய்ந்த சங்கம் பின்னின்று குரல் கொடுக்கிறதே..... என்ற உணர்வு நியாயமான கோரிக்கைகளை தட்டிக் கழிப்பதற்கு பின்வாங்கும்.

ஒட்டுமொத்தமாக, அதிகாரமுள்ளவர்களுக்கு, ஒரு விடயத்தில், உடனடியாக இல்லாவிட்டாலும் சற்று பொறுத்து, 'கவனித்து ஆவன செய்ய வேண்டும்' என்று ஒரு பிரக்ஞை தோன்றிவிடும்.

மூத்த தலைவர்களான கிரிபண்டாவும் அப்துல் மஜீதும் கூட்டாக ஒரு கருத்தைச் சொல்லிவிட்டுச் சென்றார்கள். அதுவும் நிதிவிடயமாகத்தான். எல்லா கணக்குப் பதிவுகளும் ஒழுங்காக இருப்பதுடன் கணக்குப் பரிசோதனையும் அறிக்கையும் இருக்க வேண்டும். எமது பி.வி.மு.ச.வைப் பொறுத்தவரையில் கிராமங்களில் அங்கத்தவர்களாகச் சேர்பவர்கள் தமது சந்தாப் பணத்தை பிரதிநிதிகளிடம் சேர்ப்பார்கள். அவர் பொருளாளரிடம் ஒப்படைத்த பின்னர் அவர் வங்கிக் கணக்கில் போட்டு

விடுவார்... மூன்று இடங்களில் பரிசீலிக்கப்படுவதால் பிரச்சினைகள் எழாது. எனினும் எமது கிராமங்களில் சங்கங்கள் விலாசமற்றுப் போனதற்கு நிதி வசூல் காரணமாய் இருந்துள்ளதை நாம் கண்டிருக்கிறோம் என்பதனாலேயே நாம் குறிப்பிடுகிறோம்.

சங்கத்தின் வளர்ச்சிக்கும் அதன் நற்பெயருக்கும் நிதியின் கணக்குப் பதிவுகள் மிக முக்கியம் என்பதையே அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு அன்று மாலை ஹலீம்தீனும் நண்பர்களும் முக்கிய அலுவலாய் அனுராதபுரம் போய் திரும்பியதும், ஹலீம்தீனுக்கு சில முக்கிய கடிதங்கள் எழுத வேண்டியிருந்தது. வழக்கம் போல் மஃறிபுக்குப் பின் நண்பர்கள் ஒருவர் பின் ஒருவராக வந்து சேர்ந்தனர். சமது விதானையும், சவாலும் இரவு ஏழுமணிக்கெல்லாம் இராச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு வந்தார்கள். சேகுவின் வீட்டில் அனைவரும் 'நிக்கவெவ' கிராமத்திற்கு 'விருந்துக்கு' போயிருந்தார்கள். ஆகவே ஹலீம் சேகுவை இராச் சாப்பாட்டிற்கு அழைத்திருந்தான். சமதுவிதானை, சவால், யாசீன், அன்சார்டீன், முபாறக் ஆகிய ஐவரும் வெளியில் அலுவலக அறையில் உள்ள நாற்காலிகளை ஓரமாக ஒதுக்கிவைத்துவிட்டு, பளிச்சென மின்னும் அந்த சிவப்பு நிற சிமெண்ட் தரையில் அமர்ந்து அரசியல் பேசிக் கொண்டிருந்தனர். சற்று நேரத்தில் சேகுவும் ஹலீம்தீனும் சாப்பிட்டு விட்டு வந்து சேர்ந்து கொண்டார்கள்.

சமதுவிதானை ஒரு முக்கிய பிரச்சினையை முன் வைத்தான்.

''குளக்காட்டுப் பிரதேசத்தில் துப்பரவாக காடுவெட்டி வெளிசாக்கியதோட, வேலைகள் நின்டு போனதால, மறுகவும் பத்தைகள் தழைக்க தொடங்கிக் கிடக்கு..... இந்த வருஷம் குளத்த திருத்தி விவசாயம் செய்யாட்டா பத்தைகள் காடாகிடும்.... பொறகு பத்தைக்காடு வெட்ட பெரிய செலவாகும்.....

''அதப்பத்தி நான் பண்டார ஜீ.எஸ் கிட்ட கதைச்சபோது.... ஒன்டுக்கும் கவலைப்படத் தேவையில்ல என்றார். இந்தச் சிக்கல் ஒரு முடிவுக்கு வந்ததும் காடு வெட்டின செலவும்..... கிடைக் குமாம். குளமும் திருத்தப்படுமாம். இன்னும் காலம் கிடக்கு. அடுத்த பருவ மழைக்கு விவசாயம் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கு.....'' என்றான் ஹலீம்தீன்.

''அப்படி ஒரு உறுதிப்பாடு இருந்தா சரி.... இல்லாட்டா பங்குதாரர்களுக்கு நாம பதில் சொல்லியாக வேணும்.

''பங்குதாரர்கள் என்றா யார்? அவர்களும் கிராமவாசிகள் தானே. எப்படியும் நஷ்டம் வரப்போரதில்லையே'' என்றான் சேகு.

''ஓம்... அவகளுக்கு உண்மை நிலை தெரியீந் தானே'' என்றான் முபாறக்.

''டீ.வியில் சிங்கள நாடகம் தொடங்கப்போகுது.... பாக்கப் போறீங்களா.....? என்று ஹலீம்தீன் கேட்டான்.

''... இன்றக்கி பார்க்க இல்ல....'' என்று சேகுவும் யாசீனும் ஏக காலத்தில் சொன்னார்கள்.

ஜெஸ்மினின் அக்கம் பக்கத்து தோழிகளும், வேறு பெண்க ளும் வீட்டின் உள் அறையில் குழுமியிருக்கிறார்கள். அடுத்தாற் போல் வீட்டின் நடு அறைக்குப் போவதாயிருந்தால், நிச்சயம் பெண்கள் வெளியேறிவிடுவார்கள். அவர்களுடைய ரசனையை நாம் ஏன் கெடுப்பான்.....? என்பதை ஊகித்துத்தான் சேகுவும் யாசீனும் டீ.வி. பார்க்க மறுத்திருப்பார்கள்.

''ஹலீம் எனக்கொரு விருப்பம். சில நல்ல தரமான தமிழ் மலையாள கெசற் பீஸ்களைக் கொண்டுவந்து பள்ளிக்கூட மண்டபத்தில் ஒரு டீ.வி.யை போட்டுக்காட்ட வேணும்.....'' என்றான் சேகு.

''நல்ல யோசனைதான். நீயே பொறுப்பெடுத்து செய்ய லாம்.... மாதத்திற்கு ஒரு நல்ல சினிமா...''

''உயர்தரமான படங்களைக் காட்டும் போது எங்கட ஆக்க ளின்ற ரசனையை திசை திருப்பி உயர்த்திடலாம். ஊரிலயும் ஐந்தாறு டீ.வி.செற்கள் தாம் கிடக்கு.... அப்படி பள்ளிக்கூட மண்டபத்தில காட்ற போது ஐம்பது பேர்களாவது கூடுவாங்க'' என்று விளக்கம் கூறினான் சேகு.

''... சரி கலை இலக்கிய முயற்சிகளின் வளர்ச்சிக்கு நீ அடிக்கடி திட்டங்கள் சமர்ப்பிக்கலாமே..... ஆரம்பத்தில சமதுவிதானை எழுப்பிய கேள்விக்கு இன்னொரு யோசனையும் இருக்கு..... இரண்டு மாசத்துக்கு ஒருமுறை எமது ஊரவர்கள பள்ளிக்கூட மண்டபத்துக்கு அழைச்சி சங்கத்திட முயற்சிகள, பெறுபேறுகள, எமது நெலைப்பாட்ட விளக்கினா என்ன? இந்த முறை குளக்காட் டுப் பிரதேச மாய்மை விஷயம், காடு வெட்டியது பங்குதாரர்கள பாதிக்காது என்கிற பண்டார கிராமசேவகரின் உறுதிப்பாடு ஊரவர் கேட்கும் கேள்விகளுக்கு விடையளிக்கிறது..... போன்ற விடயங் கள் இடம் பெறலாந்தானே'' என்று கேட்டான் ஹலீம்தீன்.

''அப்படிச் செய்வது நல்லது. அவ்வப்போது ஊர்மக்களுக்கு எமது நடவடிக்கைகளில் ஒரு தெளிவு பொறக்கும்..... இதை எங்கட கிராமத்தில மட்டும் இல்லாம, ஒவ்வொரு கிராமத்திலும் பிரதிநிதிகளும் செய்யலாம். பிரதேசம் முழுக்கவும் சங்கத்தின் முயற்சிகளயும் நிலைப்பாட்டயும் உறுப்பினர்கள் அறிந்து கொள்ள ஒரு நல்ல வாய்ப்புதானே...'' என்று அந்த யோசனையை வலியுறுத்திப் பேசினான் சவால்.

எல்லாருமே அதற்கு உடன்பட்டனர். அடுத்த செயலவைக் கூட்டத்தில் இதனை ஒரு தீர்மானமாக நிறைவேற்ற அவர்கள் முடிவெடுத்தனர்.

அத்தோடு சேகுவுக்கு மற்றுமொன்றும் சுமத்தப்பட்டது. விரும்பியவர்களை தெரிவு செய்து ஓர் இலக்கிய குழுவை அமைத்து, எமது மாவட்டத்தில் அல்லது பிரதேசத்தில் கலை இலக்கிய முயற்சிகள் பற்றி ஆய்வு செய்து அறிக்கை தயாரிக்கும்

பாரிய பொறுப்பு அது!

''எமது தேடல் முஸ்லிம் கிராமங்களில் மட்டுந்தானே....?''

''ஆமாம்..... பிரதேசத்தில் முஸ்லிம்களின் தமிழ் இலக்கிய முயற்சிகள். நாம் மூத்தவர்களை வயது அடிப்படையில் இனங் காண வேணும். அவர்கள கௌரவிக்க வேணும். முக்கியமான வர்கள விட்டுட்டு மேலெழுந்தவாரியா இருக்கக்கூடாது.

இலக்கியப் போட்டிகள் நடாத்தி பரிசளித்து புதியவர்கள ஊக்குவிக்க வேணும். எவ்வளவு காலம் போனாலும் பரவா யில்ல, கிராமம் கிராமமாக ஊடுருவிச் சென்று இலைமறை காயாக இருப்பவர்கள இனங்கண்டு கொள்ள ஏலும். தமிழ்த்தின போட்டிகளில எமது பிரதேச மாணவர்கள் குறிப்பிடத்தக்க வெற்றியீட்டுறாங்க என்றது உங்களுக்கு தெரியுமா....?

''.......''

''இப்ப இப்ப எங்கட பிரதேச ஏளந்தாரிமாரும் புதுக் கவிதை யில நல்ல ஆர்வம் காட்டி வாராங்க'' என்றான் யாசீன்.

''... அப்ப எங்கட பிரதேச விவசாயிகள் முன்னேற்றச் சங்கத் திலே இலக்கியத்துக்கும் இடம் கிடைச்சிட்டதே...'' என் றான்...சமதுவிதானை.

''அன்சார்தீன், ஒனக்கும் புதுக்கவிதையில் ஆர்வம் இருக்கு தானே? நான் ஒன்னட்டே ஒரு கேள்வி கேட்கட்டுமா...?''

''கேளுங்க...... தெரிஞ்சா சொல்றன்''

''சேகுவோ வேறு யாரோ சொல்லக்கூடாது.... அதாவது..... ஒரு பிரபல கவிஞர் எங்களப்போல விவசாயிகள ரெண்டு வரீல உச்சத்துக்கே உயர்த்திட்டார். அந்த ரெண்டு வரிகளயிம் சொல்லே லுமா?

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழு துண்டு பின் செல்பவர்''-என்று. நான் திருக்குறளப் பற்றிக் கேட்கல்ல. புதுக்கவிதையில.....?

''.........''

''இப்ப......சேகு......?''

''யாசீன்.......?''

''வேறு யாராவது......''

''என்னப்பா எல்லா கவிஞர்களும் மௌனமாயிட்டீங்க.... அப்ப நானே சொல்லட்டா.....?

''சொல்லலாம்.......'' என்றான் சேகு.

''நாங்கள் சேற்றிலே கால்வைத்தால் தான் நீங்கள் சோற்றிலே கை வைக்க முடியும்''

''அடேயப்பா..... எங்க மண்ணுக்கு எவ்வளவு பொருத்தமான வரிகள நீ அப்படியே நினைவில் வைத்திருக்கிறியே.... நான் நெனச்சேன் உனக்கு வரலாறு மட்டுந்தான் தெரியுமென்று...''

''நான் கவிஞன் அல்ல.. கவிதையை ரசிப்பவன்... அவ்வளவு தான்.....'' என்றான் ஹலீம்தீன்.

எல்லாருமே ஒரு கணம் பிரமித்துப் போய் நின்றார்கள்.

வழக்கத்திற்கு மாறாக அன்று நண்பர்கள் கலைய இரவு பத்துமணிக்கு மேலாகி விட்டது.

# பதினான்கு

கிட்டத்தட்ட முப்பது வருடங்களுக்கு முன் பத்துப்பேர் களைக் கொண்ட ஒரு முஸ்லிம் கோஷ்டியினர் வேட்டைக்குச் சென்றார்கள். அவர்கள்தான் முதன் முதலில் அந்தப் பயங்கர காட்டுப் பகுதியில் உட்பிரவேசித்து இந்தக் குளத்தை தரிசித்த வர்கள். அது இயற்கையான ஒரு நீர் நிலை.

சுமார் பத்து ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட அந்த வனத்திற் குள் யாரும் பிரவேசித்திருக்க மாட்டார்கள். குளமும் குளத்தைச் சார்ந்த அந்தப் பென்னம் பெரிய பரப்பும் யார் கண்ணிலும் படாதிருந்தது பெரும் ஆச்சரியம். அந்த நேரம் மாய்மையை எப்படி நிர்ணயித்தார்களோ அவர்களும் அதனுட் பிரவேசித் திருக்க மாட்டார்கள்.

அந்த நீர்நிலையில் தண்ணீர் குடிப்பதற்கு மிருகங்கள் நட மாடும் தடயங்கள் மட்டும் கிடந்தன. ஒருவேளை தண்ணீர் குடிக்க வரும் மிருகங்கள் ஓய்வெடுக்கும் 'வசந்த மாளிகை' யாக இருக்குமோ! மிக அற்புதமான அந்தக் காட்டுப் பகுதி மனிதனின் கண்களுக்கு புலப்படாமல் போனது ஏனோ?

வேட்டைக்காரர்கள் சும்மா இருப்பார்களா? அந்த மண்ணைத் தோண்டி ஆய்ந்து பார்த்தார்கள். அவர்கள் அடைந்த அந்த மகிழ்ச் சியை என்னவென்று சொல்வது? அது விவசாயத்திற்கு மிகவும் அற்புதமான மண் என்று தீர்மானித்தார்கள். அந்த மண்ணுக்குப் பொருத்தமான விதை நெல்லையும் தீர்மானித்து விட்டார்கள்.

கடலில் கண்டெடுக்கும் முத்தைப்போல் வனத்திலும் இப்படியான முத்துக்கள் கிடைக்கின்றன.

ஊருக்குத் திரும்பியதும் இச்செய்தி காட்டுத் தீயைப் போல் பரவி அனைவரது உள்ளங்களிலும் மகிழ்ச்சியான பரபரப்பை ஏற்படுத்தியது. அக்கம்பக்கத்து கிராமங்களுக்கும் பரவியது அது''

பலரும் பல முறை சென்று பரிசோதனைகளை நடத்திப் பார்த்தார்கள். பெரும் வெற்றி. முன்னோர்கள் விவசாயம் செய்திருப்பார்கள் என்று கூறுவதற்கு நீண்ட ஆய்வு செய்ய வேண்டும். அந்த நிலப்பரப்பை குளக்காட்டுப் பிரதேசம் என்று அழைத்தார்கள். நாளடைவில் அது அதற்குப் பெயராகி விட்டது.

ஆனால் சிங்கள கிராமவாசிகள் வேட்டைக்குப் போய் பார்த்துவிட்டு வந்த பிறகுதான் பிரச்சினை கிளம்பியது.

அந்த நிலப்பரப்பு அவர்களது மாய்மைக்கு உட்பட்டதென்று சில முதியவர்கள் உரிமை கோரினர். ஆனால் முப்பது வருடங்களுக்கு முன் வேட்டைக்குப் போய் வந்து உரிமைகோரிய அந்த முதியவர் எவரும் இன்று உயிரோடில்லை. ஆனால் அவர்கள் கிளப்பிவிட்ட பிரச்சினை மெள்ள மெள்ள வளர்ந்து இரண்டு கிராமத்தைச் சேர்ந்தவர்களும் பிளவுபட்டு, அடிதடி மோதலில் முடிந்து அந்தப் பகுதிக்கு எவரும் போக முடியாதவாறு நிலைமைகள் உருவாகியிருந்தன.

காலப்போக்கில் இரு கிராமத்தவர்களும் தாம் உண்டு, தமது வயற்காணிகள் உண்டு என்று நட்பும் இல்லாமல் பகையுமில்லாமல் தங்கள் தங்கள் காரியங்களைப் பார்த்துக் கொண்டு மௌனமாகவே வாழ்ந்து விட்டனர். ஆனால் இரு கிராமங்களிலிருந்தும் புதிய வாரிசுகள் நகர்ப்புறங்களில் கல்வி கற்கச் சென்றதால் சந்திப்புகளும், நட்புறவும் மெள்ள வேரூன்ற ஆரம்பித்தன. தத்தமது கிராமங்களின் நிர்வாக சபைகளிலும் இளைஞர்கள் ஈடுபட அவர்களிடையே ஓர் ஒன்றிணைப்பு அரும்பி ஓர் இலட்சியப் பாதைக்கு அவர்களை இட்டுச் சென்றது. கிராமத்தின் பொது

விடயங்களில் தனித்து ஒதுங்கி இயங்குவதைவிட கூட்டு முய ற்சிகளினால் சாதிக்கலாம் என்ற உண்மையை இரு கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்களும் உணர்ந்து கொண்டனர்.

அமரதாசவும் ஹலீம்தீனும் தடைக்கற்களைத் தாண்டிவந்த புதிய நட்சத்திரங்கள்.

அமரதாச நண்பர்களும், ஹலீம்தீன் நண்பர்களும் ஒரு நாள் அனுராதபுர நகரின் பிரதான ஹோட்டல் ஒன்றின் மேல் மாடியில் சந்தித்து விரிவாக ஆராய்ந்தனர். முக்கியமாக பஹார்டீன் மாஸ்டர் வரவழைக்கப்பட்டிருந்தார்.

இரு கிராமங்களுக்கும் தெரியாமல் நடந்த ஓர் இரகசிய மகாநாடு என்றுதான் அதனைச் சொல்லவேண்டும். அன்று சுமார் நான்கு மணித்தியாலங்கள் கலந்துரையாடி, பல அடிப் படையான தீர்மானங்களை எடுத்தனர்.

புதிய நம்பிக்கை அலைகளை பரவச் செய்து இரு கிராமங் களையும் பிரித்த பகைமையை மூலவேருடனே பிடுங்கி எறிய முடிவு கட்டிவிட்டிருந்தனர்.

'குளக்காட்டுப் பிரதேசம்...' காட்டுப் பேய். நீண்ட காலமாக நட்புறவுடன் வாழ்ந்து வந்த இரு கிராமங்களையும் இரண்டாகப் பிளந்து, விழுங்கப் பார்க்கின்றது. அது வெற்றி கொள்வதற்கு முன், நாம் அதனை இரண்டாகப் பிளந்துவிட்டால், எல்லாப் பிரச்சினைகளும் அதற்குள் சங்கமமாகி விடும். மீண்டும் எமது உறவுகள் தழைத்தோங்கும். இளைஞர்கள், குளக்காட்டுப் பிரதேசத்தை மையமாக வைத்து செயற்படத் தொடங்கினர்.

சிங்கள கிராமத்திலிருந்து , அமரதாச. கிரிபண்டனின் முயற்சி யால் முதல் விருந்தோம்பலே பெரும் வெற்றியளித்திருந்தது.

ஹலீம்தீனும் சேகுவும் இரண்டுமணியோடு வெறிச்சோடிப் போயிருந்த பாடசாலையின் திண்ணையில் உட்கார்ந்து உரை யாடிக் கொண்டிருந்தனர். ஹலீம்தீன் யாசீனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

''அந்தப் பயங்கர காட்டுப் பேயை வசப்படுத்துவது என்பது இலகுவான காரியமல்ல.... அதற்குப் பல மந்திரங்களைக் கற்று மிகவும் நிதான சிந்தனையுடன் அணுகவேணும்.

நமது மந்திரங்கள் சக்தி வாய்ந்ததாக இல்லாவிட்டால் நாம் அந்தக் குளத்தில் வீழ்ந்து மூழ்கி விடுவோம்.....'' என்றான் ஹலீம்தீன்

அமரதாசவைச் சந்திக்கச் சென்ற யாசீன் வந்து சேர்ந்தான்.

சிங்கள கிராமத்தில் அமரதாசவின் தகப்பன் கிரிபண்டனுக்கும், ஒரு சின்ன விசயத்திற்காக, பரம்பரை பரம்பரையாக ஒற்றுமையாக வாழ்ந்துவந்த இரு கிராமத்தவர்களுக்குமிடையில் கீறல் விழுந்து போனது, மனத்திற்குப் பெரும் கவலையாகத் தான் இருந்தது. எப்படி இதைத் தீர்த்து வைக்கலாம் என்று அவர் தனித்து யோசித்துக் கொண்டிருந்த கட்டத்தில்தான் மகன் அமரதாசவுக்கும் அந்தப்புனிதமான ஒருமைப்பாட்டு எண்ணத்தின் சாயல் இருப்பதைக் கண்டு, கிரிபண்டன் தனக்கு ஒரு துரும்பு கிடைத்திருப்பதை எண்ணி மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்து போனார். தந்தையும் மகனும் கிராமத்திற்குள் மெள்ள மெள்ள இயங்கினர்.

முஸ்லிம் கிராமத்தின் தலைவர் அப்துல் மஜீதுக்கு கிராமங்கள் ஒருமைப்படும் என்ற எண்ணம் முதலில் இருக்கவில்லை. ஏனெனில் 'குளக்காட்டுப் பிரதேசம்' ஒரு தேவையில்லாத பிரச்சினை. முன்பு இருந்த கிராமசேவகர்கள் மூலம் பலமுறை முயன்று கைவிடப்பட்ட ஒரு விடயம். இருந்தாலும் ஹலீம்தீனின் முயற்சிகளுக்கு அவர் குறுக்கே நிற்கவில்லை.

ஹலீம்தீனின் நண்பர்கள் அவனுக்கு உறுதுணையாக நின்றனர்.

சேகு கடைசியாக, ''ஹலீம்தீன் தலைவர் வாழ்க!.....'' என்று ஒரு 'ஜோக் அடித்து' விட்டுச் சொன்னான்.

''நீ... மட்டும் அந்தக் குளக்காட்டுப் பேயை, அடக்கிவிட்டியோ அதற்குப் பொறகு மற்ற எல்லாப் பேய்களும் சக்தியில்லாம உன் காலடியில தான் சுருண்டு கிடக்கும்... பொறகு நூறு வருஷத்துக்கு

நீ தான் எங்கட ஒரே தலைவர்......''

யாசீன் வந்ததும் சிரித்துவிட்டு

''கவிஞர் சேகு என்ன சொல்கிறார்?''

நடந்தவற்றை ஹலீம்தீன் சுருக்கமாகச் சொன்னான்......

''குளக்காட்டுப் பேயை அடக்குவது சுலபமான விஷயம் அல்ல. காடுவெட்டி விவசாயம் செய்வதாயிருந்தாலும், அது எவ்வளவு பெரிய பிரச்சினைகளை கொண்டிருக்கிறது..... என்பதனை குளக்காட்டுப் பிரதேசம் இப்ப நிரூபித்து இருக்குது தானே...'' என்றான் யாசீன் சேகுவைப் பார்த்து.

''இந்த மட்டுக்கும் பண்டார கிராம சேவகர் முஸ்லிம் பகுதியின் மாய்மைகள ஆராய்ந்து ஒரு முடிவு எடுத்திருப்பார்.... எண்டு நம்பலாம்...'' என்றான் ஹலீம்.

''இப்படியான சிக்கல்கள் இருந்ததால தான் மூத்தவங்க குளக்காட்டுப் பிரதேசத்த கைவிட்டிருப்பாங்க.....'' என்று தன் அபிப்பிராயத்தைக் கூறினான் சேகு.

அன்சார்டீனும் நண்பர்களும் வந்தனர்.

'இந்த எருமைகளுக்கு வேலையில்ல, நாங்க எவ்வளவோ முயன்று, கைவிட்ட விசயத்த, இதுகள் தூக்கிப் பிடித்துக் கொண்டிருக்குதுகள்... என்று கூறி இன்று 'கப்சிப்' ஆகிவிட்ட கிழடுகளுக்கு ஒன்று சொல்ல வேண்டும்.

நாங்கள் சேற்றுக்குள் படுக்கும்
எருமைகளல்ல
நாங்கள் சேற்றில் முளைத்த
செந்தாமரைகள்......''

என்று கூறி இளைய தலைமுறையினரின் முயற்சிகள இழிவு படுத்தக் கூடாது என்பதை உணர்த்த வேண்டும்'' - சேகு சற்று உணர்ச்சிவசப்பட்டுச் சொன்னான்.

''சேகு..... உணர்ச்சி வசப்படாதே. நாங்க அதை நிரூபிச்சி காட்டுவோம்'' என்றான் ஹலீம்தீன்.

''ஒரு கவிஞனைப் பார்த்து உணர்ச்சிவசப்படாதீங்க என்று சொல்ல முடியாது....... உணர்ச்சி வசப்பட்டால் தான் கவிதை பிறக்கும்'' என்றான் யாசீன்.

''எப்படியெண்டாலும் தலைவர் ஹலீம்தீனுக்கு பொறுமை தேவதான். இன்று பி.வி.மு.ச.வின் தலைவர் நாளைக்கு மாகாண சபை அல்லது பாராளுமன்ற உறுப்பினர்...'' ஹலீம்தீன் பட்டென்று இடைமறித்தான்.

''எங்கள் மாவட்டத்தில, நூற்றுக்கும் அதிகமான முஸ்லிம் கிராமங்கள் கிடக்கு. அது போலவே சிங்கள கிராமங்களுக்கும்... பி.வி.மு.ச. இன்னும் தவழும் பருவம்தான்..... முழுமையாக மாவட்டத்தை பிரதிநிதிப்படுத்தவில்லை. கிராமங்களின் பிரதிநிதிகள் மூலம் மெள்ள மெள்ளத்தான் விஸ்தரிப்பு வேலைகளைச் செய்ய வேணும். அடுத்து சேகு, பி.வி.மு.ச. வின் யாப்பை அவ்வளவு விரைவில் மறந்து விடாதே.... நாங்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் அரசியலில் புகுந்து விடக் கூடாது. எங்கள் இலட்சியமே கிராமங்களின் அபிவிருத்திதான். எங்கள் ஆலோசகர்களுள் ஒருவரான கரீம் மாஸ்டர் அனுபவ ரீதியில் கண்ட உண்மையைத்தான், வலியுறுத்தி, பி.வி,மு.ச. அரசியலில் மூழ்கிவிடக் கூடாது -அதாவது அரசியலில் கட்சி சார்பற்ற நடுநிலைமை வகிக்க வேண்டும் என்று ஆலோசனை வழங்கி இருக்கார்.''

''நான் சங்கத்தின் சட்டதிட்டங்களை மறக்கவில்லை. பி.வி. மு.ச. தேர்தலில் போட்டியிட்டு விவசாய பெருமக்களின் அபிமானத்துடன் மாகாண சபைக்குச்சென்றால் கிராமங்களுக்கு நிறைய பங்களிப்பு செய்யலாமே என்று மனதில் ஓர் அபிப்பிராயம் தோன்றியது அதுதான்.....'' என்றான் சேகு.

''நீ அபிப்பிராயப்படுவதிலும் உண்மை இல்லாம இல்லை... ஆனால் நமது சங்கம் இன்னும் படிப்படியாக வளர்ச்சியடைய வேணும்..... அப்படி வளர்ச்சியடைய நாம கிராம மக்களுக்காக

சாதிக்க வேணும். நீ சொல்வது போல மிக நீண்ட காலமாக இருந்து வரும் நம்மட குளக்காட்டு பிரச்சினைய ஒரு முடிவுக்குக் கொண்டு வந்துட்டா நாம ஓரளவுக்கு முன்னுக்குப் போகலாம். அதுவும்...... ரெண்டு கிராமங்களின்...... அதாவது நம்மட சிங்கள முஸ்லிம் கிராமங்களின் நல்லமதிப்பை மட்டுந்தான் பெற முடியும். ஆனால் நம்மட மாகாணத்தில அல்லது பிர தேசத்தில உள்ள நூற்றுக்கணக்கான கிராமங்களுக்கு குறிப் பிடத்தகுந்த சேவைசெய்து நல்ல பெயரும் செல்வாக்கும் பெறவேணும்...... சேவைமூலம் 'யானைப் பலம்....' மிக்க ஒரு சங்கமாகத் தோற்ற வேண்டும். இதற்கெல்லாம் கால அவகாசம் தேவையில்லையா......?'' இப்படியாக ஹலீம்தீன் ஒரு நீண்ட விளக்கத்தை அளித்தபின் சேகுவுக்கு ஒரு தெளிவு பிறந்தது.

நண்பர்கள் எல்லாரும் வந்து சேர்ந்து விட்டார்கள்.

ஹலீம்தீன் கேட்டான்.

''நாளைய பொதுக்கூட்டம் பற்றி ஊர்மக்களுக்கு சொல்லி யாச்சு தானே?''

''காவின் எழுத அழைக்கிற மாதிரி, வீடு வீடா போய் அழைச் சிட்டோம். வெத்தில மட்டும் தான் வைக்கல்ல...'' என்றான் யாசீன்...''

எல்லாரும் சிரித்தனர்.

''அப்ப நாங்க இந்த மண்டபத்த நாளைய கூட்டத்துக்கு ஒழுங்கு செய்து விட்டுப் போவம்... நானும் சேகுவும் வந்த ஒடனே குவார்ட்டஸுக்குப் போய் அதிபர்கிட்ட அனுமதி எடுத்துட்டோம்..... பள்ளிவாசலில் மஃறிப் தொழுகைக்குப் பொறகும் ஒரு பொது அறிவித்தல் கொடுத்தாகரியம் எல்லா ருக்கும் திரும்ப ஞாபகப்படுத்துவது போல இருக்கும்.''

மண்டபத்தைப் பெருக்கி, கதிரைகளை வரிசை வரிசையாக ஒழுங்குபடுத்தி விட்டு தலைமை தாங்குவதற்கு ஒரு மேசையும் கதிரையும் போட்டனர். ''நாளை காலையில் கூட்டம் தொடங்கு

வதற்கு முன்னர் மேசை விரிப்பும் பூவாசும் போடலாம், என்று யாசீன் கூறினான்.

சமதுவும், சவாலும் விடைபெற்றுச் சென்றனர். மஃறிப் தொழுகைக்குப் பின் கூட்டத்தைப் பற்றி அறிவிக்கும் பொறுப்பை சிரமேற் கொண்டு சேகுவும் பள்ளிவாசலை நோக்கி நடந்தான்.

ஹலீம்தீனும் யாசீனும், அன்சார்டீனும் நாளைய நிகழ்ச்சி நிரலை தயாரிப்பதற்கு முன் சில விடயங்களை தெளிவுபடுத்திக் கொண்டனர். நாளைய கூட்டம் முழுக்க பி.வி.மு.ச.வின் கொள்கை விளக்கம், அது எடுத்த ஆரம்ப முயற்சிகளும் தற்போதைய நிலைப்பாடும் முக்கியமாக குளக்காட்டுப் பிரதேசத்தின் நிலை... இவை பற்றிய கலந்துரையாடல் தான் இடம் பெற வேண்டும்... என்றெல்லாம் நிகழ்ச்சி நிரலை ஸ்திரப்படுத்திக் கொண்டனர்.

''அன்சார்... மண்டபத்த பூட்டு, திறப்புக்கொத்தை அதிபர் கிட்ட குடுத்திட்டு, அம்முக்குட்டி கடையில கிரிகஹட்ட குடிச்சிட்டு.... அப்படியே ஒபிசுல இருந்து கதைப்பம்..... என்ன''

தேநீருக்குப் பின் அலுவலகத்திற்குச் சென்று இருக்கைகளில் ஆற அமர இருந்து கொண்டனர்.

ஹலீம்தீனின் தாயார் வந்து அலுவலகத்தை எட்டிப் பார்த்தாள்.

''... ம்மா... எங்களுக்கு தேத்தண்ணி வாணாம்... அம்முக்குட்டியில குடிச்சிட்டம்.....''

''.... ஓ..... ஒகளுக்கு 'அம்முக்குட்டி' கடையில குடிக்காட்டி பத்தியமில்லதானே.''

''அப்ப....... ம்மா..... சொணங்கி தாங்க......''

''மகனின் வார்த்தைகளை செவிமடுத்த ஆயிஷா நாச்சி தன் வேலைகளுக்காக வீட்டின் உள்ளே செல்ல, யாசீன் பக்கம் திரும்பிய ஹலீம்,

''இனி...... யாசீன் போன விசயம் எப்படி......?''

''இப்ப சொல்லத்தான் ஈந்த..... வூட்ட போன நேரம் அமர இருக்க இல்ல... பியசீலி ஒன்ன எதிர்பார்த்துக் கொண்டிருக்கா... நா அவளோட பேசிக்கிட்டு இருந்தப்பதான் அமர வந்த.....

ஞாயிற்றுக்கிழம சிங்கள கிராமத்தில ஒரு விஷேட 'பன தேசனா' இருக்காம்.

கஹட்டகஸ்திகிலியா பிரதான வீதியில அரசியல் மீட்டிங். இது அந்தக் கூட்டத்தின் நோட்டீஸ்.....'' யாசீன்.

பொக்கட்டிலிருந்து எடுத்துக் கொடுத்தான்.

''எல்லா பக்கங்களில இருந்தும் விவசாய பெருமக்களயே எதிர்பார்ப்பாங்க. இது பொருத்தமான நாள் என்று நினைக் கிறன்.....'' என்றான் யாசீன்.

''ஒரு பெரிய இடத்து கல்யாண கந்தூரி வீடும் அன்றக்கி இருந்திருந்தாக்கா சொல்லி வேலல்ல..... சரி...... சரி எல்லாம் பொருந்தி வாரதாயிருந்தா..... அது நடக்கவே நடக்காது...... அப்ப சரி யாசீன், இந்த இரண்டு வைபங்களும் நடைபெறுகிற ஞாயிற்றுக்கிழமையில தான் எங்கட சங்கத்தின் 'ஒரு நாள் அடையாள ஆர்ப்பாட்டத்தை' நடாத்த, சொல்லி வைத்தாற் போல மிகப் பொருத்தமான நாள்..... நாளக்கி எங்கட ஊர் மக்கள் கூட்டம் முடிந்தவுடனே நாம அமரதாசவ சந்திச்சி வேகமாக இயங்க வேண்டும்... எமது சகல முஸ்லிம் கிராமங் களின் பிரதிநிதிகளுக்கும் அறிவித்து விட வேண்டும். முதல் வேலையாக ''எமது பிரதேச விவசாயிகள் முன்னேற்றச் சங்கம் சக்தி வாய்ந்தது. அந்தப் புனிதமான ஒருமைப்பாட்ட, ஒரு அடையாளமாக பகிரங்கப்படுத்துவதற்காகத்தான் இந்த அடை யாள ஆர்ப்பாட்டம். ஞாயிற்றுக்கிழமை எல்லா கிராமவாசி களும் முடிந்த வரையில வெள்ளை உடுப்பு உடுத்தி அந்தந்த கிராமத்து பள்ளிக்கூடத்தில அல்லாட்டி ஒரு பொது எடத்தில அணி வகுத்து அமைதியான முறையில் உரத்து கோஷமிட வேண்டும்.'' என்று விளக்கிக் கூறினான் ஹலீம்தீன்.

''கையில் ஏந்தும் போஸ்றர்களில என்ன எழுத வேணும்...?'' என்று யாசீன் வினவினான்.

''வசனங்களை நாம் தயாரித்து அனுப்பவேணும்..... எல்லா விவசாயிகளும் இதில கலந்து கொள்வது கட்டாயம்..... அந்த ஞாயிற்றுக்கிழமைய சகல கிராமவாசிகளும் இந்த ஆர்ப்பாட்டத் துக்காக ஒதுக்கி வைப்பது தவிர்க்க முடியாததொன்று. அவர்கள வேறு எந்த தொழிலிலோ வைபவங்களிலோ கலந்து கொள்ள விடக்கூடாது. அத்துடன் இந்த ஆர்ப்பாட்டம் எவருக்கும் ஒரு துன்புறுத்தலாக அமைந்து விடவும் கூடாது. முற்றிலும் சாத்வீக மாக அமைய வேணும். கிராமத்துப் பிரதிநிதிகள் மிகவும் விழிப்போட கண்காணிக்க வேணும்......''

''காலையில எத்தனை மணிக்குத் தொடங்கி, எத்தனை மணிக்கு முடிக்க வேணும்.....?'' அன்சார்டீன் கேட்டான்.

''... ஓ... அது முக்கியமானது... காலையில ஒன்பது மணிக் குத் தொடங்கி மாலை நான்கு மணிக்கு முடிக்க வேணும்...... ஆறுமணித்தியால ஆர்ப்பாட்டம் ....... மாலை மூன்று மணிக்கு முடித்து, நான்கு மணிக்குள் வூடுகளுக்கு போக வேணும்.

''அப்ப சாப்பாட்டுப் பிரச்சினை?'' - யாசீன் கேட்டான்.

அதற்கு அன்சார்டீன் ஒரு அபிப்பிராயம் தெரிவித்தான்.

''இது உண்ணாவிரதம் அல்ல......?

விவசாயிகள் வயலுக்குப் போனாலும் பெண்கள் பிள்ளை குட்டிகள் வயலுக்கு தீன் தண்ணி கொண்டு போறது போல... இங்கயும் கொண்டு வந்து கொடுக்கலாந்தானே..... ஒரு பொது நன்மைக்கு பெண்களும் பிள்ளைகளும் பங்களிப்பு செய்த மாதிரியும் இருக்குமே....''

''அது மிக... மிக நல்ல யோசனை இதுக்குதான் கலந்துரை யாடல் வேணும் எண்டு நான் அடிக்கடி சொல்றது...'' என்றான் ஹலீம்தீன் மிக்க மகிழ்ச்சிப் பெருக்குடன்.

''நான் முதல்ல யோசிச்சது என்னெண்டா பள்ளிக்கூடத்தி லேயே பகலுணவை சமைப்பதற்கு... ஆனா அதைவிட அன் சாரின் ஐடியா வெரி குட்.....''

''அப்ப நாளக்கி நம்மட பொதுக் கூட்டத்திலயும் எங்கட ஆக்களுக்கு விரிவாக அறிவிச்சா நல்லதுதானே.'' என்று கேட் டான் யாசீன்.

''இல்ல யாசீன் அது ஒரு சம்பிரதாயமில்ல... நாம அமர தாசவுடன் கலந்து ஒரு முடிவ எடுப்பதுதான் முறை... பைக்கில் போய் வருவமா...? மெய்தான் திரும்பி வர எப்படியும் பத்து மணி பிந்தும்......''

அன்சார்டீன் பள்ளி வாசலுக்குப் போக வெளிக்கிட்டான்.

யாசீனும், ஹலீம்தீனும் தலையில் 'ஹெல்மட்டுகளை' சுமத்திய போது-

கிரிபண்டாவின் 'டொயோட்டா' வந்து நின்றது.

அமரதாசவும் பியசேனவும் வந்திறங்கினர்.

''அமர என்ன திடீரென்று......? நாங்க அங்க வரத்தான் இது..... 'பைக்கை' வெளியே எடுக்க......''

''வார ஞாயிற்றுக்கிழம எங்கட ஒரு நாள் அடையாள ஆர்ப் பாட்டத்திற்கு பொருத்தமாயிருக்கு..... அதுபற்றி பேசத்தான் வந்தோம்.....'' என்றான் அமர.

''நல்ல பொருத்தம்...... இவ்வளவு நேரம் இதுபற்றி நானும், யாசீனும் அன்சாரும் கலந்துரையாடித்தான் அங்கு உன்னட்ட வர இப்ப தயாரானோம்......

தாங்கள் கலந்துரையாடி எடுத்த முடிவுகளை அப்படியே ஹலீமும், யாசீனும் சிங்கள மொழியில் எடுத்துரைத்தார்கள்.

''எப்படியும் ஞாயிற்றுக்கிழமை நடக்கவிருக்கும் அந்த இரு பொது வைபவங்களுக்கும் நம்ம கிராமவாசிகள் இல்லாமல் வெறிச்சோடிப் போக வேண்டும். சகல விவசாயிகளும் நாம்

நடத்தப் போகும் ஆர்ப்பாட்டத்தில் தான் முழுக்க முழுக்க கவனம் செலுத்தியாக வேணும். அப்பதான் நம்மட பி.வி.மு.ச. வின் சக்தி இனங்காண வழி பொறக்கும்....'' என்றான் அமரதாச.

''அதுக்காகத்தான் நாம ஆர்ப்பாட்டத்தை ஆறு மணித்தியாலமாக வைக்க விரும்புறம்.... ஞாயிற்றுக்கிழமை என்றபடியினால... நம்மட ஆக்கள் காலையில ஆறு மணி பஸ்ஸுக்கே அனுராதபுரத்துக்கு புறப்பட்டாங்க எண்டா மாலை கஹட்டகஸ்திகிலியா வந்து அந்த வைபவத்தில கலந்து கொண்டு தான் ஊர்களுக்கு வரக்கூடும். அதுக்கு வாய்ப்பளிக்காம தான் நாங்கள் ஆர்ப்பாட்ட நேரத்தை நிர்ணயிக்க வேணும்....'' என்று விளக்கம் கூறினான் ஹலீம்தீன்.

''அப்ப சரி..... நான் முதல்ல யோசிச்சன் ஆறு மணித்தியாலம் கூடிப் போச்சுதோ என்று.... பரவாயில்ல. காலை ஒன்பது மணியிலிருந்து ஆறு மணித்தியாலம் ஆர்ப்பாட்ட நிகழ்வுகளில் கலந்து கொண்டு எப்படியும் நான்கு மணிக்குள்ள கலைந்து விட வேண்டும்.. இனிமேலும் விவசாய பெருமக்களை ஏமாற்றக் கூடாது. ஏமாற்ற முடியாது அவர்களது நியாயமான பிரச்சினைகளை ஆராய்ந்து ஏதாவது செய்யாவிட்டால் அவர்களது உள்ளங்களிலிருந்து எம்மை தூக்கித் தூர எறிந்து விடுவார்கள்.....' என்று அரசியல்வாதிகளுக்கு உணர்த்த வேண்டும்.

வணக்கஸ்தலங்களுக்கு பக்தர்களும் குறைந்துவிடுவார்கள்... என்றும் கூறி வைக்க வேண்டும்'' என்று அமரதாச சற்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறினான்.

''அமரே ஆவேசப்படக் கூடாது''

பஹார்டீன் மாஸ்டர் உனக்காகத்தான் அந்தப் பொன் மொழிகளை எழுதினாரோ என்னவோ.....?''

''கோபம்... ஆவேசம் வராவிட்டா அவன் மனிசன் இல்லையே...?''

''கட்டாயம் வரவேணும்... ஆனா பொறுமையைக் கடைப்

பிடித்து அடக்கப் பழகிக் கொள்ள வேணும்.....''

''அதுவும் சரிதான்...... ஐ எம்..... சொரி.....''

அதற்குப் பிறகு அவர்கள் போஸ்ரரில் இடம் பெற வேண்டிய வசனங்க்ளைத் தீர்மானித்தார்கள்.

எல்லா கிராமங்களிலும் ஒன்று போலவே இருக்க வேண்டும். சிங்களத்திலும் தமிழிலும் எழுதினால் போதும்.

வசனங்கள் எப்படி இருக்க வேண்டும் என்று கேட்டான் யாசீன்.

''விவசாயிகளை வாழ விடு''

''விவசாயிகளின் பிரச்சினைகளை உடன் தீர்த்துவை.....'

''பிரதான சாலைகளிலிருந்து கிராமங்களுக்குப் பிரியும் பாதைகளை செப்பனிடு''

'குளக்காட்டுப் பிரதேச மாய்மைக்கு உடன் ஒரு முடிவைக் காண வேண்டும்'

இப்படியாக சுமார் முப்பது கோரிக்கைகள் போஸ்ரர்களில் இடம் பெற வேண்டும்.

அவற்றை வெள்ளை அல்லது மஞ்சள் நிற பிரிஸ்டல் போர்டு களில், கறுப்பு நிறமையினால் பெரிய எழுத்துக்களில் எழுதி, தடிகளில் பொருத்தி, உயர்த்திப் பிடித்துக் கொண்டு அடிக்கடி ஆட்கள் மாறி மாறி கோஷமிட வேண்டும். இதர நேரங்களில் அவர்கள் வரிசை வரிசையாக உட்கார்ந்து இருக்க வேண்டும்..... வட்டம் வட்டமாக இருந்தும் அமைதியாக பேசிக் கொண்டி ருக்கலாம். வெள்ளை உடை மிக முக்கியம். அடிக்கடி அவர் களுக்கு கோப்பி தேநீர்களை பி.வி.மு.ச. வழங்கும். மாலை நான்கு மணிக்குள்.... அதாவது ஆர்ப்பாட்டம் மூன்று மணிக்கு முடிந்ததும்.... நான்கு மணிக்குள் தத்தமது இல்லங்களுக்குச் சென்றிட வேண்டும். கலைந்து விட்டதும் வேறு வைபவங் களுக்குச் செல்லக்கூடாது.

''பொது மக்களுக்கு எப்ப அறிவிக்க வேணும்?'' பியசேன இடைமறித்தான்.

''அது முக்கியம், அமரே. உன்ட அபிப்பிராயம் என்ன....?'

''வார ஞாயிற்றுக்கிழமைதானே அடையாள ஆர்ப்பாட்டம்... சனிக்கிழமை வரைக்கும் நாம எல்லா ஏற்பாடுகளையும் இரகசியமாகவே வைத்துக் கொள்ள வேணும்.... தப்பித் தவறி அந்தக் கூட்டங்கள ஒழுங்கு செய்யும் அமைப்பாளர்களின் செவிகளுக்கு எட்டிவிட்டால் நாம நடத்தும் அடையாள ஆர்ப்பாட்டத்துக்கு ஒரு கனதி இருக்காது.

''ஏன் அப்படி......?''

''அவங்க உடனே தங்கட கூட்டங்கள ரத்து செஞ்சி பிற்போடக் கூடும். கிராமவாசிகளின் பிரசன்னம் இல்லாட்டா அவர்களது கூட்டம் சோபை இழந்துவிடுமே என்பதற்காகத்தான்.....''

''அப்படியாயிருந்தா சனிக்கிழமை மாலை நான்கு மணிக்குப் பின் எமது கிராமங்களின் பிரதிநிதிகள் ஊர் விவசாயிகளுக்கு அறிவித்து வேண்டிய ஏற்பாடுகள் செய்யலாந்தானே?''

''அப்படித்தான் செய்ய வேணும். வேறு வழி இல்ல.... மெய்தான் வெள்ளை உடைகள் பிரச்சினையைக் கிளப்பலாம்... அதைப் பிரதிநிதிகளே சமாளித்துக் கொள்ளட்டுக்கும்...''

''அப்ப பிரதிநிதிகளுக்கு ஒரு கருத்தரங்கு வைக்க வேணுமா...?''

''தேவையில்ல.... அதற்கு நேரமும் இல்ல..... விஷயம் அம்பலமாக இடம் கிடக்கு.....'' அங்கத்தவர்கள் அணிதிரண்டு வர பிரதிநிதிகளே யுக்திகளை கையாள்வது தான் முறை.

அமரதாசவின் கண்கள் கைக்கடிகாரத்தைப் பார்த்து விட்டன. அவன் புறப்படமுன் சொன்னான்.

''நான் எல்லா விஷயங்களையும் சிங்களத்தில் 'ரைப் செய்து சுற்றுநிருபமாக பிரதிநிதிகளுக்கு அனுப்பவென்று தயாரிக்கிறேன். நாளைக்கு உங்கட பொதுக்கூட்டம் முடிந்ததும் வர

முடியுமா...? நாம் வேனில் சென்று பிரதிநிதிகளை சந்திப் போம்... நாளை தவறினால் நாளை மறுநாள் போவோம்..... எப்படி......?''

''முடிந்தவரை முயற்சி செய்வோம் என்றான் ஹலீம். பின் யாசீனைப் பார்த்து ''யாசீன், நாளை காலையில பஹார்டீன் மாஸ்டருக்கு, புறப்பட்டு வருமாறு ஒரு தந்தி கொடுத்து விடு வோம். என்ன?''

''சரி நாங்க சென்று வருகிறோம்.....'' குட்நைட்''

''குட்நைட்'

''புழுதியைக் கிளப்பிக் கொண்டு வேகமாகப் புறப்பட்டுச் சென்றது அமரவின் வேன்.

# பதினைந்து

சிங்கள கிராமத்தைப் பொறுத்தவரையில் அமரதாசவுக்கு ஆதரவு பெருகி வருகிறது.

பெட்டிசன்காரர்களுக்கு வால் அறுந்து விட்டது. மௌனம் சாதிக்கிறார்கள்.

இப்பொழுது முழுக்க முழுக்க அமரதாசவின் கிராம முன்னேற்றத் திட்டங்களுக்கு ஒத்துழைத்து வருகின்றனர். இளைஞர்கள் ஆதரவு வழங்கும் போது மூத்தவர்கள் எதிர்க்கிறார்கள் என்பதல்ல. அவர்களுக்கு எதிலும் அக்கறை இல்லை. தாம் உண்டு தமது வயல்கள் உண்டு என்று ஒரு போக்கு.

'எப்படியும் நல்லது நடந்தால் போதும்' எங்கட பிள்ளைகள் படித்தவர்கள், நாச காரியங்கள் செய்ய மாட்டார்கள்' என்று ஒரு புதிய கோணத்திலிருந்து சிந்திக்கிறார்கள்.' ஹொந்தக் சித்த வெனவானம் ஹொந்தய்... ஜயவேவா....'' என்று அவர்கள் வயதுக்கேற்ற அனுபவமும் தெளிவும் இருப்பதால் கருத்துக்களை நிதானமாகத் தெரிவித்தார்கள். ஒரு சின்ன குக்கிராமத்தில் நடக்கிறது பரந்த வெளியுலகத்திற்குத் தெரியவா போகிறது. பல்லின மக்கள் மத்தியில் ஓர் ஒருமைப்பாடு முகிழ்ந்து விட்டால் அதனால் எல்லாருக்கும் நன்மைதானே. ஆனால் ஒரு முட்டுக்கட்டை விழுந்து விட்டால் யாருக்கு என்ன லாபம்.....?' காட்டவத் கிசிம ப்ரயோஜனயக் நே....'

முஸ்லிம் கிராமவாசிகளின் நாடியைப் பிடித்துப் பார்க்கத்தான் நாளைய பொதுக்கூட்டம். இது வெற்றியென்றால் ஆர்ப்பாட்டம் மிகப் பெரிய வெற்றி.

ஹலீம்தீன் நண்பர்கள் கிராமத்து நிர்வாகப் பொறுப்பை ஏற்றுள்ளனர்.

குளக்காட்டு மாய்மை விடயமாக அவர்கள் சிந்தித்து, திட்டமிட்டு செயற்படுகின்றனர்.

இருண்ட காட்டுப் பிரதேசத்தில் அவர்கள் செல்லும் திசை சரியானதா.

பி.வி.மு.ச. மூலம் பிரச்சினைகளை முன் வைப்பது சரியானதா...?

செல்லும் வழி ஒளிமயமானதுதான் என்பதை திட்டவட்டமாக நிரூபிக்கப் போவது இந்தப் பொதுக்கூட்டம் தான். மாறுபட்ட அபிப்பிராயங்களைத்தான் அவர்கள் கூர்ந்து செவிமடுப்பார்கள். அவர்கள் முதிர்ந்த அனுபவமுடைய தொழிற்சங்கவாதிகள் அல்ல. பஹார்டீன் மாஸ்டர் போன்றோரின் வழிகாட்டல்கள் அவர்களுக்கு துணை நிற்கும். ஒரு முன்னணி தொழிற்சங்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி ஆய்வு செய்யத்தானே அவர் போயிருக்கிறார். நிச்சயம் அவர் எங்களுக்கு சமர்ப்பிக்கப் போகும் ஆய்வு அறிக்கை பி.வி.மு.ச.வுக்கு வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.

பொதுக்கூட்டம் காலை ஒன்பது மணிக்கு ஆரம்பமாகியது. கிராமவாசிகள் அனைவருமே மிகுந்த ஆர்வத்துடனும் அக்கறையுடனும் வருகை தந்திருந்தனர்.

இது ஹலீம்தீன் நண்பர்களுக்கு சொல்லப் போனால் கிராமத்தின் புதிய இளம் நிர்வாகிகளுக்கு மிகவும் தெம்பாகவும், பெரும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. தமது வேலைத்திட்டங்களுக்கு இந்தப் பொதுக்கூட்டம் முழு அங்கீகாரம் வழங்கியிருப்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டியது.

கூட்டத்திற்கு மூத்த தலைமுறையைச் சார்ந்த அப்துல் மஜீத் தலைமை வகித்தார். அவரது தலைமையுரையின் ஆரம்பமே பெரும் ஆரவாரமாக இருந்தது.

''சகோதர சகோதரிகளே......

பி.வி.மு.ச. மூலம் நாங்கள் சமர்ப்பித்த கோரிக்கைகளில் அரைவாசிக்கு மேல் நிறைவேற்றப்படும் என்று நம்பகமாகத் தெரிய வருகிறது.....'' என்று சொன்னதுதான். 'அல்லாஹு அக்பர்' ஆரவாரம் வானைப் பிளந்தது.

அதற்குப் பின் அவரது உரை சுருக்கமாக இருந்தது.

''ஆதிகாலந் தொடக்கம்..... எங்கட கிராம மக்களுடைய பிரச்சினைகளுக்கு பரிகாரம் இல்லாம, கட்டுப்பாடு இல்லாம, அவிழ்த்து விடப்பட்ட மாடுகள் போல் இருந்தோம். அதுக்குக் காரணம் எங்களுக்கிடையே கிராம ஒத்துமை, வழிகாட்டல் இல்லாம, கல்வி இல்லாம போனதே.... நாங்க எப்பொழுதும் ஏழை விவசாயிகளாக பிரச்சினைகளைச் சுமந்து வாழ்நாட்களைக் கழிச்சிட்டம். எங்களுக்கு ஏன் இந்த இழி நிலை? என்று யோசித்துப் பாத்தீங்களா? வறுமையின் சுமைதாங்கிகளாகத் தானே வாழ்ந்திருக்கிறம்.

ஒரு சந்தோஷம் என்னென்டா கிராமந்தோறும் பள்ளிக்கூடங்கள் வந்தன. கல்விக்குத் தடைபோடும் முயற்சிகள் நிண்டு போயின.... இப்ப எங்கட பிள்ளைகளும் கல்வியில் முன்னேறியிருக்கிறாங்க.... அதனாலதானே இன்டு இப்படியொரு பிரதேச விவசாயிகள் சங்கத்தைப் பாக்க முடீது.

இந்தக் கட்டத்தில நான் ஒன்ட பகிரங்கமா சொல்லிவைக்க .விரும்புறன்.... கல்வி கற்கத் தவறினவங்க வேலை வசதிகள் இல்லாத வங்க தயவு செஞ்சி முதலாளிமாருக்கு கள்ள மாடு ஏத்தவோ.... வேறு கள்ள யாபாரம் செய்யவோ போகாதீங்க. குறிப்பாக கொழும்புக்கு கள்ள மாடுகள் ஏத்தி அந்த யாபாரத்தை வெற்றிகரமா செய்றதுக்கு, உங்களுக்கு வேண்டிய உடுபுடவை, சாரன்சட்டை பணம் மற்றும் வேண்டிய தெல்லாம் செஞ்சி கொடுத்து உங்களை தீய வழியில வளர்த்து அவங்க வழிகெடுக்கிறாங்க, உங்கள நரகக் குழியில தள்ளிபோட்டடத பிற்காலத்தில்

தான் அறிந்து கைசேதப்படுவீங்க.

இதற்கு மேல் நான் கருத்துக்கள நீட்ட விரும்பல்ல. இளை ஞர்களின் ஒத்துமையால இப்படி ஒரு சங்கத்தை ஆரம்பிச்சி வெற்றிநடை போட முனைந்திருப்பது, விவசாயிகளின்ட வாழ்க்கையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்படுறதுக்கான அறிகுறிகளே. இந்த விதத்தில சகலரினதும் ஒத்துழைப்புடன் இயங்கிக் கொண்டு போனா நல்ல எதிர்காலம் உண்டு என்பதில எனக்கு எவ்வித சந்தேகமும் இல்ல. பி.வி.மு.ச. வின் செயல் திட்டங் களுக்கு தொடர்ந்து ஒங்க ஒங்கடை ஆதரவத் தரும்படிக்கு கேட்டுக் கொள்கிறன்.....''

இவ்வாறு மூத்த தலைவர் தமது மனக் கிடக்கையை வெளிப் படையாகக் காட்டி, தம் இருக்கையில் அமர்ந்து கொண்டார்.

சேகுவின் வரவேற்புரையைத் தொடர்ந்து ஹலீம்தீனின் உருக்கமான உரை 'ஆப்பு' வைத்தாற்போல் இருந்தது.

''உலகில் மிக உயர்ந்த தொழில் உழவுத் தொழில்தான். எனக்கு ஒரு பழைய செய்யுள் ஞாபகத்திற்கு வருகிறது.

''ஆற்றங்கரையின் மரமுமரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே - ஏற்றம் உழுதுண்டு
வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு''

இவ்வரிகளுக்கு விளக்கம் கூறிய போது அனைத்து விவசாய உள்ளங்களும் மெய் மறந்து ரசித்தன இரசித்து.... பெருமை கொண்டனர் அவர்கள்.

''ஆகவேதான் இத்தகைய உன்னதமான தொழிலை செய்யும் நாம் வாழ்க்கைப் பிரச்சினைகளை வென்று தலை நிமிர்ந்து வாழ வேண்டும்..... தலைவர் குறிப்பிட்டது போல் கிராம ஒற்றுமை இருந்தால், எமது சங்கத்தின் திட்டமிட்ட வழிகாட்டல் மூலம் படிப்படியாக முன்னேற முடியும்..... முதலில் எங்களது

குளக்காட்டுப் பிரச்சினை தீர்ந்து விட்டால், அடுத்து சகலருக்கும் காணிப் பகிர்வு விடயமாக போராட முடியும். எமது பிரதேசத்தின் எல்லாக் கிராமங்களிலும் இப்பிரச்சினை உழைப்பாளிகளைச் சுரண்டி பஞ்சைகளாகவே நிற்க வைக்கின்றன. சில விடயங்களை வெளிப்படையாகக் கூறி பரிகாரம் காணலாம். சில விடயங்களுக்கு மறைமுகமான முயற்சிகள் மூலம் தான் பலன் கிடைக்கும். தன்னலமற்ற செயற்றிறன்மிக்கவர்களின் ஒத்துழைப்புதான் எங்களது கிராமங்களின் வெற்றிக்கு மூலதனம். சிங்கள முஸ்லிம் கிராமங்களின் ஒருமைப்பாடு புதுமையாக இருந்தாலும் அது மிகவும் முக்கியமான ஒரு திருப்புமுனை. மன்னர்கள் காலத்தில் சிங்கள முஸ்லிம் ஒற்றுமை மேலோங்கியிருந்ததை நிரூபிக்க வரலாற்றுப் பக்கங்களை புரட்டிக் காட்டினோம்.

தனிப்பட்ட முறையில் எமது கிராமத்தை எடுத்துக் கொண்டால், எமக்கு உடனடியாக கவனம் செலுத்த வேண்டியிருப்பது இந்தக் குளக்காட்டுப் பிரச்சினைதான். அது சுமுகமாகத் தீர பண்டார கிராம சேவகரின் உதவியுடன் முயற்சிகள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. ஒரு சாதாரண பெட்டிசன் வந்து எமது முயற்சியை குழப்பி விட்டது என்று நீங்கள் மனம் தளரத் தேவையில்லை. பொதுச் சேவையில் இறங்கும் போதும் அதில் வெற்றியின் அறிகுறிகள் தென்படும் போதும் இப்படியான பெட்டிசன்களும், கெட்ட பெயர்களும் வந்து தடைக்கற்களாய் நிற்பது ஒன்றும் புதிதல்ல. இவை இயற்கை. அந்தப் பெட்டிசனுக்குப் பின்னால் ஒரு பின்னணி இருக்கின்றதா என்று திட்டவட்டமாக ஆய்ந்து கொண்டிருக்கிறோம். பகைவர்கள் அந்நியர்கள் அல்ல. நாளாந்தம் எமது முயற்சிகளைக் கூர்ந்து அவதானித்துக் கொண்டிருப்பவர்களாகவும் இருக்கலாம். குளக்காட்டில், வறுமையைப் போக்குவதற்காக அல்ல.... தமது செல்வத்தைப் பெருக்குவதற்காக இரண்டு ஏக்கர் நிலம் கிடைக்க வாய்ப்பு கிடைக்காது என்று அறிந்தால் அவரும் பகைவராக, பழிவாங்கு

பவராக மாறலாம். தனக்குக் கிடைக்காவிட்டால் மற்றவனுக்கும் கிடைக்கக்கூடாது என்ற சுயநலக் கொள்கை. ஆனால் நிச்சயமாக இந்த மாய்மை பிரச்சினை வெகுவிரைவில் ஒரு நல்ல முடிவைக் கொண்டு வரும் என்று மாத்திரம் முன்கூட்டியே சொல்லிவைக்க விரும்புகிறோம்.... என்று கூறிய ஹலீம் பின் பி.வி.மு.ச வின் நோக்கங்கள் பற்றி விளக்கம் கூறினான்.

''இதற்கு மேல் நான் குறிப்பாக சொல்வதற்கு ஒன்றும் இல்லை. இனி சபையோர் அபிப்பிராயம் தெரிவித்து பேசலாம்... கேள்விகள் எழுப்பி சந்தேகங்கள் இருந்தால் தெளிவு படுத்திக் கொள்ளலாம்.....''

சபையில் பலரும் பி.வி.மு.ச. வையும் நிர்வாகக் குழுவையும், சிங்கள முஸ்லிம் ஒற்றுமையையும் பாராட்டிப் பேசினர். தலைவர்கள் இளைஞர்களாய் இருந்தாலும் பெரிய சிந்தனையாளர்கள், பக்குவப்பட்டவர்கள். அவர்களது முயற்சிகள் பூரண வெற்றியடைய எமது வாழ்த்துக்கள் என்றும் வாழ்த்தினர்.

முழு ஒத்துழைப்பையும் தருவதாக ஒர பிரேரணையை நிறைவேற்றிக் கொண்டனர்.

''எங்கட பரம்பர ஆக்கள் அனுராதபுர மாவட்டத்துக்கு வந்த சரித்திரத்தை மாதத்துக்கு ஒருமுறை சொல்ல பொருந்தி இரண்டு மாசந்தான் நடந்தது. இரண்டாம் முறை வெளியிலிருந்து ஹுசைன் சேர் வந்து அருமையான தகவல்கள் கொடுத்தார். அதற்குப் பிறகு தொடரவில்லை. ஏனோ.....?'' என்று பாடசாலை செல்லும் மாணவன் அஷ்ரப் ஆவலுடன் கேட்டான்.

''உங்கள் ஆர்வத்துக்கு நன்றி. உங்களுக்கு தெரியும், நானும் நண்பர்களும் கிராமம் எதிர் நோக்கும் முக்கிய வேலைகள் காரணமாக.... ஒடித்திரிகிறோம்.... அப்படியும் நாங்கள் நேரம் இல்லை என்று சொல்லவில்லை. எங்கள் இக்கிரிகொல்லாவ பிரதிநிதி வரலாற்று ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்.

கிராமம் கிராமமாகச் சென்று வாய்மொழி மூலம் தகவல்கள் சேர்த்துக் கொண்டிருக்கிறார்.... பின்னால் அவை நூல் வடிவ மாக வெளியாகும்..... 'கெசற் பீஸ்களாக'வும் பதிவாகும்.... முடிந்தால் நீங்களும் அவருக்கு உதவியாக இருங்கள்.

வேறு சில கேள்விகளுக்குப் பதில் இறுக்கினான் ஹலீம்தீன்.

அனைவரது முகங்களிலும் திருப்தி நிலவியது.

''உங்கள் ஆலோசனைகளைப் பெறுவதற்காகவும், நாங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை சகல கிராம வாசிகளுக்கும் தெரிவிப்பதற்காகவும் தான் நாங்கள் இப்படி யான கூட்டங்களைக் கூட்டுகிறோம்.

ஒவ்வொருவரும் சமுகம் தந்து நாங்கள் நடைமுறைப்படுத் தும் திட்டங்களை ஆழ்ந்து அவதானித்து, உங்கள் அபிப்பிராயங் களையும், ஆலோசனைகளையும் தெரிவிக்க வேண்டும்'' என்று கூறினான் ஹலீம்தீன்.

அஹ்மதுலெப்பை ஒரு முக்கியமான அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

''குளக்காட்டுப் பிரச்சினய நான் ஆழமாக யோசித்துப் பார்த் தன். அதை சுமுகமாக தீர்க்கலாம் என்டு சொல்றீங்க..... அதுபற்றி நான் பேசல்ல. கிராமவாசிகள் எல்லாரையும் பங்குதாரராக சேக்காம.... பரம்பரையாக ஒரு துண்டு விவசாயக் காணி கூட இல்லாதவங்களுக்கு மட்டும் பிரிச்சிக்குடுத்துட்டா... என்ன...?''

இதுவரைக்கும் அமைதியாக இருந்த கூட்டத்தில்....... கச்சான் காற்றின் வீச்சைப்போல ''ஆ...... அப்படிச் செய்ய ஏலாது...'' என்ற சத்தமும், கசமுசாவும் கிளம்பத் தொடங்கியது.

அமைதியாக இருக்கும்படி கூறி விட்டு ஹலீம்தீன் நிதான மாகக் கூறினான்.....

''முன்பு ஒரு கூட்டத்தில் நாம் எடுத்த தீர்மானத்தின் படி ஊரிலுள்ள எல்லா பிரதான குடியிருப்பாளர்களும் பங்கு

தாரராகச் சேர வேண்டும் என்று விரும்பியதால் எண்பத்தைந்து வீதமானோர் பங்குதாரராகச் சேர்ந்தது மட்டுமல்ல, காட்டையும் வெட்டி முடித்துவிட்டோம். அதற்குரிய கணக்கு வழக்கு, சட்டதிட்டங்கள் வங்கிக் கணக்கு எல்லாமே அந்த அடிப்படையில்தான் அமைத்து விட்டோம். காணியும் பொது..... ஆக அஹ்மது லெப்பை அவர்களின் யோசனை நல்லதாயிருந்தாலும் நடைமுறைச் சிக்கல் ஏராளம்... இது பொதுக்காணி. எல்லாருக்கும் பயன்படட்டுமே. குளக்காட்டுப் பிரச்சினை முடிந்ததும், ஆண்டாண்டு காலமாக நிலம் இல்லாமல் இருக்கிறவங்களுக்கு பிரிச்சிக் கொடுப்பதற்காக தலா ரெண்டேக்கர் நிலம் கேட்டு எமது கோரிக்கையை முன்வைப்போம்......

பொதுக் காணியில் வரும் வருமானத்தில் ஊர்ப் பள்ளி வாசலுக்கு ஐந்து வீதத்தை நன்கொடையாக கொடுக்க வேண்டும். என்று தீர்மானிக்கப்பட்டது.

ஊர்மக்கள் அதனை மனப்பூர்வமாக ஏற்றனர்.

யாசீன் முக்கியமான ஒரு கருத்தை முன்வைத்தான்.

''என்ன காரணத்தைக் கொண்டும் பொதுக்காணியை விற்கவோ, ஈடுவைக்கவோ முடியாது......''

''அந்தக் காணிக்கு உறுதி......?''

''முஸ்லிம் கிராமத்து விவசாயிகளுக்கு உரியது......''

''இந்த சந்தர்ப்பத்தில, நான் அவதானித்த ஒன்ற சொல்லத்தான் வேணும்....

நிர்வாகத்துக்காக கிராமவாசிகள் என்று இல்லாம... கிராமவாசிகளின் நலனுக்காக நிர்வாகத்தை அமைத்திருக்கிறீங்க... கிராமவாசிகளின் அபிவிருத்திக்காக நிர்வாகம் வளஞ்சி கொடுக்குது.

பாராட்டுக்கள்....'' இப்படிக் கருத்துச் சொன்னவர் ஒரு சாதாரண விவசாயி ஆதம்பாவா.

வீட்டுக்கு ஒரு பிரதிநிதியாய் வந்த ஒவ்வொருவரிடமிருந்தும் கையொப்பத்தை வரவுப் புத்தகத்தில் பதிவு செய்வதில் சேகுவும் யாசீனும் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். செயலாளருக்காக அன்சார்டீன் அதிமுக்கியமான தகவல்கள், தீர்மானங்கள் நிறை வேறிய பிரேரணைகள் முதலியவை காற்றோடு காற்றாய் பறந்து விடாமல் அறிக்கைப் புத்தகத்தில் பதித்துக் கொண்டிருந்தான்.

அன்றைய நிகழ்ச்சி நிரல் எதிர்பார்த்ததைவிட பெரு வெற்றி யாக முடிந்ததில் கிராமத்து நிர்வாகக் குழுவினருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அனைவரது உள்ளங்களிலும் ஒரு பூரிப்பு இழையோடி யது. புதிய இளம் நிர்வாகிகள் மீது எவ்வளவு தூரம் நம்பிக்கை வைத்துள்ளார்கள் என்பதையும், கூர்மையான அவதானத்தை யுமே இது படம் பிடித்துக் காட்டியது.

கூட்டம் கலைந்து அவரவர் இல்லங்களுக்குச் செல்லும் போதும் மணிமணியான கருத்து முத்துக்கள் சிந்திய வண்ண மிருந்தன.

''தொண்டு செய்றதென்பது எல்லாராலும் முடியாத காரி யம்...'' என்றார் ஒருவர்.

''அதற்கு நல்ல மனம் வேணும்'' என்றார் மற்றொருவர்.

''உண்மைதான் பணம் தேவையில்ல மனந்தான்''

''......அத்துடன் தியாக உணர்வும் செயல்திறனும் ஒன்று சேர வேணும்.....'' என்றார் ஓர் அனுபவசாலி.

''சரியாகச் சொன்னீங்க....'' எல்லாரும் பாராட்டினர்.

# பதினாறு

"**நா**ளைக் காலை ஒரு ஆர்ப்பாட்ட கூட்டம்' என்ற அழைப்பை ஏற்று ஞாயிற்றுக்கிழமை, காலை ஏழு மணியிலிருந்தே விவசாயிகள் வரத்தொடங்கினர். பாடசாலை 'கேற்றுக்கு' வெளியே சிரமதானம் மூலம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது அந்தப் பெரிய திடல். ஒருவர் பின் ஒருவராகவும், குழுக்களாகவும் பிரசன்னமாகிக் கொண்டிருந்தனர். அவர்களிடையே ஆர்வமும் மகிழ்ச்சியும் இரண்டறக் கலந்திருந்தது. பெண்களுக்குத் தனிப்பிரிவு அமைக்கப்பட்டிருந்தது. வீட்டுக்கு வீடு பிரதான குடியிருப்பாளர் மட்டுந்தான் என்றில்லாமல் பலரும் கலந்து கொண்டார்கள்.

சொல்லிவைத்தாற் போல், சரியாக காலை ஒன்பது மணிக்கு இஸ்மாயில் மௌலவியின் 'கிராத்' ஒலித்தது. இதற்கிடையில் சுமார் இருபத்தைந்து முப்பது பெண்கள் வயது வித்தியாசங்களை வெளிக்காட்டிக் கொள்ளாமல் தூய வெண்ணிற 'பர்தா' ஆடைகள் அணிந்து 'கிராத்' ஓதல் முடியும் வரைக்கும் ரோட்டில் நின்று அது முடிந்ததும் அமைதியாக தமக்காக ஒதுக்கப்பட்ட இடத்திற்குச் சென்று பன்பாயில் அமர்ந்தனர். தொடங்கி அரைமணி நேரத்திற்குள் தொண்ணூறு வீதத்தினர் சமூகமளித்து வருகைப் பதிவேட்டில் கைச்சாத்திட்டிருந்தனர். பெரும்பாலும் வயது வந்த பெண் பிள்ளைகள் மட்டும் வீட்டுக்குக் காவல் இருந்தனர். மத்தியான சமையல் வேலை அவர்களின் தலையில் சுமத்தப்பட்டிருந்தது. அந்த வழியில் அவர்களது மறைமுகமான பங்களிப்பும் பாராட்டிற்குரியது.

எப்படியும் சிலர் சமையல் வேலைகளை நேரத்திற்கு முடித்து விட்டு, ஆர்ப்பாட்டத்தில் நடப்பவற்றை புதினமாக வந்து பார்க்கத் தவறவில்லை. இத்தகைய அடையாள ஆர்ப்பாட்டம் கிராமங்களுக்குப் புதிதுதான். இதற்கு முன் இப்படி ஒரு நிகழ்வு நடந்ததில்லை. இப்படி ஒரு பிரதேசத்தின் கிராமங்களை உள்ள டக்கிய ஒரு சங்கமும் உருவாகவில்லை. காலம் காலமாக விவசாயிகளின் பிரச்சினைகளை முன்னெடுத்துச் செல்ல ஒரு பலம் வாய்ந்த அமைப்பு மிகவும் அத்தியாவசியம் என்பதையும், ஒவ்வொரு விவசாயியும் விழிப்படைந்து விட்டதையும் இவ் வார்ப்பாட்டம் உணர்த்துகிறது. அத்தோடு இது சாத்வீகமாய் நடந்து கொண்டிருப்பதே சிறந்த எடுத்துக்காட்டு.

விவசாயத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் இளைஞர்களின் பங்களிப்பும், கண்ணியமான நடத்தையும், 'போஸ்டர்களை' உயர்த்திப் பிடித்து உரத்து வாசிப்பதில் கையாண்ட முறையும், கடைப்பிடித்த ஒழுக்கமும், மிக அற்புதம். யார் அவர்களுக்கு கருத்தரங்கு வைத்து 'இப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்லித் தந்தார்கள்.....?

அதுதான் கிராமத்து இளைஞர்களின் இயல்பான பண்புகள்.

குடும்பத்துப் பெண்கள் கணவன்மார்களையும் பெரிய பிள்ளைகளையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடச் செய்து அவர்கள் தேநீர், உணவு என்று அடிக்கடி வீடுகளுக்கு போவதும் வருவது மாய் நடந்து கொண்டிருந்தார்கள்.

ஏற்கனவே அவர்கள் பாடசாலை முன்றிலில் தான் இந்த அடையாள ஆர்ப்பாட்டத்தை நடத்த வேண்டும் என்று திட்ட மிட்டிருந்தார்கள். ஆனால், கரீம் மாஸ்டர் மிக நுணுக்கமாகச் சிந்தித்து, அரசாங்க பாடசாலை முன்றிலை இவ்விடயத்திற்குப் பாவிக்கக்கூடாது என்று காரணம் காட்டினார். உடனே ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டு சகல கிராமத்துப் பிரதிநிதிகளுக் கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

''நாளை பின்னக்கி.....'' ஒரு பிரச்சினை முளைத்துவிட்டால் பாடசாலை அதிபர் விசாரணைக்கு உட்படுத்தப்படக் கூடா தல்லவா.....

அடையாள ஆர்ப்பாட்டம் ஒரு சாதாரண சம்பவம்தான். ஒரு சாதாரண நிகழ்வுதானே தேசத்தின் பிரச்சினையாக உருவெடுக் கிறது.

பாடசாலை வேலிக்கு முன்னால் ஒரு நீண்ட செவ்வகம்தான். ஒரு பொட்டல் வெளி இராப்பகலாய் சிரமதான வேலை செய்து அதை பளிச்சென அமைத்துவிட்டார்கள். ஒரு மைதானம் போல் அமைந்து விட்டது. பிரதான வீதியை ஒட்டினாற் போல் இருந் தாலும் போக்குவரத்துக்கு இடைஞ்சலாய் இருக்கவில்லை.

சகலரும் பாய்கள் கொண்டு வந்து விரித்து அமர்ந்திருந்தனர்.

ரோட்டில் செல்லும் வாகனங்கள் வேகத்தைத் தளர்த்தி, 'இங்கே என்ன நடக்கிறது' என்று போஸ்டர்களை வாசிக்கத் தவறவில்லை. 'அந்த வகையில் அது ஒரு நல்ல பிரச்சாரம் தான்' என்று ஹலீம்தீனும் யாசீனும் அபிப்பிராயப்பட்டார்கள்.

''பள்ளிக்கூடத்த தவிர்த்ததும் நல்லதுக்குத்தான்......'' என்று யாசீன் மகிழ்ந்தான்.

''நேரம் பத்து முப்பது. தேத்தண்ணிய குடிச்சிப் போட்டு கஹட்டகஸ்திகிலியாவுக்குப் போய் வருவமா...? சேகுவையும் சமது விதானையையும் பொறுப்பாக இருக்கச் சொல்லு, நான் வீட்ட போய் 'பைக்க' எடுத்துட்டு வாரன். சற்று நேரத்திற்குப் பிறகு மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோலை ஊற்றிவிட்டு வந்தான் ஹலீம்.

அன்சார்டீன் தேநீர் பரிமாறிக் கொண்டிருந்தான்.

தேநீருக்குப் பின் ஹலீம்தீனும் யாசீனும் புறப்பட்டார்கள்.

கிராமங்களைச் சுற்றி மேற்பார்வையிட்டு இந்த நேரம் பஹார்டீன் மாஸ்டர் அனுராதபுரத்தில் டெலிபோனுக்குப்

பக்கத்தில் இருப்பார். சரியாக பதினொான்றரைக்கு கஹட்டகஸ் திகிலியாவுக்கு 'கோல்' எடுப்பார். சுற்றுவட்டார கிராமங்களின் நிலைப்பாட்டை அவர் மூலம் அறிந்ததும்..... பியசேன மூலம் அமரதாசவுக்கு செய்தி அனுப்ப வேண்டும்.

திட்டமிட்டபடி, இன்னும் நேரமிருக்கிறது என்ற எண்ணத்தில் அவன் நிதானமாகத் தான் சைக்கிளைச் செலுத்திக் கொண்டிருந்தான்.

வழியில் ஒரு தனிமையான இடத்தில் பற்றைகள் அசைந்தன. மிருகங்களாக இருக்கும் என்று அவனும் பொருட்படுத்தாமல் தொடர்ந்தான். ஆனால் அந்த ஒரு செக்கனில் சரமாரியாக கற்கள் வந்து விழுந்தன.

ஹலீம்தீன் வேகத்தைக் கூட்டிப் பறந்தான். சில நிமிடங்களுக்குப் பிறகு

''இந்த இடத்தில் கொஞ்சம் நிறுத்து'' என்றான் யாசீன்.

''அடி பட்டுச்சா.........?''

''முதுகில் பட்டிருக்கு, போய்த்தான் பாக்கணும்.....''

''இந்த இடத்தில மறைவாக நிப்பது தான்... நல்லது... முன்னுக்கு இரண்டு பக்கமும் காடு. என்ன நடக்குமோ தெரியா...''

''நின்டு என்ன செய்றது.....?''

''நேரத்துக்குப் புறப்பட்டிருந்தா இன்னும் பத்துப் பதினைந்து நிமிஷங்களில திருமலை எக்ஸ்பிரஸ் பஸ் வர வேணும்...''

''பைக்கை ஓரிடத்தில் மறைச்சி வச்சிட்டு பஸ்ஸில் போவோம்'' என்றான் யாசீன்.

பத்து நிமிடங்களுக்குப் பிறகு ஒரு லொறி வந்தது. கையைக் காட்டி நிறுத்தினான்.

நடந்ததை டிரைவரிடம் விளக்கமாகச் சொன்னதும் அவன் உதவினான்.

''பஸ் நேரத்துக்கு வராது. நீங்க பலகையைப் போட்டு

பைக்கை பின்னால் ஏத்த முடியுமா?.... பின்னால் நீங்களும் ஏறிக் கொள்ளணும்''

''நீங்க வரும் போது ஒரு ஸ்கூலுக்கு முன்னால ஆர்ப்பாட்டக் கூட்டத்தைப் பாத்தீங்களா?''

ஹலீம்தீன் டிரைவருக்குப் பக்கத்தில் துவாரத்தின் ஊடாகக் கேட்டான்.

''ஆமா...... எல்லாருமா அமைதியா இருந்து சுலோகத்தை புடிச்சிக்கிட்டு இருந்தாங்க.... நானும் கொஞ்சம் ஸ்லோ பண்ணி இரண்டொன்று வாசிச்சேன்.... உரிமைக்காக போராட்டம் செய்ற மாதிரி இருந்திச்சி....''

''ஓ. அதுதான் விசயம்... ஒரே பார்வையில ஊகிச்சிட்டீங் களே....' என்றான் யாசீன்.

ஹலீம்தீன் சுருக்கமாக தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு பி.வி.மு.ச. வைப் பற்றி எடுத்துச் சொன்னதும் டிரைவருக்கு அவர்கள் மீது ஒரு பற்று ஏற்பட்டது.

''அப்ப ஒங்க லட்சியத்த குழப்பத்தான் ஒரு கூலிப்படை வேலை செய்யுது.... நீங்க கவனமாக இருக்கணும்''

''சரியா சொன்னீங்க... உங்களுக்கு நல்ல அனுபவம் கிட க்கு...'' என்றான் யாசீன்.

''நா.... மலைநாடு.... என் பேர் வேலு'' என்று கூறி தோட்டத் தொழிலாளர், உரிமைப் போராட்டம்..... வேலை நிறுத்தம், அடிதடி..... இவற்றைப்பற்றி விளக்கம் சொன்னான்.

கஹட்ட கஸ்திகிலியாவில் அவர்கள் இறங்கிக் கொண்டார் கள்.

லொறிச்சாரதி பணம் எடுக்க மறுத்துவிட்டான். ''ஆபத்தான நேரத்தில பிரதேச விவசாயிங்க முன்னேற்றச் சங்கத்தின் இளம் தலைவர்களுக்கு ஒரு சின்ன உதவி செய்யக் கிடைச்சது சந் தோஷம். வாழ்க தலைவர்கள்.

வாழ்க விவசாயிகள். வெல்க உங்கள் இலட்சியப் போராட்டம்'' என்று வாழ்த்தினார் டிரைவர்''

உங்க நல்ல மனசுக்கு நன்றி.

மறுமுறை வரும் போது எங்கள் கிராமத்துக்கு வாங்க....'' ஹலீம்தீனின் இதயபூர்வமான அழைப்பு.

''கட்டாயம் வர்றேன்....''

''தேங்ஸ்...... போய் வாங்க.....''

''நீண்ட இடைவெளிக்குப் பொறகு மலை நாட்டையே தரிசிச்ச மாதிரி என்ன?'' என்றான் யாசீன்.

''இன்றக்கி..... இந்த ஆளுடைய உதவி இல்லாட்டி.... இன்றைய புரோகிறாம் அப்செட்தான்''

''சரி இப்ப நாம என்ன செய்றது?''

''பொலிசில் ஒரு முறைப்பாட்டை போட்டு வைப்பம்.....'' என்றான் யாசீன்.

''அதுக்கு நேரமெடுக்கும்..... யாசீன். நாம முதல்ல சுலைமானின் கடைக்குப் போய் டெலிபோன் வந்ததா என்று பார்த்து, பொலிசுக்குப் போவோம்....'' என்றான் ஹலீம்.

அவர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளில் சுலைமானின் கடைக்குப் போனார்கள்.

''பதினைஞ்சு நிமிசத்துக்கு முன் ஒரு கோல் வந்தது.... இருங்க, திரும்பவும் எடுப்பாராம்.....''

அவர்கள் உட்கார்ந்து போட்டிருந்த தலைக் கவசங்களை கழற்றினர்.

பட்பட்டென்று கற்கள் விழுந்ததால் 'ஹெல்மட்' நிறைய புள்ளி புள்ளியாய் அடையாளங்கள் பதிந்திருந்தன.

''விபத்து ஏற்பட்டா தலையைக் காப்பாத்திக் கொள்ள மட்டுந்தான் ஹெல்மட் போடுவது என்று நான் நினச்சிக் கொண்டிருந்தன். இப்ப என்னாச்சு பாத்தியா?'' என்று சிரித்தான் ஹலீம்.

ஹலீம்தீனுக்கு வலது முட்டுக்காலுக்குக் கீழும், கையிலும் சிறுகாயங்கள். யாசீனின் சேட்டைக் கழற்றிப் பார்த்தான். இரண்டு இடங்களில் இரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

அப்பொழுது விங்... விங் என்று டெலிபோன் சிணுங்கியது.

அனுராதபுரத்திலிருந்து பஹார்டீன் மாஸ்டரே தான்.

ஐந்து நிமிடங்களுக்குள் செய்திகளை பரிமாறிக் கொண்டனர்.

''யாசீன்... எல்லா இடங்களிலும் எதிர்பாராத வெற்றியாம்... இக்கிரிகொல்லாவையில் மட்டும் ஒரு சின்ன வாக்குவாதம்.... அது பொறகு சரியாகி விட்டதாம்.....

ஹலீம்தீனின் முகத்தில் ஓர் அலாதியான திருப்தி நிலவியது.

''யாசீன் இப்ப நாம உடனடியாக பொலிசில் ஒரு முறைப்பாடு செய்து அரசாங்க ஆஸ்பத்திரியில மருந்து போட்டுக் கொண்டு பஸ்ஸில் ஊருக்குப் போவம்.....''

''அப்ப பைக்....''

''அதை பாடசாலையில் அதிபருடைய பொறுப்பில் விட்டுட்டுப் போகலாம்....''

சுலைமான் முதலாளி கேக், பழம் பிஸ்கட்..... என்று தட்டு நிறைய கொண்டு வந்தார். அந்தச் சிற்றுண்டியை முடித்துவிட்டு அவர்கள் அவசரமாகப் புறப்பட்டனர்.

இனி அவர்கள் பியசேனவை சந்திக்க வேண்டும். அமரதாசவுக்கு செய்தியனுப்ப வேண்டும். அப்புறந்தான் சைக்கிளை பாடசாலையில் போட்டுவிட்டு பஸ் பிடிக்க வேண்டும். பஸ் வரச் சுணங்கினால் ஒரு வாகனத்தைப் பேசிப் போக வேண்டும். ஆனால் அதற்குத் தேவை இருக்கவில்லை. முக்கிய அலுவல்களை முடித்துவிட்ட போது, அனுராதபுரத்திலிருந்து வந்த கடுகதி புறப்பட ஆயத்தமாகியது. அதிர்ஷ்டம்தான்.

கிராமத்துக்குத் திரும்பிய போது பின்னேரம் இரண்டு

முப்பது. ஆக நாற்பத்தைந்து நிமிடங்கள் தாம் கணக்கம்.

அடையாள ஆர்ப்பாட்டம் செய்யும் விவசாயிகள் அப்பொழுது தான் பகல் உணவை முடித்துவிட்டு ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள்.

''சைக்கிளில் போன ஆட்கள் பஸ்ஸில வந்திருக்கிறீங்க.....? சைக்கிளுக்கு என்ன நடந்தது?

எல்லாரையும் இருத்திவிட்டு நடந்ததை விளக்கமாகச் சொன்னான் யாசீன்.

''ஹலீம்தீன்..... யாசீன்.... சாப்பாடு ரெடியா இருக்கு..... பொறகு விரிவாகப் பேசுங்க....''

''தலைக்கு வந்தது ஹெல்மட்டோடு போயிட்டுது'' என்றான் சேகு.

''அந்த அளவோடு முடிஞ்சதற்கு இறைவனுக்கு நன்றி செலுத்த வேணும். பொது சேவையில ஈடுபடும் போது அப்படித் தான். எதற்கும் நாம கவனமாக இருக்க வேணும் இனிமேல் கொண்டு சைக்கிளில ஓடித்திரிய வேணாம், சொல்லிப் போட்டன் என்று எச்சரித்தார் அப்துல் மஜீத்.

மற்றப்படி எல்லா இடங்களிலும் அடையாள ஆர்ப்பாட்டம் எல்லாரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

இந்த ஆரம்ப வெற்றிக்காக எல்லாரும் ஆரவாரத்துடன் கோஷமிட்டனர். இளைஞர்கள் கோஷமிட மூத்தவர்கள் 'அல்லாஹு அக்பர்' என்றனர்.

கிராமங்களிலுள்ள நிர்வாகம் இளையவர்கள் கைககளுக்கு மாறியதும் விவசாய பெருமக்களின் வாழ்க்கையிலும் ஒரு மறுமலர்ச்சி ஏற்படும் அறிகுறிகள் மிகத் தெளிவாகத் தென்பட்டன.

ஆர்ப்பாட்ட நிகழ்வுகள் அனைத்தும் மூன்று மணியோடு நிறுத்தப்பட்டன.

விவசாயிகள் சோர்ந்து காணப்பட்டாலும் அவர்களது உள்ளங்களில் பேருவகை பெருக்கெடுத்தது. பருவ மழையின் வீச்சைப் போல ஹலீம்தீன் எழுந்து நின்று இலட்சிய நோக்கோடு ஒத்துழைக்க எல்லாருக்கும் நன்றி சமர்ப்பித்தான். அனைவரும் கலைந்து வெற்றிப்பாதையில் நடந்து சென்றனர்.

# பதினேழு

சில நாட்களுக்குப் பின் ஓர் இனிய காலைப் பொழுதில், வழக்கம் போல் கிரிபண்டனின் வீட்டு திறந்தவெளி மண்டபத்தில், கிரிபண்டா, அமரதாச நண்பர்கள் உட்பட அக்கிராமத்தின் நிர்வாகக் குழுவினர், முஸ்லிம் கிராமவாசிகளின் சந்திப்பிற்காக மிக்க ஆரவாரத்துடனும், ஆவலுடனும் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மிக அவசரத்துடன் அப்துல் மஜீதின் தலைமையில் ஹலீம்தீன் நண்பர்கள், வேனில் வந்து இறங்கிய போது தான் இரு சாராரினதும் மகிழ்ச்சி எல்லையைக் கடந்திருந்தது.

கிராம சேவகர் பண்டார சற்று முன்னதாகவே வந்திருந்தார்.

வழக்கம் போல இரு அரைவட்டங்களாக இல்லாமல், விரும்பியவர்கள் விரும்பிய ஆசனங்களில் அமர்ந்திருந்தது ஒரு பலம் வாய்ந்த ஒருமைப்பாட்டிற்கு அறிகுறியாய் அமைந்திருந்தது.

நடந்து முடிந்த அடையாள ஆர்ப்பாட்டத்தின் வெற்றிக்கும், அதன் பெறுபேறுகளை மதிப்பீடு செய்வதற்குமே அது கூட்டப் பட்டிருந்தது.

கொட்டை எழுத்தில் படங்களுடன் பத்திரிகைச் செய்திகள் அவர்களை உலுப்பி விட்டிருந்தன.

'அனுராதபுர மாவட்டத்தின் சிங்கள முஸ்லிம் கிராமவாசிகளிடையே சக்தி வாய்ந்த சங்கமொன்று உருவாகிறது.'

''விவசாயப் போராளிகள் மறுமலர்ச்சிக்காக குரல் எழுப்புகிறார்கள்...'

''சிங்கள முஸ்லிம் கிராமவாசிகளிடையே ஒருமைப்பாடு உதயம்....'

''விவசாயிகள் விழிப்படைந்து விட்டனர்'

இவ்வாறாக நாளிதழ்களில், சிங்கள தமிழ் ஆங்கில மொழி களில் வெளியான உற்சாகமூட்டும் தலைப்புகளை சபையோருக் குப் படித்துக் காட்டினர் அமரவும், ஹலீமும்.

ஹொரவப்பொத்தான தேர்தல் தொகுதியில் பதினேழு முஸ்லிம் கிராமங்களை மட்டும் ஒருங்கிணைத்து, தாம் எழுபது களில் நிறுவிய முஸ்லிம் முன்னேற்றச் சங்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும் தோல்வியும் இது பற்றிய அனுபவங்களையும் குறுக்கே நின்ற தடைகளைப் பற்றியும், அந்தச் சங்கம் தொடர் ந்து இயங்காமற் போனதற்கான காரணங்களையும் விரிவாக விளக்கி, அந்தத் தோல்விகளின் அத்திவாரத்தில்தான் பி.வி.மு.ச. எழும்பியுள்ளது' என்று கரீம் மாஸ்டர் எடுத்துரைத்தார்.

எமது புனிதமான நோக்கமும் நடவடிக்கைகளும் செயற்பாடு களும் செல்வந்த தரத்து 'பெரியவர்களுக்கு' மலேரியா காய்ச்சல் வந்தமாதிரி ஒத்துவராது... இந்தச் சங்கத்தையும் ஆரம்பத் திலேயே முறியடிப்பதற்கு அவர்கள் மறைமுகமாக முயற்சி களை மேற்கொள்ளக்கூடும்.

கரீம் மாஸ்டர் முக்கியமான கருத்தொன்றை முன்வைத்தார்.

''முஸ்லிம் கிராமங்களில மட்டுமல்ல... சிங்கள கிராமங் களிலும் அப்படியான நிலைதான்....'' என்றான் பியசேன.

''எங்கும் ஏழைகளைச் சுரண்டுவதில் பணக்காரர்கள் பேத மில்லாம ஒன்றுபடுவர், அது ஒரு மரபு....'' இது சேகுவின் கருத்து.

''அந்த மரபை மாத்தியமைக்கத்தான் இன மத பேதமற்ற பி.வி.மு.ச. உதயமாகியுள்ளது. இது அவர்களுக்கு ஒரு சவால். எதிர்ப்பு வந்தாலும்... எமது ஒத்தும சிதறாது. சிதறிடவும் கூடாது.''

அமரதாச சாதாரணமாகப் பேசினாலும் அது ஆவேசப்படு வது போலத்தான் தொனிக்கும்.

''குளக்காடு காணிகளுக்கு மறைமுகமாக பணம் கட்டி பின்னால அக்காணிகளயும் விழுங்கிக் கொள்ள அவங்க திட்டமிடுறாங்க. அவங்க மோப்பம் பிடிச்சதால தான் நாம பொதுக்காணியாக்கத் திட்டம் போட்டம். நாம போராட அவர்கள் சொந்தக்காரர்களாவதா...? நீங்கள் உங்கள் பகுதியை எப்படிச் செய்ய போகிறீர்களோ?''

''நாங்களும் அப்படித்தான் அறவே விவசாயக் காணி இல்லாம மிச்சம் பேர் இருக்கிறாக.....''

''சரியான சந்தர்ப்பத்தில அஹ்மதுலெப்பைக்கு செய்தி கிடைச்ச படியினால வயல் காணியில்லாதவங்களுக்கு மட்டும் புரிச்சிக் கொடுக்க ஒரு திட்டம் கொண்டு வந்தாரு. ஆனா அந்த நடைமுறையிலும் நாம ஏமாளியாகக் கூடாது எண்டு தான்.... பல தஸாப்தங்களாக பிரச்சின கொடுத்த குளக்காட்டு காணிப் பங்கை பொதுவாக உறுதி எழுதிட்டா அது எல்லாரையும் பங்காளியாக்கிடும்.... தனிப்பட்ட முறையில் யாரும் வாங்கவோ விற்கவோ முடியாத படிக்கு..... வேட்டையின் பலனை எல்லாருமே அனுபவிக்கட்டும்.......''

''மிக அருமை'' என்று சிங்கள கிராமவாசிகள் பாராட்டினர்.

''ஆனாலும் முட்டுக்கட்டைகள் போட எத்தனிக்கலாம்.....'' என்பது கிரிபண்டாவின் கருத்து.

''எத்தனிக்கலாம் என்று சொல்லாதீங்க, அதைத்தான் அவர்கள் பொழுது போக்காச் செய்து கொண்டிருப்பாங்க... நம்மட வயித்திலே அடிச்சால்தான் அவங்க சொகுசா... அதாவது நம்மட சேகு, அன்சார்தீன் சொல்ற பாணியிலே சொல்றதாயிருந்தா... 'ஏழையின் வயிற்றில் அடித்தால்தான் பணக்காரன் காரில் போக முடியும்!'' அப்துல் மஜீத் இப்படிச் சொன்னதும் திறந்தவெளி மண்டபம் கரகோஷத்தால் வானைப் பிளந்து - சிரிப்பொலி அடங்க வெகு நேரமாயிற்று.

''இந்த வயதிலும் புதுக்கவிதையா...? என்று ஒரு குரல்...

''கவிதைக்கு வயது தேவையில்ல உணர்ச்சிதான் முக்கியம்...'' என்றார் பஹார்டீன் மாஸ்டர்.

''சரி... அடையாள ஆர்ப்பாட்டத்தின் வெற்றியை மகிழ்ச்சியுடன் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்...'' என்றான் ஹலீம்.

'ஹலீம்தீனுக்கு கல்லெறிந்ததும், அவர்களுடைய கூலிப் படையாகத் தானிருக்கும்'' என்றான் சமது விதானை.

அதில் எந்தவித சந்தேகமும் இல்லை என்று பலரும் கண்டனம் தெரிவித்தார்கள். கல்வியறிவு இல்லாமல் விவசாயிகளை விவசாயிகளாக வயலோடு மட்டும், எருமைகளோடு எருமைகளாக வைத்திருக்க வேண்டும் என்ற காலம் மலையேறி விட்டது என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும்.

'பெட்டிசன் காரர்களுக்கும்' , கல்லெறிந்தவர்களுக்கும் சம்பந்தம் இருக்கிறதா...?'' சிங்கள கிராமத்திலிருந்து ஒரு வினா.

''முதலில் குளக்காடு காணிகளுக்கு பங்குதாரராகச் சேர வேண்டுமென்று முஸ்லிம் தனவந்தர் தாம் முயற்சித்து இருக்கிறாங்க. அதனால அவங்க குளக்காடு காணிகள் முஸ்லிம் கிராமத்திற்கு சேரக் கூடாது எண்டு எப்படியும் தடைபோட்டிருக்க மாட்டாங்க'' என்று விளக்கினான் யாசீன்.

பெட்டிசனும் கல்லெறியும் வெவ்வேறு விடயங்கள். ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லை.

''சிங்கள முஸ்லிம் ஒருமைப்பாட்ட விரும்பாத சக்திகளும் இல்லாம இல்ல'' என்று தனது அனுபவத்தை கூறினான் கிரிபண்டா.

'இன்னுமொரு பகிடி ஒங்களுக்கு தெரியுமா....?'' என்று புதிர் போட்டான் ஹலீம்தீன்.

எல்லாரும் ஆவலுடன் அவனைப் பார்த்தனர்.

''ஒரு பெரிய மனிசன்' செய்தி அனுப்பியிருக்கிறாக.... அவர் பி.வி.மு.ச.வில் சேந்து ஏழை விவசாயிகளின் பிரச்சினைகளை வென்றெடுப்பதில எம்முடன் கைகோத்து நிக்க விருப்பமாம்...

அதோட சங்கத்தின் வளர்ச்சிக்காக ஒரு தொகை பணத்தையும் டொனேசனா தர ஆயத்தமா இருக்கிறாராம்''

இதைக்கேட்டு எல்லாரும் சிரித்தார்கள். சிலர் ஆத்திரமடைந் தார்கள். கோபங் கொண்டார்கள். ஆவேசப்பட்டாரர்கள்.

''மனிசன் விவசாயிகள் எண்டாப்பில என்ன நினைச்சிக் கொண்டிருக்கிறாரு. கொண்டை கட்டின இளிச்சவாயன்கள் என்ற நினைப்பா இன்னும்......?''

''பெரிய மனிசனெண்டா கொஞ்சம் யோசிக்கணும்.... அவர்களது நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள பி.வி.மு.ச. குதிரையில் சவாரி செய்யும் திட்டமாகவும் இருக்கலாம்''

''ஓ...... ஓ..... அதுதான் உண்மை''

எல்லாரும் மீண்டும் சிரித்து, பலரும் பல கோணங்களில் இருந்து சுவையான கருத்துக்களை வெளியிட்டனர்.

''இது ஜோக் அல்ல.... எங்கட குதிரை நொண்டிக்குதிரை அல்ல. அது பந்தயத்தில் ஜெயிக்கப் போற குதிரை என்டத அவர் இனங் கண்டு கொண்டார். மனிசனுக்கு நல்ல நம்பிக்கை வந்திருக்கு.''

''அது சரி அந்தப் பெரிய மனிசனுக்கு என்ன மறுமொழி அனுப்பிக் கிடக்கு?''

''பஹார்டீன் மாஸ்டருடைய அணுகுமுறைதான்... நிச்சய மாக புதிய அங்கத்தவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது கவனத்துக்கு எடுத்துக் கொள் ளப்படும்......'' என்று மனம் நோகாதவாறு பதில் அனுப்பிக் கிடக்கு'' என்றான் ஹலீம்.

''அது நல்லமுறை.... இப்போதைக்கு அவரை பகைத்துக் கொள்ளக்கூடாது'' என்றார் பஹார்டீன் மாஸ்டர்.

''உங்கள் எல்லாரது பேச்சுகளிலிருந்து ஒன்று தெளிவாகிறது. எங்களது முதலாவது அடையாள ஆர்ப்பாட்டம், நாம் எதிர் பார்த்ததை விட பெரு வெற்றியளித்திருக்கு. எங்கட அரசியல்

வாதிகள் கூட சிந்திக்கிறாங்களாம்..... அனுராதபுர மாவட்ட விவசாயிகளுக்கு நாம் உருப்படியாக என்ன செய்திருக்கிறோம் எண்டு....?'' என்றான் பிங்காமி.

''நாம் சமர்ப்பித்த மகஜரை அவர்கள் ஆழ்ந்து ஆராய்வாங்க...''

''மகஜரிலிருந்து சுடச்சுட பல விடயங்கள் நடைமுறைக்கு வந்து செயற்படுகின்றன என்று சொல்லப்படுகிறதே''

''மகஜர் ஒரு கலக்கு கலக்கியிருப்பது உண்மை..... நமது மகஜரில் குறிப்பிடப்பட்டிருந்தாலும்..... சில பழைய விடயங்களும் உயிர் பெற்றிருக்கின்றன......'' என்றான் யாசீன்.

''ஓரிரு பள்ளிக் கூடங்களுக்கு புதிய மாடிக்கட்டிடங்கள், விஞ்ஞான ஆய்வு கூடம், ஆசிரியர் பற்றாக் குறைக்கு விண்ணப்பங்கள் பரிசீலனை, சாலைகள் சீர்திருத்தம், புதிய சாலைகள் நிர்மாணித்தல், கிராமவாசிகளுக்கு ஜே.பி. கிராமாதிகாரி பதவிகள், மாணவர்களுக்கு ஏற்ற விதத்தில் பஸ் போக்குவரத்துகள், படித்த இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புகள், சில குளங்களைப் புனரமைத்தல், கிராம வாசிகளுக்கு விவசாயக் கடனுதவிகள்... என்று பல விடயங்கள் பரிசீலிக்கப்பட்டு பல வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. உங்கள் மகஜர்தான் பணிகளை முடுக்கி விட்டிருக்கிறது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்ல'' என்றார் கிராமசேவகர் பண்டார.

இதைக் கேட்டதும் எல்லாரும் பூரிப்படைந்தனர்.

''கட்சிசார்பற்ற நாம் பதவியிலிருக்கும் கட்சிகள் அல்லது பிரதிநிதிகள் மகஜர் கேட்டால் நாம் எவ்வித மறுப்புமின்றி பிரதிகள் சமர்ப்பிக்க வேண்டும்... நாம் விரைவில் கலந்துரையாடி எமது மகஜரைப் புதுப்பிக்க வேண்டும். சிலவற்றை நீக்கி புதியன சேர்க்க வேண்டும்...'' என்றார் பஹார்டீன் மாஸ்டர்.

''எமது அடையாள ஆர்ப்பாட்ட நாளன்று, கஹட்டகஸ்திகிலியா சந்தியில் நடந்த கூட்டத்திற்கு சனம் எப்படியாம்......?'' என்று ஆர்வமான ஒரு வினா எழுந்தது.

''சொல்லத் தேவையில்லை, படுதோல்வி''

''மகஜரை ஏன் மாற்ற வேண்டும் என்று மாஸ்டர் கூறுகிறார்'' ஹலீம்தீன் பதிலிறுத்தினான்.

''கிராமம் கிராமமாகச் சென்று நாம் திரட்டிய குறைபாடு களை திரும்பவும் மீள் பரிசீலனை செய்ய வேண்டும். மிக அத்தியாவசிய பிரச்சினைகளுக்கு முதலிடம் என்ற ரீதியில் இப்பொழுது வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள விடயங்களை யும் நீக்கி, இலக்கமிட்டு ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். அதன் மூலம் ஒரு காத்திரமான மகஜரை தயாரித்து வைத்துக் கொள்ள வேண்டும்.....'' என்று விளக்கம் கூறினான்.

எமது நடவடிக்கைகள் எதுவானாலும், பிரதேசத்தின் விவ சாய பெருமக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை அடிப்படை யாகக் கொண்டவையாக அமைய வேண்டியது அவசியம். தேர்தல் காலங்களில் விவசாயிகளின் வாக்குகள் தேவையானால் எமது பிரச்சினைகளை முதலில் தீர்க்க வேண்டும் என்று வெளிப் படையாகச் சொல்லாமல், ஆனால் விடாப்பிடியாக மிகவும் சாதுரியமாக அவர்களுக்கு உணர்த்த வேண்டும். விவசாயி களுக்காக நாம் என்ன செய்து விட்டோம்......?'' என்று சிந்திக் கிற காலகட்டம் வந்து விட்டது'' என்றான் அமர.

அதைத் தொடர்ந்து கிரிபண்டா மிக நிதானமாக கருத்து தெரிவித்த போது

''ஒவ்வொரு முறையும் நாங்கள் எத்தனையோ தேர்தல்களை கண்டு விட்டோம்... ஒவ்வொரு முறையும், தேர்தல் காலங் களில் எம்முடன் மிக நெருக்கமாக இணைந்து உறவு கொண் டாடுவர், மூட்டை மூட்டையாக வாக்குறுதிகளை கட்டிக் கொண்டு வந்து குவிப்பர், நெற்குவியலைப் போல். தேர்தலில் எமது வாக்குகளைச் சுருட்டிக் கொண்டு போனால், இனி அடுத்த தேர்தல் காலத்தில் தான் முகங்களைப் பார்க்கலாம். இவை நாம் சந்திக்காத புதிய விடயங்கள் அல்ல. ஆனால் மாற்றுவழி இன்றி

அநாதைகளாய் இருந்தோம். இப்போது பி.வி.மு.ச. அமைப்பு பஹார்டீன் மாஸ்டரின் கடும் உழைப்பினால் ஒரு தொழிற் சங்கக் கட்டமைப்பில் உருவாக்கம் பெற்றிருக்கிறது. எக்காலத் திலும் விவசாயிகள் செல்வாக்கு இல்லாதவர்கள். அவர்களது வாழ்க்கை முறைகள் காடுகளால் மூடப்பட்டுக்கிடக்கின்றன. குக் கிராமங்களாக சிதறுண்டு கிடக்கின்றன. சிபார்சும் இலஞ்ச மும் இன்றி எந்த ஒரு விடயத்தையும் நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலைப்பாடுதான் இன்னும்.....

ஆகவேதான் எமது அமைப்பின் மூலம் - எமது சாத்வீகப் போராட்டத்தின் மூலம், விவசாயிகளும், எமது நாளாந்த உணவை உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள் என்று இனங்காணப்பட வேண்டும். கமக்காரர்களின் வாழ்க்கைத் தரம் உயர வேண்டும்....'' என்று உருக்கமாகக் கூறி முடித்தார் மூத்த தலைவர் கிரிபண்டா.

'விவசாயிகளின் உரிமைகளுக்காக குரல் கொடுக்கத்தான் பி.வி.மு.ச. ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது...'' என்றான் ஹலீம்தீன்.

''எமது பிரதேசத்தை வெறும் 'கஷ்டப்பிரதேசம்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். கஷ்டங்களை நீக்க எவரும் முயற்சி செய்ததாகத் தெரியவில்லை. 'பின்தங்கிய கிராமங்கள்' என்று சொல்வார்கள், பின்தங்கியதற்கு, அல்லது பின்தங்கிக் கொண்டிருப்பதற்கு என்ன காரணங்கள்? எவரும் ஆய்ந்து அவற்றை நீக்க நடவடிக்கைகள் எடுக்கவில்லை. இவற்றைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்து ஆவன செய்ய வேண்டும் என்று ஆலோசனைகள் வழங்குவதற்கு பஹார்டீன் மாஸ்டரைப் போல் வெளிமாவட்டத்திலிருந்து வேறு எவரும் வந்து எம்முடன் இணையப் போவதில்லை. அவர் எமது பி.வி.மு.ச.வின் ஒரு தூண். பிரதேச விவசாயிகள் முன்னேற்றச்சங்கம் இளைஞர்களை உள்ளடக்கிய ஒரு விளையாட்டுச் சங்கம் அல்ல.''

இப்படி ஆவேசப்படாமல் நிதானமாகத்தான் கூறினான் அமரதாச.

சிங்கள முஸ்லிம் கிராமவாசிகள் ஒருங்கிணைந்துள்ள இச்சந்திப்பில் நான் ஒன்றைச் சொல்லி வைக்க விரும்புகிறேன். விவசாயிகள் எமது பிரதேசத்தில் மட்டுமல்ல இலங்கையில் பல பாகங்களிலும் வாழ்க்கைப் பிரச்சினைகளுடன் காலம் தள்ளிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு ஒரு சங்கம் இல்லை. அவர்கள் இனங்காணப்படவில்லை.

ஆகவேதான் எமது பிரதேச விவசாயிகள் பிரச்சினைகளில் இருந்து ஓரளவு விடுபட்ட பிறகு, அதாவது எமது பி.வி.மு.ச. வின் ஓராண்டு பூர்த்தியானதும் சங்கத்தின் விஸ்தரிப்பு வேலைகளைத் தொடங்க வேண்டும். நாடளாவிய ரீதியில் கிளைகள் பரப்ப வேண்டும். பின்னர் எல்லா விவசாயிகளையும் ஒருங்கிணைத்து இலங்கை விவசாயிகள் முன்னேற்றச் சங்கம் என்று பெயர்மாற்ற வேண்டும். இதுபற்றி எமது சங்க யாப்பில் விரிவாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. தேநீருக்குப் பின் வேறு முக்கிய அலுவல்கள் காரணமாக பண்டார கிராமசேவகர் வெளியேறினார். அவர் புறப்படுவதற்கு முன் ஒரு முக்கிய தகவலை மட்டும் சொல்லிவிட்டுப் போனார்.

குளக்காட்டுப் பிரதேசம் விடயமாக பி.வி.மு.ச. சார்பில் உரிமைப் பேராளர் குழுவொன்று தயாராக இருக்க வேண்டும். இதில் சிங்கள கிராமத்திலிருந்து இருவரும் முஸ்லிம் கிராமத்திலிருந்து இருவரும் கட்டாயமாக அங்கம் வகிப்பது நல்லது. உத்தியோக பூர்வமாக ஒரு நேர்முக விசாரணைக்காக கடிதம் வரும்.''

எல்லாரும் அகம் மகிழ்ந்தனர்.

''கிட்டத்தட்ட மூன்று தஸாப்தங்களுக்குப் பிறகு இவ்விடயம் கிளறப்பட்டு இப்படி ஒரு கடிதம் வரப்போகிறது.''

''அதற்கு மிகவும் நிதானமான, புத்தியான அணுகு முறைதான் காரணம்'' என்றார் பஹார்டீன் மாஸ்டர்.

பண்டார கிராம சேவகருடன் வேறு சிலரும் அலுவல்கள் காரணமாக அனுராதபுர நகருக்குக் கிளம்பியிருந்தனர்.

இறுதி அம்சமாக குளக்காட்டுப் பிரதேசம் உரிமைப் பேராளர் குழுவொன்று அமைக்கப்பட்டது.

கிரிபண்டா, அப்துல் மஜீத், அமரதாச, ஹலீம்தீன், பியசேன சமது விதானை ஆகியோர் தெரிவான பின்னர் இன்னும் ஒரு வரை பிரேரிக்குமாறு வேண்டப்பட்டது.

பிங்காமி எழுந்து நின்று யாசீனை பிரேரித்தான். அது ஏக மனதாக அங்கீகரிக்கப்பட்டது.

அத்துடன் அடையாள ஆர்ப்பாட்டத்தின் வெற்றியைக் கொண்டாட ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டம் கலைந்தது.

இரு சாராரும் மிகுந்த மகிழ்ச்சி ஆரவாரத்துடன் இல்லங்கள் ஏகினர். அனைவரும் பிரிந்த பின்னர் ஹலீம்தீன் நண்பர்கள் மட்டும் திறந்த வெளி மண்டபத்தில் உரையாடிக் கொண்டிருந் தனர். ஆனால் அப்துல் மஜீத், பஹார்டீன் மாஸ்டர், சவால் ஆகியோர் ஏற்கனவே வேனில் அமர்ந்து மற்றவர்களை எதிர் பார்த்துக் கொண்டிருந்தனர். அப்படி என்ன அவசரமோ!

''அப்ப யாசீன் உனக்கு ஏதும் வேலை இருக்கா.....?''

''இனியும் சுணங்க ஏலாது.''

''சேகு? அன்சார்டீன்.....?''

''இண்டக்கி எங்களுக்கு நிக்கவெவ கிராமத்தில் இலக்கிய முயற்சிகளின் தேடல்''

''அங்கே எங்களுக்கு கோழி பிரியாணி சாப்பாடுந்தான்.....'' என்றான் அன்சார்டீன்.

''ஓ அப்படியா, நீங்க எல்லாரும் வேனில போங்க..... பெரியவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள்..... நான் தலைவர் ஹலீம்தீனுக்கு விஷேட பகலுணவு அளித்து மீண்டும் கல்லெறி ஏதும் படாமல் பாதுகாப்பாக மாலையில் வேனில் கொண்டு வந்து விடுகிறேன்'' என்று அமரதாச கூறியதும் எல்லாரும் நகைத்தனர். கையசைவுகளுடன் வேன் புறப்பட்டது.

# பதினெட்டு

"ஹலீம் வா உள்ளே போவோம். நீ கொஞ்ச நேரம் ஓய்வாயிரு. நான் குளிச்சிட்டு வாறன்..." என்றான் அமர.

"ஓய்வு தேவையில்லை... முகம் அலம்பிக் கொண்டாப் போதும்... என்று கூறி கிணற்றடிக்குப் போனான்.... சற்று நேரத்தில் மீண்டு வந்து, கண்ணாடிக்கு முன் நின்று தலைவாரி, உடைகளை ஒழுங்கு செய்து கொண்டு விறாந்தையிலுள்ள சாய்வு நாற்காலியில் அமர்ந்து, அன்றைய ஆங்கிலப் பத்திரிகையை விரித்தான் ஹலீம்.

பியசீலியும் நந்தாவும் வந்து நின்றார்கள்.

"என்ன ஹலீம், இந்தப் பக்கத்துக்கே காணல்ல... தலைவர் பிஸிபோல....? கல்லடி எல்லாம் பட்டீங்களாமே? தலைமை ஏற்றால் எல்லாம் பட வேண்டியதுதான், பெரிய காயங்களா?"

"பெரிசா ஒண்ணுமில்ல... யாசீனுக்கு தான் ஒரு சின்னத் தழும்பு..."

"வீரச் சின்னங்களா...?" என்று கேட்டுச் சிரித்தாள் பியசீலி

"நேற்று ரேடியோ நியூஸ் கேட்டீங்களா...?"

"என்ன விசேஷம்....?"

"எங்கட ஏ.எல் தலையெழுத்து என்ன என்பது அடுத்த சில தினங்களில் தெரியவரும்...."

"அப்படியா? ரிசல்ட் வருதா...? எப்ப? எனக்கு சோதின எழுதினதுதான் தெரியும். மாதங்கள் எவ்வளவு வேகமாக ஓடிக் கிடக்கு."

''காலமகள் உங்களுக்காகக் காத்திருப்பாளா?''

''சாப்பாடு தயாராகிக் கொண்டிருக்கு, 'கூல்' ஏதும் குடிக் கிறீங்களா? என வினவிய பியசீலி நந்தாவை விளித்து

''நந்தா போய் எடுத்திட்டு வாயென்...''

''பியசீலி அன்றக்கி யாசீன் வந்து சொன்ன நேரம், நான் அடையாள ஆர்ப்பாட்ட ஒழுங்குகளில் ஈடுபட்டிருந்தேன். என்னை சந்திக்க வேணும் எண்டு....? பியசீலியை தன் கவனத் திற்கு இழுத்தான் ஹலீம்.

''விசேஷம் ஒண்ணுமில்ல... நீண்ட நாளா தலைவரின் முக த்தை பார்க்கல்ல. ஒரு வேளை சமரசிங்கவுக்கு பயந்து விட் டீங்களோ....?''

''சே, நான் ஏன் பயப்பட வேணும்?'' என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது

நந்தா குளிர்பானம் கொண்டு வந்தாள்.

''யசவத்தியும், நந்தாவும் கிழமைக்கு மூன்று நாட்கள் உங்கள் அலுவலகத்தில் வேலை செய்துவிட்டு வந்து ஒரே உங்களைப் பாராட்டிப் புகழ்வார்கள்.

'ம்... அப்படியில்ல...'' என்று நந்தா தடுமாறிப் போய் நாணிக்குறுகினாள்.

நீ பயப்படாத நந்தா. அப்புறம்... நீங்கள் பாவமாம்.... உங்களுக்கு ஓய்வே இல்லையாம்... ஆம்... நேரத்துக்கு சாப் பிடக்கூட.... நந்தாவுக்கு மிகக் கவலை.... ஏன் ஹலீம் இப்படி செய்றீங்க...?''

ஹலீம் சிரித்து விட்டு சொன்னான்.

''பியா, உனக்கு தெரியும்தானே.

நான் எப்போதும் பெண்பிள்ளைகளின் பாராட்டு புகழுரை களுக்கு அடிமையானதில்லை என்று....''

''ஓ, தெரியுமே, அழகும் ஆழ்ந்த அறிவும் உள்ள ஓர் இளம்

தலைவருக்கு எப்போதும் விவசாயப் பெருமக்களின் மறுமலர்ச்சியைப் பற்றிய சிந்தனை தான் என்று ...''பியசீலி தூக்கிப் பிடிக்க

''அது மட்டுமல்ல, தலைவருக்கு நல்ல நண்பர்கள் பக்கத் துணையாக இருக்கிறார்கள்...'' என்று முடித்தாள் நந்தா

''எங்கட தலைவர் அமரதாசவும் அப்படித்தான். தன்னுடைய லட்சியம் கடைசி மூச்சு இருக்கும் வரைக்கும் கிராம மறுமலர்ச்சி தானாம். பெண் பிள்ளைகளுடன் சிரித்துப் பேசவே மாட்டார். ஆனால் அவரது நண்பர்கள் அதற்கு நேர்மாறு. கேலி பண்ணுவதும் நையாண்டி பண்ணுவதும் ஓவர். அவர்களுக்கு அது பொழுது போக்கு. அமர எல்லாரையும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால் சரி. எல்லாரையும் விட உங்களைத்தான் அதிகம் நேசிப்பவர். உங்கள் ஆலோசனை அவருக்குத் தெய்வவாக்கு.

''கிராமங்களின் நிர்வாகப் பொறுப்பைத் தலையில் தூக்கி வைத்து, மறுமலர்ச்சிக்காகவும் ஒருமைப்பாட்டுக்காகவும் போராடுகின்ற நாங்கள் சில்லறைத்தனமாக நடந்து கொண்டால் அது மிகக் கேவலம் அல்லவா...? என்ற ஹலீம் தொடர்ந்து

உன்னையும் போல் நந்தாவையும் போல் அழகான இளம் பெண்களுடன் நெருங்கிப்பழகி....'' மணம் முடிப்பேன்'' என்று வாக்குறுதிகள் பரிமாறிக் கொண்டு பின்னர் அவை உடைந்து விட்டால், பிறகு நடக்கும் கதைகள் தெரியுந்தானே?

மன்னராட்சிக் காலத்தில் ஒரு பொறுப்பான மன்னன் நடந்து கொண்ட பொறுப்பற்ற செயல் உங்களுக்குத் தெரியும்தானே?

''தெரியாது... தெரியாது அதை முதலில் சொல்லுங்களேன்...'' பியசீலியும் நந்தாவும் வற்புறுத்தினார்கள்.

''அந்தக் காலத்தில் அனுராதபுரத்தை அரசு செய்த சிங்கள மன்னனுக்கு முஸ்லிம் ஒருவர் மந்திரியாக இருந்தாராம்...''

''பியசீலி இப்பதானே சிங்கள தமிழ் முஸ்லிம் துவேஷம் எல்லாம்.''

''இனவேறுபாடு என்பது அரசியல் லாபம் பெற முன்வைக் கப்படும் முதலீடு என்பதை மக்கள் உணர்ந்து விட்டார்களே... அது சரி விசயத்துக்கு வாங்க'' பியசீலி தூண்டினாள்.

''பொதுவாக முஸ்லிம்களோடு அரசனுக்கு மிக நெருக்க மான அன்பு. ஒரு சந்தர்ப்பத்திலே இனிமையான தென்றல் வீசும் மாலைப் பொழுதில் மன்னன் உலாவச் சென்றிருக்கிறான்.

''அப்புறம்...?'' நந்தாவின் ஆர்வம் பியசீலியின் வார்த் தைகளாக தெரிந்தன.

''மந்திரியின் அழகிய மகளைக் கண்டு மன்னன் மயங்கி விட்டான்.

''நந்தாவை விட அழகா...'' என்று கேட்டாள் பியசீலி, நந்தாவைப் பார்த்துக் கொண்டே. ''நந்தாவை விட அழகென்று தான் சொல்ல வேண்டும்''

''இவர் என்னமோ நேரடியாகப் போய் கண்டு வந்தமாதிரி கதை விடுகிறார். நான் அழகு என்று யார் இப்ப உங்களிடம் சொன்னது...?'' இது நந்தாவின் குத்தல்.

''பியசீலிதானே இப்ப கேட்டா''

''சரி... சரி... கதைக்கு வாங்கோ....''

''மன்னன் மயங்கினாலும்.... கேவலமாக நடந்து கொள்ள வில்லை. உரிய பரிவாரங்களுடன் பெண் கேட்டு தூது அனுப்பி னான் மன்னன்.

''அப்புறம்...?''

மந்திரியின் மகள் அதை ஏற்க மறுத்து, பரிவாரங்களைத் திருப்பியனுப்பி விட்டாளாம்.

''சஸ்பென்ஸ் அதிகம், பட்டென்று சொல்லிவிடுங்கள் ஹலீம்'' பியசீலி பறந்தாள்.

''பரிவாரங்களைத் திருப்பி அனுப்பி விட்டுத்தான் அவள் யோசித்தாள்... மன்னனுக்கு கோபம் வந்து விட்டால்... தந்தை

க்கு ஏதும் ஆபத்துகள் வந்துவிடுமோ என்று குழம்பிய அந்த இளம் பெண் அவசரப்பட்டு தற்கொலை செய்து கொண்டா ளாம்.

அந்தப் பெரிய மன்னனே மயங்கி விட்டாரென்றால் இந்த இளம் தலைவர்கள் எந்த மூலைக்கு....?'' என்றாள் பியசீலி.

''அந்த இடத்தில்தான் நீங்கள் ஹலீம்தீனையும் அமரதாச வையும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.... பெண் பிள்ளை களுக்கு வாக்குறுதிகள் அளித்து நம்பிக்கைகளை வளர்த்து... அவை நிறைவேறாமல் போனால்... அந்த மந்திரியின் மகளைப் போல.... தற்கொலை செய்யவும்... சே...''

அவள் அவசரப்பட்டு விட்டாள். அப்படியே முடிவை எடுக் கிறதாயிருந்தாலும், இன்னும் கொஞ்சம் பொறுத்திருக்கலாம்...'' என்றாள் பியசீலி.

''பாத்தியா... நீயும் அந்த முடிவைத்தான் ஆதரிக்கிறமாதிரி இருக்கே...''

''சொரி', நந்தா படிச்சவள். அவசரப்பட்டு அப்படி ஒரு முடிவு எடுக்கமாட்டாள்... நான் நினைக்கவில்லை. படித்த பெண்கள் இந்தக் காலத்தில் அப்படியான முடிவுகளை எடுப்பார்கள் என்று....''

''நந்தா நீ என்ன நினைக்கிறாய்?'' பியசீலி கேட்டாள்.

''சந்தர்ப்பமும் சூழ்நிலையும் தான் காரணம்... அப்படியான முடிவுகளுக்கு...'' என்றாள் நந்தா.

''அப்படியான சந்தர்ப்பங்களை உருவாக்கக்கூடாது என்று தான் நான் சொல்கிறேன்... பியசீலி அதைவிட்டுட்டு இன்னொரு கோணத்திலிருந்து யோசித்துப் பார். இப்ப என்னை எடுத்துக் கொள்... என்னுடைய நிலைமையில், நான் சிங்களக் கிரா மத்தில் விவாகம் செய்து விட்டேன் என்று வைத்துக்கொள்... கதை எங்கே எப்படி முடியும் என்று நினைக்கிற...?''

''அருமையான நல்ல பொயின்ட். நீங்க சொல்லுங்க ஹலீம்...''

''இவ்வளவு காலம் குளக்காட்டுப் பிரதேசத்தை தலையில் தூக்கி வைத்துக் கொண்டு, சிங்கள முஸ்லிம் ஒருமைப்பாட்டுக்கு வித்திட்டது, பி.வி.மு.ச அமைத்தது... எல்லாமே இந்த அற்ப சுயநலத்திற்குத்தானே என்று சமரசிங்க கோஷ்டியினர் கதை பரப்பும் போது நாம் வெட்கித் தலைகுனிவதை விட வேறு என்ன செய்ய முடியும்? எங்களுடைய இலட்சியம் அதுதானா...?''

'மிகஅற்புதமான தலைவர்கள்தான். சந்தேகமில்லை. உங்கள் தொலைநோக்குப் பார்வை... ஏ.வன்... ஆனாலும் இப்படியும் செய்யலாந்தானே... பொதுவாக சொல்லப்போனால்... முஸ்லிம் கிராமத்திலிருந்து சிங்களக் கிராமத்தில் விவாகம் செய்து, ஒரு 'நேகம்' அதாவது உறவு முறையை ஏற்படுத்தி ஒரு முன் மாதிரி காட்டலாந்தானே...''

''பொறுப்புக்களை சுமந்துள்ள என் போன்றவர்கள் செய்தால் எமது சமூகப் பணிகளை கொச்சைப்படுத்தி விடுவார்கள்... அந்த அளவுக்கு எமது கிராமிய மக்களின் மனங்கள் பக்குவப் படவில்லை. அது போக சமயம்...? எப்படிப் பார்த்தாலும் சுயநலத்திற்காக எமது புனிதத்துவமும், மலர்ந்துள்ள புரிந்துணர்வும் மானுட நேயமும் அதன் இயல்பை இழந்து விடக் கூடாது. எங்கும் பொய், பித்தலாட்டம், சந்தர்ப்பவாதம், காழ்ப்பு, சுழியோட்டம்.. தலைவிரித்தாடுகின்ற கால கட்டத்தில் எந்த ஒரு புனித காரியமும் கொச்சைப்படுத்தப்படுவதற்கு வெகு நேரம் போகாது. இல்லையா?'' என்றான் ஹலீம்தீன்.

''நான் உன்ன சாதாரண ஏ.எல் மாணவன் என்றுதான் நினைத்தேன். ஆனால் நீ பெரிய மேதை. அனுபவசாலி'' என்று பாராட்டினாள் பியசீலி.

''அப்படி ஒன்றும் இல்லை. நான் பொறுப்புடன் சமுதாயத்தைப் படிக்கிறேன் அவ்வளவுதான்... நீ 'நேகம்' என்று சொன்னதும் எனக்கு அனுராதபுர மாவட்டத்தின் தென் கோடியில் உள்ள

நகம (Negama) என்னும் கிராமம்தான் ஞாபகத்துக்கு வந்தது. கண்டி மன்னன் விக்கிரம ராஜசிங்கன் தனக்குச் சேவை செய்த நான்கு முஸ்லிம்களில் ஒருவருக்கு இக்கிராமத்தை அன்பளிப்புச் செய்து ஏற்கனவே அங்குள்ளவர்களுக்கு உறவினர் என்று கருத் துப்பட 'நேகம' என்று சிங்கள மொழியில் அழைத்தார்கள்.

'நேகம' என்னும் சொல்லில் 'Kama' Gama வாக மாறி (Negama) என்று கிராமத்தின் பெயராக மாறிவிட்டது.

''ஹலீம்தீன் இப்படியாக ஒவ்வொன்றுக்கும் விளக்கங்கள் அளித்தபோது பியசீலியின் மனம் விழிப்படைந்து, விரிவடை ந்து சிந்திக்கத் தூண்டியது.

''நல்லது ஹலீம், நீங்க அடிக்கடி வந்து எங்களுடன் கலந் துரையாடினால் நாங்கள் எவ்வளவோ தெளிவடைகிறோம்... இல்லாவிட்டால் நாங்கள் வெறும் புத்தகப் பூச்சிகள்தான்... ஒன்றை மட்டும் சொல்லி வைக்க விரும்புகிறேன்'' என்று கூறி நந்தாவின் முகத்தைப் பார்த்துச் சிரித்தாள் பியசீலி.

''என்ன புதிர்...? ஹலீமின் கண்கள் இருவர் முகங்களையும் ஊடுருவின.

''உங்கள் இலட்சியப் பாதையில் இனி நந்தா குறுக்கே நிற்கமாட்டாள்.'' என்றாள்.

பியசீலியின் வார்த்தைகள் நந்தாவை மறையச் செய்தனவோ. ஹலீம் தனக்குள் சிரித்துக் கொண்டான்.

அமரதாச குளித்துவிட்டு உடைகள் மாற்றி வந்து உட்கார்ந்தான்.

''அமரகிணற்றில் இன்னும் தண்ணீர் இருக்கா...? என்று கேட்டான் ஹலீம்.

''இண்டக்கி எவ்வளவு நல்லது... நீங்கள் இருக்கிறபடியால் அரைமணித்தியாலத்தில் குளிப்பு முடிந்துவிட்டது... இல்லா ட்டி அரைநாள் போகும்...'' என்றாள் பியசீலி.

பகலுணவு தயார். சாப்பாட்டு மேசையை ஒழுங்குபடுத்து வதற்கு பியசீலியும் அப்பால் சென்றாள்.

கிரிபண்டாவின் அறையிலிருந்து குறட்டைச் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

பகலுணவு முடிந்ததும் இரு தலைவர்களும் சற்று நேரம் திறந்தவெளி மண்டபத்தில் நடந்தனர். பின்னர் தென்றல் வீசும் ஓர் ஒதுக்குப் புறத்தில் நாற்காலிகளைப் போட்டு அமர்ந்தனர்.

இருவரும் தனிமையில் கலந்துரையாடி சில முக்கியமான விடயங்களைப் பரிசீலித்தனர்.

அன்று மாலை ஹலீம்தீன் கிராமத்திற்கு திரும்பும் போது 'அசர்' பிந்தி விட்டிருந்தது.

# பத்தொன்பது

ஹலீம்தீனின் தங்கை ஜெஸ்மினுக்கு விவாகப் பேச்சுவார்த் தைகள் இக்கிரிகொல்லாவையில் நடந்து முடிந்து விட்டிருந்தது.

அன்று 'அடையாளம் போடும்' வைபவத்திற்காக மாப்பிள் ளைப் பகுதியினர் வந்து விட்டுப் போய் ஒரு வாரத்திற்குப் பின் பெண்வீட்டாரை ஒரு விருந்துபசாரத்திற்கு அழைத்திருந்தார்கள்.

அப்துல் மஜீதின் இல்லத்திலிருந்து இரண்டு 'வேன்'கள் நிரம்ப ஆட்கள் போயிருந்தனர், ஆண்களும் பெண்களுமாய்...

வீட்டுக்கு முன்னால், நீண்ட முன்றிலில் பாய்கள் விரித்து வரிசை வரிசையாக சுத்தமான தாமரை இலைகள் பரப்பப் பட்டிருந்தன. பகலுணவு 'சிம்பிளாக' சம்பா அரிசிச் சோறும், இரண்டு கறிகளும் ஒரு சொதியும்...

அந்த வைபவம் முடிந்ததும்.

அப்துல் மஜீத் குழுவினர் கிராமத்திற்குத் திரும்பினர்.

ஆனால் ஹலீம்தீனும் அவனுடன் சென்ற யாசீனும் சேகுவும் நின்று விட்டார்கள். பி.வி.மு.ச இக்கிரிகொல்லாவ பிரதிநிதி, பாடசாலை மண்டபத்தில் நண்பர்கள் சந்திப்பிற்கு ஒழுங்கு செய்திருந்தார்.

ஆரம்பத்திலேயே ஒரு சந்தேகம்.

''முன்பு ஒருமுறை நாச்சியாதுவ கிராமத்தின் வரலாற்றை சொன்ன நீங்கள், ஆனால் மன்னனுடன் வந்தவர்கள் முஸ்லிம் களா என்று தெளிவுபடுத்தவில்லை...''

''இரண்டாம் சேன என்னும் மன்னனுடன் வந்தவர்கள் முஸ் லிம்கள்தான். அதாவது, குளத்தின் நடுவே குடியிருப்புகளை ஏற்படுத்தியிருந்தவர்கள் கண்டியிலிருந்து மல்வத்து ஓயாக் கரையோரமாக வந்து கரையேற வழிதேடி வந்த முஸ்லிம்கள். காட்டின் நடுவே உள்ள நிலம் பயிருக்கு ஏற்றதாக இருந்ததால் அங்கேயே தங்கி விட்டார்கள். கண்டி இராச்சியம் யுத்தமொன் றில் பல தொல்லைகளுக்கு உட்பட்டிருந்த வேளை. இரண்டாம் சேன என்னும் மன்னன் தன்னுடன் இருந்த பிரதானிகளுடனும் மெய்ப்பாதுகாவலர்களுடனும் அவர்களது குடும்பத் தலைவர் களுடனும் தப்பி மல்வத்து ஓயாக் கரையோரமாக வந்துள்ளான். மன்னனுடன் வந்தவர்கள் முஸ்லிம்கள் என்பதில் சந்தேகமி ல்லை. வந்த வழியில் ஒரு மலைக்குகையைக் கண்டு மன்னனைக் குகைக்குள் ஒளித்துவிட்டு, வந்தவர்கள் ஆங்காங்கே குடியிருந் தார்கள். இன்றக்கி வேண்டுமென்டாலும் அந்தக் கற்பாறை யையும் குகையையும் பார்க்கலாம்.

அத்தோடு அமிழ்ந்து போன பள்ளிவாசலையும் மார்க்கத்தை ஆழமாகக் கற்றுத் தெளிந்த ஒருவரின் அடக்கஸ்தலத்தையும் காணலாம். வரலாற்றின் ஆரம்பகால கட்டங்களில் கலாச்சா ரத்தையும் பண்பாடுகளையும் பேணிப் பாதுகாக்கவே முன் னோர்கள் காடுகளில் வாழ்ந்து விவசாயத்தைத் தொழிலாகக் கொண்டு வாழ்க்கை நடாத்தினார்கள்'' என்று விளக்கம் கூறிய ஹலீம்தீன் -

''அனுராதபுரத்திலிருந்து பத்து கிலோ மீற்றர் தூரத்தில் இருக்கிற உங்கள் கிராமம் - இக்கிரிகொல்லாவ மிக முக்கிய மானது. இப்பெயர் வரக் காரணம் உங்களுக்குத் தெரியுமா...?''

''.... இங்கேயும் கண்டிப் பிரதேசத்திலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளத்தான் குடியேறினார்கள்.... என்றுதான் அறிகிறோம்.''

''அது உண்மைதான். கண்டியில் யுத்த பயம்தான் காரண மாயிருந்தது. தம்மைத் தனிமைப்படுத்திக் கொள்ள இங்கே வந்து குளத்தைச் சுற்றிக் குடியிருப்புகளை அமைத்துக் கொண்டார்கள்.

''இங்கு வந்தது முஸ்லிம் வைத்தியர்கள்தானே...?'' மீண் டும் குறுக்கிட்டார் இக்கிரிகொல்லாவ பிரதிநிதி.

''ஆமாம்... பெரும்பாலானவர்கள் முஸ்லிம் வைத்தியர் கள்... ஏனென்டா கிராமிய வைத்திய முறைக்கு இங்கே நிறைய மூலிகைகள் இருந்தன. 'இக்கிரி' என்று சொல்லப்படுவது ஒரு மூலிகையின் பெயர்தான். அதையே தான் கிராமத்திற்கும் வைத்துக் கொண்டார்கள். 'இக்கிரிகால்' நாளடைவில் மருவி 'இக்கிரிகொல்லாவ' என்றாகி விட்டது. இங்கேயிருந்து கொஞ் சம்பேர் தல்கஹவெவ, றம்படகஸ்வெவ, மரக்கலஹல்மில்லாவ போன்ற இடங்களுக்கும் குடியேறினார்கள். அத்தோட உங்கட கிராமத்துக்குக் கிட்டே பழைய அரண்மனைகள் இருந்ததற்கான தடயங்களும் கிடக்கு... ஆரம்பகால முஸ்லிம்களின் இல்லங்கள் இருந்திருக்கின்றன... '' என்று கூறி முடித்தான் ஹலீம்தீன்.

அதற்குப் பின் சில பொதுவான விடயங்கள் இடம்பெற்றன.

நண்பர்கள் சந்திப்பு கலைந்தது.

பிரதிநிதியும் ஹலீம்தீன் நண்பர்களும் அனுராதபுரத்திற்கு பஸ் ஏறுவதற்காக நடந்து கொண்டிருந்தார்கள்.

''அடையாள ஆர்ப்பாட்ட நிகழ்வுக்குப் பின் கிராமங்கள் எங்கும் பி.வி.மு.ச அங்கத்துவம் பெருகி வருவதை அவதானிக்க முடிகிறது... '' என்றான் யாசின்.

''அதற்கு நல்ல உதாரணம்தான் இக்கிரிகொல்லாவ...'' என்றான் சேகு.

அநுராதபுரத்திற்கு வந்ததும் அவர்களுக்காகவே திருமலை கடுகதி பஸ் காத்திருந்தது போல் அவர்கள் ஏறி அமர்ந்ததும் பஸ் புறப்பட்டது.

கஹட்ட கஸ்திகிலியாவுக்குப் போய் சில முக்கிய அலுவல்கள் முடித்து விட்டுத்தான் கிராமத்திற்குப் போகத் தீர்மானித்தார்கள்.

அன்று மாலை அவர்கள் கிராமத்திற்குத் திரும்பினாலும் மறுநாள் காலை ஏ,எல் பரீட்சை எடுத்த மாணவர்கள் மகா வித்தியாலயத்திற்கு சமுகமளிக்க வேண்டியிருந்தது.

நீண்ட இடைவெளிக்குப் பின் க.பொ.த உயர்தர இறுதிப் பரீட்சை எழுதிய ஹலீம்தீன் நண்பர்களுக்கு வெண்ணிறப் பாடசாலை சீருடை அணிந்து செல்வது என்னவோ போலிருந்தது.

ஹலீம்தீன் விசேடமாக சித்தியடைந்திருந்தான். நிச்சயமாக பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குச் செல்லத் தடையில்லை.

ஏனையவர்களின் முடிவுகளும் மிக நன்றாகவே இருந்தன. எவரும் கோட்டை விடவில்லை.

சிங்கள மகாவித்தியாலயத்தில் பியசீலியின் முடிவும் மிக நன்று. நிச்சயம் பல்கலைக்கழகத்திற்கு புக முடியும்.

அமரதாச, பியசேன ஆகியோரின் பரீட்சை முடிவுகளும் நன்று. சோமரட்னவும், யசவத்தியும் இவ்விரண்டு பாடங்களில் மட்டுமே சித்தியடைந்திருந்தார்கள்

இரண்டு கிராமங்களிலிருந்தும் வாழ்த்துச் செய்திகளும், அனுதாபச் செய்திகளும் பறந்தன.

ஹலீம்தீனும், யாசீனும் மோட்டார் சைக்கிளில் சிங்கள கிராமத்திற்கு போகத் துடித்தனர். ஆனால் அப்துல் மஜீத் தடுத்து விட்டார், மீண்டும் சைக்கிளில் போய் ஆபத்துகளை விலைக்கு வாங்க வேண்டாமென்று. சிலவேளைகளில் அமரதாச வேனில் வரக்கூடும்.

முஸ்லிம் கிராமத்தைப் பொறுத்தவரையில் பரீட்சை முடிவுகள் மகிழ்ச்சி அலைகளை வீசிக் கொண்டிருந்தன. கிராமத்திற்குப் பெருமை மட்டுமல்ல. பி.வி.மு.சவின் இணைத் தலைவர் ஒரு பட்டதாரியாக உருவாகப் போகிறார்.

அப்துல் மஜீத் எதிர்பார்த்தது போல் அமரதாசவும் பிய சேனவும் விஜயம் செய்தனர்.

''நானும் யாசீனும் வர இருந்தோம். ஆனால் பைக்கிள வாரது...?''

பரீட்சையில் வெற்றி ஈட்டியதற்காக இரு தலைவர்களும் கட்டித் தழுவிக் கை குலுக்கிக் கொண்டனர்.

இனி அமர, நான் கெம்பஸ் போறதா இல்லயா... வெளிவாரி மாணவனாக படிப்பதா...? என்று இன்னும் ஒரு முடிவு எடுக் கல்ல...'' என்றான் ஹலீம்.

''விளையாடாதே... நீ கட்டாயம் போகத்தான் வேணும்... பியசீலியை களனி கெம்பஸுக்கு அனுப்ப யோசனை. நானும் சிலரும் வெளிவாரி மாணவர்களாக பதிவு செய்வோம்... மொத் தப்புள்ளி தீர்மானிக்கப்படவில்லை தானே. எப்படியும் நீயும் பியசீலியும் நிச்சயம். அடிப்படை புள்ளி எப்படி வருகிறது என்று பார்ப்போம்...'' என்றான் அமர.

''இந்தக் கட்டத்தில் பி.வி.மு.ச பின்னடைந்து விடக் கூடாது... 'குளக்காட்டு' விடயமாக விசாரணைக்குப் போய் வந்து நாட்க ளாகி விட்டன...''

பண்டார கிராம சேவகர் லீவில் கொத்மலைக்குப் போயிருக் கிறார். அது அவருடைய சொந்த ஊர். கடமைக்கு வர சிலநாட்க ளாகும். ஹலீம்.... எப்படியும் பல்கலைக்கழகம் போகப் பல மாதங்களாகும். அதற்குள் திட்டமிட்டு எவ்வளவோ செய்து விடலாம். நாம் திட்டமிட்டிருக்கிற படிக்கு எமது சங்கத்தின் முதலாவது மகாநாட்டில் சமர்ப்பிக்க ஐந்தாண்டுத் திட்டத்தை மிகத் தெளிவாக வரைய வேண்டும். பி.வி.மு.ச தோன்றி, பல மாதங்கள் வேகமாகப் பறந்து விட்டன. மகஜரில் இருந்து கால்பங்கு கோரிக்கைகள் பல செயலுருவில் தலை காட்டத் தொடங்கி இருந்தன.

''ஹலீம், முன்னணி அரசியல்வாதிகள் என்ன பேசிக் கொள் கிறார்கள் தெரியுமா...?''

''....?''

''ஒவ்வொரு பிரதேசத்துக்கும் ஒரு சங்கம் தேவையாம்... விவசாய பெருமக்கள் செறிந்து வாழும் இப்பிரதேசத்தில் ஒரு பிரதேச விவசாயிகள் முன்னேற்றச் சங்கம் தோன்றியிருப்பது காலத்தின் தேவையாம்... இப்படியான ஒரு சங்கத்தின் மூலம் தான் விவசாயிகள் எதிர் நோக்கும் பிரச்சினைகளை அவர்களது தேவைகளை நேரிடையாகவும், யதார்த்தபூர்வமாகவும் அறிய வாய்ப்பு ஏற்படுகிறது. விவசாயிகளுடைய தேவைகளை திட்ட வட்டமாக அறிந்து உடனுக்குடன் செய்து கொடுக்க முடியுமாம். இப்படியாக பி.வி.மு.சவுக்கு நீண்ட பாராட்டு அது...''

''நல்ல செய்திதான்... நாமும் மிக நிதானமாக... அரசியல் கலப்பின்றி கட்டியெழுப்புவோம்...''

''அதுதான் சரி... மற்றுமொரு இரகசியத் தகவல்... அதாவது உங்கள் கிராமத்தில் ஒரு பெரிய புள்ளி டொனேசன் தந்து உறுப்பினராகச் சேர விரும்பினாரே...''

''ஓம்.... இனி...?''

''அந்த ஆள் கட்சிப் பிரமுகரிடம் போய் அதே பல்லவியைப் பாடி தனது தலைமையில் புதிய சங்கம் ஒன்றை ஆரம்பிக்க.... அபிப்பிராயம் கேட்டிருக்கிறாராம்...''

''அப்புறம்...?''

''நல்லா வாங்கிக் கட்டினாராம்.

அருமையான வேலைத் திட்டங்களுடன் பி.வி.மு.ச தோன்றி மிக நேர்மையாக செயற்பட்டுக் கொண்டிருக்கு. எம்மையும் கௌரவித்து எமக்கு மகஜர் அனுப்பிக் கிடக்கு. அதையெல்லாம் குழப்பிவிடாமல்... முடிந்தால் அந்தச் சங்கத்துக்கே உறுதுணை யாக இரு'' என சத்தம் போட்டு அனுப்பி விட்டாராம். போனவர் வாயடைத்துக் கொண்டு திரும்பிட்டாராம்...''

இப்படிச் சொல்லிவிட்டு அமர உரக்கச் சிரித்தான். அந்தச் சிரிப்பில் ஹலீமும் பியசேனவும் இணைந்து கொண்டனர்.

''அமர இனி வேறென்ன நியூஸ்?''

''வேறென்ன இனி, ஏ.எல் ரிசல்ட் அலைகள் ஓய இன்னம் ஒரு வாரமாவது போகும். பெரிய தேர்தல்களில் அபேட்சகர்கள் வெற்றியீட்டியது போல...''

''அப்ப பி.வி.மு.ச நிர்வாகக் குழுவை எப்ப கூட்டுவது... சில முக்கிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாட வேண்டியிருக்கு.

''இடம்...''

''கஹட்டகஸ்திலியா பாடசாலை மண்டபம்... எனெண்டா... பி.வி.மு.ச. நிர்வாகக் குழுவினர் உட்பட, கிராமத்துப் பிரதிநிதிகள், நிர்வாகக் குழுவில் இடம் பெறாத எமது நண்பர்கள், மூத்த தலைவர்கள், பண்டார கிராம சேவகர்... இப்படிக் கொஞ்சப் பேரையும் அழைக்க வேணும்; சங்கத்தின் முதலாவது மகாநாட்டில் நாம் சமர்ப்பிக்கப் போகும் தீர்மானங்கள் பற்றி ஆலோசிக்க வேண்டியிருக்கு. தேவை ஏற்பட்டால் நிர்வாகக்குழு கூட்டத்தை பிறகு கூட்டுவோம்...'' என்றான் ஹலீம்.

''பைக்ல வர பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. ஆபத்தான கட்டங்களை நாங்கள் கடந்து விட்டோம்'' தெம்பூட்டினான் அமர.

சற்று நேரத்தில் அமரதாசவின் வேன் புறப்பட்டது. விஷேட சித்தியடைந்த ஹலீம்தீனை சந்தித்து, பாராட்டவும், வாழ்த்தவும், விருந்துபசாரங்களுக்கு அழைப்பு விடுக்கவும் ஊரவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவற்றைத் தடுக்க முடியாமல் தவித்தான் ஹலீம்.

சகல சௌகரியங்களையும் அமைத்துக் கொண்டு விடயங்களை முன்னெடுத்துச் செல்வோம் என்றால் காலமகள் காத்திருக்க மாட்டாள். இன்னல்களுக்கு மத்தியில்தான் இயங்க வேண்டும். பியசீலி மிகச் சரியாகத்தான் காலத்தைக் கணித்திருக்கிறாள்.

காலச் சக்கரத்தின் வேகத்தோடு நாம் போட்டி போட்டுக் கொண்டு ஓடாவிட்டால் எல்லாமே பின்தங்கிப் போய்விடும் என்பதுதானே அதன் கருத்து. பின்தங்கிப் போனவை எல்லாமே காலத்துக்கு ஒவ்வாததாக கழிக்கப்பட்டு விடலாந்தானே. எப்படியோ பி.வி.மு.ச வின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்த ஹலீம்தீனுக்கு ஒன்று நிச்சயமாகப் பட்டது.

காலத்தை அனுசரித்து அதன் வேகத்தோடு ஒட்டிப் போய், பி.வி.மு.ச அதன் குறுகிய கால பயணத்தில் வெற்றிகள் ஈட்டி யிருக்கின்றன என்பது உண்மை. இவ்வாறு பி.வி.மு.ச வின் ஆரம்ப வளர்ச்சியைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்த போது சவால், சமது விதானை அதைத் தொடர்ந்து சேகு, யாசீன் அன்சார்தீன்....

சற்று நேரத்திற்கெல்லாம் அலுவலகம் நிரம்பி வழிந்தது.

யாசீன்தான் கேட்டான்.

''ரிசல்ட் நல்லா வந்திருக்கே... அப்புறம் தலைவருக்கு என்ன அப்படி தலைபோற யோசனையோ...?''

''எனக்கு ரிசல்ட் பற்றி ஒன்றுமில்ல. பி.வி.மு.ச தோன்றி மாதங்கள் ஓடி விட்டன... அதன் ஓராண்டு நிறைவு மிக வேக மாக வந்து கொண்டிருக்கு... இதற்குள் நாம் உண்மையில் ஏதாவது செய்திருக்கிறோமா... என்றுதான் ஒரு அலசல்...''

''தலைவர் என்றாலே அப்படித்தான் எந்த நேரமும் மக்க ளைப் பற்றிய யோசனைதான்...'' என்றான் சேகு.

இதுக்கு இவ்வளவு யோசிக்கத் தேவ இல்ல... எங்கட கோரிக்கைகள் மெல்ல மெல்ல அமுலாகிக் கொண்டிருக்கு. குளக்காட்டு பிரச்சினை மட்டும் தீர்ந்து விட்டால்.... முதலாவது ஆண்டுக்கு அதைவிடச் சாதனை வேறு எதுவும் இருக்காது.... என்றான் சமது விதானை.

அனைவரும் அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டனர்.

அமரதாச நேற்று வந்து விட்டுப் போனதைச் சுருக்கமாகச் சொன்னான் ஹலீம்.

''ஆலோசனைக் கூட்டத்தின் முக்கிய நோக்கம்....?'' சவால் கேட்டான்.

''இப்ப நாங்க எதிர்நோக்கிக் கொண்டிருப்பது மகாநாடு தான்... யாசீன் தமிழில் ஒரு ''ஸ்டென்சில் எழுதி வைத்துட்டுப் போ... ஆலோசனைக் கூட்டத்திற்கான அழைப்பு என்றான் ஹலீம்தீன்.

''தேநீருக்குப் பின் நண்பர்கள் கலைந்தனர்.

மறுநாள் யசவத்தியும் நந்தாவும் அலுவலகத்திற்கு வந்ததும் முதல் வேலையாக ஆலோசனைக் கூட்டத்திற்குத் தேவையான அழைப்புகளை மும்மொழிகளிலும் தயாரித்து 'ரோனியோ' செய்தனர். பிறகு முகவரிகளை எழுதிக் குவித்தனர்.

அன்று பின்னேரம் ஹலீம்தீன், அமரதாச, யாசீன் ஆகியோர் வந்து சரிபார்த்து நேரடியாக கையளிக்க வேண்டியவற்றைப் புறம்பாக வைத்துவிட்டு அஞ்சலில் போட வேண்டியவற்றை தனியாக எடுத்துச் சென்றனர். மறுவாரம் ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு கஹட்ட கஸ்திகிலியா மகா வித்தியாலய மண்டபத்தில் ஆலோசனைக் கூட்டம். சுமார் இரண்டு மணித்தியாலம் நீடித்தது. மகாநாடும் அதனை வெற்றிகரமாக நடத்தும் முறை பற்றியும் விரிவாக ஆலோசிக்கப்பட்டது. முதன் முறையாக இப்படித்தான் பிரதேச விவசாயிகள் முன்னேற்றச் சங்கம் ஓர் அற்புதமான மகாநாடு நடத்த விவசாயப் பெருமக்களின் ஒற்றுமைக்காகவும் அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் தம்மை இனங்காட்டிக் கொள்ள வேண்டும் என்பதால் அதன் வெற்றிக்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளித்தனர்.

பிரதேச விவசாயிகள் முன்னேற்றச் சங்கத்தின் முதலாவது ஆண்டு மலர் வெளியிடும் திட்டமும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நிறைவேறியது. மலர் பி.வி.மு.ச வின் ஆவணமாக இருக்க வேண்டும் என்பதால் அதில் பி.வி.மு.ச வின் தோற்றமும் வளர்ச்சியும், 'குளக்காட்டுப் பிரதேசம்' அனுராதபுர மாவட்டத்திற்கு சிங்களவர்கள், முஸ்லிம்கள் குடியேறிய வரலாறு என்பன ஆய்வுக் கட்டுரைகளாக அமையும். மும்மொழிகளிலும் காத்திரமான தகவல்களை உள்ளடக்கமாகக் கொண்டு வெளியாகும் எனத் தீர்மானித்து ஐந்து பேர்களைக் கொண்ட மலர்க்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

# இருபது

க ஹட்டகஸ்திகிலிய வீதிகள் என்றும் இல்லாமல் களை கட்டியிருந்தன.

அனுராதபுரம், கஹட்டகஸ்திகிலியா, ஹொரவப்பொத்தான போன்ற பிரதான இடங்களைச் சுற்றியுள்ள சிங்கள, முஸ்லிம் கிராமங்களிலிருந்து பிரதேச விவசாயிகள் முன்னேற்றச் சங்கத் தின் அங்கத்தவர்கள் 'பி.வி.மு.ச. ஆட்கள்' குழுக்கள் குழுக்க ளாக தொண்டர்களின் தலைமையில் வந்த வண்ணமிருந்தனர்.

பிரதேச விவசாயிகள் முன்னேற்றச் சங்கத்தின் முதலாவது ஆண்டு நிறைவு ஒரு மகாநாடாக பெருவிழாவாகப் பரிணமிக்க சரியாகக் காலை ஒன்பது மணிக்கு 'காரி' செய்யது அஹ்மது அவர்களின் 'கிராஅத்' கணீரென்றொலித்தது. தொடர்ந்து ஏனைய சமய சிந்தனைகளுடன் மகாநாட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

பி.வி.மு.ச வின் கிராமத்து பிரதிநிதிகள், நிர்வாகக்குழு உறுப்பினர்கள், பௌத்த குருமார்கள் மூவர் உட்பட நண்பர்கள், பிரமுகர்கள், அழைப்பை ஏற்று வந்த நலன் விரும்பிகள், சகல கிராமங்களிலிருந்தும் குழுக்கள் குழுக்களாக வந்த விவசாயப் பெருமக்கள்.....

கஹட்டகஸ்திகிலியா மகாவித்தியாலய மைதானம் நிரம்பி வழிந்தது. மைதானத்தில் வாகனங்களை நிறுத்த ஒதுக்கப்பட்ட இடம் போதாமையினால் பாதையோரங்களிலே நிறுத்த வேண் டிய சங்கடம் ஏற்பட்டது.

மைதானத்தில் பொதுமேடை மிக அற்புதமாக அலங்கரிக்கப் பட்டிருந்தது.

சங்கத்தின் இணைத் தலைவர்கள் அமரதாசவும் ஹலீம்தீனும் தலைமைப் பீடத்தில் கம்பீரமாக அமர்ந்திருந்தனர். அவர்களுக் குப் பின்னால் அரைவட்டத்திற்கு வெண்பட்டு விரித்த ஆசனங் களில் பௌத்த மதகுருமாருக்கு வலமிடமாக 'ஆலிம்' இருவரு டன் அலங்கார இருக்கைகளில் பிரமுகர்கள் வீற்றிருந்தனர். அது போலவே மேடைக்குக் கீழே முன்வரிசையில் கிராமங்களின் சிங்கள, முஸ்லிம் மூத்த தலைவர்கள் அமர்ந்திருந்தனர். அதை யடுத்து நிர்வாகக் குழு.... அப்புறம் நண்பர்கள்....

ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் பிரதிநிதிகளால் நியமிக்கப் பட்ட விவசாயத் தொண்டர்கள், தமது கடமைகளை மிகுந்த அக்கறையுடன் நிறைவேற்றிக் கொண்டிருந்தனர். பரந்த மைதா னத்தில் கூடும் மக்களைக் கட்டுப்பாடாகவும், அமைதியாகவும் வைத்திருக்க ஒவ்வொரு கிராமியக் குழுக்களுக்கும் இடம் ஒதுக்குவதில் அவர்கள் மிகச் சுறுசுறுப்பாகவும், நேர்த்தியாக வும் செயற்பட்டார்கள்.

மகாநாட்டில் கலந்து கொள்ள வரும் விவசாயப் பெருமக்கள் அணிந்து வரவேண்டிய உடைகளைப் பற்றியோ நிறங்களைப் பற்றியோ எதுவும் அறிவிக்கப்படவில்லை. எனினும் அடை யாள ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றியது போல வெண்ணிற ஆடைகளையே நாம் அணிய வேண்டும்.... என்பதை அவர்களே தீர்மானித்திருந்ததைக் காண முடிந்தது.

சமய அனுஷ்டானங்களுக்குப் பின் இக்கிரிகொல்லாவ பிரதி நிதியும், சோமரத்னவும் வரவேற்புரை நிகழ்த்தினர். தொடர்ந்து நிகழ்வுகளில் விவசாயப் பிரதிநிதிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காக, ஒரு மணித்தியாலம் ஒதுக்கப்பட்டிருந்தது. சுருக்கமாகப் பேச வேண்டும் என்று முன்கூட்டியே அறிவுறுத் தியும், ஒரு சிறிய பயிற்சியும் கொடுக்கப்பட்டிருந்ததால் பத்துக் கிராமங்களின் பிரதிநிதிகள் தமது கருத்துக்களைச் சுருக்கமாக முன்வைத்தனர். அவர்கள் தத்தமது கிராமங்களில் நிலவும்

குறைபாடுகளை மட்டுமன்றி, அவற்றைத் தீர்க்க வழிவகைகளையும் சமர்ப்பித்தனர். சிலர் தீர்மானங்களையும் தந்து பரிசீலிக்கும் படி வேண்டினர். எனினும் அவர்கள் பி.வி.மு.சவை பாராட்டத்தவறவில்லை.

அவர்கள் சமர்ப்பித்த தீர்மானங்கள் அவ்வப்போது பரிசீலிக்கப்பட்டு திருத்தங்களுடனும், திருத்தங்கள் எதுவும் இல்லாமலும் நிறைவேறின. ஒன்றிரண்டு தீர்மானங்கள் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டன.

எப்படியோ அமரதாசவும் ஹலீம்தீனும் நிகழ்ச்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் மிகக் கவனமாக இருந்தனர்.

காலை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வந்த முக்கியமான அரசியற் பிரமுகர் சமுகமளித்ததும் கூட்டம் கலகலப்படைந்தது. பண்டார கிராம சேவகர், பஹார்டீன் மாஸ்டர், சமது விதானை, யாசீன் ஆகியோர் அவரை மாலை அணிவித்து வரவேற்க, வந்தவர் பௌத்த குருமாரைத் தாள்பணிந்து தமக்குரிய இருக்கையில் அமர்ந்தார்.

பண்டார கிராம சேவகருடன் ஏதோ உரையாடிக் கொண்டிருந்தார்.

பிரதிநிதிகள் உரைகள் முடிந்ததும், பிரதேசத்தில் வயது அடிப்படையில் மூப்படைந்த ஐம்பது விவசாயிகள் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

எண்பத்து நான்கு வயதுடைய ஒரு விவசாயியைத் தொண்டர்கள் மேடைக்குத் தூக்கிக் கொண்டு வந்து பொன்னாடை போர்த்தச் செய்த போதும், ஒரு பெரிய மகாநாட்டில் கிரிபண்டா, அப்துல் மஜீத் போன்ற மூத்த தலைவர்கள் கௌரவிக்கப்பட்ட போதும் மைதானத்தில் கரகோஷம் உச்சக்கட்டத்தை அடைந்தது. தொண்டர்கள் மிக விழிப்புடன் இருந்து கட்டுப்படுத்தினர்.

கடந்த காலங்களில் பாராளுமன்றத்தில் விவசாயிகளுக்கு

குரல் கொடுத்ததோடு இப்பொழுது ஆயிரம் இளைஞர்களுக்கு விவசாயக் காணிகளும் அவற்றிற்கான உறுதிகளும் கொடுக்க முடிவு எடுத்திருப்பதையும், ஆங்காங்கே உதிரிகளாக உதவிகள் வழங்கி வருவதையும் குறிப்பிட்ட அரசியற் பிரமுகர் தொடர்ந்து....

''இத்தகைய ஒரு விவசாயிகள் சங்கம் உருவாகுவதற்கு முக்கிய காரணம் கல்வியே. கல்வி கற்ற இளைஞர்களே இப்படி ஒரு விழிப்புணர்ச்சியை விவசாயக் கிராமங்களில் ஏற்படுத்தியுள்ளனர். கல்வியின் பயனை நீங்கள் அனுபவிக்கிறீர்கள். இன வேறுபாட்டைத் தூக்கி எறிந்து விட்டீர்கள். கற்றல் தான் சிந்தனையைத் தூண்டும். பண்பாட்டையும் கலாசாரத்தையும் வளர்க்கும் என்பதையே இது எமக்கு உணர்த்துகிறது.

விவசாயிகள் தொழிற்சங்கம் மூலம் சமர்ப்பிக்கும் விண்ணப்பங்களை நான் கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்கப் பின் நிற்கமாட்டேன். முழு அனுராதபுர மாவட்டத்திலும் அறவே காணி இல்லாத இளைஞர்களுக்குத்தான் காணி வழங்கப்படும்.

இந்த முறை வயது முதிர்ந்த விவசாயிகள் கௌரவிக்கப் பட்டது ஒரு புதுமையான நிகழ்ச்சி. அடுத்த வருட மகாநாட்டில் நூறு விவசாயிகளைக் கௌரவியுங்கள். பொன்னாடையும் மாலையும் மட்டும் காணாது. பணமுடிப்புகளும் வழங்க வேண்டும். அடுத்த மகாநாட்டில் பரிசுத் தொகை கொடுக்க நான் ஏற்பாடு செய்து தருவேன்...'' என்றதும் மீண்டும் மைதானத்தில் வெடித்த மகிழ்ச்சி ஆரவாரத்தைக் கட்டுப்படுத்தத் தொண்டர்கள் திணறினர்.

அத்துடன் அவர் வெளியேற வேண்டிய கட்டாயம் இருந்தது. மாலை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதாகக் கூறி விடை பெற்றுக் கொண்டார்.

கடந்த ஓராண்டில் பிரதேச விவசாயிகள் சங்கத்தின் தோற்றம், வளர்ச்சி, சில வெற்றிகள் பற்றித் தலைவர்கள் ஹலீம்தீனினதும் அமரதாசவினதும் தலைமை உரைகள் விவசாயப் பெருமக்களை

பெரிதும் கவர்ந்தன.

இடைவேளையில் தொண்டர்கள் மதிய உணவுப் பொட்ட லங்கள் வழங்கினர். விவசாயிகள் இளைப்பாறினர்.

ஒன்றரை மணிநேர ஓய்வுக்குப் பின் மீண்டும் பின்னேர நிகழ்வுகள் சரியாக இரண்டு மணிக்கு ஆரம்பமாகின. விவ சாயிகள் உற்சாகமாகவும் சுறுசுறுப்பாகவும் காணப்பட்டனர்.

பி.வி.மு.ச வின் ஐந்தாண்டு திட்டத்தை அறிமுகப்படுத்தி விரிவாக விளக்கினான் யாசீன். பெரும்பாலான விவசாயிகள் இன்னும் ஓலைக் குடிசைகளிலும், மூங்கில் மண் சுவர்களினால் உருவான குடில்களிலும் வாழ்கின்றனர். இவர்களுக்குப் புதிய முறையில் சிறுவீடுகள் கட்ட கடனுதவி தேவை.

மின்சார வசதி இல்லாத கிராமங்களின் பெயர்களை வாசித் தான்.

சில கிராமங்களில் ஆரம்பப் பாடசாலைக் கல்வியோடு முற்றுப் பெறுகிறது. அதற்கு மேல் அவர்கள் கல்வியைத் தொடர வேண்டுமானால் நகர்ப்புறங்களுக்குச் செல்ல வசதிகள் இல்லை. பெரும்பாலான பாடசாலைககளுக்குக் கட்டிட வசதிகள் அளித் துத் தரம் உயர்த்தினால் தொடர்ந்து மாணவர்கள் கல்வி கற்க உந்தப்படுவர்.

மேலும் இளைஞர்களுக்குத் தொழிற்துறையில் ஊக்குவிப்ப தற்காக ''மூலப்பொருட்கள் கிராமங்களிலேயே தேங்கிக் கிடக்கின்றன. நேசவாலைகள், தச்சு வேலை, தையற் பயிற்சி நிலையங்கள் என்று...

கால்நடைப் பண்ணைகள், கோழிப் பண்ணைகள் இப்படி எவ்வளவோ சுட்டிக் காட்டலாம். இவற்றையெல்லாம் நாம் பி.வி.மு.ச மூலம் ஆண்டு தோறும் மனு சமர்ப்பித்துப் போராடி பெற்றுத்தர எமக்கு கால அவகாசம் போதாது. அதற்காகத்தான் எமது நிர்வாகக் குழு தீர யோசித்து ஓர் ஐந்தாண்டு காலத் திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம். இன்னும் சற்று நேரத்தில்

உங்கள் மேலான பரிசீலனைக்காக அதன் அச்சுப் பிரதிகள் விநியோகிக்கப்படும்.

எமது இவ்வருட நிர்வாகக் குழு தொடர்ந்து அடுத்த வருடமும் பதவியில் இருக்க வேண்டும். உறுப்பினர் தொகை நாளுக்கு நாள் கூடிக்கொண்டிருப்பதால் எமது நிர்வாகக் குழுவை இன்னும் விஸ்தரிக்க வேண்டும். முதலில் மேலதிக கிராமப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும். அப்புறம் பொதுச் செயலாளருக்கு உதவியாக மேலதிக உதவிச் செயலாளர்கள் தேவை.

ஆகவே, எமது ஐந்தாண்டுத் திட்ட அமுலாக்கலை பூரண வெற்றியடையச் செய்யச் சகல கிராமங்களைச் சார்ந்த விவசாயிகளினதும் ஒத்துழைப்புத் தேவை.

இவ்வாறு யாசீன் தனக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தில் உருக்கமாகப் பேசி கரகோஷம் மூலம் சகல விவசாயிகளினதும் ஆதரவைப் பெற்றான்.

ஐந்தாண்டு திட்டத்தின் மற்றுமொரு விளக்கத்தை ஹலீம்தீன் தத்ரூபமாக படம்பிடித்துக் காட்டினான். அமரதாசவும் சிங்கள மொழிமூலம் அதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினான்.

ஒவ்வொரு பிரேரணையும் ஏகமனதாக நிறைவேறிக் கொண்டிருக்கும் போது நிக்கவெவ பிரதிநிதி கேட்டான் :-

''வறுமையில் தோய்ந்த எண்பத்து நான்கு வயது நிரம்பிய ஒரு விவசாயிக்கு பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவித்தது நல்லதுதான். ஆனால், இந்தப் பொன்னாடை மாலை மரியாதை அவரை வறுமையிலிருந்து மீட்சி பெற எந்த வழியிலும் உதவப் போவதில்லை...''

''அவருக்கு உணவு முத்திரை வழங்க ஏற்பாடு செய்திருக்கிறோம். அத்துடன் எமது அடுத்த நிதி ஆண்டிலிருந்து சங்கத்திலிருந்து மாதாந்த ஆதாரப்படியும் வழங்கத் திட்டம்....'' என்றான் ஹலீம்தீன்.

மிகுந்த பாராட்டுதல்களுக்கு மத்தியில் அந்தத் தீர்மானம் நிறைவேறியதும் பிரதேச விவசாயிகள் முன்னேற்றச் சங்கத்தின் முதலாவது ஆண்டுமலர் வெளியிடப்பட்டது.

கவர்ச்சியான அட்டைப் படமும், காத்திரமான உள்ளடக்கமும் பி.வி.மு.ச வின் வெற்றிகளை மும்மொழிகளிலும் பதிவு செய்து ஓர் அற்புதமான ஆவணமாக உருப்பெற்றிருந்தது ஆண்டு மலர்.

காலையில் அவசரமாகச் சென்றிருந்த அரசியல் பிரமுகர் மீண்டும் ஆண்டு மலர் முதற் பிரதியைப் பெறுவதற்கும், விஷேட அதிதியாக மாலை நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பிப்பதற்காகவும் வருகை தந்திருந்தார்.

மலரில் அவருடைய விஷேட செய்தி பிரசுரிக்கப்பட்டிருந்தது.

மலர்க் குழுவின் சார்பில் சேகுவும், பியசேனவும் சுருக்கமாக கருத்துக்கள் கூறினர்.

பஹார்டீன் மாஸ்டர் பி.வி.மு.சவின் முக்கியத்துவம் பற்றி பத்து நிமிடங்கள் ஆங்கிலத்தில் உரையாற்றினார். மைதானம் நிசப்தமாய் விழித்துக் கொண்டிருந்தது. நாடளாவிய ரீதியில் கிளைகள் அமைத்துக் கொண்டு வரும்போது , சங்கத்தின் பெயரை 'இலங்கை விவசாயிகள் முன்னேற்றச் சங்கம்' என மாற்ற வேண்டி வரும் என்று குறிப்பிட்டார். அவருடைய பேச்சின் சாராம்சத்தை அமரதாச சிங்கள மொழியில் மிகத் தெளிவாக எடுத்துரைத்தான்.

கிரி பண்டா, அப்துல் மஜீத், பிங்காமி, கரீம் மாஸ்டர் ஆகியோர் கருத்துக்கள் தெரிவிக்கும் போது பல தசாப்தங்களுக்கு முன் வாழ்ந்த விவசாயிகளின் போராட்ட வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டினர். கிராமந்தோறும் சங்கங்கள் தோன்றி வளர்ச்சியடையாமல் போனதற்குரிய காரணங்களை எடுத்தியம்பினர்.

தீர்மானங்கள் அனைத்தும் திருத்தங்களுடனும், திருத்தங்கள் இல்லாமலும் நிறைவேற்றப்பட்ட பின் இறுதியாக மிக முக்கிய மான அனைத்து விவசாயிகளும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த உரை இடம்பெற்றது. அதுதான் கிராம சேவகர் பண்டார அவர்களின் மானுட நேய உரை.

''சிங்களவர்கள் தமிழையும் தமிழர்கள் சிங்கள மொழியை யும்கற்க வேண்டும் என்று ஒரு கருத்து காலத்திற்குக் காலம் முன்வைக்கப்படுகிறது. ஆனால் இப்பிரதேசத்தில் சிங்கள முஸ்லிம் கிராமங்களைப் பொறுத்தவரையில் மூன்று தசாப்தங் களுக்கும் மேலாக முஸ்லிம் கிராமவாசிகள் பேசும் பிரதேச தமிழ்மொழியை சிங்கள மக்கள் நன்கு புரிந்து கொள்கின்றனர். பேசுகின்றனர், சுமாராக. பெரும்பாலான சிங்கள இளைஞர் களுக்கு தமிழ் எழுத வாசிக்கத் தெரியும். அது போல முஸ்லிம் இளைஞர்கள் சிங்கள மொழியில் பாண்டித்தியம் பெற்றிருக் கின்றனர்.

இது போன்ற கூட்டங்களுக்கும் மகாநாடுகளுக்கும் சமுகமளிக் கும் போது அவர்கள் எந்தவித மொழிபெயர்ப்பும் இல்லாமல் பேச்சுக்களைப் புரிந்து கொள்வதை அவதானித்திருக்கிறேன்.

இன்று விவசாயிகள் கௌரவிக்கப்பட்டது புதுமையான விடயம். 'ஆதாரப்படி' பற்றி பேசப்பட்டது. புதிய பட்டியல் ஒன்றைத் தயாரிக்கும் பொறுப்பை பி.வி.மு.ச பொறுப்பேற்க வேண்டும். அது போலவே உணவு முத்திரைகள் கொடுபட வேண்டியவர்களின் பட்டியல் ஒன்றும் தேவை.

பி.வி.மு.சவின் ஒவ்வொரு செயற்பாட்டையும் மிகவும் கூர்ந்து கவனித்து வந்தவன் நான்.

பி.வி.மு.ச விவசாயிகளின் மறுமலர்ச்சிக்காக மிக நேர்மை யாகப் பாடுபட்டு வரும் ஒரு சங்கம்.

ஹலீம்தீனின் கிராமத்திற்கும், அமரதாசவின் கிராமத்திற்கும் தஸாப்தங்களாக ஒரு பிரச்சினை. அந்தக் கோபதாபங்கள் நீங்கி

ஒருமைப்பாடு ஏற்பட இந்த இரு இளைஞர்களும் அவர்களது நண்பர்களும் பெரும் பங்களிப்பு செய்துள்ளனர்.

'குளக்காட்டு' பிரச்சினையை நான் மேற்போக்காக எடுத்துக் கொள்ளவில்லை. மிகுந்த கவனத்துடன் ஆழ்ந்த ஆய்வு செய்தேன். அது உண்மையில் அரசுக்கு உரிய காடு. அங்கு இயற்கையிலேயே ஒரு சிறு குளம் . குளத்தைச் சுற்றி மிருகங்கள் செறிந்து வாழ்கின்றன. அந்தக் குளத்தை உள்ளடக்கிய நிலப்பரப்பு விவசாயத்திற்கு ஏற்ற மண்வளம் கொண்டுள்ளது என்பதால் குறிப்பிட்ட இரு கிராமவாசிகளும் வேட்டைக்குச் சென்று மண் ஆராய்ச்சி செய்து அதை நிரூபித்திருக்கின்றனர். அந்தக் குளத்தின் குளிர்மையான நீரை நாடியே மிருகங்கள் அங்கு குடி கொண்டுள்ளன.

எக்காலத்திலும் மக்கள் விவசாயம் செய்ததாக பதிவுகளில் ஆதாரங்கள் எதுவும் இல்லை என்பதே உண்மை. ஆகவேதான் 'இந்தக் குளக்காடு' இரு கிராம எல்லைகளில் அமைந்திருப்பதால் சிறிய அளவில் ஒரு குளமும் அமைந்திருப்பதால் உற்பத்தியைப் பெருக்கும் நோக்கத்தோடு இந்தப் பிரதேசத்தை இரு கிராமங்களுக்கும் பகிர்ந்து அளிப்பதுதான் நீதி நேர்மை என்று தீர்மானித்து, உரிய முறைப்படி நில அளவையாளர்களைக் கொண்டு அளந்து 'கொங்கிறீற் கல் அடையாளமிட நடவடிக்கை எடுத்து விட்டோம் என்னும் மகிழ்ச்சியான செய்தியை இந்த மகாநாட்டில் பகிரங்கமாக அறிவிப்பதில் பெருமையடைகிறேன். பி.வி.மு.ச வின் முயற்சி வென்றுவிட்டது.'' மைதானத்தில் குழுமியிருந்த சனக்கும்பலின் கரகோஷத்தையும் ஆரவாரத்தையும் தொண்டர்களால் எந்தவிதத்திலும் கட்டுப்படுத்த முடியாதிருந்தது. அந்த மக்களின் மகிழ்ச்சி ஆரவாரம் சற்று அடங்கிய வேளை கிராம சேவகரின் குரல் மிக நிதானமாக ஆழமாக மீண்டும் ஒலிக்கத் தொடங்கியது.

''இதுவரை நீங்கள் யாருமே அறியாத ஓர் இரகசியத்தை நான் சொல்ல விரும்புகிறேன். உங்கள் பி.வி.மு.ச தோன்றிய நாள் முதல் அதன் வளர்ச்சி பற்றி சகலதையும் அறிந்த ஒருவர் இங்கு உங்கள் முன்னால் வீற்றிருக்கிறார். அவர் அடிக்கடி என்னை அழைத்து கட்டாயம் சிங்கள முஸ்லிம் கிராமங்களிடையே ஒற்றுமையும் அபிவிருத்தியும் தேவை என வலியுறுத்தி அதற்காக எனக்குப் பல்வேறு உதவிகள் புரிந்துள்ளார். அவரால்தான் இந்தச் சங்கத்தின் அனைத்து செயல்களுக்கும் நான் முழு மூச்சாக உதவ முடிந்தது. எனவே நாம் அவருக்கு என்றென்றும் கடமைப் பட்டிருக்கிறோம். அவரது ஒரே ஆவல் நாம் அனைவரும் ஒற்றுமையாக செயற்பட்டு வளர்ச்சியடைய வேண்டும் என்பதே. அவர்தான் இப்பிரதேச பிரதம பௌத்த குரு தர்மரத்ன தேர அவர்கள்'' என்று கூறி முடித்தார் ஜீ.எஸ்.

அவற்றைச் செவியுற்ற எல்லார் மனதிலும் இனமத பேதங்கள் நீங்கிய ஒரு பெருமிதம் நிரம்பி வழிந்தது. அங்கிருந்த அனைவர் கண்களும் அந்த மதகுருவை நன்றிப் பெருக்குடன் மொய்த்துக் கொண்டிருந்தன.

# இருபத்தோன்று

"வெற்றி... வெற்றி..."

"வாழ்க... வாழ்க"

"அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர்"

"பி.வி.மு.ச வாழ்க, பி.வி.மு.ச வாழ்க"

மகிழ்ச்சி ஆரவாரம் பெருக்கெடுத்து ஓடியது.

பத்து நிமிடங்களுக்குப் பின் இளந்தலைவர்கள் அமரவும் ஹலீமும் எழுந்து ஒலிபெருக்கியில் சிரமப்பட்டு அமைதியை ஏற்படுத்தினர்.

"உண்மையில் இது மாபெரும் வெற்றிதான். உங்களுடன் சேர்ந்து கோஷமிடத்தான் தூண்டுகிறது. ஆனால் எமது நிகழ்ச்சி நிரலில் இன்னும் பல விடயங்கள் இருப்பதால் அமைதியாக இருக்கும்படி தயவாய் வேண்டிக் கொள்கிறோம். உளப்பூரிப் படைந்த ஹலீம் அமர குழுவினர் அந்த உயர் நோக்குக் கொண்ட மதகுருவுக்கும் பண்டார கிராம சேவகருக்கும் ஆழ்ந்த நன்றி யைச் சமர்ப்பித்தனர்.

அரசியல் பிரமுகர், பண்டார கிராமசேவகர், பஹார்டீன் மாஸ்டர், கரீம் மாஸ்டர் ஆகியோருக்கு மணம் கமழும் மல் லிகை மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி கௌரவித் தனர். பின்னர் பி.வி.மு.ச வைப் பாராட்டி.... விடைபெற்றுக் கொண்டார் அரசியல் பிரமுகர். அவருடன் பண்டார கிராம சேவகரும் செல்ல வேண்டியிருந்தது. மதகுருமார்களும் வாழ் த்தி விடை பெற்றனர்.

இறுதி நிகழ்வாக சிங்களத்திலும், தமிழிலும் இடம்பெற்ற நன்றி உரைகளோடு கூட்டம் மீண்டும் ஆரவாரித்த வண்ணம் கலையத் தொடங்கியது. அதற்குமுன் பி.வி.மு.சவின் நிர்வாகக் குழுக் கூட்டம் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெற விருப்பதால் நிர்வாகக் குழு உறுப்பினர்களை மண்டபத்திற்குள் அமரும்படி தலைவர்கள் வேண்டிக் கொண்டனர்.

ஏனைய பிரமுகர்களும் நலன் விரும்பிகளும் பிரிந்தனர். கிராமப் பிரதிநிதிகளும் தொண்டர்களும் தத்தமது கிராமக் குழுக்களை வாகனங்களில் ஏற்றி, தாமும் ஏறிக் கொண்டனர். இந்தக் குளக்காட்டுப் பிரச்சினை அனுராதபுர மாவட்டத்தில் உள்ள எல்லா முஸ்லிம் கிராமங்களிலும் ஆங்காங்கே பேசப் பட்டு வந்த சங்கதிதான். ஆகவே அதனைப் பகிர்ந்தளிக்கும் முடிவு அனைத்து கிராமவாசிகளுக்கும் மிக மகிழ்ச்சியைத் தந்த விடயம் என்பதை அப்படியே உரித்துக் காட்டி விட்டது. விவ சாயிகள் வாகனங்களில் ஏறும்போதும் அதன் எதிரொலியைத் தான் பார்க்க முடிந்தது. ஒவ்வொரு வாகனமும் இரைச்சலு டனும் கோஷங்களுடனும் கிளம்பியது.

அரைமணி நேரத்திற்குள் மைதானம் வெறிச்சோடிக் கிடந்தது.

நிகழ்வுகள் யாவும் அமளியின்றி நேரத்திற்கு முடிந்ததில் அமர தாசவும் ஹலீம்தீனும் மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்தனர்.

மைதானத்தை விட்டு அமரதாசவும் குழு உறுப்பினர்களும் மண்டபத்தினுள் பிரவேசித்தனர். பாடசாலை மண்டபத்தில் பி.வி.மு.ச நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு அதிபர் தேநீர் விருந்துபசாரம் அளித்துக் கொண்டிருந்தார்.

அனைவருமே முதலாவது ஆண்டு மகாநாட்டின் வெற்றி பற்றியே சிலாகித்துக் கொண்டிருந்தனர்.

தேநீருக்குப் பின் நிர்வாகக் குழுக் கூட்டம் தொடங்கியது.

''எல்லாமே நேரத்துக்கு முடிந்தது. மாணவர்களின் கலை நிகழ்ச்சி ஒன்றை தயார்படுத்தியிருக்கலாம்...''

''நாங்க யோசிச்சதுதான், ஆனா தூர இருந்து வாற கிராம வாசிகள் நேரத்தோட ஊர்களுக்குப் போய்ச் சேர வேணும் என்ப தாலதான் அது கைவிடப்பட்டது...'' என்றான் யாசீன்.

''இந்த மகாநாடு பரீட்சார்த்தமாக நடந்தொன்று. இரண் டாவது மகாநாடு தொடர்ந்து மூன்று நாட்கள் நடத்தப்பட வேண்டும். ... அப்போது கலை நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுபட வேண்டும்.

''இந்த நிர்வாகக் குழுக் கூட்டத்தில் மிக முக்கியமான இரண் டொரு விடயங்களை மட்டும் பரிசீலனை செய்வோம்...'' என்றான் அமரதாச.

''தகுதியானவர்களை நிர்வாகக் குழுவில் மேலதிகமாகச் சேர்க்கும் விடயத்தில் நான் மேலதிகத் தலைவராக பஹார்டீன் மாஸ்டரை நியமிக்கலாம் என்று அபிப்பிராயப்படுகிறேன்...'' என்றான் ஹலீம்.

''எந்தவித ஆட்சேபனையும் இல்ல. ஆனால் அவர் எமது பிரதேசத்திலேயே தங்கிவிட் வேண்டும்... வேலைகளை கவ னிப்பதற்கு இலகுவாக இருக்கும்...'''

''அதப்பத்தி யோசிக்கத் தேவை இல்லை... அவர் இங்கத்தய ஆள்தான். அவர் பென்சன் எடுத்த பிறகு இங்கேயே இருப்பதற்கு வழி வைத்திருக்கிறோம்'' என்றார் அப்துல் மஜீத்.

அப்துல் மஜீத் அவர்களின் வீட்டு வலது புறக் காணியில் ஒரு குறிப்பிட்ட அளவு அவருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் சில மாதங்களில் அவர் ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்ற தும் அவர் தனக்கென ஒரு கல்வீட்டைக் கட்டிக் கொள்ளலாம். குடும்பமாக வந்து குடியேறி விடலாம் என்பது முடிவாகிவிட்ட விடயம். அத்துடன் ஹலீம்தீன் இரண்டு ஏக்கர் வயற்காணியும் தரவிருப்பதால் மேலதிக வருமானத்திற்கு தடை இராது. அவர் சங்கத்தின் முழு நேர தலைவ்ராகப் பணிபுரிய எந்த விதத் தடை யும் இருக்காது.

பகிரங்கப்படுத்தாத இந்த விடயத்தை அன்று தனிப்பட்ட முறையில் பஹார்டீன் மாஸ்டரிடம் சொன்னபோது அவர் ஒரு கணம் அப்படியே பிரமித்துப் போய் விட்டார்.

பொதுச் செயலாளருக்கு உதவியாக இரு உதவிச் செயலாளர் களும், மேலதிக கிராமப் பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்பட்ட னர்.

ஏனைய விடயங்கள் பிற்போடப்பட்டன. அனைவருமே களைத்துப் போயிருந்தனர். கூட்டம் கலைந்ததும் கிரிபண்டா அமரதாச, பியசீலி, மற்றும் நண்பர்கள் அவர்களது வேனில் புறப்பட்டனர்.

அப்துல் மஜீத், ஹலீம்தீன், பஹார்டீன் மாஸ்டர், கரீம் மாஸ்டர், யாசீன் மற்றும் நண்பர்கள், தாம் வந்த பஸ்ஸில், தமது கிராமத்து பிரதிநிதியின் தலைமையில் வந்த விவசாயிகள் குழு வினருடன் சென்றனர். சிங்கள கிராமத்து விவசாயிகளும் இணை ந்தே பிரயாணம் செய்தனர்.

குளக்காட்டுப் பிரச்சினை தீர்ந்து விட்டதனால் பஸ்ஸில் ஒரே அமர்க்களமாக இருந்தது.

சிங்கள கிராமத்திலிருந்து இரண்டு வயதுக் குழந்தையுடன் வந்திருந்தாள் ஓர் இளம்தாய். பஸ் பிரயாணம் பிடிக்கவில் லையோ, என்னவோ அந்தக் குழந்தை அடிக்கடி அடம்பிடித்துக் கொண்டு, அழுத வண்ணமிருந்தது. தாய்க்காரி பால் கொடுத் தாள், பிஸ்கட் கொடுத்தாள்..... அப்படியும் கேட்கவில்லை.

''குழந்தை ஏன் அழுகிறது?'' என்று பஹார்டீன் மாஸ்டர் கேட்டார்.

''வீட்டுக்குப் போக வேண்டுமாம்....''

இளைஞர்கள் சிரித்தனர்.

''வீட்டுக்குத்தானே போகிறோம்''

''குழந்தைக்கு என்ன தெரியும்....?''

பஸ் போய்க் கொண்டிருந்தது.

குளக்காட்டுப் பிரச்சினை சுமுகமாகத் தீர்ந்து விட்டதால், பிரயாணம் மகிழ்ச்சியாகவும், கொண்டாட்டமாகவும் தான் இருந்தது.

பஹார்டீன் மாஸ்டர் அந்தக் குழந்தையை அவதானித்துக் கொண்டிருந்தார்.

சேகுவையும், அன்சார்தீனையும் அழைத்து ''கவிஞர்களே, இந்தக் குழந்தை நீண்ட நேரமாக அழுது கொண்டிருக்கு...... உங்களுக்கு 'ஐடியா' ஒன்றும் தோன்றவில்லையா......?'' என்று கேட்டார்.

''அதுதான் நம்ம குளக்காட்டுப் பிரச்சினை தீர்ந்து விட்டதே... ஏன் அழவேணும்......?'' என்றான் சேகு.

''எனக்கு ஒரு கருத்தும் தோன்றவில்லை.....'' என்றான் அன்சார்தீன்.

''குளக்காட்டுப் பிரச்சினை தீர்ந்து விட்டால் எல்லாம் தீர்ந்து விட்டது என்று அர்த்தம் இல்லை...'' என்றார் பஹார்டீன் மாஸ்டர்.

''அப்ப என்ன சேர்...?''

''எனக்கு ஆங்கிலத்தில் ஒருபுதுக்கவிதை பிறந்தது...''

''சொல்லுங்க சேர். சேகுவும் அன்சார்தீனும் ஆவலுடன் கேட்டனர்.

''தி க்ரை அட் பர்த்
இஸ்தி பிரசன்ட் ஒன் ஏர்த்
தி க்ரை அட் டெத்
இஸ் ட் டு ஷோ நோ மோ அட் லென்த்
கிரைஸ் இன் பிட்வீன்
இஸ்ட்டு லிவ் ஒன் ஏர்த்...''

விவசாயிகளின் தொழிலாளர்களின் நடைமுறை வாழ்க்கைத்

தத்துவத்தை அப்படியே படம்பிடித்துக் காட்டி விட்டீர்களே சேர்...

''அதைப்பற்றி எனக்குத் தெரியாது. நல்லாயிருந்தால்... தமிழில் மொழி பெயர்த்தால் மொழி பெயர்ப்பவருக்கு நான் ஒரு பரிசு தருவேன்...''

''உங்களுக்கு கவிதை வருமா?''

அவ்வப்போது வசதியாக நீண்ட பஸ் பிரயாணம் செய்யும் போது கவிதைகள் தோன்றினால் நான் டயறியில் குறித்து வைப்பேன்... நான் ஒரு கவிஞன் அல்ல...''

ஹலீம்தீன், அமரதாச மற்றும் நண்பர்கள் அனைவருமே கவிதையை ரசித்தனர்.

வெற்றிப் பயணம் தொடர்ந்து கொண்டிருந்தது....

ஹலீம்தீன் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தான்.

''தலைவருக்கு என்ன சிந்தனையோ?'' அமரதாசவும் யாசீனும் கேட்டனர். ''அப்படி ஒன்றுமில்ல.... கவிதையை சுமாராக மொழிபெயர்த்து விட்டேன்.'' என்றான் ஹலீம்.

''அப்படியா?''

டென்ஷன் அடையாத பஹார்டீன் மாஸ்டரே ஒரு கணம்....

''சொல்லுங்கள் ஹலீம் பார்க்கலாம்...'' என்று அவசரப் பட்டார்.

''ஆனால் பஹார்டீன் மாஸ்டர், நான் ஒரு வரியை கூட்டி யிருக்கிறேன்... பரவாயில்லையா...?''

சரி... சரி... செல்லுங்க...''

''பிறக்கும் போதே அழுகை
பிறந்து விட்டோமே என்று
இறக்கும் போதும் அழுகை
பிரியப் போகிறோமே என்று
இடைக்காலம் எல்லாம்

அழுகை. அழுகை அழுகை
வாழ்வதற்கே!
எங்கள் ஓலம்
உங்களுக்குக் கேட்கின்றதா?''

''நல்லாயிருக்கு ஹலீம். இந்தாங்க ஹலீம் நான் சொன்ன படிக்கு பரிசு....'' அவர் அளித்த பரிசு ஒரு ஹீரோ பேனா. ஹலீம்தீனும் ஒரு ஹீரோ என்ற எண்ணம் போலும் அவருக்கு.

நண்பர்கள் அனைவரும் ஹீரோ ஹலீம்தீனைப் பாராட்டி னார்கள்.

''பிறந்த போது அழுததுதான்.

அது சரி..... இறக்கும் போதும் அழுவோம். பந்தபாசம் விட்டுக் கொடுப்பதில்லை தானே. இடைக்கால மெல்லாம் அழுகை. அழுகை அழுகை என்று கூறியிருப்பது மிக மிகப் பொருத்தம். 'குளக்காட்டுப்' பிரச்சினைக்காக நாம் மூன்று தஸாப்தங்களாக அழுதிருக்கிறோமே. போதாதா......? அத்து டன் ஓய்ந்துவிடுமா..... இன்னும் எத்தனை எத்தனையோ பிரச்சினைகளை எதிர் நோக்க வேண்டியிருக்கு. எங்கள் ஓலம் நிச்சயமாக மேலிடத்திற்கு கேட்கத்தான் போகிறது..... ஹலீம், நீ உண்மையில் 'ஹீரோ' தான் என்று அனைவரும் பாராட்டினார்கள்.

பல தஸாப்தங்களாக சிங்கள முஸ்லிம் கிராமங்களிலேயே தொட்டகுறை விட்ட குறையாக இருந்த குளக்காட்டுப் பிரச் சினைக்கு ஒரு சுமுகமான தீர்வைக் கண்டு விட்டோம் என்ற உள்ளக்களிப்பில் அதற்காக முனைந்து நின்ற அந்த உள்ளங்கள் தாம் நடந்து வந்த பாதையை மீண்டும் ஒருமுறை திரும்பிப் பார்த்து பெருமிதம் அடைந்து கொண்டிருந்தன. அந்த வேளை அதனை ஆசீர்வதிப்பது போல பிரதேசமெங்கும் வயல், வரப்பு, செடி, கொடி, மரம் புட்பூண்டுகள் கூட பூத்துக்குலுங்க வேண்டி, வசந்த காலத்தின் வருகைக்காக, பூபாளம் இசைத்துக் கொண்டிருந்தது.





மலாய் மொழியே திரு.பஆப்டீன் அவர்களின் தாய்மொழி. நாவலப்பிட்டியில் பிறந்து கொழும்பில் வாழ்ந்து கொண்டிருக்கும் இவர் தற்பொழுது மல்வானை யதாமா பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகக் கடமை பார்க்கிறார்.

''கருக்கொண்ட மேகங்கள்'' என்ற இந்த நவீனத்தின் வரவு, ஒரு காலத்தில் வடமத்திய பிராந்தியத்தில் இவர் தொழில் பார்த்த அனுபவத்தின் அறுவடையே.

தமிழ்நாட்டில் மறுபதிப்புக் கண்ட 'இரவின் ராகங்கள்' சிறுகதைகள் இவரது ஆற்றலையும், ஆளுமையையும் பல்லாண்டுகளுக்கு முன்பே பறைகொட்டியது.

'மல்லிகை'யில் மலர்ந்தவர். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க செயற்குழுவில் இயங்குபவர். இவையே இவரை இனங்காட்டப் போதுமானவை.

அமைதியும், அடக்கமும், செயல் நேர்த்தியும் மேலும் பல அரும்படைப்புகளை நிச்சயம் கனியவைக்கும்.

- திக்குவல்லை கமால்

ISBN : 955-96861-0-0

MGM
MASS GRAPHICS MEDIA